

லட்சுமி பாலாஜி பதிப்பகம்

லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ இளவேனிற்காலம்... ★ முத்துலட்சுமி ராகவன்



முத்துலட்சுமி ராகவன்

# இளவேனிற்காலம்...


முத்துலட்சுமி ராகவன்
இளவேனிற்காலம்...
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ இளவேனிற்காலம்... ★ முத்துலட்சுமி ராகவன்
லட்சுமி பாலாஜி பதிப்பகம்

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

இளவேனிற் காலம்

## Contents


அத்தியாயம்- 1

அத்தியாயம்- 2

அத்தியாயம்- 3

அத்தியாயம்- 4

அத்தியாயம்- 5

அத்தியாயம்- 6

அத்தியாயம்- 7

அத்தியாயம்- 8

அத்தியாயம்- 9

அத்தியாயம்- 10

அத்தியாயம்- 11

அத்தியாயம்- 12

அத்தியாயம்- 13

அத்தியாயம்- 14

அத்தியாயம்- 15

அத்தியாயம்- 16

அத்தியாயம்- 17

அத்தியாயம்- 18

அத்தியாயம்- 19

அத்தியாயம்- 20

அத்தியாயம்- 21
அத்தியாயம்- 22
அத்தியாயம்- 23
அத்தியாயம்- 24
அத்தியாயம்- 25
அத்தியாயம்- 26
அத்தியாயம்- 27
அத்தியாயம்- 28
அத்தியாயம்- 29
அத்தியாயம்- 30
அத்தியாயம்- 31
அத்தியாயம்- 32
அத்தியாயம்- 33
அத்தியாயம்- 34
அத்தியாயம்- 35
அத்தியாயம்- 36
அத்தியாயம்- 37
அத்தியாயம்- 38
அத்தியாயம்- 39
அத்தியாயம்- 40
அத்தியாயம்- 41
அத்தியாயம்- 42
அத்தியாயம்- 43

[அத்தியாயம்- 44](#)

[அத்தியாயம்- 45](#)

[அத்தியாயம்- 46](#)

[அத்தியாயம்- 47](#)

[அத்தியாயம்- 48](#)

[அத்தியாயம்- 49](#)

[அத்தியாயம்- 50](#)

[அத்தியாயம்- 51](#)

## அத்தியாயம்- 1

"கொண்டைமுடி அலங்கரித்து..

கொஞ்சும்கிளி கையில் வைத்து..-

அஞ்சுகமொழி உமையாள் சிரித்திருந்தாள்..

அந்த அழகிய மாநகர்..

மதுரையிலே.. மதுரையிலே.. மதுரையிலே.."

கைகள் குவிந்திருக்க.. கண்களை மூடி.. பக்திப் பரவசமாக பூஜையறையில் பாடிக் கொண்டிருந்த ரம்யாவைப் பாசத்துடனும் பெருமையுடனும் பார்த்துக் கொண்டார் புண்ணியகோடி..

"பொன்னு.." பாசத்துடன் தம்பியை அழைத்தார்..

"என்னங்கண்ணே.." ராமனுக்கு ஏற்ற லட்சுமணனாக உடலை வளைத்துக் கேட்டார் பொன்னம்பலம்..

"நம்ம பொண்ணைப் பார்த்தியாடா.."

அண்ணன் கேட்டதும் பூஜையறையில் நின்றிருந்த தான் பெற்ற மகளை ஓர்தரம் பார்த்துக் கொண்டார் பொன்னம்பலம்..

"என்னங்கண்ணே.. ரம்யா ஏதும் தப்பு பண்ணுச்சா..? சொல்லுங்க.. கண்டிச்சு வைக்கிறேன்.."

"யாருடா இவன்.. இந்த வயசிலயும் அதுக்கு இருக்கிற பக்தியைப் பார்த்தியான்னு கேட்டா.. கண்டிச்சு வைக்கவான்னு கேட்கிறான்.. கண்டிச்சு வைக்கிற அளவுக்கு நம்ம வீட்டு பொண்ணுகிட்ட என்ன குறைடா இருக்கு..?"

தன் மகளை அண்ணன் பெருமையாக பேசிய விதத்தில் பொன்னம்பலம் மகிழ்ந்து போனார்..

"நீங்க அதைச் சொன்னீங்களா.. நான் தெரியாம பேசிட்டேண்ணே.."

"தெரியாமக் கூட இப்படிப் பட்டுன்னு.. பொம்பளப் புள்ளைகளைப் பத்தி பேசிரக் கூடாது.. நம்ம வீட்டு பொண்ணப்பத்தி நாமளே வாய்விட்டா.. அக்கம்.. பக்கம் இருக்கிறவங்க.. எப்படியெல்லாம் வாய் விடுவாங்க..?"

"யோசிக்காம பேசிட்டேண்ணா.."

"நாளையும் யோசிச்சுத்தான் பேசணும்.. பேசாத வார்த்தைக்கு நாம எஜமான்.. பேசின வார்த்தைக்கு அந்த வார்த்தைதான் எஜமான்.. மறந்து போயிரக் கூடாது.."

"மறக்கலைண்ணே.."

"போகுது விடு.. ஓசூருக்கு ஒரு லோடு மரம் அனுப்ப ஆர்டர் இருந்துச்சே.. அனுப்பிட்டாயா..?"

"அனுப்பிட்டேண்ணே.."

"திண்டிவனத்துக்கு மூணுலோடு அனுப்பனும்னு முந்தாநாள் சொன்னேனே.."

"நேத்துக் காலையிலேயே லாரி போயிருச்சுண்ணே.."

'எள்' என்றவுடன்.. 'எண்ணெ'யாக இருக்கும் தம்பியை பாசத்துடன் பார்த்துக் கொண்டார் புண்ணியகோடி.

கோவில் பட்டியிலிருக்கும்.. அந்தப் பெரிய மர அறுவை மில்லிற்கு... புண்ணிய கோடியும்.. பொன்னம்பலமும்தான் அதிபதிகள்..

ஆனால்.. தொழிலில் சரிபங்கு உரிமைதாரரான பொன்னம்பலம் புண்ணிய கோடியின் முன்பு தழைந்துதான் பேசுவார்..

வியாபார விசயமாக புண்ணிய கோடி எடுக்கும் முடிவுகளைப்பற்றி எந்தக் கேள்வியும் இதுவரை பொன்னம்பலம் கேட்டதில்லை..

அதேபோல்.. அண்ணனும் தம்பியும் பிரியாமல் குடும்பம் நடத்தும் அந்தக் கூட்டுக் குடித்தனத்தில் புண்ணிகோடியின் வார்த்தைகளுக்கு பெரியவர்களில் இருந்து.. சிறியவர்கள் வரை அனைவரும் கட்டுப்படுவார்கள்..

"ஏண்டி பூவாயி.. என்னத்தை நாத்து நடுறவ.. கொஞ்சம் பேச்சைக் குறைச்சு.. வேலையைக் கவனித்தா.." என்று விவசாய வேலை செய்பவர்களை அதட்டும்.. புண்ணியகோடியின் அம்மா கோசலையாக இருந்தாலும் சரி..

"ஏண்டா.. காத்தவராயா.. டிராக்டரில் ஏண்டா இவ்வளவு மண்ணு அப்பியிருக்கு.. அதைக் கழுவி.. துடைச்சு வைக்கணும்கிற அறிவு இல்லையாலே..? நீ தான் கருமம்.. ஒழுங்கா குளிச்சுத் தொலைக்கறதில்லை.. வண்டியையாவது குளிப்பாட்டி வைய்யுலே.." என்று வேலையாளை மிரட்டும் புண்ணியகோடியின் அப்பா.. வெள்ளைச்சாமியாக இருந்தாலும்சரி..

புண்ணியகோடி பேச ஆரம்பித்துவிட்டால்.. வாயைத் திறக்கவே மாட்டார்கள்..

"ஏம்மா, வயக்காட்டுக்கு வந்தா.. பழமை பேசுற பொம்பளைகளை அரட்டுகிறயாமே.. விவசாய வேலையே அலுக்கச் செய்ய வேண்டிய வேலைம்மா.. அலுப்புத்

தெரியாம இருக்க.. களையெடுக்கிற பொம்பளைகளும்.. நாத்து நடுகிற பொம்பளைகளும் ஏதாச்சும் தெம்மாங்கு பாட்டைப் பாடிக்கிட்டு.. பழமை பேசிக்கிட்டு.. வேலை செய்யறது வழக்கம்தானேம்மா.. இதில வாயைத் திறக்காதேன்னு நீ வாய் பூட்டுபோட்டா.. அவங்க கைய்யி எப்படி வேலையைப் பார்க்கும்..?"

"சரிய்யா.. இனிமே சொல்லலை.."

"ஏம்ப்பா.. காத்தவராயனை டிராக்டரை கழுவச் சொல்றது சரி.. அதைத்தாண்டி அவனோட குளியலைப் பத்தி பேச்சு என்ன வேண்டிக்கிடக்கு..? அவன் குளிச்சதையும்.. குளிக்காததையும்.. நீங்க கண்டிங்களா..? மண்ணில வேலை செய்றவன்.. உடம்பிலயும்.. உடையிலயும்.. அழுக்கு ஒட்டிக்கிட்டுத்தான் இருக்கும்.. அதுக்காக.. அவன் சுத்தமில்லாதவன்னு அர்த்தமாகுமா..? அவனோட வேலையைப் பத்தி மட்டும் பேசுங்க.. அவனையே பேசற வேலையெல்லாம் இங்கே வேணாம்.. சொல்லிட்டேன்.."

"ஆகட்டும்பா.."

இத்தனைக்கும்.. வெள்ளைச்சாமியும்.. கோசலையும் அந்த ஊரில் பேரும்.. புகழுமாய் பிழைப்பவர்கள்.. அந்த ஊரின் பெரிய வீட்டுக்காரர்கள்..

மாங்குடி என்றாலே.. அது வெள்ளைச்சாமி ஐயா இருக்கிற ஊராச்சே என்று சிறுகுழந்தை கூடச் சொல்லி விடும் அளவிற்கு பிரசித்தமானவர்கள்..

அவர்களே... தகப்பனுக்கு பாடம் சொல்லும் சுப்பிரமணியக் கடவுளாக பெரிய மகனை நினைத்துப் பணிந்து போகிறார்கள் என்றால்.. புண்ணியகோடியின் பெருமையைப் பற்றிச் சொல்லத் தேவையேயில்லை..

"அம்மா.."

"என்ன அம்புஜம்.."

"பிள்ளையை பள்ளிக்கூடத்திலே சேர்க்கணும்.."

வேலை செய்யும் பெண் சொல்லி வாயை மூடுமுன்னாலேயே ஒரு தட்டில்.. பணக்கட்டையும்.. புத்தகங்களையும்.. புதுத்துணியையும் வைத்து நீட்டும் மரகதம்.. புண்ணிய கோடியின் மனைவி..

"எதுக்கு கண்கலங்கறே.. உன் பிள்ளை.. பன்னிரெண்டாவது பாஸ் பண்ணிட்டான்னு நீ சொன்னப்பவே புதுத்துணியை எடுத்து வைச்சுட்டேன்.. எந்தப் படிப்பில் சேர்த்து விடணும்ன்னு என் வீட்டுக்காரர்கிட்டே எப்ப யோசனை கேட்டாயோ.. அப்பவே.. பையன் கிட்டச் சொல்லி.. டவுனில் புத்தகத்தை வாங்கிட்டு வரச் சொல்லிட்டேன்.. பணம் மட்டும்தான்.. நேத்து ஐயாகிட்ட கேட்டு வாங்கினது.. வாங்கிக்க.."

இதுதான் மரகதம்.. புண்ணிய கோடிக்கு ஏற்ற மனைவி.. கண்டிப்பை வார்த்தைகளிலும்.. கனிவை முகத்திலும்.. கருணையை மனதிலும் கொண்டவள்..

இவர்கள் பெற்ற பிள்ளைகளும்.. அப்படியே.. தகப்பனாரின் குணங்களையும்.. தாயின் குணங்களையும் கொண்டிருந்தார்கள்..

மூத்தவனான ரவிந்திரன்.. விவசாய மேற்படிப்பை படித்தவன்.. சொந்தமாக உரத்தொழிற்சாலை ஒன்றை கோவில்பட்டிக்கு அருகே வைத்திருக்கிறான்..

அவனுக்கு திருநெல்வேலியில் பெண் எடுத்திருந்தார்கள்.. கூடப்படித்த லிஸாவின் காதலைப் புறக்கணித்து.. வீட்டில் நிச்சயம் செய்த கௌதமியின் கழுத்தில் தாலியைக் கட்டிய உத்தம புத்திரன் அவன்..

அவனுடைய தங்கை ராதிகா மட்டும் குறைந்தவளல்ல.. பி.எஸ்.ஸி கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்தவளுக்கு மேலே எம்.சி.ஏ படிக்க வேண்டுமென்ற ஆசை இருந்தது..

அவளைத் துரத்தித்துரத்திக் காதல் சொன்ன.. கம்ப்யூட்டர் சென்டரின் முதலாளி கைலாஷிற்கு அவளை மேலே.. மேலே.. படிக்க வைக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தது..

ஆனால்.. கைலாஷின் முகத்தை நிமிர்ந்து கூடப் பார்க்காத ராதிகா.. பெற்றவர்களின் வார்த்தைக்கு கட்டுப்பட்டு.. அத்தையின் மகனை மணந்தாள்..

"எங்களுக்கு இருக்கிறது.. ஒரே ஒரு அக்கா.. கூடப்பிறந்த பெண் பிறப்பு.. அது வீட்டில் பெண் கொடுக்காம.. வேற யாரு வீட்டில பெண் கொடுப்பேன்..?"

புண்ணிய கோடியின் கேள்வி.. கட்டளையாக ஒலிக்க.. அத்தையின் மகனைத் திருமணம் செய்து கொண்டு.. அம்பாசமுத்திரத்தில் குடித்தனம் பண்ணப் போய் விட்டாள் ராதிகா..

"வாசலில்.. வைக்கச் சொன்ன கறிவேப்பிலைச் செடியை.. கொல்லைப் பக்கமா.. யாரு நட்டு வைச்சது..?"

"நான்தாங்கம்மா.."

"என்னாச்சு அம்புஜம்.. என் பேச்சு காதில விழுகலையா..?"

"இல்லம்மா.. நான் வாசப்பக்கம் நடத்தான் போனேன்.. ஆனா.. பெரியம்மா வந்து கொல்லைப்பக்கம் நடச்சொல்லிட்டாங்க.."

"யாரு.. அத்தையா சொன்னாங்க..?"

"அவங்க பாட்டியம்மாங்களே.. இவங்க பெரியம்மா.."

"அக்காவைச் சொல்றயா.."

"ஆமாம்மா.."

பொன்னம்பலத்தின் மனைவி.. ராஜம் சொல்லியதை மறுத்து.. புண்ணிய கோடியின் மனைவி.. மரகதம்.. சொன்னதைப் போலச் செய்து விட்டோமேயென்ற பயம்.. துளிக்கூட இல்லாமல்.. அம்புஜம் சொல்லுவாள்..

அவளுக்குத் தெரியும்.. ராஜத்தின் பதில் என்னவாக இருக்கும் என்ற..

"யாரு.. அக்காவா சொன்னது..? அதுசொன்னா.. அதில ஒரு அர்த்தமிருக்கும்.. சரியான வேலை செஞ்சே.. கெட்டிக்காரி.."

எந்த வீட்டிலாவது.. தான் சொன்ன வேலையை மறுத்து.. தன் கணவனின் அண்ணன் மனைவி சொன்ன வேலையைச் செய்யும் வேலையாளை "கெட்டிக்காரி.." என்று பாராட்டியிருக்கிறார்களா..?

அந்த வீட்டில் அதுதான் நடக்கும்..

அந்த வீட்டில் பிறந்த அண்ணன் தம்பிகளின் ஒற்றுமையை விட.. அவர்களுக்கு வாய்த்த மனைவிகளின் ஒற்றுமை இறுக்கமானது..

நகமும்.. சதையும் போல.. கூடப்பிறந்தவர்கள் தான் இருக்க வேண்டும் என்றில்லை.. கூடப்பிறந்தவர்களின் மனைவிகளும் இருக்கலாம் என்பதை நிரூபித்தவர்கள் அவர்கள்..

பொன்னம்பலத்தின் மகன் யுகேந்திரன் என்றுமே.. ரவிந்திரனை பெரியப்பாவின் மகன் என்று நினைத்ததில்லை..

"அண்ணன் சொல்லுச்சு.."

"அண்ணன் கேட்டுச்சு.."

என்று பாசம் பொங்கத்தான் பேசுவான்.. புண்ணிய கோடிக்கு.. பொன்னம்பலம் எப்படியோ.. அப்படித்தான்.. ரவிந்திரனுக்கு யுகேந்திரன்..

அண்ணன்காரன் உரத்தொழிற்சாலையை வைத்திருக்க.. தம்பிகாரன்.. பர்னிச்சர் கடையைத் திறந்திருந்தான்..

"குடும்பத் தொழிலுக்கேத்த தொழில்ப்பா.." என்று அண்ணன்காரன் தம்பிகாரனைப் பாராட்டினான்..

## அத்தியாயம்- 2

என்ஜினியரிங் படித்த யுகேந்திரனின் மீதும் ஒரு பெண் காதல் வயப்பட்டாள்.. யுகேந்திரனோ.. அவளை அருகில்

அமர வைத்து.. நட்பின் மேன்மையைப் பற்றியும்.. குடும்பத்தின் பாரம்பரியப் பெருமைகளைப் பற்றியும் நீண்ட லெக்சர் ஒன்றைக் கொடுத்தான்..

காலையில் ஆரம்பித்த அந்த லெக்சர்.. மாலை வரை தொடர.. பசி தாளாமல் மயக்கமே போட்டுவிட்ட அந்த பெண்.. அதற்கப்புறம் யுகேந்திரனைக் கண்டாலே நூறடி தள்ளி நடக்க ஆரம்பித்து விட்டாள்..

அவளின் காதல் கதையைக் கேட்ட மற்ற மாணவிகளும்.. யுகேந்திரனை பாசத்துடன் பார்த்து.. 'அண்ணா..' என்று அழைக்கப் பழகிக் கொண்டார்கள்..

"எங்க அக்கா பெத்துவச்சிருக்கிறது.. ஆணொன்னு.. பெண்ணொன்னு.. ரெண்டே.. ரெண்டு பிள்ளைகள்.. மூத்தவனுக்கு நான் பெண் கொடுத்துட்டேன்.. இளையவளை என் தம்பி மகன்தான் கட்டிக்கணும்.."

புண்ணியகோடியின் வாக்கு.. திருவாக்காக ஒலிக்க.. யுகேந்திரன் எதிர்வாக்கை உதிர்க்காமல்.. அத்தை மகள் ரஞ்சனாவின் கழுத்தில் சமர்த்துப் பிள்ளையாக தாலியைக் கட்டினான்..

இப்படிப்பட்ட குணாதிசியங்களை கொண்ட குடும்பத்தின் கடைக்குட்டி ரம்யா.. பத்தொன்பது வயது இளம்புயல்.. கம்ப்யூட்டரின் மேல் இருக்கும் ஆசையில்.. என்ஜினியரிங் படிக்க ஆசைப்பட்டாள்..

"கம்ப்யூட்டர் படிப்புத்தான் வேணும்னா.. அக்காவைப் போல.. கம்யூட்டர் சயின்ஸ் டிகிரி படி.. அதை விட்டுட்டு ஐந்து வருட படிப்புக்கு அடிப்போடாதே.."

குடும்பத்தினர் அனைவரும் ஒரே குரலாய்.. புண்ணிய கோடியின் வார்த்தைகளை ஒப்பிக்க.. கிடைத்தது போதும் என்று.. சாப்ட்வேர் இன்ஜினியரிங் கனவை விட்டு.. பி.எஸ்.ஸி கம்ப்யூட்டர் சயின்ஸைப் படித்துக் கொண்டிருக்கிறாள்..

ரம்யாவுக்கு பூக்கள் பிடிக்கும்.. பறவைகள் பிடிக்கும்.. பாட்டுக்கள் பிடிக்கும்.. தோழிகளைப் பிடிக்கும்..

அவளுக்கு பிடிக்காது என்பதைவிட.. அவளைப் பயமுறுத்துவது என்பது.. அடர்ந்த இருள் கொண்ட காடும்.. அதிலிருக்கும் மிருகங்களும்தான்..

சின்ன வயதில் பள்ளியில் அழைத்துப் போன இன்பச் சுற்றுலாவில் கலந்து கொண்டவள்.. தோழிகளிடமிருந்து பின்தங்கி.. தனித்து அடர்ந்த இருள் சூழ்ந்த கொல்லிமலைக் காட்டுக்குள் அகப்பட்டுக் கொண்டாள்..

அவள் பஸ்ஸிற்குள் இல்லாததைக் கண்டுபிடித்து.. ஆசிரியைகள் அவளை வந்து அழைத்துச் செல்ல ஒருமணி நேரமானது..

அந்த ஒருமணி நேரத்திற்குள்.. அவள் பட்ட பாட்டை எப்போது நினைத்தாலும்.. ரம்யாவிற்கு குலை நடுங்கும்..

அன்றிலிருந்து.. ஊட்டி.. கொடைக்கானலுக்குப் போவதைக்கூட அவள் தவிர்த்து விடுவாள்..

"ஏண்டி.. நம்ம குடும்பமே.. விசாயக் குடும்பம்.. அப்பாவும்.. பெரியப்பாவும் மரடிப்போ வச்சிருக்காங்க.. இந்தக் குடும்பத்தில் பிறந்துட்டு.. பச்சைப் பசேல்ன்னு இருக்கும் காட்டைப் பார்த்து பயந்தா எப்படி..?" ராஜம் அலுத்துக் கொள்வாள்..

"போம்மா.. காட்டைப் பார்த்து பயப்படாம என்ன செய்யச் சொல்கிற..?"

"அதில இருக்கிற மரத்தை வைச்சுத்தாண்டி நம்ம வியாபாரமே இருக்குது.."

"அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்ற..? உனக்கு கூடத்தான் கம்ப்யூட்டரைப் பார்த்தால் பயம்.. நான் ஒருநாளாவது ஏன்னு கேட்டிருக்கேனா..?"

கம்ப்யூட்டருக்கும்.. காட்டுக்கும் என்ன சம்பந்தம்.. என்று புரியாமல் ராஜம்.. அந்தப் பேச்சை அத்துடன் விட்டு விடுவாள்..

வீட்டுப் பெண்களை.. வீட்டுக்குள்ளேயே அரசாட்சி செய்ய வைக்கும்.. புண்ணிய கோடியின் பழக்கத்தினால்..

ரம்யாவின் காடு பற்றிய பயத்திற்கு.. பிரச்சனையில்லாமல் இருந்தது..

வீட்டை விட்டு கல்லூரிக்கு மட்டுமே போய் வருபவளுக்கு.. காட்டைப் பற்றி என்ன கவலை..?

அவளுண்டு.. படிப்புண்டு.. வீட்டில் அரட்டையடிக்க ஒன்றுக்கு இரண்டாக அண்ணிகளுண்டு என்று நிம்மதியாக.. சீரான பாதையில் பயணித்துக் கொண்டிருந்தாள் ரம்யா..

"பெத்ததும்தான் பெத்தேன்.. ஒண்ணுக்கு ரெண்டு மகன்களை பெத்துப் போடாம போயிட்டேன்.. இந்த சின்னக்குட்டியையும் சேர்த்து வளைக்க முடியாம.. வெளியாளுக்கு விட்டுக் கொடுக்க வேண்டியதாப் போச்சே.."

புண்ணியகோடிக்கும், பொன்னம்பலத்துக்கும்.. ஒரே அக்கா என்ற பெருமை படைத்த சரஸ்வதி புலம்புவாள்..

அவள் எப்போது இந்தப் புலம்பலை ஆரம்பித்தாலும்.. எதிர்கேள்வி ஒன்றை தயாராக எடுத்து விடுவாள் ரம்யா..

"வெளியே விட்டுக் கொடுக்காம.. உங்க வீட்டுக்கு அழைத்துக்கலாமுன்னு பாத்தீங்களா.. நீங்களே.. எங்க குடும்பத்தை 'வா'ன்னு சொல்லாதவங்க.. எங்கள் குடும்பத்தை அழைக்காதவங்க.. என்னை அழைச்சு என்ன பண்ணப் போறீங்க.."

இதைக் கேட்டதும்.. மற்ற பெண்கள் வாய்க்குள் சிரிப்பை அடக்கிக் கொள்ள.. சரஸ்வதிக்கும் சிரிப்பு வந்துவிடும்..

செல்லமாய்.. அடிப்பதைப் போல.. பாவனை செய்து கொண்டே..

"சொல்லிக்காட்டறியா..?" என்று சிரிப்பாள்..

அந்த வீட்டின் கடைசிக் குழந்தை என்பதால்.. மற்றவர்களைவிட அதிகமான சுதந்திரமும்.. பிரத்யேகச் சலுகைகளும் ரம்யாவுக்கு கிடைத்திருந்தன..

"பொம்பளப் புள்ளக்கி.. என்ன வாய் நீளுது..?" ராஜம் கண்டிக்கும் போதே.. புண்ணியகோடி அதட்டி விடுவார்..

"ஏம்மா.. பெண் குழந்தை பேசக்கூடாதா..? நம்ம வீட்டில் இருக்கிற வரைக்கும்தான்.. அது நினைத்ததை பேச முடியும்.. கல்யாணம் பண்ணிப் போகிற இடத்தில் இப்படிப் பேசமுடியுமா..?"

"அதுக்கில்லை மாமா.. இவ துடுக்குத்தனமா பேசிக்கிட்டு இருந்தா.. இவ வாழப் போகிற வீட்டில் நம்மளப் பத்தி என்ன நினைப்பாங்க..?"

"நீ சொல்கிறதும் சரிதான்.. பெரியவளுக்கு.. அவ அருமை தெரிஞ்சு வைச்சுக்கிற அத்தையின் வீடே.. மாமியார் வீடாய் அமைஞ்சிருச்சு.. சின்னவதான் வெளியே வாழ்க்கைப்படணும்.."

அவர் கவலையாய் தம்பி மகளைப் பார்க்கும் போது ரம்யா சிரிக்காமல் சொல்லுவாள்..

"எதுக்கு பெரியப்பா இவ்வளவு கவலைப்படறீங்க..? என் மாமியார் வீட்டில் உங்களையெல்லாம்.. வாங்கன்னு கூப்பிட்டு விடுவாங்கன்னா..?"

புண்ணியகோடி.. தம்பியின் மகளின் பேச்சை ரசித்துச் சிரிப்பார்..

"ஏய்ய்.. வாலு.. நீ இன்னும் இந்தப் பேச்சை விடறதா இல்லையா..?"

அந்தக் குடும்பத்தின் மூத்த மகளான சரஸ்வதி.. தம்பிகளை 'வா' என்று வரவேற்காத கதையின் பின்னணி மிக சுவராஸ்யமானது..

கோசலை.. வெள்ளைச்சாமியின் மூத்த மகளான சரஸ்வதிக்கு.. தன் தம்பிகளின் மீது பாசம் அதிகம்..

"பெத்ததுதான் எங்கம்மா.. வளர்த்ததெல்லாம் எங்க அக்காதான்.."

புண்ணியகோடியும்.. பொன்னம்பலமும்.. வார்த்தைக்கு வார்த்தை சரஸ்வதியின் புகழைப் பாடுவார்கள்.. அதில் பொய்யில்லை.. உண்மை அதுதான்.

புண்ணியகோடியையும்.. பொன்னம்பலத்தையும் இடுப்பில் சுமந்து வளர்த்தவள் தான் சரஸ்வதி..

ஒரே மகளுக்கு வண்டி.. வண்டியாக சீர் செய்து.. அம்பாசமுத்திரத்திலேயே.. பெரிய வியாபாரிக்கு திருமணம் செய்து கொடுத்தார்கள்..

வாழப் போன வீடு மிகவும் வளமையானது என்றாலும் சரஸ்வதிக்கு பிறந்த வீட்டுப் பெருமையைப் பேசத்தான் பிடிக்கும்..

"என் பெரியதம்பி எனக்கு வாங்கித் தந்த அட்டிகையைப் போல உண்டா..?"

"என் சின்னத்தம்பி வாங்கிக் கொடுத்த வளையல்களுக்கு எதுவும் ஈடாகுமா..?"

இப்படிப்பட்டவளுக்கு.. தாய் வீட்டிலிருந்து சீர் குறையாமல் சென்று கொண்டே இருந்தது..

புண்ணிய கோடியின் மூத்த மகன் ரவிந்திரனுக்கு திருநெல்வேலியில் பெண் எடுத்தார்கள்.. திருமணம் நிச்சயமானபோது பலத்த மழை ஏற்பட்டது.. வெள்ளம் பெருக்கெடுத்தது.. அவர்கள் குடும்பத்தின் விவசாயத்தை அதுபாதித்தது..

பயிர்கள் மழையில் அழிந்து போக.. மரங்கள் மழையில் நனைந்து.. மரவியாபாரம் மந்தமானது..

ரவிந்திரன் அப்போதுதான் உரத்தொழிற்சாலையை ஆரம்பித்திருந்தான்.. கையிலிருந்த பணத்தை அதில் முதலீடு செய்திருந்ததால்.. கையில் பணம் புரளாமல் பணவறட்சி அந்தக் குடும்பத்திற்கு ஏற்பட்டிருந்தது..

யுகேந்திரனோ கல்லூரி மாணவன்.. வீட்டுப் பெண்களின் அத்தியாவசியமான நகைகளை மட்டும் விட்டு..

மற்றவைகளை அடமானம் வைத்துப் பணம் புரட்ட வீட்டுப் பெரியவர்கள் முடிவு செய்தனர்..

அது தீபாவளி சமயம் வேறு.. மரவேலை செய்பவர்களுக்கு போனஸ் கொடுக்க வேண்டும்.. கிராமத்தில்.. வயலில் வேலை செய்பவர்களுக்கு புதுத்துணிகளை எடுத்துக் கொடுக்க வேண்டும்..

இப்படிப்பட்ட சூழ்நிலையில் ரவிந்திரனின் திருமணநாள் நெருங்கிவர.. ரவிந்தின் சங்கடப்பட்டான்..

"கல்யாணத்தை தள்ளி வைக்கலாமே அப்பா.." தயக்கத்துடன் கூறினான்..

மற்றவர்கள் மனதில் அதே எண்ணமிருப்பதை அவர்களின் முகங்கள் பிரதிபலிக்க.. புண்ணியகோடி அதை மறுத்து விட்டார்..

"ஊரைக் கூட்டி.. இந்த முகூர்த்த தேதியை குறிச்சு.. நிச்சயம் பண்ணி.. வெத்தலை பாக்கை மாத்தியிருக்கோம்.. கல்யாணப் பத்திரிக்கையும் அடிச்சாச்சு.. பொண்ணு வீட்டுக்காரங்க இந்தத் தேதியில் கல்யாணமுன்னு சொல்லி.. ஊரெல்லாம் பத்திரிக்கை வச்சிட்டாங்க.. இப்பப் போயி.. கல்யாணத்தை தள்ளிப் போட்டா.. அதைவிடக் கொடுமை வேற எதுவும் இல்லை ரவி.."

"ஆனா அப்பா.. நமக்கு இப்படி நெருக்கடி வந்திருக்கே.."

"யாருக்குத்தான் நெருக்கடி வரலை..? அரசன் மகளுக்குக் கூட.. ஐந்து நிமிசத்துக்கு பஞ்சம் வந்தே தீரும்.. அது வாழ்க்கையின் நியதி.. அதைத் தாண்டி வர்றவன்தான் மனுசன்.. நாம இதையும் தாண்டி வருவோம்.."

"இப்ப எப்படிப்பா சமாளிக்கிறது..? கடன் வாங்கலாமா..?"

"எதுக்குக் கடன் வாங்கணும்..? செலவுகளை குறைப்போம்.."

"புரியலைப்பா.. இது நம்ம வீட்டில நடக்கிற முதல் கல்யாணம்.. இதில எந்தச் செலவைக் குறைப்பீங்க.."

"ரவி சிக்கல்ன்னு வந்ததும்.. நம்ம வீட்டுப் பொம்பளைக.. அவங்களோட நகைப் பெட்டியை அப்படியே கொண்டுவந்து நீட்டிட்டாங்க.."

## அத்தியாயம்- 3

ரவிந்திரன் பெருமையாக.. பாட்டியையும்.. அம்மா.. சின்னம்மாவையும்.. தங்கைகளையும் பார்த்துக் கொண்டான்..

"அதை அப்படியே கொண்டு போய் அடமானம் வைக்கலாமா..? அது சரியாய் வருமா..?"

"அதெப்படிப்பா.. கல்யாண சமயத்தில.. வீட்டுப் பெண்கள் கழுத்தில்.. கையில் நகைபோட வேணாமா..?"

"ம்ம்.. அது அத்தியாவசியம்.. அதனால.. தேவைப்படுகிற நகைகளை மட்டும் வச்சுக்கிட்டு.. மீதியைத்தான் அடமானம் வைக்கப் போகிறோம்.. அதைப் போலத்தான் இதுவும்.."

ரவிந்திரனுக்கு எதுவோ புரிவதைப் போல இருந்தது.

"அத்தியாவசியமான செலவை நாம குறைக்கப் போகிறதில்லை.. மீதியிருக்கிற.. ஆடம்பரச் செலவைத்தான் குறைக்கப் போகிறோம்.."

புண்ணியகோடியின் வார்த்தைகளை மற்றவர்கள் கேட்டுக் கொண்டனர்..

"மரகதம்.."

"என்னங்க.."

"வீட்டில துணிகள் வாங்கணும்.."

"வேணாம்ன்னு நினைக்கிறேங்க.."

"ஏன்..?"

"வீட்டுப் பொம்பளைக கண்ணிலபட்ட புதுத்துணிகளை எடுத்து அடுக்கி வைப்போம்.. எங்ககிட்ட கட்டாத புதுப் பட்டுச் சேலைகளே நிறைய இருக்கு.."

"யுகேந்திரா.."

"எனக்கும் புது டிரெஸ் இருக்கு பெரியப்பா.."

புண்ணிகோடி நெகிழ்ந்து போனார்.. குடும்பத்தினர் காட்டும் இணக்கம்.. அவர் மனதை இளக வைத்தது.. அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் மற்ற செலவுகளை கணக்கிட ஆரம்பித்தார்..

"தீபாவளி சமயமுங்கிறதால.. வேலையாள்களுக்குத் தனியாக புதுத்துணி எடுக்கத் தேவையில்லை.. அப்போ.. அக்கா குடும்பத்துக்கு மட்டும் எடுத்தாப் போதும்.."

இதை அறிந்த சரஸ்வதி பலமாக ஆட்சேபித்தாள்.. "நல்லாயிருக்கு நியாயம்.. என் தம்பிகளுக்கும்.. தம்பி குடும்பத்திற்கும் இல்லாத புதுத்துணி எனக்கு வேண்டாம்."

"வீட்டில புதுசா எடுத்து கட்டாம நிறையத் துணிமணிக இருக்குதுக்கா.."

"என் வீட்டிலயும் அப்படித்தான்.. புதுசா எடுத்துக் கட்டாம புதுத்துணிகள் பீரோவில் உறங்குது... அது உறக்கத்தை கலைச்சு... தட்டியெழுப்பி... நாங்க உடுத்திக்குவோம்.."

"ஏங்க்கா.. உனக்குச் சீர் செய்யாம என் மகனுக்குக் கல்யாணம் பண்ணச் சொல்றியா..?"

"செஞ்ச சீரே என் வீடு நிறைய கொட்டிக் கிடக்குதுப்பா.. இனிப் புதுசா நீ செய்யப் போற சீரையும் வாங்கிக்கத்தான் போறேன்.. அதனால மனசைப் போட்டு உழட்டிக்காம நீ ஆக வேண்டிய வேலைகளைப் பாரு.."

அப்படிப்பட்ட சரஸ்வதிதான்.. திருமணப் பத்திரிக்கையை எடுத்துக் கொண்டு.. முறைப்படி.. அவளையும்.. அவள் கணவனையும் அழைக்க.. குடும்பத்தோடு காரில் போய் இறங்கி புண்ணிய கோடியை 'வா' வென்று அழைக்க மறுத்து விட்டாள்..

தவறு யார் மீதும் இல்லைதான்..

திருமண அழைப்பிதழ்கள் தயாராகி வந்ததும்.. புண்ணியகோடி.. குடும்பத்துடன் சென்று.. அவற்றை குலதெய்வத்தின் காலில் வைத்துக் கும்பிட்டார்..

அன்று ஏதோ விசேஷநாள் என்பதால் அவர்களின் பங்காளி குடும்பங்களும் அன்று கோவிலுக்கு வந்திருந்தார்கள்.. முதல் அழைப்பிதழை குலதெய்வத்திற்கு வைத்து விட்டுத் திரும்பியவரின் கண்ணில்.. மரகதத்தின் அண்ணன் பட்டுவிட்டார்..

"வாங்க மச்சான்.." என்று இவர் அழைக்க..

"நீங்களும் இங்கேதான் இருக்கீங்களா மச்சான்..? என் சின்னம்மா மக.. பேத்திக்கு இங்கே காது குத்து.. அதுக்காக நான் வந்தேன்.. நீங்க.. என்ன குடும்பத்தோட அத்தனை பேரும் கோவிலுக்கு வந்திருக்கீங்க..? ஏதும் விசேசமா..? ரவியோட கல்யாண வேலைகள் எல்லாம் எந்த அளவில் இருக்கு..?" என்று மரகதத்தின் அண்ணன்.. பொறுப்புள்ள தாய்மாமனாக பதிலுக்கு விசாரித்து வைத்தார்..

புண்ணியகோடி பதில் சொல்வதற்கு முன்னால் அங்கே நின்று கொண்டிருந்த புண்ணியகோடியின் பங்காளி..

"கல்யாணப் பத்திரிக்கையை குலசாமி கோவிலில் வைத்துக் கும்பிடத்தான் வந்திருக்கிறோம் மாப்பிள்ளை.." என்று சொல்லிவிட்டார்..

"அப்படியா.. பத்திரிக்கை எப்படி வந்திருக்கு..? இங்கே ஒண்ணைக் கொடுங்க பார்க்கலாம்.." என்று மரகதத்தின் அண்ணன் யதார்த்தமாக கேட்டு வைத்தார்..

"அதை வீட்டில வந்து முறைப்படி தட்டு தாம்பலத்தில் வச்சுக் கொடுக்கணும் மச்சான்.. அதுதான் முறை.." என்று புண்ணியகோடி கூறினார்..

"அதை அப்பப் பார்த்துக்கலாம் மாப்பிள்ளை.. இப்ப மாதிரிக்கு ஒண்ணைக் கையில கொடுங்க.. நமக்குள்ள என்னத்துக்கு முறையெல்லாம் பார்த்துக்கிட்டு.." என்று

மரகத்தின் அண்ணன் வெள்ளை மனத்துடன் கேட்கவும்.. புண்ணியகோடியால் அதை மறுக்க முடியவில்லை..

அவர் கையிலிருந்த அழைப்பிதழ்களில் ஒன்றை எடுத்து அவரிடம் நீட்டி விட்டார்..

இந்தச் செய்தி இறக்கை கட்டிக் கொண்டு பறந்து போய் சரஸ்வதியின் காதுகளில் நுழைந்து விட்டது.. அவள் கொதித்து விட்டாள்..

"முதல் பத்திரிக்கையை தாய்மாமனுக்குத்தான் கொடுக்கனுமுன்னா.. என் புருசன் உங்க வீட்டுக்கு யாரு..? அந்த வழக்கத்தைப் பிடிச்சுக்கிட்டுத்தான.. என் புருசனுக்கு மரியாதை கொடுக்காம விட்ட..?" என்று தொலைபேசியில் புண்ணியகோடியை அழைத்துக் காய்ச்சு.. காய்ச்சென்று காய்ச்சினாள்..

"அக்கா.. நான் சொல்கிறதைக் கேளு.."

"அது என்ன தேவைக்கு.."

"நடந்த விசயமே வேறு.."

"நான் வேற.. நீ வேறயாத்தாண்டா போயிட்டோம்.."

"புரியாம பேசாதேக்கா.."

"புரிஞ்சுதான் பேசறேண்டா தம்பி.. உனக்கு.. உன்கூடப் பிறந்த நான் முக்கியமில்லை.. உன் பெண்டாட்டி கூடப்பிறந்த அண்ணன்தான் முக்கியமாக போயிட்டார்.."

"அங்கே அவர் வருவாருன்னு நான் நினைச்சுக் கூடப் பார்க்கலைக்கா.."

"நானும்தான் நினைச்சுப் பார்க்கலை.. என் தம்பிக்கு என்னைவிட அவனோட மச்சினன் ஒசத்தியாப் போய் விடுவாருன்னு.."

சரஸ்வதி தொலைபேசியை துண்டித்துவிட.. புண்ணியகோடி அலறியடித்துக் கொண்டு.. குடும்பத்துடன் கார்களில் கிளம்பினார்..

அம்பாசமுத்திரத்தில் சரஸ்வதியின் வீட்டுக்குள் அவர்கள் சென்றபோது.. சரஸ்வதியின் மாமனாரும்.. மாமியாரும்..

"வாங்க.. வாங்க.." என்று வாயாற வரவேற்றார்கள்..

ராதிகாவை சொந்தத்துடன் பார்த்துக் கொண்டே சரஸ்வதியின் மகன் வெங்கட்..

"வாங்க மாமா.. வாங்கத்தை.." என்று ஆரம்பித்து அவர்கள் வீட்டுக் கார் டிரைவர் வரை வரவேற்று முடித்தான்..

சரஸ்வதியின் கணவர் பாலசுந்தரம்.. மரியாதையுடன் கரம் குவித்து வரவேற்றார்..

யுகேந்திரனுக்குத்தான் என்று பேசப்பட்ட ரஞ்சனா கூட வீட்டுக்குள்ளே வெட்கத்துடன் மறைந்து கொண்டு.. தலையை மட்டும் நீட்டி..

"வாங்க பாட்டி.. வாங்க தாத்தா.." என்று ஆரம்பித்து அண்ணனைப் போலவே.. அனைவரையும் வரவேற்று முடித்தாள்..

ஆனால்.. கடைசிவரைக்கும்.. சரஸ்வதி வந்திருந்த பிறந்த வீட்டுச் சொந்தங்களை.. "வா" என்று அழைக்கவில்லை..

இறுக்கமான முகத்துடன் காபி.. பலகாரம் கொண்டு வந்தாள்.. விருந்து சமைத்துப் பரிமாறினாள்.. ஆனால் பேசவில்லை..

தாம்பாலத்தட்டில்.. வெற்றிலை பாக்கு.. பழம்.. பணம் இவற்றுடன் திருமண அழைப்பிதழை வைத்து புண்ணியகோடியும் பொன்னம்பலமும் கொடுத்தபோது.. பாலசுந்தரம் மட்டுமே அதை பெற்றுக் கொண்டார்.. சரஸ்வதி அருகேகூட வரவில்லை.. திருமணத்தில் கலந்து கொண்டபோது கூட இயல்பாக இல்லாமல்.. இறுக்கமான முகத்துடன் தான் கலந்து கொண்டாள்..

அதற்குப் பின்னால் சரஸ்வதியே அதை மறந்து போய் சகஜமாகி விட்டாள்.. ஆனால் ரம்யா மட்டும் மறக்கவே இல்லை.. வாய்ப்பு கிடைக்கும் பொதெல்லாம் அவள் தனது

அத்தையை இந்தச் சம்பவத்தைச் சொல்லியே வாருவதற்கு தவறுவதில்லை..

"உங்க வீட்டுக்கு வந்தப்போ 'வா'ன்னு சொல்லாத ஆள்தானே நீங்க.."

"என் தம்பிக.. என் தம்பிகளோட குடும்பம்.. என் தாய்.. தகப்பன்.. நான் எதுக்கு 'வா'ன்னு சொல்லணும்.. அவங்க வீடு.. 'வா..'ன்னு சொல்லி அவங்களை வேத்து மனுசங்களாக்கச் சொல்கிறியா..?" சரஸ்வதி சமாளிப்பாள்..

"ஹை.. ஹை.. இதையெல்லாம் வேற யாருகிட்டயாவது போய் சொல்லுங்கத்தை.. நீங்க சுயமரியாதை சுந்தரிங்கிறது.. எங்க எல்லாத்துக்குமே தெரியும்.."

"பாசக்காரின்னும்.. இங்க.. எல்லாத்துக்கும் தெரியும்.."

உண்மைதான்.. சரஸ்வதியிடம் தெரிந்த இந்த இரண்டு குணாதிசயங்களைப் பற்றி ரம்யா.. நினைத்து வியாக்காத நாளே இல்லை..

அந்தக் குடும்பத்தின் மூத்தவள்.. தம்பிகளின் மேல் அபரிதமான பாசம் கொண்டவள்..

"என் தம்பிகளுக்கும்.. அவனுடைய குடும்பத்திற்கும் இல்லாத புதுத் துணிகள் எனக்கு மட்டும் எதற்கு..?"

என்று கேள்வியைக் கேட்டு அவளின் அதீதமான பிறந்த வீட்டுப் பாசத்தை புரிய வைத்தவள்.. தன் கணவனுக்கு முதல் மரியாதைக் கொடுக்கவில்லையென்று பொங்கியெழுந்து வீட்டுக்கு வந்த பிறந்த வீட்டுச் சொந்தங்களை 'வா' வென்று அழைக்காமல் தன் புகுந்த வீட்டின் பெருமையையும் நிலைநாட்டினாள்..

சரஸ்வதியிடம் தெரிந்த இந்த இருவேறு பரிணாமங்களும் ரம்யாவை ஆச்சரியத்தில் ஆழ்த்தின..

"அத்தை ரொம்ப கிரேட்ம்மா.."

"நிஜம்தான்.. அவங்க கோபப்பட்டா.. ஆனானப்பட்ட உங்க பெரியப்பாவே அரண்டு போயிருவாருங்கிறப்போ.. அவங்க

பெரிய ஆளாத்தானே இருக்க முடியும்.."

"நீ அதிலேயே இரு.. பெரியப்பாவை பார்த்து நீ பயப்படறே.. பெரியப்பாவே பயப்படுகிற ஆள்.. நம்ம அத்தைதான் அப்படிங்கிற.. பாயிண்ட் ஆப் வியுவில் நீ பேசற.."

"வேற எதை வைச்சுப் பேசச் சொல்ற..?"

"போம்மா.. உனக்கு இதை புரிய வைக்கிறதுக்குள்ளே விடிஞ்சுடும்.."

"பெரிசா.. விடிய.. விடிய ராமாயணத்தைச் சொல்கிறது மாதிரி அலுத்துகிறா.. போடி.. வேலையைப் பார்த்துக்கிட்டு.."

"பெரியம்மா.."

"என்னடா செல்லம்.."

"அத்தை.. ஒரு அட்னமர் பண்ண வேண்டிய கேரக்டர்.. இல்லையா பெரியம்மா..?"

"பின்னே..? அவங்க என் வீட்டுக்காரருக்கு அக்கா.. இவரே அவங்க அக்காவுக்கு அவ்வளவு மரியாதை கொடுக்கிறாருன்னா.. அவங்க மரியாதை கொடுக்க வேண்டிய ஆள்தானே.."

'ஹீம்..' தலையில் கை வைத்துக் கொண்டாள் ரம்யா..

எல்லோரும் புண்ணியகோடி சரஸ்வதிக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை வைத்து.. அவளின் பெருமையைப் பற்றிக் கூறினார்களேயொழிய.. ஒருவர் கூட.. ரம்யா என்ன சொல்ல வருகிறாள் என்பதை புரிந்து கொள்ளவில்லை..

## அத்தியாயம்- 4

"அம்மா காலேஜுக்கு கிளம்பிட்டேன்.."

"கிளம்பு.. அதுக்கு ஏண்டி இப்படிக் கத்தற..?"

"பணம் கொடும்மா.."

"உங்க அண்ணன்கிட்டக் கேளு.."

"அண்ணா.."

"சொல்லு.."

"செலவுக்கு பணம் கொடு.."

"உனக்கு என்ன செலவு.."

இப்படிக் கேட்ட யுகேந்திரன் நூறு ரூபாய் தாள்களாக எண்ணி சட்டைப் பையில் வைத்து கொள்ள.. பற்களைக் கடித்தாள் ரம்யா..

"உனக்கெதுக்கு இவ்வளவு பணம்..?"

"இங்கே பாரு.. ஆம்பளைக்கு ஆயிரம் செலவு இருக்கும்.. அதையெல்லாம் உன்கிட்ட சொல்லிக் கிட்டிருக்க முடியாது.. அதுக்கு அவசியமும் இல்லை.."

"அப்போ.. உனக்குப் பதில் சொல்லணும்ன்னு எனக்கும் அவசியமில்லை.. நீ பணத்தை எடு.."

"அடித்துப் பல்லைக் கழட்டி விடுவேன்.. எதிர்த்து பேசுகிற.. ராஸ்கல்.. அந்த அளவுக்கு வந்துட்டியா.."

"இங்கே பாரு.. காலேஜூக்குப் போக பஸ் ஏறணும்.. உன்னைப் போல புல்லட்டில் நான் போக முடியாது.. ஸ்கூட்டியைக் கேட்டா.. நம்ம வீட்டு பொம்பளைப் புள்ளைக டூவீலரில் போகலாமான்னு இந்த வீட்டு ஆம்பளைகளெல்லாம் கூட்டணி போட்டுக்கிட்டு கேட்பீங்க.. அதனால்.. பஸ்ஸூக்கு காசு வேணும்.."

"கொழுப்பு..?"

"உனக்குத் தங்கச்சிதானே.. உன் கொழுப்பில் பாதி எனக்கும் இருக்கும்.. அப்புறம்.. அம்மா.. என்னவோ சமையலுக்குத் தேவையான பொடி பாக்கெட் ஒண்ணை வாங்கிட்டு வரச் சொன்னாங்க.. அதுக்கும் காசு வேணும்.."

"திமிர்.."

"ம்ம்.. உன் தங்கச்சியா இருந்துட்டு.. அதுவும் இல்லாமல் இருந்தா எப்படி..? அதனால.. பணத்தை வெட்டு.."

"இந்தா.."

யுகேந்திரன் ஒற்றை நூறு ரூபாயை நீட்ட.. அதை வாங்கித் திருப்பிப் பார்த்த ரம்யா.. அதை நீட்டிக் கேட்டாள்..

"என்ன இது..?"

"பார்த்தால் தெரியலை.. நூ..று.. ரூபாய்.."

"அடேங்கப்பா.. பெரிய தொகைதான்.."

"உன் லெவலுக்கு இது பெரிய தொகைதான்.."

"என் லெவல் எது அண்ணா..? ஐந்து பைசாவும்.. பத்து பைசாவுமா..? என்னைப் பார்த்தா.. ஐந்து பைசா அம்மு மாதிரித் தெரியுதா..?"

"அது ரெண்டும்தான் இப்போச் செல்லாதே.."

"ஓ.. அது செல்லாக்காசு ஆனதால்தான் நான் தப்பிச்சேன்.. இல்லேன்னா.. அதைத்தான் எனக்கு நீ கொடுத்திருப்ப..?"

"நிச்சயமா..?"

"உன்னை.."

கோபத்தில் முகம் சிவக்க ரம்யா.. உள்ளே திரும்பி..

"அம்மா.. அம்மா.." என்று உரக்கக் கத்தினாள்..

"என்னடி.? நீ இன்னுமா காலேஜுக்கு போகலை..?"

"எங்கே..? நீ போக விட்டால்தானே.."

"நானென்ன.. உன் கையைப் பிடிச்சா இழுத்து வச்சிருக்கேன்..?"

"கையை பிடித்து இழுத்தால்தானா..? காசைப் பிடிச்சு இழுத்து வச்சிருக்கிறாயே.."

"காசா..?"

"ஆமாம்.. நீ வாங்கிட்டு வரச் சொன்னா பாக்கெட் என்ன விலை..?"

"நூறுரூபா.."

"அதை உன் மகன் காதில் விழுகிறதைப் போல சத்தமாகச் சொல்லு.."

ராஜத்திற்கு எதுவும் புரியாமல் மகனைப் பார்த்தாள்.

"வேற ஒண்ணுமில்லம்மா.. அவளுக்கு செலவுக்கு பணம் கேட்டா.. நூறு ரூபா கொடுத்தேன்.. அதுக்குத்தான் உன்கிட்ட பஞ்சாயத்து வைக்கிறா.."

"ஆமாமா.. நம்ம அம்மாவும்.. நாட்டாமை மாதிரி.. நீதி தவறாம தீர்ப்பு சொல்லிட்டுத்தான் வேற வேலை பார்க்கும்.."

ரம்யா நொடித்துக் கொள்ள.. ராஜம் அவள் சொன்னதைப் போலவே ஒருதலைப்பட்சமாக பேசி வைத்தாள்..

"ஏண்டி.. அண்ணன் கொடுக்கிறத வாங்கிட்டுப் போக வேண்டியதுதானே.. பொம்பளப் புள்ள கையில.. நூறு ரூபாய்க்கு மேல காசு எதுக்குடி..?"

"ஆஹா.. அப்படியே செய்துட்டாப் போச்சு.."

பணத்தை மடித்து.. பர்ஸில் வைத்துக் கொண்ட ரம்யா.. ராஜத்தைப் பார்த்தாள்..

"நீ வாங்கிட்டு வரச் சொன்ன பொடியை.. உன் மகன்கிட்ட சொல்லிவிட்டு வாங்கிக்க.."

"என்னடி சொல்ற.."

"ஆமாம்.. பஸ் டிக்கெட்டெல்லாம் இப்ப.. எக்கச்சக்கமாக ஏறிருச்சு.. நீ வீட்டுக்குள்ளேயே இருக்க.. வெளியுலகத்தை நீ பார்க்கணும்னா.. உன் வீட்டுக்காரர் காரில் ஏற்றிக் கொண்டு போய் காட்டுவார்.. எனக்குத்தான் இன்னும் வீட்டுக்காரரே வரலையே.. அதனால.. நான் பஸ்ஸில் போய்த்தான் ஆகணும்.. அதுக்கு இந்த நூறு ரூபாயே பத்தாது.."

"அதனால..?"

"அதனால.. உன் மகன்கிட்டேயே உனக்கு வேண்டியதைச் சொல்லிவிட்டு வாங்கிக்க.."

"இவ வாயைப் பார்த்தாயாம்மா.."

"ஆமடா.. முளைச்சு மூணு இலை விடலே.. அதுக்குள்ள வீட்டுக்காரைப் பத்திப் பேசறா.."

"நீ அதைப் பத்தி மட்டும்தானே கவனிச்சே.. இவ என்கூடப் போட்டி போடுறதைக் கவனிச்சியா..?"

"கவனிக்கலையே.. ஏண்டி.. அப்படியா.. அண்ணன் கூட போட்டி போட்டியா..? அவனும்.. நீயும் ஒன்னா..?"

"ஏம்மா.. ஒண்ணில்லையா..? அவனும் பத்து மாதத்தில்தான் பிறந்தான்.. நானும்.. பத்து மாதத்தில் தான் பிறந்தேன்.."

"ஆம்பளைப் பையன்கிட்ட.. பொம்பளைப் புள்ள போட்டிக்கு நிற்கலாமாடி..?"

"ஏன் நிற்கக் கூடாது..?"

ரம்யாவிற்கு இது சுத்தமாகப் பிடிபடவில்லை.. அவள் மனதில் பெண்ணிய உணர்வுகள் எழுந்தன.. தன் வீட்டில்.. தன்னைப் 'பெண்' என்பதால் ஒடுக்குகிறார்கள் என்று அவள் நினைத்தாள்..

"சரியான மேல் ஸாவனிஸ்ட்டுடி.. என் அண்ணன்.." தோழியிடம் முறையிட்டாள்..

"இல்லையே.. சரியான மன்மதனில்ல உன் அண்ணன்.." அவளது தோழி பதிலுக்கு ஜொள்ளினாள்..

"உன் கிட்டப் போய் சொல்ல வந்தேனே.. அவனுக்கு கல்யாணம் ஆயிருச்சுடி.. நினைப்பில் வச்சுக்க.."

"இனி உன் அண்ணனை நினைப்பில் வைச்சு என்ன செய்ய..? அதுதான்.. காத்திருந்தவளின் காதலனை.. நேற்றுவந்த உன் அண்ணி அடித்துக்கிட்டு போயிட்டாளே.."

"இப்படி ஏண்டி பெருமூச்சு விடறே.. இம்புட்டு ஏக்கம் உன் மனசில இருந்திருந்தா.. என் அண்ணன்கிட்டச் சொல்லியிருக்க வேண்டியதுதானே.."

"சொல்லத்தான் நினைத்தேன்.."

"ம்ம்.."

"சொல்ல வந்தப்போ.. உன் அண்ணன் கூடப் படிச்ச ஒரு அக்காவைப் பார்த்துத் தொலைச்சிட்டேன்.."

"ம்ம்.."

"அந்த அக்கா.. உன் அண்ணனோட 'கதாகாலேட்சப' பெருமையைப் பத்தி சொல்லி விட்டது.."

"ம்ம்.."

"அதுக்கப்புறம் உன் அண்ணன்கிட்ட காதல் சொல்லிட்டு.. லெக்சர் கேட்கணும்னு எனக்கென்ன தலைவிதியா..?"

"ம்ம்.."

"அதனாலே.. 'எங்கிருந்தாலும் வாழ்க'ன்னு மனசுக்குள்ளேயே வாழ்த்திவிட்டு காதல் சொல்லாமல் விலகிட்டேன்.."

"ம்ஹீம்.. ரெண்டு பேரும் பிழைத்தீங்க போங்க.."

"அதைச்சொல்லு.."

தோழியுடன் இணைந்து சிரித்தாலும்.. ரம்யாவின் மனம்.. யுகேந்திரனின் அடாவடித்தனத்தை எண்ணி எண்ணி.. வெதும்பி கொண்டுதான் இருந்தது..

## அத்தியாயம்- 5

காலையில் மட்டும் ஏன் இப்படியொரு தூக்கம் வந்து இமைகளில் கவிழ்ந்து கொள்கிறது என்று ரம்யாவிற்கு பிடிபடுவதே இல்லை..

அந்த சுகத்தை அனுபவிப்பதற்காகவே அவள் அலாரம் வைத்து விட்டு படுப்பாள்.. அதிகாலையில் அலாரம் அடித்து.. வீட்டில் உள்ள அனைவரையும் எழுந்து கொள்ள வைக்கும்.. இவள் மட்டும் அலாரத்தை அணைத்து விட்டு.. போர்வையை இழுத்துப் போர்த்தி கொண்டு படுத்து விடுவாள்..

"இந்தக் குட்டிக் குரங்கு பண்ணும் வேலையை பார்த்தாயாக்கா..?"

"குழந்தையைக் குரங்குன்னு சொல்லாதே ராஜம்.."

"அவளா குழந்தை..? நீங்க கொடுக்கிற செல்லத்துலதான் அவ இப்படி ஆட்டம் போடறா.."

"த்சு.. என்ன இது..? ஆட்டம்.. கீட்டமுன்னு பேசற..?"

"இவ பேச வைக்கிறாக்கா.."

"வயசுக்கு வந்த பெண்ணைப் பத்திப் பேசும் போது.. வாயை அடக்கிப் பேசணும் ராஜம்.. நம்ம பேசறத மத்தவங்களும் கேட்பாங்கங்கிற எண்ணம் வேணும்.. நம்ப வீட்டுப் பெண்ணைப் பத்தி.. நாமளே.. நாக்கு மேல.. பல்லைப் போட்டுப் பேசினா.. ஊர் உலகம் என்ன சொல்லும்..?"

வீட்டையே எழுப்பிவிட்டு.. தான் மட்டும் அயர்ந்து உறங்கும் யுக்தியை கண்டுபிடித்து வைத்திருக்கும் மகளை அதற்கு மேல் திட்ட முடியாமல் அடங்கிப் போவாள் ராஜம்..

அன்றும் அப்படித்தான்.. வழக்கம்போல.. வீட்டினரை மட்டும்.. விடியலைக் கொண்டாட வைத்துவிட்டு.. ரம்யா மட்டும் தூக்கத்தைக் கொண்டாடிக் கொண்டிருந்தாள்..

ஓரளவுக்கு மேல் அவளை அந்த வீட்டில்யாரும் தூங்க விட்டது இல்லை.. முதுகில் நான்கு அடிகளைப் போட்டு எழுப்பி விடுவார்கள்..

அன்று அப்படி யாருமே எழுப்பாமல் போக.. தானாக கண் விழித்தாள் ரம்யா..

விழித்தவுடனேயே அவள் கண்ணில் பட்டது மூன்று வயது சுஜிதாதான்..

குளித்து.. பட்டுக்கவுணை அணிந்து.. பிரகாசமாய் எதிரில் வந்த குழந்தையைக் கண்டதும்.. அவளது தூக்கம் பறந்து விட்டது..

'என்னது இது..? தினமும்.. நானும்.. சுஜி குட்டியும்.. பாத்ரூமுக்கு போட்டி போட்டு குளிப்பதுதானே வழக்கம்.. இன்றைக்கு இவள் குளித்து முடித்து ரெடியாய் வந்து நிற்கிறாள்ன்னா.. நேரமாகியிருக்கணுமே..'

அவள் பதறியடித்துக் கொண்டு எழுந்து அமர்ந்தாள்..

"சுஜிக்குட்டி.. இங்கே வா.."

"வர மாத்தேன்.."

"ஏண்டாக் கண்ணு.."

"நீ அழுக்காயிருக்க.. நான் பிரஷ்ஷா இருக்கேன்.."

ரம்யா நொந்தே போனாள்.. குட்டிக்குழந்தைகிட்டே வர மாட்டேன் என்று சொல்லும் அளவிற்கு கொண்டு வந்து விட்டுவிட்ட தூக்கத்தை சபித்தபடி எழுந்து அவளருகே சென்றாள்..

"ஏண்டா.. அத்தையை விட்டுட்டு குளிச்ச.."

"நானா குளிக்கலை.."

"பின்னே.."

"அம்மா குளிப்பாட்டினா.."

"அம்மாவை அவ.. இவன்னு சொல்லக் கூடாது கண்ணு.."

"போ.. அத்தை.. உன் பேச்சு காய்.."

"போச்சுடா.. நீ தாராளமாய் உங்கம்மாவை அவ.. இவன்னு சொல்லிக்க.. எனக்கென்ன போச்சு..? என்கூட மட்டும் காய் விட்டு விடாதேடா ராஜாத்தி.."

அவர்களின் கலந்துரையாடலைக் கேட்டுக் கொண்டே அங்கே வந்த கௌதமி.. செல்லமாக நாத்தனாரின் முதுகில் ஓர் அடி அடித்தாள்..

"கெட்டிக்காரிதான்.. நீ இவகூட பழம் விடனும்ங்கிறதுக்காக என்னை அவ.. இவன்னு சொல்லிக்கச் சொல்றியா..?"

"ஆயிரம்தான் இருந்தாலும்.. அவ உங்க பொண்ணு.. நீங்க அவளோட அம்மா.."

"ஓஹோ.. பெரிய கண்டுபிடிப்புதான்.. அதுக்காக.. இப்படிப் பேசச் சொல்லிக் கொடுப்பாயா..?"

"ஐயோ அண்ணி.. நான் உங்க பொண்ணுக்கு சொல்லிக் கொடுத்தேனா..? இவ ஊருக்கே சொல்லிக் கொடுப்பா.."

"உன்னோட அண்ணன் மகதானே.. சொல்லிக் கொடுப்பா.. சொல்லிக் கொடுப்பா.."

கௌதமி சிரித்துக்கொண்டே சுஜிதாவைத் தூக்கிக் கொண்டாள்.. ரம்யாவைப் பார்த்து..

"காபி குடி.. போ.." என்றாள்..

"அவ்வளவுதானா..?"

"அப்புறம் என்ன..?"

"இன்றைக்கு மண்டகப்படி இதோட முடிஞ்சிருச்சா..?"

திரும்பவும் கௌதமி சிரிக்கையில்.. சட்டையின் கைப்பகுதியை மடித்து விட்டபடி ரவிந்திரன் அங்கே வந்தான்..

"என்ன ரம்யா எழுந்திட்டியா.." என்று கேட்டவன்..

"கௌதமி.. என் பர்ஸ் எங்கே.." என்று மனைவியிடம் ஆரம்பித்தான்..

"பீரோவில் இருந்துச்சே.."

"வந்து எடுத்துக் கொடு.."

"ஏன்..? நீங்களா எடுத்துக்க மாட்டீங்களா..?"

கௌதமியின் குரல் தேய்ந்து.. தள்ளிப் போக.. ரம்யா எரிச்சல் பட்டாள்..

'இந்த ஆம்பளைகளுக்கு பொம்பளைக என்ன வேலைக்காரிகளா..? பெண்டாட்டி வந்து தேடி எடுத்துக் கொடுத்தால்தான் அந்த பர்ஸ் கிடைக்குமா..? தானாய் எடுத்துக் கொள்ளத் தெரியாதா..?'

ரம்யாவிற்கு தெரியாதது ஒன்று இருந்தது.. அது.. தினமும்.. வேலைக்கு கிளம்பும் முன்னால்.. கௌதமியை கட்டியணைத்து முத்தம் கொடுப்பது ரவிந்திரனின் பழக்கம்.. என்பது..

பூட்டிய அறைக்குள்.. மனைவியை அணைத்து ரவிந்திரன் வாசம் பிடிக்க ஆரம்பிக்க..

"ஸ்ஸ்.. சுஜி.." என்று எச்சரித்தாள் கௌதமி..

"சுஜிக்குட்டி.. அத்தைகிட்டப் போயி.. அப்பாவோட பேனாவைப் பார்த்தியான்னு கேட்டுட்டு வா.."

கதவைத் திறந்து.. சுஜிதாவை அப்புறப்படுத்தினான் ரவிந்திரன்.. கனகாரியமாக தகப்பனின் கட்டளையை நிறைவேற்ற குழந்தை ஓட.. அவன் கதவை அடைத்து விட்டு.. மனைவியைத் தாகத்துடன் பார்த்தான்..

"ஸ்ஸ்.. என்ன பார்வை இது..?"

"என் பெண்டாட்டியை நான் பார்க்கிறேன்.. இது ஒரு தப்பா..?"

"அதுக்காக.. நேரம்.. காலம் கிடையாதா..?"

"ஜே..ஜே.. உனக்கு.. ஜேஜேன்னு எப்பப் பார்த்தாலும் கூட்டம்.."

"தனிக்குடித்தனம் போயிரலாமா..?"

"இப்ப தனிக்குடித்தனமாய்தானேடி இருக்கோம்.."

"அப்படியா.."

"ஆமாம்.. தாத்தா.. பாட்டி.. அப்பா.. அம்மா.. சித்தப்பா.. சித்தி.. தம்பி.. தம்பி பெண்டாட்டி.. நான்..

என் பொண்டாட்டி.. குழந்தை.. தங்கைன்னு.. தனிக்குடித்தனமாய்த்தானே இருக்கோம்.."

"பேச்செல்லாம் வெல்லக்கட்டிதான்.. இதுதான் தனிக்குடித்தனமா..?"

"எனக்கு இதுதான் தனிக்குடித்தனம்.."

"கில்லாடிதான்.."

கௌதமி சிரிக்க.. அவளை ஆசையுடன் பார்த்தபடி.. தன்னுடன் இறுக்கிக் கொண்டான் ரவிந்திரன்..

பேனாவைக் கேட்டுக் கொண்டு வந்த குழந்தை.. ரம்யாவைக் காணாமல்.. அவளைத் தேடிக் கொண்டு சமையல் கட்டுப் பக்கம் போனது..

"என்னடா கண்ணு.." ராஜம் பாசத்துடன் குழந்தையைத் தூக்கிக் கொள்ள..

"அத்தை எங்கே..?" என்று கேட்டது..

"யாருக்குத் தெரியும்..? அப்ப இங்க இருந்தா.. இப்ப எங்கே இருக்காளோ..?"

## அத்தியாயம்- 6

ரம்யா தோட்டத்தில் இருந்தாள்..

கையிலிருந்த தம்ளரில் இருந்த காப்பியை.. சொட்டு சொட்டாய் உறிஞ்சியபடி.. பூக்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்..

அவன் பின்னால் காலடியோசை கேட்டது.. திரும்பிப் பார்த்தாள்.. யுகேந்திரன் வந்து கொண்டிருந்தான்..

ரம்யாவின் முகம் சுருங்கியது.. தமையனைப் பாராததைப் போல.. மீண்டும் பூக்களை பார்வையிட ஆரம்பித்தாள்..

"ரம்யா.."

"ம்ம்ம்.."

"இந்தா.."

"என்னது..?"

நிமிர்ந்து பார்த்த ரம்யா திகைத்துப் போனாள்.. ஆயிரம் ரூபாய் நோட்டை அவளிடம் நீட்டிக் கொண்டிருந்தான் யுகேந்திரன்..

"வைச்சுக்க.."

"எதுக்கு..?"

"உன் கைச்செலவுக்குத்தான்.."

இப்படிச் சொன்னவனை விசித்திரமாய் பார்த்தாள் ரம்யா.. கல்லூரிக்குப் போகும் காலத்தில் ஒரு நூறு ரூபாயைக் கொடுக்க வழக்கடித்தவன்.. கல்லூரிப் படிப்பை முடித்து விட்டு.. வீட்டிலிருக்கும் தங்கையிடம் ஆயிரம் ரூபாயை நீட்டினால்.. அவள் விசித்திரமாய் பார்க்காமல்.. வேறு என்ன செய்வாள்..?

"எனக்கென்ன செலவிருக்கப் போகுது..?"

"ஏதாச்சும் செலவு பண்ணு.. வாங்கிக்க.."

மியுஸியத்தில் வைக்கப்பட வேண்டிய பிறவியைப் பார்ப்பதைப் போல யுகேந்திரனைப் பார்த்தபடி அந்த

ரூபாயை வாங்கிக் கொண்டாள் ரம்யா..

"காப்பி.. குடிக்கிறாயா.." என்று கேட்டவனுக்கு..

'இல்லை.. வேறு ஒன்றைக் குடிக்கிறேன்..' என்று தான் பதில் சொல்ல ஆசைப்பட்டாள் ரம்யா..

ஆனால்.. என்றைக்கும் இல்லாத திருநாளாக.. இன்று வந்து.. தங்கையிடம் பாச மழையைப் பொழிகிறவனிடம் பட்டென்று பதில் பேச முடியாமல்..

"ம்ம்ம்.." என்றாள்..

"சாப்பிட்டாயா..?"

"இன்னும் பல்லே தேய்க்கலை.."

"ஓ.. சீக்கிரமாய் குளிச்சுட்டு சாப்பிடும்மா.."

'இவன் எதுக்கு இன்னைக்கு ஓவராய் சீன் போடுறான்..?'

சந்தேகத்துடன் சகோதரனை உற்றுப் பார்த்தாள் அவள்.. அவனோ பாசமாக.. அவளைப் பார்வையால் வருடியபடி..

"போயிட்டு வரவாம்மா.." என்று வினவினான்..

'எங்கே போகப் போகிறான்..? ஒருவேளை.. வெளியூருக்கு போகிறானோ.. வர இரண்டு.. மூன்று மாதங்களாகுமோ.. அதனால்தான் பாசம் பொத்துக் கொண்டு வருகிறதோ..' ரம்யாவின் மனதில் எண்ணங்கள் ஓடி..

"எங்கே கிளம்பிட்டண்ணா..?" என்று விசாரித்தாள்.

"அண்ணன் வேற எங்கேம்மா போவேன்..? பர்னிச்சர் மார்ட்டுக்குத்தான் போவேன்.." அவன் சொன்ன பதிலில் அவளுக்கு தூக்கி வாரிப் போட்டது..

தினமும் காலையில் பர்னிச்சர் மார்ட்டிற்கு போய் விட்டு.. மதிய உணவுக்கு வீடு வந்து சேர்கிறவன்.. இப்படி பிரியாவிடை பெற்றால்.. அவள் தான் என்ன செய்வாள்..?

"அதுக்காண்ணே இவ்வளவு பில்ட் அப் கொடுக்கிற..?" என்று.. தாங்க மாட்டாமல் கேட்டு விட்டாள்..

பொதுவாக இதுபோல அவள் ஏடாகூடமாக கேட்டுவிட்டால்.. ஓங்கி அவள் தலையில் குட்டு வைக்கும் வழக்கமுடைய யுகேந்திரன்.. அவள் தலையருகே கையைக் கொண்டு வரவும்.. குட்டத்தான் வருகிறான் என்ற அனுமானத்தில்.. அவள் கண்களை மூடிக் கொண்டு.. வலியைத் தாங்கிக் கொள்ளத் தயாரானாள்..

ஆனால் அவன் கை குட்டாமல்.. அவளது தலையை வருடிக் கொடுக்க ஆரம்பித்ததும்.. அவள் ஆச்சரியத்தின் விளிம்புக்கே போய் விட்டாள்..

'யார் இவன்..? என் அண்ணனா..? இவன்..?'

"போக்கிரி.. போய்.. காலாகாலத்தில் சாப்பிடு.."

'கொட்டிக்க..' என்று அன்பாக சொல்லும் தமையனுக்கு இன்றைக்கு என்னவோ ஆகிவிட்டது என்ற கவலையில் ஆழ்ந்து போனாள் ரம்யா..

அவனது நெற்றியில் கையை வைத்துப் பார்க்கவும் செய்தாள்..

"என்ன செய்கிற ரம்யா..?"

"உனக்கு உடம்புக்கு என்னண்ணே..?"

"ஒண்ணுமில்லையே.. நான் நல்லாத்தானே இருக்கேன்.."

அவன்.. தங்கையின் பாசமான விசாரிப்பில் மனம் மகிழ்ந்து போய்.. கிளம்பிச் சென்றுவிட.. வெகுநேரம்.. 'ஆ' வென்று வாய் பிளந்து நின்றுவிட்டாள் ரம்யா..

"என்னாச்சு ரம்யா..? எதைப் பார்த்து பிரமை பிடிச்சாப்புல நின்னுட்ட..?"

ரம்யாவைத் தேடி.. தோட்டத்துக்கு வந்த ரஞ்சனா அதிசயப்பட்டு வினவினாள்..

"எல்லாம் உங்க புருசனைப் பார்த்துத்தான்.."

"என் புருசனா..? உன் அண்ணன்னு சொல்ல மாட்டாயா..?"

"உங்களுக்கு அப்படிச் சொன்னாத்தானே பிடிக்கும்..?"

ரஞ்சனாவின் முகம் சிவந்து போனது..

'இந்த ஆண்கள்.. பெண்களை மயக்கிக் கைக்குள் வைத்திருக்கிறார்கள்..' என்று எண்ணிக் கொண்டாள் ரம்யா..

'இதுவும் ஒரு வகையான அடிமைத்தனம்தான்..'

ரஞ்சனாவின் வெட்கச் சிகப்பை யோசனையுடன் பார்த்தபடி..

"அண்ணனைத் தேடி வந்தீங்களா..? அவன் கடைக்குப் போயிட்டானே.." என்றாள் ரம்யா..

"எனக்குத் தெரியுமே.. என்கிட்டச் சொல்லிட்டுத் தானே வந்தார்.. நான்.. உன்னைத் தேடி வந்தேன்.."

"என்னையா..?"

ரம்யாவின் குரலில் ஆச்சரியம் வெளிப்பட்டது.. அவளின் அத்தை பெற்ற மகளான ரஞ்சனாவிற்கு மாமன் மகனின் மேல்.. மையல் அதிகம்... அவன் எங்கே நிற்கிறானோ.. அங்கேதான் அவளும் நிற்பாள்.. அவன் வேலைக்குப் போனவுடன்... அவனுக்காக சமைக்க ஆரம்பித்து விடுவாள்..

இப்படி.. இருபத்தி நான்கு மணி நேரமும் யுகேந்திரனின் நினைவிலேயே இருக்கும் ரஞ்சனா.. ரம்யாவைத் தேடி வந்தால்.. அவளுக்கு ஆச்சரியம் வராதா..?

'புருசனும்.. பெண்டாட்டியும்.. என்னை மயக்கம் போட வைக்கணும்கிற முடிவோடதான் இருக்காங்க..'

"வா.. வந்து குளி.. பாத்ரூமில் ஹீட்டரை ஆண் பண்ணி வச்சிருக்கேன்.."

'என்னடா.. இது.. புதுப்பழக்கமாயிருக்கு..'

"நான் கொஞ்ச நேரம் கழிச்சு குளிக்கப் போறேன் அண்ணி.. இப்பத்தான் தோட்டத்துக்கு வந்தேன்.. விச்ராந்தியாய் நடை பழகிட்டு வர்றேனே.."

"ஏற்கனவே உன் நடை அழகாத்தான் இருக்கு.. புதுசாய் நீ நடை பழக வேணாம்.. குளிக்க வா.."

'என்னை குளிக்க வைக்க.. இவளெதுக்கு மெனக்கெடறா..' ரம்யாவுக்கு புரியவில்லை..

பேசாமல் குளிக்கப் போய் விடுவதே சாலச் சிறந்தது என்று அவளுக்கு தோனறி விட்டது..

இல்லாவிட்டால்.. இயல்புக்கு மாறான இந்த உபசரணைகளால் அவள் மூர்ச்சையாகிக் கொண்டே.. இருக்க நேரிட்டு விடும் என்பதால்.. அவள் குளியலறைக்குள் புகுந்தாள்..

குளித்து முடித்து.. சாதாரணமாக.. ஒரு சுடிதாரை மாட்டிக் கொண்டு வந்தவளிடம்.. அதிருப்தியான முகபாவனையைக் காட்டினாள் ராஜம்..

"இதையா மாட்டியிருக்கே..?"

"ஏம்மா.. இதுக்கென்ன.. நல்லாத்தானே இருக்கு..?"

"உனக்கு நல்லாயிருக்கும்.. எங்களுக்கு நல்லாயில்லை.."

"போடறது நான்தான்.. அதனால.. இதை விட்டுட்டு.. நீ இட்லியை.. என் தட்டில் போடு.."

## அத்தியாயம்- 7

ரம்யாவின் தட்டில் பூரிகளை எடுத்து வைத்துப் பரிமாற ஆரம்பித்தாள் ராஜம்..

ரம்யாவின் விழிகள் விரிந்தன..

"வாவ்..." என்றாள்..

வழக்கமாக.. அவள் 'வாவ்..' என்று சொன்னால்..

"எதுக்கு ஆவ் ன்னு கொட்டாவி விடறே.." என்று அதட்டி வைப்பாள் ராஜம்..

அன்று.. ஒன்றுமே சொல்லாததோடு.. மகளின் 'வாவ்' வை ரசித்து கண்சிமிட்ட வேறு செய்தாள்..

இட்லிகளே ஆட்சி செய்யும் சமையலறையில் பூரி கிழங்கு வந்து கொலுவீற்றது கூட ரம்யாவிற்கு அதிசயமாக இல்லை..

அவளது 'வாவ்..' வை ரசித்து ராஜம் கண் சிமிட்டியது அவளுக்கு உலக அதிசயங்களில் ஒன்றாக தோன்றி விட்டது..

"அம்மா.. இது நீயா..?"

"நானேதான்.."

"நான் காண்பது கனவா..? இல்லை நனவா..?"

"போடி அரட்டை.. தட்டைப் பார்த்துச் சாப்பிடு.."

கரிசனத்துடன் ராஜம் கூறிக் கொண்டிருந்த போது..

"மரகதம்.." என்று அழைத்தபடி அங்கே வந்தார் புண்ணியகோடி..

"அக்கா.. வாசல் பக்கம் இருந்துச்சு.." ராஜம் மரியாதையாகப் பதில் சொன்னாள்..

"அப்படியா.." என்றபடி ரம்யாவைப் பார்த்தவர்.. பாசத்துடன் அவளருகில் வந்து.. தலையை வருடிக் கொடுத்தார்..

எப்போதும் அவரின் பரிவிற்குப் பழக்கப்பட்டதால் ரம்யா லேசாக சிரித்துவிட்டு.. பூரியில் கண்ணும் கருத்துமாக ஆனாள்..

"என்னடாம்மா.. சாப்பிடுறியா.."

'இல்லை.. கபடி விளையாடுகிறேன்..'

இப்படித்தான் பதில் சொல்ல நினைத்தாலும்.. கேட்பது அவளுடைய மரியாதைக்குரிய பெரியப்பா என்பதால்..

"ஆமாம் பெரியப்பா.." என்றாள் ரம்யா..

"சாப்பிடு.. சாப்பிடு.. உன் அக்காவுக்கு இருக்கிற கொடுப்பினை உனக்கு இல்லை.." என்று அவர் குண்டைத் தூக்கிப் போட்டார்..

கைலாஷின் காதலை மறுத்து விட்டு.. வெங்கட்டின் மனைவியான ராதிகா எதில் கொடுத்து வைத்தாள் என்று ரம்யாவிற்கு புரியவில்லை..

அதனால்.. "ஏன் பெரியப்பா.." என்று கேட்டு வைத்தாள்..

"அவளுக்கு அவளோட அத்தை வீடு கிடைச்சிருச்சு.. அவளைப் பத்தி தெரிஞ்ச மாமனார்.. மாமியார்.. அவமேல ஆசைப்பட்ட அத்தை மகனே புருசனா வாய்ச்சிருக்கார்.. உனக்கு அப்படியா..?"

"எனக்கென்ன பெரியப்பா..?"

"ம்ஹீம்.. அறியாதவங்க வீட்டில பெண்ணை கொடுக்கணும்.."

அவர் வார்த்தைகளில் வருத்தம் தோய்ந்திருக்க ராஜம் கண் கலங்கினாள்.. பால்பாத்திரத்துடன் உள்ளே வந்த மரகதம்..

"பால் அதிகமாக தேவைப்படும்ன்னு.. கறந்துட்டு வரச் சொன்னேன்.. ஆமா ராஜம்.. எதுக்கு கண்கலங்கறே.." என்று அதட்டினாள்..

"ஒண்ணுமில்லக்கா.. நம்ம பொண்ணு அறியாதவங்க வீட்டில வாழணுமேன்னு மாமா கவலைப்பட்டார்.." ராஜம் கண்களைத் துடைத்துக் கொண்டாள்..

"அதுக்கென்னவாம்.. இப்ப கௌதமி.. அறியாத மாமனார் வீட்டுக்கு வந்து.. ரவிந்திரனுக்கு பெண்டாட்டியாகி வாழலையா..? அது போலத்தான் இதுவும்.. கண்ணைத் துடை.. ஆக வேண்டிய வேலைகளைக் கவனி.."

மரகதம் ராஜத்தை கடிந்து விட்டு கணவரைப் பார்த்தாள்..

"உங்க வேலைதானா இது..?"

"மனது தாங்கலைடி.."

"அதுக்காக.. பெண்ணைக் கட்டிக் கொடுக்காம.. வீட்டிலேயே பூட்டி வச்சுக்கலாமா..?"

"நான் அப்படிச் சொன்னேனாடி.."

"அதது.. நடக்க வேண்டிய வயசில நடக்கணும்.. அதை விட்டுட்டு கலங்கக் கூடாது.."

புண்ணியகோடியிடம் கூறிய மரகத்தின் குரல் கம்மியது..

"இருந்தாலும்.. இவ குழந்தை.. சூது வாது தெரியாது.. பச்சை மண்ணு.. இவளோட அருமை தெரிஞ்சு.. வைத்துப் பிழைக்கிறவங்களா இருக்கணும்.. அதான் என்னோட வேண்டுதல்.."

இப்போது மீண்டும் ராஜம் கண்கலங்க.. மரகதம் கடிந்து கொள்ளாமல் சேர்ந்து கண்கலங்கினாள்..

'அப்படியே.. கருப்பு.. வெள்ளை படத்தைப் பார்த்ததைப் போலவே இருக்கு..'

ரம்யாவிற்கு அங்கே நடந்த உரையாடலைக் கேட்டு சிரிப்புத்தான் வந்தது.. பெரியப்பாவின் முன்னால் சிரிக்கக் கூடாது என்று மரியாதையுடன் சிரிப்பை அடக்கிக் கொண்டாள்..

"ஏங்கண்ணு.. இதையா போட்டுக்கிட்ட..?"

ரம்யாவின் சுடிதாரைக் காட்டி மரகதம் வினவியதும்.. ரம்யாவிற்கு ஒன்றுமே புரியவில்லை..

"ம்ம்.." என்றாள்..

"நானும் இதைத்தான் சொன்னேன்க்கா.."

"விடு ராஜம்.. அப்புறம் மாத்தச் சொல்லிக்கலாம்.."

'எப்புறம்.. எதை மாத்த..?' ரம்யா மனதிற்குள் கேள்வி கேட்டபடி எழுந்து கைகழுவச் சென்றாள்..

"சுஜிக்குட்டி எங்கே.."

வாசல்பக்கம் தேடிப் போனவளை..

"ஏ புள்ள ரம்யா.. இங்கிட்டு வா.. என்று அழைத்தாள் கோசலை.."

வாகாக.. வெற்றிலைக்குள் பாக்கை வைத்து மடக்கி.. வாயில் போட்டுக் கொண்டவளிடம்.. சென்று நின்றாள் ரம்யா..

"என்ன பாட்டி..?"

"கழைக் கூத்தாடி மாட்டியிருக்காப்புல.. என்ன உடுப்பை மாட்டியிருக்கிறவ..?"

"இங்கே பாரு பாட்டி.. என்னை எதுவேணும்னாலும் சொல்லு.. ஆனா.. என் சுடிதாரைச் சொல்லாதே.."

"ஏன்.. சொன்னா என்ன..? பதவிசா.. சேலைக்கட்டி.. நகையைப் போட்டு நின்னா.. உன் அழகில.. வாரவன் மயங்கியிருவான்.. அதை விட்டுட்டு.. குழாயை மாட்டிக்கிட்டு நிக்கிறா.."

"எவனையும் நான் மயக்க வேணாம்.. அதுக்கு வேற ஆளைப் பாரு.."

"அடி ஆத்தி.. இந்த சின்னக்குட்டிக்கு எவ்வளவு கோபம் வருது..?"

கோசலை முகவாயில் கை வைத்து அதிசயிக்க ஆரம்பிக்க.. வாய்க்குள் பாட்டியைத் திட்டியபடி மாடிப்படி ஏறினாள் ரம்யா.. எதிரே வந்து கொண்டிருந்த வெள்ளைச் சாமி.. பேத்தியின் கோப முகத்தை வேடிக்கையாகப் பார்த்தார்..

"இங்கே பாருலே.. என் பேத்தியின் முகத்தில் எள்ளும்.. கொள்ளும் வெடிக்குது.. ஏன்த்தா..? யாருமேல இம்புட்டு கோவம்..?"

"எல்லாம் உங்க பெண்டாட்டி மேலதான்.."

"ஹா.. ஹா.. அவ என்ன பண்ணினா..?"

"என்ன சொன்னான்னு கேளுங்க.."

"கேட்டுட்டாப் போச்சு.. என்ன சொன்னா..?"

"நான் பூவைச்சு.. நகை போட்டு.. பொட்டு வைச்சு.. சேலை கட்டி அலங்காரம் பண்ணிக்கிட்டு.. யாரையோ மயக்கணுமாம்.."

"சரியாத்தானே சொல்லியிருக்கா.. இதுக்கா இம்புட்டு கோபம்.. ஹா.. ஹா.."

"தாத்தா.. இது சரியில்லை.. பாட்டியைத் திட்டாம பகடி பேசிக்கிட்டு இருக்கீங்களா..?"

"பகடியா..? போ பாப்பா.. அந்தக் காலத்தில.. உன் பாட்டியும் என்னை மயக்க.. இந்த அலங்காரத்தை எல்லாம் பண்ணிக்கிட்டவதானே..?"

"தாத்தா.. எனக்கு கோபம் வந்திரும்.."

"புதுசாவா.. வரப் போகுது..? உன் அப்பனைக் கல்யாணம் பண்ணிக்க.. உன் அம்மாவும் இந்த அலங்காரத்தை எல்லாம் பண்ணிக்கத்தான் வேண்டியிருந்தது.."

"என்ன சொன்னீங்க..?"

"ஏன் பாப்பா கோபப்படறே..? உன் அண்ணனுக்கு பொண்ணு பார்க்க திருநெல்வேலிக்குப் போனப்போ.. கௌதமியும் இதைப் போலத்தானே அலங்காரம் பண்ணிக்கிட்டு வந்து நின்னுச்சு.. உன் அண்ணன் பார்த்ததும் மயங்கிப் போயிடலையா..?"

இவர்கள் எல்லோரும் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்..? பெண்கள் என்ன போகப் பொருளா..? ஆணை மயக்குவதுதான் அவர்களின் வாழ்க்கை இலட்சியமா..? இப்படியெல்லாம் அலங்காரம் செய்து.. ஒரு ஆணை வசீகரிக்க வேண்டிய அவசியம் தான் என்ன..?

## அத்தியாயம்- 8

அந்த அவசியத்தின் அத்தியாவசியத்தை.. மாலையில் உணர்ந்து கொண்டாள் ரம்யா..

கௌதமியும்.. ரஞ்சனாவும்.. அவளைத் தேடி மாடிக்கு வந்தனர்..

"ரம்யா.. எழுந்திரு.."

"எதுக்கண்ணி.." ரம்யா சிணுங்கினாள்..

"டிரஸ் சேன்ஜ் பண்ணிக்க.."

"ஏன்..? வெளியே போகிறோமா..?"

"இன்னைக்குன்னா வெளியே போவோம்..? எல்லாம்.. வீட்டுக்குள்தான் இருக்கப் போகிறோம்.."

"அப்புறம் எதுக்கு.. வெட்டியா.. டிரஸ் சேன்ஜ் பண்ணிச் சொல்கிறீங்க..?"

"காரணமாத்தான்.. நீ இந்தச் சேலையை உடுத்திக்க.."

கௌதமி நீட்டிய பட்டுச் சேலையைப் பார்த்ததும்.. ரம்யாவின் புருவங்கள் மேலேறின..

"என்னண்ணி.. இதைக் கட்டச் சொல்றீங்க..?"

"ஏன்..? இதைக் கட்டினா என்ன..?"

"எனக்குச் சேலைன்னாலே அலர்ஜி.. அதிலயும் பட்டுச் சேலைன்னா.. இன்னும் அலர்ஜி.. அதைக் கட்டிக்கிட்டு கசகசன்னு என்னை அலையச் சொல்றீங்களா..?"

"அலைய வேணாம்.. அடக்க ஒடுக்கமாய் வந்து நின்னாப் போதும்.."

"எங்கே.."

"நம் வீட்டு ஹாலிலே.."

"இது என்ன கதையாய் இருக்கே.. நான் எதுக்கு அப்படி வந்து நிற்கணும்..?"

"உன்னை எல்லாரும் பார்க்க வேணாமா..?"

"எல்லோரும்னா..?"

"வீட்டுக்கு வரப் போகிற விருந்தாளிக.."

"வீட்டுக்கு.. விருந்தாளிக வரப் போகிறாங்களா..?"

"ஆமாம்.. சரி.. சரி.. சீக்கிரமாய் ரெடியாகு.."

"அவங்க முன்னால ஷோ கேஸ் பொம்மை போல நிற்க நான் ரெடியாகணுமா..? அதுக்கு வேற ஆளைப் பாருங்க.."

"இதென்ன ரம்யா.. பாட்டிகிட்டயும் வேற ஆளைப் பார்க்கச் சொன்னயாம்.. எங்க கிட்டயும் இதே கதையைப் படிக்கிற.. இப்போதைக்கு.. இதுக்கு நீதான் ஆளு.. வேற தகுதியான ஆள் இந்த வீட்டில் கிடையாது.."

ரஞ்சனா இப்படிச் சொல்லியதும் கௌதமி.. கண்களைச் சிமிட்டி.. கிளுகிளுத்துச் சிரித்தாள்.. அவர்கள் ஏன் அப்படிக் கூட்டணி போட்டுக் கொண்டு சிரிக்கிறார்கள் என்ற காரணம் புரியாமல் ரம்யா திகைத்தாள்..

'இப்ப நான் என்ன சொல்லிட்டேன்னு இவங்க ரெண்டு பேரும் இப்படிச் சிரிக்கிறாங்க..'

நாத்தனாரின் வினோதமான பார்வையைக் கண்டதும் அவர்களின் சிரிப்பு குறைந்தது.. ஆனால்.. மழை விட்டாலும்.. தூறல் விடாததைப் போல.. முற்றிலுமாகக் குறையாமல்.. உதடுகளில் அந்தச் சிரிப்பு.. முற்றிலுமாக மறையாமல் தேங்கி நின்றது..

அந்தச் சிரிப்போடு.. ரம்யாவை விரட்டினார்கள் அவர்கள்..

"ஊம்.. ஊம்.. எழுந்திரு.."

"என்ன அண்ணி.. இப்படி விரட்டறீங்க.."

"உன்னை இப்படி விரட்டித் தயார் பண்ணலைன்னா.. எங்க மாமியார் ரெண்டு பேரும்.. எங்களை விரட்டுவாங்களே.."

"ஆமாமாம்.. இதில் புருசன்மாரும் சேர்ந்துக்குவாங்க.."

"என்னடா.. இத்தனை நேரமா.. ரஞ்சனா.. புருசனைப் பத்தி பேசாம இருக்கிறாளேன்னு நினைச்சேன்.. பேசிட்டா.."

"அங்கே மட்டும் என்னவாம்.. நானாச்சும்.. மனசில்தான் நினைக்கிறேன்.. உனக்கு.. ஒரு நிமிசத்துக்கு ஒருதரம் செல்போனிலல்ல.. அழைக்கிறாரு.."

ரஞ்சனா சொல்லி வாயை மூடுவதற்கு முன்னால்.. கௌதமியின் செல்போன் அலறியது.. எட்டிப் பார்த்த ரஞ்சனா..

"யாரு..? மாமாதானே..? எப்படி.." என்று கண் சிமிட்டினாள்..

"தங்கச்சியைப் பத்தி விசாரிப்பார்.." முகத்தில் அசடு வழியப் பதில் சொல்லிய கௌதமி.. போனை எடுத்து காதில் வைத்தாள்..

"ம்ம்.. ம்ம்.. ஊஹீம்.. ம்ம்.. ம்ஹீம்.. ம்..? ம்ம்.."

ஒரு 'ம்ம்..'ல் இத்தனை அர்த்தங்களை கொடுக்க முடியுமா என்று ரஞ்சனாவும்.. ரம்யாவும்.. மோவாயில் கைவைத்து அசந்து விட்டார்கள்..

ஒருவழியாய் 'ம்' கொட்டி முடித்த கௌதமி.. போனை அணைத்து விட்டு.. மற்ற இரு பெண்களையும் லஜ்ஜையுடன் நிமிர்ந்து பார்த்தாள்..

"ம்ஹீம்.." ரஞ்சனா.. ரம்யாவைப் பார்க்க..

"ம்ம்..?" என்று அவள் புருவம் உயர்த்தினாள்..

"ஊஹீம்.." தலையாட்டி மறுத்தாள் ரஞ்சனா..

"ம்ம்.." ரம்யா முறைத்தாள்..

"ம்ம்ம்.." ரஞ்சனா கெஞ்சுதலாக பார்த்தாள்..

"ம்ம்ம்.." ரம்யா கெத்தாக முகத்தை வைத்து கொண்டாள்..

அவர்கள் இருவரும்.. தன்னைத்தான் கேலி செய்கிறார்கள் என்று கௌதமிக்கு புரிந்து விட்டது.. அவள் பொய் கோபத்துடன் ரஞ்சனியின் முதுகில் ஒரு போடு போட்டாள்..

"என்னத்தை ரெண்டு பேரும்.. மாறி.. மாறி.. ம்ம்.. போடறிங்க.."

"நீ இத்தனை நேரமும் போனில்.. 'ம்' போட்டியே.. அதை விடவா.. இது பெரிய 'ம்'..?"

"என்னைக் கேலி பண்றீங்களா..?"

"சேச்சே.. ஏன் ரம்யா.."

"அண்ணி.."

"இந்த நவரசத்தைப் பத்தி.. நீ கேள்விப் பட்டிருக்கியா..?"

"ஓ.. தெரியுமே.."

"அந்த நவரசத்தையும் ம்னு ஒற்றை எழுத்தில் சொல்ல முடியும்ன்னு இத்தனை நாளாய் எனக்குத் தெரியாது ரம்யா.."

"எனக்கும்தான் அண்ணி.."

"அட... அடா.. அடடா.."

"எதுக்கு இத்தனை அட போடறிங்க அண்ணி.."

"எல்லாம்.. உன் பெரியண்ணியின் பேச்சுத் திறமையை நினைச்சுத்தான்.. நானும்தான்.. குட்டி போட்ட பூனை போல உன் அண்ணன் பின்னாலே சுத்திச் சுத்தி வாரேன்.. வாய் வலிச்சாலும் பரவாயில்லைன்னு பேசிப் பேசி ஓயறேன்.. உன் அண்ணன்.. எனக்கென்னன்னு ஒரு பார்வை பார்த்துட்டு போய் விடுகிறார்.. இதுவே.. உன் பெரியண்ணியைப் பாரேன்.."

"பார்த்துக்கிட்டுத்தானே இருக்கேன்.."

"ஒரு 'ம்' போட்டே.. புருசனை கைக்குள்ள வச்சிருக்கு பாரேன்.."

"அதைச் சொல்லுங்க.. ஆனா அண்ணி.. உங்களுக்கு என் சின்ன அண்ணனைப் பத்தி தெரியாது.."

"தெரியத்தானே மாட்டேங்குது.."

"அவருக்கு.. அப்பாவும்.. பெரியப்பாவும் என்ன சொல்றாங்களோ.. அதுதான் வேதம்.."

"அதுதான் தெரியுமே.."

"அவங்க கிழிச்ச கோட்டைத் தாண்ட மாட்டார்.."

"அதுவும் தெரியுமே.."

"அவங்க.. கட்டினா அத்தை மகளைத்தான் கட்டணும்ன்னு அண்ணன் பிறந்ததிலிருந்து கட்டளையே போட்டுட்டாங்க.."

"அது எனக்குத் தெரியாதா..?"

ரஞ்சனா முகம் சிவக்க.. ஒரு ஆணைப் பற்றிய பேச்சுக்கு இப்படிக் கட்டாயமாய் முகம் சிவந்துதான் ஆக வேண்டுமா..? என்று கொதித்துப் போனாள் ரம்யா..

"போதும்ண்ணி.. அதுக்காக.. கட்டைவிரலால்.. தரையில் கோலம் போடாதீங்க.. அவனும்.. அத்தை பெற்ற மகளைத் தவிர வேறு யார் பெற்ற மகளும்.. மனசைக் கலைத்து விடக் கூடாதுன்னு.. இறுக்கித் தாழ்ப்பாள் போட்டுக்கிட்டான்.."

"ஓ.."

"அவன் கூடப் படிச்ச பொண்ணுக எல்லாம் நூல் விட்டுப் பார்த்தாங்க.."

"ஓ..?"

"அவங்களுக்கு.. இவன் கொடுத்த லெக்சரில் அலறிப் போய்.. துண்டைக் காணோம்.. துப்பட்டாவைக் காணோம்ன்னு ஓடியே போயிட்டாங்கன்னா பாருங்களேன்.."

"ஓ..!"

"அதில் ஒரு பொண்ணு மயக்கமே போட்டுட்டா.. அதுக்கப்புறம் அண்ணனைப் பார்த்து.. விவேகானந்தர் தான் மறுபடியும் பிறந்து வந்துட்டாருன்னு எல்லோரும்.. நினைக்க ஆரம்பிச்சுட்டாங்க.."

"ஓ..?!"

## அத்தியாயம்- 9

ரம்யா பேச்சை நிறுத்திவிட்டு ரஞ்சனாவை முறைத்தாள்.. அவள் எதுவும் புரியாதவளாக..

"ஏன் ரம்யா.. அப்படிப் பார்க்கிற..?" என்று தேனொழுகும் குரலில் கேட்டாள்..

"நீங்க ரெண்டு பேரும் ஒற்றை எழுத்தில் உங்க புருசன்க கிட்ட கொஞ்சுவீங்க.. அதை நான் வேடிக்கை பார்க்கணுமாக்கும்.."

"அதுதானே.. என்னவோ.. நான் 'ம்' போட்டதைப் போய் பெரிதாய் பேசினாளே.. இப்ப.. இவ ஓ போட்டாளே.. இதுக்கென்ன அர்த்தம்ன்னு கேளு ரம்யா.."

"அதெப்படி அண்ணி.. ஒரு 'ஓ'வில் இத்தனை அர்த்தத்தை வைச்சீங்க.. ஜெமினி சினிமாவில.. விக்கிரம் கூட இப்படியொரு 'ஓ' போட்டிருக்க மாட்டாரு போங்க.."

கௌதமி அதைக் கேட்டதும்.. கொழுந்தன் மனைவியைக் கேலி பண்ண வாய்ப்பு கிடைத்த சந்தோசத்துடன்..

"ஓ.. போடு.. ஓ.. போடு.." என்று ராகத்துடன் பாட ஆரம்பித்தாள்..

ரஞ்சனா மட்டும் அவளுக்கு சளைத்தவளா.. என்ன..? அவள் யார்..? சரஸ்வதி பெற்ற வீரத்திருமகள் ஆயிற்றே..

அதனால் அவளும் பதில் பாட்டுப் பாட ஆரம்பித்தாள்..

"ம்ம்ம்.. ம்ம்ம்..

இதுவரை.. நீங்கள்

பார்த்த பார்வை.. இதற்காகத்தானா..?

இப்படியென்று.. சொல்லியிருந்தால்..

தனியே.. வருவேனா..?

ம்ம்ம்.. ம்ம்ம்.."

கௌதமி வெட்கப்பட்டுப் போய் ரஞ்சனாவின் வாயை மூட.. அவள் பதிலுக்கு அவள் கையை தள்ளி விட்டுக்

கொண்டிருக்க.. அறைக் கதவைத் திறந்து கொண்டு.. மரகதமும்.. ராஜமும் உள்ளே வந்தார்கள்.. மருமகள்களைப் பார்த்து.. புருவம் உயர்த்தினார்கள்..

மாமியார்களைக் கண்ட மருமகள்கள் திருதிருவென்று விழித்துக் கொண்டு பின்வாங்க..

"இது.. சரி.." என்றாள் ராஜம்..

"உங்க ரெண்டு பேரையும்.. ரம்யாவுக்கு அலங்காரம் பண்ணச் சொல்லி அனுப்பி வைச்சா.. நீங்க இங்கே வந்து பாட்டுக் கச்சேரியா பண்ணிக்கிட்டு இருக்கீங்க...? வாசல்வரைக்கும் உங்க இசைப்பாட்டுத்தான் கேட்குது.." என்றாள் மரகதம்..

"வாசல் வரைக்குமா..? தெருமுனை வரைக்கும்.. கேட்குதுன்னு சொல்லுங்க அக்கா.." என்று மருமகள்களை முறைத்தாள் ராஜம்..

"விட்டால் உன் மாமியார்.. இந்த ஊர் எல்லை வரைக்கும் நம்ம பாட்டுக் கச்சேரி கேட்டதுன்னு சொல்லிடுவாங்க..." கௌதமி ரஞ்சனாவின் காதில் முணுமுணுத்தாள்..

"அதைச் சொல்லு.. திருநெல்வேலி சீமை வரைக்குமே நம்ம பாட்டுச்சத்தம் கேட்டதுன்னு சொன்னாலும் ஆச்சரியப்படுகிறதுக்கில்லை.." ரஞ்சனா பதிலுக்கு முணுமுணுத்தாள்..

"நீயேண்டி.. இப்படி தலைவிரி கோலமாய் இருக்கிற..? அவங்க வர்ற நேரமாச்சு.. சீக்கிரம் ரெடியாகிற வழியைப் பாரு.." என்று மகளை அதட்டினாள் ராஜம்..

"யார் வருகிற நேரமாச்சு..?"

"உனக்கு புளி போட்டு விளக்கிச் சொல்ல எனக்கு நேரமில்லை.. அம்மாடி.. மருமகப் பெண்டுகளா.. என் மகளைக் கிளப்பி.. சபையில நிற்க வைக்கிற வழியைப் பாருங்க தாய்களா.." ராஜம் கோபத்துடன் சொல்லி விட்டு அறையை விட்டு வெளியேற.. அவள் கூடவே போன மரகதம்..

"உன் மருமக பாடின பாட்டு நல்ல இருந்துச்சே ராஜம்.. அது என்ன பாட்டு..?" என்று கேட்டாள்..

"அது தெரியாதா அக்கா.. அந்தக் காலத்தில.. இது பேமஸ் பாட்டாச்சே.." என்ற ராஜம்.. அந்தப் பாடலை பாடிக் காட்டினாள்..

இருவரும் படிகளில் இறங்கிச் செல்லும் சப்தம் கேட்டு மறையும் வரை காத்திருந்த மருமகள்கள் இருவரும்.. வாய் பொத்திச் சிரித்தார்கள்..

"எப்படி ரஞ்சனா..? நாம பாடினா மட்டும்.. தெரு முனைவரைக்கும் கேட்குது.. ஆனா.. நம்ம அத்தைமார்கள் பாடினா மட்டும் வீட்டுக்குள்ளே கூடக் கேட்பதில்லை.. அது எப்படி..?"

"அதுதானே.. இதைத்தான்.. மாமியார் பாடினா.. காத்து மட்டும் வருது.. மருமக பாடினா.. எட்டு ஊருக்கு கேட்குதுன்னு சொல்லி வைச்சாங்களா அக்கா..?"

"அண்ணி.. இப்படியொரு பழமொழியை இப்பத்தான் நான் கேட்கிறேன்.. இதை இப்படிச் சொல்லி.. நான் கேட்டதில்லை.."

"வேற எப்படிச் சொல்லிக் கேட்டயாம்..?"

"மாமியார் உடைச்சா மண்குடம்.. மருமக உடைச்சா.. பொன்குடம்.. ன்னுதானே சொல்லுவாங்க..?"

"அது ஊருக்கு.."

"இது.. யாருக்கு..?"

"இது.. நம்ம வீட்டுக்கு.."

பேச்சு பேச்சாக இருக்க.. கௌதமியும்.. ரஞ்சனாவும் சுழன்று வேலை பார்த்தார்கள்.. அடுத்த பதினைந்தாவது நிமிடத்தில் ரம்யா.. அழகுச் சிலையாக நின்றாள்..

"வாவ்.. அசத்தறே ரம்யா.." ரஞ்சனா திருஷ்டி கழித்தாள்..

"உன்னைப் பார்க்கிறவர் மயக்கம்தான் போடப் போகிறார்.." கௌதமி.. ரம்யாவின் கன்னத்தில் மெல்லத் தட்டினாள்..

ரம்யா.. அதைக் கவனிக்காமல்.. விட்டேற்றியாக.. என் வேலை முடிந்தது என்ற பாவனையுடன் அமர்ந்து ஒரு நாவலை படிக்க ஆரம்பிக்க..

"என்னக்கா.. இவ இப்படியிருக்கா..?" என்று அதிசயித்தாள் ரஞ்சனா..

"அதுதானே.. எனக்கு முதல் நாளிலிருந்தே குளிரும்.. காய்ச்சலும் வந்ததைப் போல.. படபடன்னு ஆகிவிட்டது.." கௌதமி மலரும் நினைவுகளுக்குப் போனாள்..

"எனக்கும் அப்படித்தான்.."

"நீயாவது தெரிந்தவள்.."

"நீ மட்டும் என்ன..? பார்த்த முதல் ஆளையே.. முதல் பார்வையிலேயே.. கவிழ்த்துட்டயே.."

"நீ தான்..

அத்தை மகனே.. அத்தானே..

உன் அழகைக் கண்டுநான்

பித்தானேன்னு..

என் கொழுந்தன் கிட்ட மயங்கி போன.."

"நீ மட்டும் என்னவாம்..?"

"பார்த்த முதல் நாளே..

உன்னைப் பார்த்த முதல் நாளே..

காட்சிப் பிழைபோலே..

உணர்ந்தேன் காட்சிப் பிழைபோலே..

ஒரு அலையாய் வந்து எனையடித்தாய்..

கடலாய் மாறி பின் எனை இழுத்தாய்ன்னு

பாடிப் பாடியே.. என் மாமாவை மயக்கிட்டயே.."

கௌதமியும்.. ரஞ்சனியும் மீண்டும்.. பாட்டு கச்சேரியை ஆரம்பித்து வைக்க.. அவர்களை மேல் கண்ணால் பார்த்த ரம்யா..

"அதோ.. அம்மாவும்.. பெரியம்மாவும் வர்றாங்க.." என்றாள்..

"எங்கே.. எங்கே.." என்று அலறியடித்துக் கொண்டு கீழே ஓடி விட்டார்கள்.. கௌதமியும்.. ரஞ்சனாவும்..

## அத்தியாயம்- 10

வாசலில் கார் சத்தம் கேட்டது..

நாவலை படித்துக் கொண்டிருந்த ரம்யா.. அதை கீழே வைத்துவிட்டு எழுந்து பால்கனிக்குச் சென்று பார்த்தாள்..

அவர்கள் வீட்டு வாசலில் தான் கார் நின்றது..

'நம்ம வீட்டுக்குத்தான் வந்திருக்கிறாங்க.. இவங்க வரவுக்குத்தான் இத்தனை தடபுடலா..?' என்று எண்ணமிட்டபடி ரம்யா கீழே பார்த்தாள்..

அந்தக் காலத்து பண்டரிபாயைப் போன்ற களையான.. மங்களகரமான.. கனிவான முகத்துடன் ஒரு பெண்மணி காரை விட்டு இறங்கினாள்.. தலைமுடியை கொண்டையிட்டு.. அதில் வளைவாக பூச்சரம் வைத்திருந்தாள்.. கழுத்திலும்.. கைகளிலும்.. காதிலும் வைரங்கள் மின்னின.. அகல ஜரிகைக் கரையிட்ட பட்டுச் சேலையை உடுத்தியிருந்தாள்..

'அம்சமான அம்மாவா இருக்கே.. யார் இவங்க..?'

அந்தப் பெண்மணியின் பின்னாலேயே இறங்கிய நபர் நம்பியாரை நினைவுப் படுத்தினார்..

'சிரிப்பே வராது..' என்பது போன்ற முகபாவத்துடன்.. சுற்று முற்றும் மிடுக்குடன் பார்த்தார்..

'அச்சு அசல் நம்பியாரேதான்.. கையைத்தான் பிசையவில்லை.. நரசிம்மராவ் கிட்ட.. சிரிக்காத மூஞ்சியை கடன் வாங்கிட்டு வந்திருப்பாரோ..'

அவர்கள் இருவரையும் தொடர்ந்து ஒரு இளம் பெண் கைக்குழந்தையுடன் இறங்கினாள்.. அழகாக இருந்தாள்..

'அம்மா ஜாடை போல.. அதுதான்.. சிரிச்ச முகமா இருக்கு.. அப்பா ஜாடையாயிருந்தா.. அவ்வளவுதான்..'

காரிலிருந்து இறங்கியவர்கள்.. மாடிப் பால்கனியிலிருந்து எட்டிப் பார்த்து.. அவர்களை மதிப்பிட்டுக் கொண்டிருந்த ரம்யாவைக் கவனிக்க வில்லை..

தங்களுக்குள் எதையோ பேசிக் கொண்டு.. அவர்கள் நின்ற போது.. காரின் முன்பக்கத்தில்.. டிரைவர் இருக்கையில் இருந்து அவன் இறங்கினான்..

வந்திருந்த விருந்தினர்களை பார்வையிட்டு முடித்திருந்த ரம்யா.. உள்ளே செல்லலாம் என்று நினைத்தபோது.. விழியுயர்த்தி மாடி பால்கனியை பார்த்து விட்டான்..

அவ்வளவுதான்.. அவன் பார்வையை சந்தித்த அந்த ஒரு நொடியில்.. தன் வசமிழந்தாள் ரம்யா..

'ஜிவ்'வென்ற உணர்வலை ஒன்று எழும்ப.. நிற்க முடியாமல் தொய்ந்து போனவளாக.. பால்கனியின் கைப்பிடி சுவரை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்..

'அண்ணலும் நோக்கினான்..

அவளும் நோக்கினாள்..'

என்றார் கம்பர்..

"கண்ணோடு கண் நோக்கின்-வாய் சொல்லில்

என்ன பயன்..?"

என்றார் திருவள்ளுவர்..

"பார்வை ஒன்றே போதுமே..

பல்லாயிரம் சொல் வேண்டுமா..?"

என்றார் கண்ணதாசன்..

இந்த அத்தனை புலவர்களின் அருள்வாக்கின் தன்மையை அன்றுதான் உணர்ந்தாள் ரம்யா..

அவன் கம்பீரமாக இருந்தான்.. பேண்ட் பாக்கெட்டில் கைவிட்டபடி.. அலட்சியமாக.. காற்றில் பறந்த முடியை கோதி விட்டபடி அண்ணாந்து பார்த்து கொண்டிருந்தான்.. அவளது பார்வையை சந்தித்ததும் அவன் விழிகளில் ஒரு மின்னல் வந்தது.. அவளது தடுமாற்றம் வெளிப்படையாகத் தெரிய.. அவன் முகத்தில் ஆண்மையின் கர்வம் ததும்பியது.

"வாங்க.. வாங்க.."

வீட்டுக்குள்ளே இருந்து.. புண்ணிய கோடியும் பொன்னம்பலமும் வாசலுக்கு வர.. மாடி பால்கனியிலிருந்த ரம்யா.. உள்ளே விரைந்து விட்டாள்..

அவள் போய்விட்ட ஏமாற்றத்துடன் பார்வையைத் திருப்பியவன் பெரியவர்களின் வரவேற்பை அங்கீகரிக்கும் விதத்தில் தலையை அசைத்தான்.

இனம் விளங்காத படபடப்புடன் ரம்யா.. கட்டிலில் அமர்ந்து விட்டாள்.. நகத்தைக் கடித்துக் கொண்டு அமர்ந்திருந்தவளிடம் கௌதமியும்.. ரஞ்சனாவும் வந்தார்கள்..

"வா.. ரம்யா.." கௌதமி அழைத்தாள்..

"எங்கே அண்ணி..?" ரம்யா புரியாமல் கேட்டாள்..

"வேறு எங்கே..? கீழேதான்.." ரஞ்சனா கலைந்திருந்த ரம்யாவின் முடியை சீராக்கி விட்டாள்..

"கீழேயா..?"

'கீழே அவன் இருப்பானே..' என்ற நினைவுடன் தடுமாறினாள் ரம்யா..

சற்று முன் அவன் பார்வையைத் தாங்க முடியாமல் கால்கள் நொய்ந்து போனது நினைவுக்கு வந்தது..

'திரும்பவும்.. அவன் முன்னால் போய் நிற்பதா..? ஊஹீம்.. என்னால் முடியாது..'

அவள் மனம் மறுக்க நினைத்தது.. அதேசமயத்தில்.. அவன் முகத்தை திரும்பவும் பார்க்க வேண்டும் போல ஆவல் அவள் மனதில் துளிர்த்தது..

'இது நானா..?' அவள் திகைத்துப் போனாள்..

ஒரு பார்வைக்கு இவ்வளவு சக்தியிருக்கிறதா..? யாரையும் நேர் கொண்ட பார்வையில் பார்க்கும் ரம்யா.. முதல் முறையாக ஒரு ஆண் மகனை நேருக்கு நேர் பார்க்க பயந்து.. தவித்து நிற்பதா..?

"நானே.. நானா..?

யாரோ தானா..?

மெல்ல.. மெல்ல..

மாறினேனா..?

தன்னைத்தானே

மறந்தேனே..

என்னை.. நானே

கேட்கிறேன்.."

அந்த நேரம் பார்த்து எப்ஃஎம் ரேடியோவில் பாடல் ஒலிக்க.. உதட்டைக் கடித்தபடி எழுந்து நின்றாள் ரம்யா..

"கட்டாயம் நான் வரணுமா அண்ணி..?"

இதைக் கேட்ட கௌதமியும்.. ரஞ்சனாவும்.. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்த பின்பு.. வாய் பொத்தி நகைத்தார்கள்..

"பின்னே..? நீ வராம.. வேற யார் வருவா..?" கௌதமி கேலியாக வினவினாள்..

"வந்திருக்கிறவங்க என்னைக் கட்டாயம் பார்க்கணுமா..?"

"உன்னைத்தான் கட்டாயமாய் பார்க்கணும்.. பின்னே.. என்னையும்.. அக்காவையுமா பார்க்க முடியும்.." ரஞ்சனா எதிர்கேள்வி கேட்டாள்..

அதைக் கேட்ட கௌதமி கலகலவென்று சிரித்தாள்.

## அத்தியாயம்- 11

"ஏய்ய்.. ரஞ்சனா.. உன் மனதில் இப்படியொரு ஆசை இருக்கா..? இரு.. இரு.. என் கொழுந்தன் கிட்டச் சொல்லுகிறேன்.." கௌதமி கண்சிமிட்டினாள்..

"அதை முதலில் செய்யுக்கா.. உனக்கு கோடி புண்ணியமாய் போகும்.. அப்பவாவது என் புருசனின் மனசு.. என் பக்கம்.. திரும்புதான்னு பார்க்கலாம்.." ரஞ்சனா அலுத்துக் கொண்டாள்..

"உன் பக்கம் மனசு திரும்புதோ இல்லையோ.. வேற யாரு பக்கமும்.. திரும்பிடக் கூடாதுன்னு.. என் கொழுந்தன்.. ஏகபத்தினி விரதம் இருந்தவராச்சே.."

"ம்ஹீம்.. இதுக்கு அவர்.. பேசாம.. ஏகப்பட்ட பத்தினிகளின் விரதராவே இருந்திருக்கலாம்.."

"அடிப்பாவி.. இப்படிக்கூட ஒரு பெண்டாட்டி ஆசைப்படுவாளா..?"

"இந்தப் பெண்டாட்டி படுவாள்.."

"ஏன் அப்படியாம்..?"

"அட போக்கா.. நீ வேற.. எல்லாப் பொண்ணுககிட்டேயும் உர்ருன்னு இருந்தே.. அவருக்கு பழக்கமாகிப் போயிருச்சு.. மத்த பொண்ணுக கிட்ட இருந்ததைப் போல.. என்கிட்டயும் இருந்து தொலைக்கிறாரு.."

"உன் கதைக்கு என்ன செய்யறதுன்னு இன்னொரு நாள் யோசிக்கலாம்.. இப்ப.. ரம்யாவைக் கூப்பிட்டுக்கிட்டு போயி நிற்க வைக்கலேன்னா.. நம்ம மாமியார்கள் ரெண்டு பேரும் ஒற்றுமையாய் மாடியேறி வந்துருவாங்க.. வசதி எப்படி..?"

"ஆமாமாம்.. ரம்யாக் கண்ணு எழுந்திரு செல்லம்.."

"எனக்கு என்னவோ போல இருக்கு அண்ணி.."

இதைக் கேட்ட.. கௌதமியும்.. ரஞ்சனாவும்.. 'களுக்' கென்று சிரித்தார்கள்..

"அது.. அப்படித்தான் இருக்கும்.. அதைப் பார்த்தால் முடியுமா..? நீ எழுந்து வாம்மா.."

"வேண்டாம் அண்ணி.. எனக்கு தலைவலின்னு சொல்லிருங்க."

"அவ்வளவுதான்.. எங்க ரெண்டு பேரையும்.. இந்த வீடே காய்ச்சி எடுத்து விடும்.. அப்புறமாய்.. எங்களுக்கு நிஜமாகவே தலைவலியும்.. காய்ச்சலும் சேர்ந்தே வந்து விடும்.. உன் அம்மாவும்.. பெரியம்மாவும்.. எங்களைத் தேடி வர்றதுக்கு முன்னாலே.. நீ வந்து விடு ரம்யா.."

"அதுதானே.. எங்க பெரியத்தை.. சின்னத்தையின் கூட்டுத் தாக்குதலில் இருந்து.. எங்களைக் காப்பாற்றி விடு தாயே.."

விட்டால் கௌதமியும்.. ரஞ்சனாவும்.. ரம்யாவின் காலிலேயே விழுந்து விடுவார்கள் என்று தோன்ற... வேறு வழியின்றி.. ரம்யா எழுந்து.. அவர்களைப் பின் தொடர்ந்தாள்..

மாடிப்படிகளில் ரம்யாவை நடுவில் விட்டு... இரண்டு பக்கமும் கௌதமியும்.. ரஞ்சனாவும்.. இறங்கி வந்தார்கள்..

இறங்கும் போதே.. மாடி ஹாலில் இருந்த சோபாவில் கால் மேல் கால் போட்டு.. தோரணையுடன் அமர்ந்திருந்த 'அவன்' ரம்யாவின் விழிகளில் பட்டு விட்டான்..

அவனது பார்வை.. அவள் மேல் கவிழ்ந்திருக்க.. அவள் அவன் பார்வையைச் சந்திக்க முடியாமல்.. விழி தாழ்த்திக்

கொண்டாள்..

'என்ன இது.. இப்படி பார்த்துத் தொலைக்கிறான்..'

அவள் லஜ்ஜையுடன் உதட்டைக் கடித்துக் கொள்ள.. அவன் அதையும்.. ரசனையாக பார்த்து வைத்தான்..

'இதுக்கு முன்னாலே.. இவன்.. பெண்களையே பார்த்ததில்லையா..?'

அவளால் விழிகளை உயர்த்தவே முடியவில்லை.. இன்னமும் அவர்கள் ஏன் அங்கே வந்திருக்கிறார்கள்..? அவள் ஏன்.. அவர்கள் முன்னிலையில் நிற்கிறாள்..? என்று அவளுக்கு சரிவரத் தெரியவில்லை..

யோசிக்கும் திறனும்.. அவன் முன்னால் செயல்பட மறுக்க.. அவள் பல்லைக் கடித்துக் கொண்டே நின்றாள்..

"எல்லாத்துக்கும் வணக்கம் சொல்லும்மா.."

என்னவோ.. 'ஆடுறா.. ராமா..' என்ற பாவனையில் புண்ணியகோடி உத்தரவிட.. மனதிற்குள் எழுந்த எரிச்சலை அடக்கிக் கொண்டு பொதுவாக கைகுவித்தாள் ரம்யா..

"இப்படி உட்காரும்மா.." பண்டரிபாயின் ஜெராக்ஸ் காபி அன்புடன் அழைத்தாள்..

முன்பின் தெரியாத அந்தப் பெண்மணியின் பக்கத்தில் போய் எப்படி உட்காருவது.. என்ற தயக்கத்துடன் ரம்யா நிற்க..

"அவங்க.. கூப்பிடறாங்க பாரு.. போய்.. அவங்க பக்கத்தில் உட்காரும்மா.." என்று மரகதம் மகா அன்புடன் கட்டளையிட்டாள்..

ரம்யாவின் வீட்டில்தான்.. புண்ணியகோடியும்.. அவளுடைய மனைவியும் பேசுவது வேதவாக்காயிற்றே..

வெறும் பேச்சையே வேதவாக்காக எடுத்துக் கொள்பவர்கள்.. மரகதத்தின் கட்டளையை எப்படி எடுத்துக் கொள்வார்கள்..?

அனைவரது விழிகளிலும் மரகதத்தின் கட்டளை எதிரொலிக்க.. ரம்யா.. வேறுவழி அறியாதவளாக.. அந்தப் பெண்ணின் பக்கத்தில் போய் அமர்ந்தாள்..

அந்தப் பெண்மணியின் பார்வை.. மயிலிறகைப் போல.. ரம்யாவை வருடிப் படர்ந்தது.. ரம்யா சங்கடத்துடன் பார்வையைத் திருப்பினாள்.. அவனது ஆளைத் துளைக்கும் லேசர் பார்வையை சந்தித்தாள்.. அவள் உடலில் மின்சாரம் பாய்ந்தது..

'எப்படிப் பார்த்துத் தொலைக்கிறான்..' அவள் உடல் சிலிர்த்தது..

கைவிரல்கள் தந்தியடிக்க ஆரம்பிக்க.. கை நடுக்கத்தை மற்றவர்கள் அறியாமலிருக்கும் பொருட்டு.. கோர்த்து வைத்துக் கொண்டாள்.. அதை அறிந்த சிரிப்பொன்று அவன் முகத்தில் இரகசியமாக மலர்ந்தது..

"என்ன படிக்கிறம்மா..?"

"படித்து விட்டேன்.."

"அதுதான் என்ன..?"

"பி.எஸ்.ஸி கம்ப்யூட்டர் சயின்ஸ்.."

அதைக் கேட்டதும் குழந்தையை மடியில் வைத்துக் கொண்டிருந்த அந்தப் பெண் புன்னகைத்தாள்..

"நானும் அந்த சப்ஜெக்ட்தான்.."

தோழமையுடன் அவள் குரல் ஒலிக்க.. ரம்யா அவளைப் பார்த்தாள்..

"எனக்கு மேலே எம்.ஸி.ஏ பண்ணனம்னு ஆசை.. எங்கே.. வீட்டில் விட்டால்தானே.."

அவள் அலுத்துக் கொள்ள..

'ம்ஹீம்.. நானும் இதைத்தான் நினைக்கிறேன்.. நினைத்ததை வெளியில் சொல்ல உன்னால் முடிகிறது ஆனால்.. என்னால் அது முடியலையே..' என்று லேடி

நடிகர்திலகம் போல.. மனதிற்குள் புலம்பிக் கொண்டள் ரம்யா..

"பட்.. எனக்கும் சேர்த்து வைத்து.. என் தம்பி பெரிய படிப்பாய் படிச்சுட்டான்.."

அவள் தம்பியைப் பார்த்து முறுவலிக்க.. அந்த தங்கக் கம்பி.. ரம்யாவைப் பார்த்து முறுவலித்து வைத்தான்..

ரம்யா அவசரமாக முகத்தை திருப்பி கொண்டாள்.. பெரியவர்கள் இருக்கும் நினைவேயில்லாமல்.. வயதுப் பெண்ணை இந்தப் பார்வை பார்க்கிறானே என்று அவனை திட்டித் தீர்த்தது அவளின் உள்ளம்..

## அத்தியாயம்- 12

அந்தப் பெண்ணின் மடியிலிருந்த குழந்தை அழ ஆரம்பித்தது..

"குழந்தையை இப்படிக் கொடு விசாகா.." என்று அந்தப் பெண்மணி குழந்தையை வாங்கிக் கொண்டாள்..

விசாகாவாகப்பட்டவள்.. குழந்தையை.. தனது தாயிடம் நீட்டினாள்.. பாட்டியின் கைக்குப் போன குழந்தை... அழுகையை நிறுத்திவிட்டு சிரிக்க ஆரம்பித்தது..

"நீ மந்திரவாதி.. காயத்ரி.." விசாகாவின் அப்பா.. மனைவியை காதலுடன் பார்த்தபடி கூறினார்..

'ம்ஹீம்.. இருக்கிற ரொமான்ஸ் பத்தாதுன்னு.. இவரு வேற ரொமான்ஸை ஆரம்பிச்சுட்டாரா.. தாயை தண்ணீர் கரையில் பார்த்தால் பெண்ணை வீட்டில்

பார்க்க முடியாதுன்னு.. பாட்டி ஒரு பழமொழியை அள்ளி வீசுமே.. அதைப்போல.. இந்த வயசிலும்..

இவர் இப்படி ரொமான்ஸ் விட்டால்.. இவருடைய மகன்.. எப்படியெல்லாம் ரொமான்ஸ் விடமாட்டான்..' என்று

நினைத்தபடி தன்னையுமறியாமல் அவனைப் பார்த்து வைத்தாள் ரம்யா..

அவளது பார்வையை உணர்ந்தவன்.. மற்றவர்கள் அறியாமல் புருவங்களை 'என்ன..?' வென்று வினவும் பாவனையில் உயர்த்தி வைத்துத் தொலைக்கவும்.. அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.. அவசரமாக பார்வையைத் திருப்பிக் கொண்டாள்..

'அடக்கடவுளே.. இவனென்ன இப்படிச் செய்து வைக்கிறான்..? பெரியப்பாவும்.. அப்பாவும் இதைப் பார்த்து விட்டால் என்ன நினைப்பார்கள்..?'

எண்ணமிட்ட ரம்யாவிற்கு அப்போதுதான் அது உரைத்தது.. அந்த வீட்டின் ஆண்கள்.. பெண்களை அந்நியர்கள் முன்னிலையில் வரவிட்டது இல்லை..

அதிலும்.. வயதுப் பெண்களை.. மாடியை விட்டு கீழே இறக்கிவர அனுமதிக்கவே மாட்டார்கள்..

இப்போது என்னடாவென்றால்.. புண்ணியகோடியும்.. பொன்னம்பலமும்.. வந்தவர்களை இருகை கூப்பி வணங்கி வரவேற்பது உட்கார வைத்து உபசரிக்கிறார்கள்..

அவர்களுக்கு பின்னால்.. உத்தம புத்திரன்களாக.. ரவிந்திரனும்.. யுகேந்திரனும்.. கை கட்டி நின்று கொண்டிருந்தார்கள்..

மரகதமும்.. ராஜமும்.. என்னவோ.. ஊட்டி குளிரில் வெடவெடப்பதைப் போல.. முந்தானையை இழுத்துப் போர்த்திக் கொண்டு பவ்யமாக நின்றிருந்தார்கள்..

கௌதமியும்.. ரஞ்சனாவும்.. மகா பொறுப்புடன் சமையலறைக்குச் சென்று.. டிபன் தட்டுக்களை வைத்து விட்டு... காபிக் கோப்பைகளுடன் திரும்பி வந்து எல்லோருக்கும் கொடுக்க ஆரம்பித்திருந்தார்கள்..

'இதே போல சீன் ஒன்னை பார்த்த ஞாபகம் வருதே..'

நெற்றிப் பொட்டில்.. ஒற்றை விரலால் தட்டாத குறையாக.. ரம்யா யோசிக்க ஆரம்பித்தாள்..

'அந்த யோசனையின் பலனாக.. ஞாபகம் வருதே.. ஞாபகம் வருதே..' என்று.. அந்த ஞாபகம் வந்து நின்று விட்டது..

'ம்ஹா.. கௌதமி அண்ணியைப் பெண் பார்க்க போனபோது.. இதே சீன்தான் நடந்தது.. அப்படின்னா..?'

திகைத்து நிமிர்ந்தாள் ரம்யா.. இது அவளைப் பெண் பார்க்கும் படலமா..? அதையறியாமல்.. வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தினர்களுக்கு இடையில் அமர்ந்திருக்கும் உணர்வோடு அவள் அமர்ந்திருக்கிறாளா..?

'அப்படியானால்.. அவன்..?'

கேள்விக்கான பதிலை.. அவனது உல்லாசமான பார்வையே தெரிவித்தது.. அதை எதிர்பார்த்திராத ரம்யா.. முன்னிலும் அதிகமாக தடுமாறிப் போனாள்..

'இது எப்படி எனக்குத் தோன்றாமல் போய்விட்டது..?'

காலையிலிருந்து.. அந்த வீடே அவளிடம் பரிவைக் காட்டியதன் பின்னணியில் இருந்த மர்மம் வெளிப்பட.. அவள் மனதில் ஓர் கலக்கத்துடன் கூடிய இனிமையான உணர்வு சூழ்ந்தது..

'இவன் என்னைப் பெண் பார்க்க வந்திருக்கிறானா..? அதனால்தான் இப்படிப் பார்த்து தொலைக்கிறானா..?'

ரம்யாவின் வீட்டில்.. அதற்கு முன்னால்.. மூன்று திருமணங்கள் நடந்து முடிந்திருந்தன..

எல்லோருக்கும் முதலாவதாக நடந்த ரவிந்திரனின் திருமணத்தில் தான் பெண் பார்க்கவென்று.. வேறு ஊருக்குப் போய்.. பெண் பார்த்து விட்டு வந்தார்கள்..

அது மட்டுமே.. வேற்று மனிதர்களின் வீட்டில் அவர்கள் குடும்பத்தில் நிகழ்ந்த திருமண சம்பந்தம்..

அடுத்து நடந்த ராதிகாவின் திருமணமும்.. யுகேந்திரனின் திருமணமும்.. புண்ணிய கோடி.. பொன்னம்பலத்தின்.. மூத்த சகோதரியான.. தன்மானப் பெண்சிங்கம்

சரஸ்வதியின் வீட்டில் பெண் கொடுத்து.. பெண் எடுத்து முடிந்ததால்.. இதுபோன்ற பெண் பார்க்கும் படலங்கள் அவர்களது திருமணங்களில் நிகழவே இல்லை..

"வார தையில முகூர்த்தம் நல்லாயிருக்கு தம்பி.."

"அதுக்கென்னக்கா.. நீயே சொல்லிட்ட.. நாங்க என்ன மறுத்தா பேசப் போறோம்..? நீ சொன்ன நாளில.. ராதிகாவை உங்க வீட்டுக்கு மருமகளா அனுப்பி வச்சிடறோம்.."

சொன்னபடி.. ராதிகாவை சரஸ்வதியின் மகனுக்கு திருமணம் முடித்துக் கொடுத்தார் புண்ணியகோடி..

"வைகாசியில வர்ற முகூர்த்தம் அமோகமாயிருக்குய்யா.."

"அக்கா சொல்றதும் சரிதான் தம்பி.."

"அதை என்கிட்ட நீங்க சொல்லணுமான்னா.. நீங்களும்.. அக்காவுமாகப் பார்த்து.. எந்த நாளைச் சொல்கிறீங்களோ.. அந்த நாளில் என் மகன்.. என் அக்கா மகளின் கழுத்தில் தாலியைக் கட்டுவான்.."

பொன்னம்பலத்தின் வாக்கை பொய்ப்பிக்காமல்... அவர் பெற்ற சீமந்த புத்திரன் யுகேந்திரன்.. சரஸ்வதியின் மகளான ரஞ்சனாவின் கழுத்தில் தாலியைக் கட்டினான்.

அப்படி நடந்த திருமணங்களைப் பார்த்து பழக்கப் பட்டவளுக்கு முதன்முதலாக.. அன்னியத்தில் பெண்ணெடுத்த ரவிந்திரனின் திருமணத்தைப் பற்றி மறந்து விட்டிருந்தது..

'இதுக்குத்தான் இத்தனை அலங்காரமா..? கடைசியில் இவனை மயக்கவா.. நான் அலங்காரம் பண்ணிக்கிட்டேன்..?'

நினைக்கும்போதே.. அவன் மயங்கினானா என்ற கவலை அவளுக்குள் எழுந்தது..

அதை உணர்ந்தவள் திடுக்கிட்டுப் போய்.. அதிகமாக கவலைப்பட ஆரம்பித்தாள்..

'ச்சீய்.. எப்படியிருந்த நான்.. இப்படி நினைக்கிறேனே..'

கடைசியில் ஒரு ஆண்மகனை மயக்க நினைத்து விட்டோமே.. என்று தன்னைத்தானே நொந்து கொண்ட ரம்யா.. அவனைத் திடமாக பார்க்க முயன்று.. தோற்றுப் போனாள்..

அவன் விழிகளில் தெரிந்த காந்தம் அவளை ஈர்த்தது..

'கடைசியில் மயங்கிப் போனது.. இவனா..? இல்லை.. நானா..?'

## அத்தியாயம்- 13

திறந்து வைக்கப்பட்டிருக்கிற பெரிய ஜன்னல்கள்.. அந்தபுறமாக தெரிந்த விசாலமாக தோட்டத்தின் பசுமை.. அவர்கள்.. தோட்டத்தின் மத்தியில் நிற்கிறார்கள் என்பதைப் போன்ற.. தோற்றத்தை அளித்தது..

தோட்டத்திலிருந்து வந்த குளிர்காற்று.. மலர்களின் நறுமணத்தை அறை முழுவதும் பரப்பி விட்டிருக்க.. அந்த அறையில் சுகந்தமான நறுமணம் கமழ்ந்து கொண்டிருந்தது..

அறைவாசல் கதவு அகலமாக திறந்து வைக்கப் பட்டிருக்க.. ஹாலில் அமர்ந்திருந்தவர்களின் கண்பார்வை முழுவதும் அறையில் படிந்து விலகியது..

அவர்களின் கண்பார்வையில் படும்படியாகத்தான் அவனும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தான்.. அறையின் ஜன்னலோரமாக தலைகவிழ்ந்து.. ரம்யா நின்று கொண்டிருந்தாள்.

இந்தத் தனிப்பட்ட பேச்சுவார்த்தையை அவள் எதிர்பார்க்கவே இல்லை.. அவளது குடும்பத்திற்கு இது பழக்கப்பட்டதும் அல்ல..

கௌதமியைப் பெண் பார்க்க போனபோது.. பெரியவர்களின் முன்னிலையில்.. அவளை நிமிர்ந்து பார்க்கக்கூடத் தயங்கினான் ரவிந்திரன்..

என்னதான்.. இதுதான் பெண்.. இதற்கு.. இதுதான் மாப்பிள்ளை.. என்று வளர்ந்திருந்த போதிலும்.. ராதிகாவும் சரி.. யுகேந்திரனும் சரி.. அவர்களுக்காக வளர்ந்து வந்த.. அத்தை மகனையும்.. அத்தை மகளையும்.. ஏறிட்டுப் பார்த்ததில்லை..

அப்படிப்பட்ட.. கட்டுக் கோப்பான குடும்பத்தின்.. கடைக்குட்டியான ரம்யாவைப் பெண் பார்க்க வந்தவன்..

"ரம்யாவிடம் தனியாப் பேசணுமே.." என்று கேட்டு வைத்ததும்.. அந்த வீட்டில் எள் விழுந்தால் கூடச் சப்தம் கேட்கும் அளவிற்கும் நிசப்தம் நிலவியது..

கேட்கக் கூடாத ஒன்றை அவன் கேட்டுவிட்ட பாவனையில் ஒட்டுமொத்த குடும்பமும் அவனைப் பார்க்க.. அவனது குடும்பமோ.. இயல்பாக நகைத்தது..

"டேய்.. விவேக்.. தனியாப் பேசணும்னு போய்.. சொதப்பிராதே.. டிஸ்டன்ஸ் மெயின்டெயின் பண்ணினால்கூட.. மாப்பிள்ளை கெத்தில் நீ பிழைத்துக் கொள்வாய்.." என்று சிரித்தாள் விசாகா..

"அதைச் சொல்லு.. அந்தக் காலத்திலே உன் அப்பா.. என்னைப் பெண் பார்க்க வந்துட்டு.. இப்படித்தான் தனியாப் பேசுகிறேன்னு பேர்வழின்னு உளறிக் கொட்டி.. கிளறி மூடினார்.. அப்புறம்.. நான் தான்.. போனால் போகட்டும்ன்னு கல்யாணத்துக்கு சம்மதம் சொன்னேன்.." என்றாக் காயத்ரி..

அதைக் கேட்ட காயத்ரியைக் கட்டிய அந்தக் கணவர்.. மனைவியின் பேச்சை ரசித்துச் சிரித்தார்.. அத்தோடு நிறுத்திக் கொள்ளாமல்..

'என்ன ஆச்சு.. உங்க வீட்டு பெண்ணை என் மகனிடம் தனியாப் பேச அனுப்பலையா..?' என்ற பாவனையில்.. புண்ணியகோடியைப் பார்க்கவும் செய்தார்..

பொன்னம்பலமும்.. மற்றவர்களும் கைகளைப் பிசைய ஆரம்பிக்க.. 'இதைப் பாருடா.. நம்பியாரும்.. நரசிம்மராவும்.. சேர்ந்து செய்த கலவைன்னு நினைச்சுட்டு இருந்தவர்.. இந்தப் போடு போடுகிறார்..' என்று.. ஆச்சரியத்துடன்.. விசாகாவின் தந்தையைப் பார்த்தாள் ரம்யா..

புண்ணியகோடி.. சட்டென்று முடிவெடுத்தார்..

"கௌதமி.. அந்த ரூம் கதவைத் திறந்து வைம்மா.. மாப்பிள்ளைக்கு ஒரு சேரை எடுத்துக் கொண்டு போய் போடு.." என்று மறைமுகமாக.. அந்த பேச்சுவார்த்தையை அங்கீகரித்துவிட்டார்..

மற்றவர்களின் கண்பார்வையில் அமர்ந்த விவேக்..

'இதுதான் தனியாய் பேசும் லட்சணமா..?' என்று தலையைப் பிடித்துக் கொண்டு விசாகாவைப் பார்த்தான்..

'பொறு..' அவள் கண்களால் சமிஞ்சை செய்தாள்.. அவனும் பொறுமையை கடைப்பிடித்தவனாக பல்லைக் கடித்துக் கொண்டு ரம்யாவைப் பார்த்தான்..

அவளோ.. அவனைப் பார்க்காமல்.. ஜன்னலுக்கு அந்தப் புறமாகத் தெரிந்த.. தோட்டத்தைப் பார்த்தாள்..

அவன் மனம் மலர்ந்தது..

'நல்லவேளை.. நாங்க பேசுவது அவங்க காதில் விழுகாது..'

ஹாலுக்கும்.. அந்த அறைக்கும் இருந்த தொலைவை மனதில் கணக்கிட்டுக் கொண்டவன்.. எதற்கும் இருக்கட்டும்மென்று.. மிக மெதுவான குரலில் பேசினான்..

"உட்காரேன்.."

அவள்.. 'எதில் உட்காருவது..?' என்ற பாவனையில் அவனை ஓர் நொடி பார்த்து விட்டு.. மீண்டும்.. தோட்டத்தை ஆராய ஆரம்பித்து விட.. அப்போதுதான்.. அந்த அறையில் வேறு நாற்காலி இல்லாததை உணர்ந்தான் விவேக்..

மீண்டும் அவளைப் பார்த்தான்.. அவனது பார்வையை உணர்ந்த தவிப்பு.. அவள் முகத்திலும்.. நடுக்கம்.. அவளது

விரல்களிலும் தெரிய.. அவன் மனதில்.. கிளர்ச்சி தோன்றியது..

அவன் பார்வை.. அவளது உச்சி முதல்.. பாதம் வரை படிந்து.. பரவ.. அவளுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது..

'பேசணும்னு கூப்பிட்டு விட்டு.. இப்படிப் பார்த்து வைக்கிறானே.. இவன் இன்றைக்கு பேச மாட்டான்.. பார்வையிட மட்டும்தான் செய்வான்..'

அவள் உதட்டைக் கடித்துக் கொள்ள.. அவன் பார்வை.. அவளது உதட்டின் மீது.. படிந்து நின்றது.. அதைக் கண்டவள் முகம் சிவந்து போனது.. அவசரமாக.. முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

"ரம்யா.." அவன் மிருதுவாக அழைத்தான்..

"ம்ம்ம்.."

"என் பெயர் விவேக்.. வீட்டில் சொல்லியிருப்பாங்களே.."

'யார் சொன்னது..? உன்னிடம் வேண்டும்னா.. என் ஜாதகத்தை பிட்டுப் பிட்டு.. வைத்திருப்பாங்க.. ஆனா.. என்னிடம்.. யாரும்.. உன்னைப் பற்றி.. மூச்சே விடவில்லை.. ம்ஹீம்.. உனக்கு.. என் வீட்டைப் பற்றித் தெரியாது..'

அவள் பதில் சொல்லாமல் மௌனிக்க.. அவன் புருவங்களை உயர்த்தினான்..

'இவன் ஒருத்தன்.. எதுக்கெடுத்தாலும்.. புருவத்தை வில்லா வளைச்சுத் தொலைப்பான்.. இவன் கேட்டால்.. நான் உடனே பதில் சொல்லி விடணுமாக்கும்..? என்ன ஒரு ஆணவம்..?'

ஆணாதிக்க மனப்பான்மையை எதிர்த்து.. சரமாரியாக அவள் மனதில் கேள்விகள் எழும்ப.. அதைக் கேட்காமல் விடக்கூடாது என்ற முடிவுடன் அவன் முகம் பார்த்தவள் திகைத்துப் போனாள்..

அவன் பார்வையைக் கண்டதும்.. அவளுக்கு நா எழும்பவில்லை.. வெறும் காற்றுத்தான் வந்து தொலைத்தது..

'என்ன கொடுமைடா..' என்று நொந்தே போய்விட்டாள் ரம்யா..

'இவன் பெரிய இஞ்சி இடுப்பழகன்.. இவன் முன்னால் என்னால் பேசித் தொலைக்க முடிய வில்லைன்னா.. இதை எங்கே போய் சொல்வது..?'

சொல்வதற்கு.. பக்கத்தில் யாருமில்லாததால்.. அவள் வேறு வழியின்றி..

"ம்ம்ம்.." என்று முணுமுணுத்து வைத்தாள்..

"பி.ஈ படித்தேன்.. அப்பா என்ஜினியரா போனார்.. நானோ.. சர்வீஸ் கமிசன் பரிட்சை எழுதினேன்.. இப்ப இந்தப் பட்டமும்.. இந்த வேலையும் வந்து சேர்ந்திருக்கு.. அப்பா.. கடைசியில் உனக்குப் பிடித்ததைச் செய்யுன்னு சொல்லிட்டார்.. நானும்.. எனக்குப் பிடித்த வேலையை ஜாலியாய் பார்த்துக்கிட்டு இருக்கேன்.."

அவனுக்கு பிடித்த அந்த வேலைதான் என்ன..? என்ற கேள்வி ரம்யாவிற்குள் எழுந்தது.. அவள் அதைக் கேட்க நினைத்து.. அவன் முகம் பார்த்தாள்.. கேள்வியை மறந்து நிலம் பார்த்தாள்..

## அத்தியாயம்- 14

ஒரு கேள்வி.. ஒரேயொரு கேள்வி.. அதைக் கேட்டிருந்தால் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும்.. துளிர்க்கும் பருவத்திலேயே... தன் மனதின் உணர்வுகளையும்.. மற்ற நிகழ்வுகளையும் கிள்ளி எறிந்திருப்பாள் ரம்யா..

ஆனால்.. அவளால்.. அதைக் கேட்க முடியாமல் போய்விட்டது.

அவனது பார்வையில் தெரிந்த ஏதோ ஒன்று அவளைக் கட்டிப் போட்டு விட்டது.. பேச நினைத்ததை பேச முடியாமல்.. ஊமையாகிப் போனாள் ரம்யா..

அதை உணர்ந்த அவன்.. அதை ரசித்துச் சிரித்தான்.

"உனக்கு ஒண்ணு தெரியுமா ரம்யா..?"

'ஒண்ணுமட்டுமா.. அத்தனை நம்பரும் தெரியும்.. அதுகூடத் தெரியாமலா.. பி.எஸ்.ஸி வரைக்கும் படித்திருக்கிறேன்..,'

"என்னன்னு கேட்க மாட்டாயா..?"

'நானா கேட்க மாட்டேங்கிறேன்..? எங்கே.. நான் வாயைத் திறந்தால் பேச்சு வந்து தொலைக்க மாட்டேங்குதே.. காத்துத்தானே வருது..?'

"நானே சொல்லிவிடவா..?"

'அதைச் செய்.. உனக்கு கோடி புண்ணியமாய் போய்விடும்..'

"நீ ரொம்ப அழகா இருக்கே.."

இதைக் கேட்டதும் ரம்யா தன்னை மறந்தாள்.. முகம் சிவந்துவிட தோட்டத்தைப் பார்த்தாள்.. அவள் மனம் சிறகடித்தது..

'இவனுக்கு என்னைப் பிடித்திருக்கிறதா..?'

அவள் மனம் கேள்வி கேட்டது..

'பிடிக்காமலா.. நீ அழகாயிருக்கிறன்னு சொல்கிறான்..?' வழக்கம்போல.. அவளது மனமே.. துணைக்கேள்வியைக் போட்டது..

"ஒரு பூப்போல.. இத்தனை அழகாய்.. ஐ மீன்.. என் மனதைக் கவரும்படியான அழகாய்.. இதற்கு முன்.. நான் வேறு எந்தப் பெண்ணையும் பார்த்ததில்லை.."

"அப்படி எத்தனை பெண்களை இதுவரை பார்த்திருப்பீங்க..?"

ரம்யா.. பட்டென்று கேட்டுவிட்டாள்.. கேட்டபின்புதான்.. இந்த கேள்வியைக் கேட்டது தான் தானா..? என்ற ஆச்சரியம் அவளுக்குள் எழுந்தது..

அவன் விழிகளிலும் அதே வியப்புத் தெரிந்தது..

"அடேங்கப்பா.. சரவெடியைக் கொளுத்திப் போட்டதைப் போலவே இருக்கு.. இப்படி.. பட்டாசைப் போல வெடிக்கிறவள்தான்.. இத்தனை நேரமும்.. ஊமையைப் போல பாசாங்கு செய்தாயா..?"

"எனக்கு பாசாங்கு செய்யத் தெரியாது.."

"திரும்பவும் ஊசிப்பட்டாசு வெடிக்குதா..?"

"நீங்கதானே.. நிறையப் பெண்களைப் பார்த்ததைப் பற்றிச் சொன்னீங்க.. அதனால்தான்.. எத்தனை பேரை பெண் பார்க்கன்னு போயி.. பார்வையிட்டீங்கன்னு கேட்டேன்.."

'அவன் விழிகளில் மின்னல் வந்தது..'

"ஓ.. நீ அப்படி வருகிறாயா..?" என்று சிரித்தான்..

ரம்யா.. உம்மென்று முகத்தை வைத்துக் கொண்டு தோட்டத்தைப் பார்க்க ஆரம்பித்தாள்..

"என் வாழ்க்கையில் நிறையப் பெண்களை சந்தித்திருக்கிறேன்.. வெயிட்.. வெயிட்.. அப்படிப் பார்க்காதே.. நீ நினைப்பதைப் போல எதுவும் இல்லை.. காலேஜில் கூடப் படித்த பெண்கள்.. வேலை பார்க்கும் இடத்தில் பார்த்த பெண்கள்.. இன்னும்.. ஊரில்.. பஸ்ஸில்.. கடைத்தெருவில் என்று.. பெண்களைப் பார்க்காமல் இருக்க முடியுமா..? பெண்கள் இல்லாத உலகத்திலா நான் இருக்கிறேன்..?"

"நான் அதைக் கேட்கவில்லை.."

"நானும்.. அதைச் சொல்லவில்லை.. என் கல்யாணத்துக்கென்று பெண் பார்க்கவென்று.. நான் பார்த்த முதல் பெண்.. நீதான்.. நீ மட்டும்தான்.."

இதைக் கேட்டதும் ரம்யாவின் மனம் மலர்ந்து விட்டது.. அவள் சட்டென்று முகம் திருப்பி.. அவனைப் பார்த்தாள்..

அவள் விழிகளில் தெரிந்த ஒளிர்வைக் கவனித்தபடி அவன் சன்னமான குரலில் மேலும் பேச ஆரம்பித்தான்..

"அம்மாவும்.. அப்பாவும்.. நிறையப் பெண்களின் போட்டோக்களை என்னிடம் காட்டினாங்க.. எனக்கு உன்னைத்தான் பிடித்திருந்தது.. அதனால்தான் இந்தப் பெண் பார்க்கும் புரோகிராமுக்கே ஒப்புக் கொண்டேன்.. ஆக்சுவலா.. எனக்கு இப்படிப் போய் பெண் பார்க்கும் பழக்கம்.. பிடிக்கவே.. பிடிக்காது.."

விவேக் என்னவோ.. இயல்பாகத்தான் இதைச் சொன்னான்.. அந்த வார்த்தைகள் ரம்யாவின் மனதில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அறியாதவனாகத்தான் சொன்னான்..

அதுவரை.. அவன் மேலிருந்த மயக்கத்தையும் மீறி.. மனதின் ஓரமாக இருந்த பெண்ணுரிமைவாதியான ரம்யாவின் மனச்சினுங்கல்.. அந்த வார்த்தைகளைக் கேட்டதும்.. காற்றில் கரைந்து விட்ட.. கற்பூரம் போல்.. காணாமல் போய்விட்டது..

"ஒரு பாட்டுக் கேட்டிருக்கிறாயா..?"

"என்ன பாட்டுன்னு சொன்னால்தானே தெரியும்..?" ரம்யா அவனைக் கேலிக் குரலில் வார..

"பாட்டையெல்லாம் பாடணும்.. சொல்லக் கூடாது.." என்று அவன் பதிலுக்கு வாரினான்..

மெச்சுதலான ஒரு புன்னகை அவளது இதழ்களில் மலர்ந்தது..

"அதை நீங்க சொல்லக்கூடாது.. நீங்க பாடுகிற பாட்டைக் கேட்டுட்டு நான் சொல்லணும்.." என்று தன்னையுமறியாமல் அவள் சொல்லி விட்டாள்..

"ஓஹோ.. எனக்கொரு சந்தேகம்.."

"என்னவாம்..?"

"இங்கே நான்தானே உன்னைப் பெண்பார்க்க வந்திருக்கிறேன்..?"

"எனக்கென்ன தெரியும்..?"

"என்ன..?"

"நிஜமாகவே.. நீங்கள்ளாம் பெண் பார்க்க வந்திருக்கிறீங்கன்னு எனக்குத் தெரியாது.."

அவன் விழிகளில் அப்பட்டமான ஆச்சரியம் தெரிந்தது.. அவள் உண்மையாகத்தான் கூறுகிறாள் என்பது.. அவனுக்குப் புரிந்தது..

"ஈஸிட்..?"

"ம்ம்ம்.."

அவனுக்கு அது மிகவும் பிடித்திருந்தது.. ரம்யாவின் விழிகளில் அவனைக் கண்டதும் தோன்றிய மின்னலின் ஒளிர்வை அவன் நன்கு அறிந்திருந்தான்..

அது தன்னைப் பெண் பார்க்க வந்த மாப்பிள்ளை.. இவன்தான் என்ற நினைவினால் வந் ஒளிர்வில்லையா..?

அந்த உண்மை.. அவனைப் பெருமைப்பட வைத்ததது..

அவன் என்னவோ.. அவளைப் பெண் பார்க்கவென்று தான் வந்தான்.. போட்டோவிலேயே அவளைப் பார்த்துப் பிடித்துப் போய் விட்டதால்.. நேரில் பார்த்துப் பேச வென்று வந்தான்.. அந்த நினைவுடன்தான் அவளைப் பார்த்தான்..

ஆனால்.. இதுபோன்ற.. எந்தவித நினைவுகளும் இல்லாமலே அவள்.. அவனைக் கண்டதும் கிறங்குகிறாள் என்றால்.. இதைவிட ஒரு ஆண்மகனுக்கு வேறு என்ன வேண்டும்..?

அந்த நொடியில் ரம்யாதான் அவனது வாழ்க்கையில் பங்கு கொள்ள வேண்டும் என்று அவன் தீர்மானித்து விட்டான்..

அவனுக்காகவே.. அவள் பிறந்திருக்கிறாள்.. என்பதே அவனது முடிவு..

## அத்தியாயம்- 15

யாருக்காக.. யார் பிறந்திருக்கிறார்கள்.. என்று யார் முடிவு செய்வது..?

அவனுக்காக.. அவள் பிறந்திருக்கிறாள் என்று அவனே முடிவு செய்துவிட்டான்..

அவன் அவளைப் பெண் பார்க்கவென்று வந்தபோது.. அவன் மனதில் ஓர் மயக்கம் இருந்தது உண்மைதான்..

போட்டோவிலேயே இவ்வளவு அழகாக இருக்கும் இந்தப் பெண்.. நேரில் பார்க்கும் போது.. எவ்வளவு அழகாக இருப்பாள்..? என்ற எண்ணம் எழுந்தது இயற்கைதான்..

ஆனால்.. ரம்யாவின் வீட்டு வாசலில் அவன் இறங்கிய போது.. பால்கனியில் கண்ட அவளது முகம்.. அவனை கிறக்கத்தில் ஆழ்த்தி விட்டது..

முதன் முறையாக அவனைப் பார்த்தவளின் விழிகளில் தெரிந்த மயக்கம் அவனை வசீகரித்து விட்டது..

"என்னைப் பற்றி நிஜமாகவே உனக்குத் தெரியாதா..?"

"தெரியாது.."

"என்னைப் போட்டோவில் கூட.. நீ பார்த்த தில்லையா..?"

"சரியாப் போச்சு போங்க.. உங்களைப் பற்றிய விவரமே எனக்குத் தெரியாதுன்னு சொல்கிறேன்.. நீங்க போட்டோவுக்கு போயிட்டீங்க.. எங்க வீட்டில.. இதெல்லாம் வழக்கமில்லைங்க.."

"அதுதான் தெரியுதே.."

"எப்படித் தெரியும்..? இப்பத்தானே நான் சொன்னேன்..?"

"ம்ஹீம்.. இதைச் சொல்லி வேற தெரிஞ்சுக்கணுமாக்கும்..? பெண்ணோடு தனியாய் பேசணும்னு சொன்னால்.. கண் பார்வையிலேயே உட்கார வைத்துப் பேசச் சொல்கிற குடும்பமாச்சே உன் குடும்பம்.. இதுதான்.. நானும்.. நீயும் தனியாய் பேசிக் கொள்கிற இலட்சணமா..?"

"எங்க வீட்டில் இதை அலோவ் பண்ணியதே பெரிய விசயம்.. பெரியப்பா எப்படி இதுக்கு சம்மதிச்சாருன்னு எனக்கு இன்னமும் புரியலை.."

"உனக்கு இதுகூடப் பொறுக்கலையா..?"

இதைக் கேட்டதும் ரம்யா சிரித்து விட்டாள்.. சிரித்த பின்புதான் குடும்பத்தினரின் கண் பார்வையில் அவர்களிருக்கும் நினைவே அவளுக்கு வந்தது.. அவசரமாக.. ஹாலைப் பார்த்தாள்.. ஆனால் அவன் அவளை.. மறைத்து உட்கார்ந்திருந்தான்..

"அப்பாடி.." நிம்மதியாக பெருமூச்சு விட்டாள்..

"என்ன..? அவங்க கண்மறைவாய் நிற்கிற நிம்மதியா..?"

அவன் மிகச் சரியாக கணித்து.. கேள்வி கேட்டான்.. அவளுக்கு இன்னமும் சிரிப்பு வந்தது..

"இதையெல்லாம் எப்படி சட்டு.. சட்டுன்னு கண்டுபிடிக்கிறீங்க..?" அவள் வெகுளியாக வினவிய விதம் அவனை ஈர்த்தது..

"எல்லாம் மிஸ்டர்.. கோபாலனின் டிரெயினிங்தான்.." என்றாள் அவன்..

"கோபாலனா.. யார் அது..?" அவள் புரியாமல் கேட்டாள்..

"இது கூடத் தெரியாதா..? அதுசரி.. நான் பெண் பார்க்க வந்திருக்கிற விவரமே உனக்குத் தெரியாது.. இதில்.. என் அப்பா பெயர் மட்டும் உனக்கு எப்படி தெரிந்திருக்கப் போகிறது..?"

"அப்படியா..? உங்க அப்பா பெயர் கோபாலனா..?"

அவள் இதைக் கேட்ட விதம் கண்டு அவன் புருவங்களை உயர்த்தினான்..

"ஏன்..? இதில் எதுக்கு உனக்கு இத்தனை ஆச்சரியம்..?"

"இல்லை.. அவர் பெயர் இதுவாக இருக்கும்ன்னு நான் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.."

அவன் முகத்தில் மெலிதான ஆச்சரியம் சூழ்ந்தது..

"வேறு எதுவாக இருக்கும்ன்னு நினைத்தாய்..?"

அவள் பதில் சொல்லாமல் நாக்கைக் கடித்துவிட்டு.. தன் தலையில் குட்டிக் கொண்டாள்.. அவளது செய்கைகள் அவனுக்கு வேடிக்கையாக இருந்தன..

"ம்ம்ம்.. சொல்லு.."

"என்ன சொல்ல.."

"என் அப்பாவுக்கு என்ன பெயராக இருக்கும்ன்னு நீ நினைத்திருந்தாய்..?"

"அதுவா.. அது வந்து.. வந்து.."

"அதுதான் நாங்க வந்துவிட்டோமே.. இன்னும் எதுக்கு ராகம் போட்டு இழுக்கறே.. நீ பெயரைச் சொல்லு.."

இது என்ன.. இவன் இப்படி கிடுக்குப்பிடி போடுகிறானே.. என்று இருந்தது அவளுக்கு..

என்னதான் இருந்தாலும் அவளைப் பெண் பார்க்க வந்திருப்பவனின் தகப்பனார் அவர்.. அவனை வேறு அவளுக்கு பிடித்துப் போய் தொலைத்திருக்கிறது.. அவனுக்கும் அவளைப் பிடித்து போயிருப்பதாக.. அவனே வாய்விட்டுச் சொல்லியிருக்கிறான்.. இந்த நிலைமையில் எல்லாம் கூடிவந்தால்.. அந்த கோபாலனே அவளுக்கு எதிர்கால மாமனாராக வந்து விடும் வாய்ப்பு இருக்கிறது..

அப்படியிருக்கையில் அவள் எப்படி அவளுக்கு பொருத்தமென்று அவளுக்குத் தோன்றிய பெயர்களைச் சொல்ல முடியும்..?

"வேண்டாமே.." அவள் கெஞ்சுதலாக கூறினாள்..

"எது வேண்டாம்..? எங்க வீட்டுச் சம்பந்தமா..?" அவன் நிதானமாகக் கேட்டான்..

"நான் அப்படியா சொன்னேன்..?"

அவசரமாகக் கேட்டுவிட்டு அவள் நாக்கைக் கடித்துக் கொண்டாள்..

'இவனே.. நான் இவனைக் கண்டு மயங்கிப் போவதை கண்டுபிடித்து வைத்திருக்கிறான்.. இந்த இலட்சணத்தில் இப்படி வேறு வாயை விட்டுத் தொலைக்கணுமா..'

அவள் நினைத்தபடியே அவன் கண்களில் மின்னல் வந்து சேர்ந்தது.. இரகசியப் புன்னகையுடன் அவன் தூண்டினான்..

"நீதான் அப்படிச் சொல்ல மாட்டாய்ன்னு எனக்குத் தெரியுமே.."

'போச்சுடா.. இதையும் கண்டுபிடித்து விட்டானா..'

"அப்போச் சொல்லு.."

'என்னத்தைச் சொல்ல..?'

"இப்போ.. நீ சொல்லப் போறியா.. இல்லையா.."

'சொன்னால்.. நீ என்ன சொல்வாயோ..'

"என் பேச்சுக்கு இவ்வளவுதான் மரியாதையா..?"

சட்டென்று நிமிர்ந்து அவன் விழிகளுக்குள் பார்த்தாள் ரம்யா..

இவன் யார்..? அவள் யார்..? அவனைச் சில நிமிடங்களுக்கு முன்னாலிருந்துதான் அவளுக்குத் தெரியும்.. ஆனாலும் அவனின் இந்த வார்த்தைகள் அவளை அதிக அளவில் பாதிக்கிறதே.. அது ஏன்..?

அவளது பார்வையில் அவனது விழிகளின் மின்னல் அதிகரித்தது..

"அப்போச் சொல்லு.."

"நீங்க தப்பாய் எடுத்துக்க மாட்டிங்களே.."

"மாட்டேன்.. சொல்லு.."

"அது.. அது.. அதுவந்து.."

"இதை ஏற்கனவே சொல்லிவிட்டாய்.."

"அது.. அவர் பெயர்.. நம்பியாராகவோ.. இல்லை நரசிம்மராகவோ இருக்கும்ன்னு நான் நினைச்சேன்.."

அவள் லேசான பயத்துடன் சொல்லி முடிக்க.. அவன் சிரித்து விட்டான்..

"எதை வைத்து.. அவருக்குச் சிரிக்கத் தெரியாதுன்னு முடிவு பண்ணினாய்..?"

"அவரைப் பார்த்தால்.. கண்டிப்பானவர் போலத் தெரிந்தது.."

"கண்டிப்பாய் இருக்கிறவங்களுக்கு சிரிக்கத் தெரியாதுன்னு யார் சொன்னது..?"

இதைச் சொன்னவனின் விழிகளில் தெரிந்த சிரிப்பிற்கு பின்னால் கண்களுக்கு புலப்படாத கண்டிப்பு இருக்கிறதா..? ரம்யா.. குழம்பிப் போனாள்..

## அத்தியாயம்- 16

முகத்தைக் காட்டும் கண்ணாடி..

அகத்தைக் காட்டக் கூடாதா..?

ரம்யா கேட்டிருந்த பாடலின் வரிகள்.. அவளுக்கு நினைவுக்கு வந்தன.

கண்டிப்பிற்கு பெயர் பெற்றவர் என்று அவள் நினைத்திருந்த கோபாலனுக்கு சிரிக்கத் தெரியும் என்றால்.. பார்வைக்கு கம்பீரமாக.. முதல் பார்வையிலேயே அவளை மயங்க வைத்த வசீகரனாக.. வார்த்தைக்கு வார்த்தை இயல்பான நகைச்சுவையுடன் பேசுபவனாகத் தென்படும் இந்த விவேக் எப்படிப்பட்டவனாக இருப்பான்..?

ரம்யாவினால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை..

"என்ன குழப்பம்.." அவன் புருவங்களை உயர்த்தினான்..

"குழப்பமா.." அவள் மீண்டும் பிடிபட்ட உணர்வுடன் உடுமாறினாள்..

"குழப்பம்தான்.. அதுதான் உன் கண்ணிலேயே தெரிகிறதே.."

"அதெல்லாம் ஒன்றுமில்லை.."

"அது என்னன்னு நான் சொல்லவா..?"

"ம்ம்.. சொல்லுங்க.."

"என்னடா.. இவன் சிரித்த முகமாய் இருக்கிறானே.. இவன் உண்மையான முகம் இதுதானா..? இல்லை.. வேறயா.. என்ற குழப்பம்தானே.."

இவன் மிகவும் புத்திசாலி.. என்ற உணர்வில் அவள் புன்னகைத்தாள்..

"அதுதானே.."

"எனக்கு உங்களைத் தெரியாதே.."

"பழகிப் பார்த்தால் தெரிந்துவிடும்.. பழகிப் பார்க்கலாமா..?"

"எங்க பெரியப்பா காதில் இது விழுந்தால்.. தொலைத்துக்கட்டி விடுவார்.."

"ஏனாம்..? கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டு பழகிப் பார்க்கிறேன்ம்மா.."

"சமாளிப்பு..?"

"இல்லைன்னு நான் சொல்ல மாட்டேன்.. பட்.. எனக்குப் பழகிப் பார்க்க ஆசைதான்.."

"எனக்கு இல்லை.."

இதைச் சொல்லும் போதே.. அவள் மனம் பொய்.. என்று கூவியது.. அவனுடன் பழகிப் பார்க்கும் ஆசை அவள் மனதில் கிளர்ந்து எழுந்தது..

அவன் விழிகளில் அதைக் கண்டுவிட்ட சிரிப்பு தெரிந்தது..

"நம்புகிறேன்.." இதைச் சொன்னவனின் குரலில் நம்பாததன்மை தெரிந்தது..

"ஆமாம்.. ஏதோ பாட்டைப் பத்திச் சொன்னீங்களே.. அது என்ன பாட்டு..?" அவள் கேட்டாள்..

"நான் பார்த்ததிலே..

அவள் ஒருத்தியைத்தான்..

நல்ல அழகியென்பேன்..

நல்ல அழகியென்பேன்.."

அவன் மெதுவான குரலில் பாடினான்..

அவள் முகம் சிவந்தது.. வெட்கத்துடன் வெளியே பார்த்தாள்..

"ரம்யா.."

"ம்ம்ம்.."

"உன் பெரியப்பா.. பதினைந்தாவது முறையாக கையிலிருக்கிற வாட்சைத் திருப்பி.. என் கண்ணில் படும்படியாக காட்டி டைம் பார்த்து விட்டார்.."

"அச்சச்சோ.."

"எதுக்கு இந்த அச்சச்சோ.."

"நான் போகணும்.."

"போகலாம்.. போகலாம்.. போகாமல் இந்த ரூமிலேயே குடித்தனமா பண்ண முடியும்..?"

"ம்ம்.. ஆசை தோசை.. அப்பளம்.. வடை.."

"இதெல்லாம் நீ காலையில் சாப்பிட்ட டிபன் அயிட்டமா..?"

"நான் போகணும்.. பெரியப்பா.. கோபப்படுவார்.."

"அட.. பொறும்மா.. கீறல் விழுந்த ரிகார்ட்டைப் போலச் சொன்னதையே.. திரும்பத் திரும்பச் சொல்லாமல்.. நான் கேட்கிறதுக்கு பதிலைச் சொல்லு.."

"சரி.. கேளுங்க.."

அவள் விறைப்பாக நிமிர்ந்து நிற்க..

"இப்ப எதுக்கு இப்படி சல்யூட் வைக்கப் போகிறதைப் போல நிமிர்ந்து நிற்கிற..? நான் என்ன உன் படிப்பிலா கேள்வி கேட்கப் போகிறேன்.. நம்ம.. வாழ்க்கையைப் பத்திக் கேள்வி கேட்கப் போகிறேன்ம்மா.." என்றான் அவன்.

"உங்க கேள்விகளை அப்புறமாய் கேளுங்க.. முதலில் நான் கேட்கிற இந்தக் கேள்விக்கு பதிலைச் சொல்லுங்க.."

"என்ன..?"

"நான் என்ன உங்க அம்மாவா..? இரும்மா.. பொறும்மான்னு.. அம்மாவா அடுக்கறீங்க.. என்ன விசயம்..?"

அவன் உதடுகளில் இளநகை பரவியது.. அவள் துடுக்காக பேசியது அவனுக்குப் பிடித்திருந்தது..

"வேறு எப்படிக் கூப்பிட..?" சிரிப்போடு கேட்டான்..

"யோசிச்சு வையுங்க.. இப்ப நான் போகிறேன்.."

"பொறு ரம்யா.. என் கேள்விக்கு பதிலைச் சொல்லிட்டுப் போ.."

"நீங்க இன்னைக்குள்ள கேட்கிற வழியாய் தெரியலையே.."

"அந்தப் பெரியப்பாவுக்கு ஏற்ற தம்பி மகள்தான்.."

"தேங்க்ஸ்.."

"உன் தேங்க்ஸெல்லாம் எனக்கு வேண்டாம்.."

"வேறு என்னதான் வேண்டும்.."

"நீதான் வேண்டும்.."

"என்னது..?"

"எதுக்கு இத்தனை அதிர்ச்சி..? என்னைப் பிடிச்சிருக்கா..? இதுதான் நான் கேட்க வந்த கேள்வி.. பதில் சொல்லு.."

எப்படிச் சொல்வது..? பிறந்ததிலிருந்து சுயமாக முடிவெடுத்து அறியாதவளிடம் போய் இப்படிக் கேட்டால் அவள் எப்படிப் பதில் சொல்வாள்..

"ப்ளீஸ்.. இப்படியெல்லாம் கேட்காதீங்க.."

"ஏன்..?" அவன் குரலில் மெலிதான கோபம் வந்திருந்தது..

"என் பெரியப்பாவும்.. அப்பாவும்.. எதைச் சொல்கிறாங்களோ.. அதைக் கேட்டுத்தான் எனக்குப் பழக்கம்.."

"என்னை உனக்கு எப்படித் தெரியும்..?"

அவன் அழுத்தமாக வினவ.. அவளுக்கு பதில் சொல்லத் தெரியவில்லை..

"உங்களை எனக்கு எப்படியும் தெரியாதே.. நீங்க.. என்னைப் பெண் பார்க்க வந்த விவரமே.. எனக்கு இப்போத்தானே தெரியும்..?"

"பால்கனியிலிருந்து என்னை நீ பார்த்தப்போ.. நான் உன்னைப் பெண் பார்க்க வந்த மாப்பிள்ளைன்னு உனக்குத் தெரியுமா..?"

"தெரியாது.."

"அப்புறம் எதுக்கு என்னை அப்படிப் பார்த்த..?"

"பிடித்திருந்தது.. பார்த்தேன்.."

அவள் தன்னையறியாமல் சொல்லிவிட.. அவன் இதழ்களில் வெற்றிப் புன்னகை படர்ந்தது..

"வா.. போகலாம்.." அவன் எழுந்து விட்டான..

"இவ்வளவுதானா..?" அவள் ஏமாற்றத்துடன் கேட்டாள்..

"ஊம்.. அதுதான்.. என் கேள்விக்கு நீ பதில் சொல்லிட்டேயே.."

"எப்போச் சொன்னேன்..?"

"என்னைப் பிடித்திருந்ததால் பார்த்ததாகச் சொன்னாயே.. அது என் கேள்விக்கான பதில்தானே..?"

அவள் நாக்கைக் கடித்துக் கொண்டு.. தலையில் குட்டிக் கொள்ள..

"ஊஹீம்.. அப்படிச் செய்யாதே.." என்றான் அவன்..

"ஏன்.. என் தலை.. நான் குட்டிக் கொள்கிறேன்.."

"இல்லை.. இந்த நொடியிலிருந்து நீ எனக்குச் சொந்தம்.." என்று அவன் குண்டைத் தூக்கிப் போட்டான்.

"இதுக்கு என்ன அர்த்தம்..?" அவள் திகைத்தாள்..

"நீ எனக்கு மட்டும் சொந்தமென்று அர்த்தம்.." அவன் அமர்த்தலாகக் கூறிவிட்டு நகர்ந்து விட்டான்..

இதை எப்படி.. அவன் சர்வநிச்சயமாகச் சொல்லலாமென்று ரம்யாவுக்குள் இருந்த பெண்ணுரிமைவாதி.. சிலிர்த்து கொண்டாள்..

## அத்தியாயம்- 17

அவன் எப்படித் தானாகவே அவள்.. அவனுக்குத்தான் சொந்தம் என்று சொல்லலாம்..?

இந்தக் கேள்வி.. அவள் மனதில் எழுந்தவுடன் கோபம் வருவதற்குப் பதில் அவளுக்கு சந்தோசம் வந்து தொலைத்தது..

சமர்த்துப் பெண் போல.. அவனைத் திரும்பிப் பார்க்காமல் மாடியேறியவள்.. அவர்கள் கிளம்பும் போது.. திருட்டுத்தனமாக பால்கனியிலிருந்து எட்டிப் பார்த்தாள்..

எல்லோரும் விடைபெற்றுக் கொண்டிருக்க.. அவன் மட்டும் அண்ணாந்து பால்கனியைப் பார்த்தான்.. அவள் நிற்பதைக் கண்டதும் அவன் முகத்தில் எதிர்பார்த்தது நடந்துவிட்ட சிரிப்புத் தெரிந்தது..

'ச்சே.. அவனைப் பார்ப்பதற்காக நான் எட்டிப் பார்த்ததைக் கண்டுபிடித்து விட்டானே..'

அவசரமாகத் தலையை இழுத்துக் கொண்டாள்.. ஆனாலும் கார் கிளம்பும் போது அவளால் ஆவலை அடக்க முடியவ்லலை.. திரும்பிப் பார்த்தாள்.. காரை ஓட்டிக் கொண்டிருந்தவனின் கை ஜன்னல் வழியாக வெளியே வந்து அசைந்தது..

அந்தக் கையசைவு அவளுக்காக என்ற நினைவில்.. அவள் அப்படியே நின்று விட்டாள்..

இரவு உணவுக்காக அவளை அழைக்க வந்த சுஜிதா சுவரில் சாய்ந்து.. எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவளைக் கண்டதும் பயந்து கீழே ஓடி விட்டது..

"என்னடி சுஜி இப்படி ஓடி வர்றே..?" கௌதமி அவசரமாக குழந்தையைத் தூக்கிக் கொண்டாள்..

"அத்தைக்கு காய்ச்சல்.." சுஜி தன் போக்கில் சொல்லவும்.. சாப்பிட்டுக் கொண்டிருந்த புண்ணியகோடி கவலையுடன்

தம்பி மனைவியைப் பார்த்தார்..

"ரம்யாவுக்கு என்னம்மா..?"

"எனக்குத் தெரியலையே மாமா.. சாயங்காலம் சிரிச்சுப் பேசிக்கிட்டு நல்லாத்தானே இருந்தா.."

"இப்பக் காய்ச்சல்ன்னு பேத்தி சொல்லுகிறாளே.."

"இதோ.. நான் போய் என்னன்னு பார்க்கறேன்.."

ராஜம் கையிலிருந்த குழம்புக் கிண்ணத்தை வைத்து விட்டு நகர முற்பட.. யுகேந்திரன் ரஞ்சனாவைப் பார்த்தான்..

"இருங்கத்தை.. நான் போய் பார்க்கிறேன்.."

கணவனின் கண்ணசைவை புரிந்து கொண்டதை உணர்த்தும் விதமாக.. அவனைப் பார்த்தபடி.. மாடியேற ஆரம்பித்தாள் ரஞ்சனா.. சுஜியைத் தூங்க வைப்பதற்காக தோளில் போட்டுத் தட்டிக் கொடுத்தபடி.. கௌதமியும் கூட வந்தாள்..

இரண்டு பேரும் ரம்யாவைத் தேடிப் போய்.. பால்கனி இருளில் அவளைக் கண்டுபிடித்தார்கள்..

"என்ன ரஞ்சனா.. இவ இப்படி உட்கார்ந்திருக்கிறாள்.."

"சுஜி சொன்னது உண்மைதான்போல.."

ரஞ்சனா அவசரமாக.. நாத்தனாரின் நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள்.. அது சில்லென்று இருந்தது..

"என்னக்கா.. இது.. காய்ச்சலெல்லாம் இல்லையே.."

"அப்புறம் எதுக்காக.. இவ.. இப்படி மந்திரிச்சுவிட்ட கோழி போல.. ஒரு மார்க்கமா பார்த்துக்கிட்டு உட்கார்ந்திருக்கிறா..?"

'கௌதமி சற்றுச் சத்தமாகச் சொல்லிவிட.. ரஞ்சனா உதட்டில் கைவைத்து..'

"உஷ்ஷ்.." என்றாள்..

"ஏன்..?" புரியாமல் வால்யூமை குறைத்தாள் கௌதமி..

"சத்தமாய் சொல்லி வைக்காதேக்கா.. கீழே பாட்டியின் காதில் விழுந்ததுன்னு வைய்யு.. வேறு வினையே வேண்டாம்.. உடனே மாடிக்கு வந்து ஒப்பாரி வைக்க ஆரம்பித்து விடும்.."

"அதைச் சொல்லு.. காத்தையும்.. கருப்பையும்.. தேவையில்லாம வம்புக்கு இழுக்கும்.."

"அப்புறமாய்.. இந்த ராத்திரி வேளையில.. இவளுக்கு மந்திரிக்க.. தர்ஹாவுக்கு ஓடணும்.."

"தெரியுதில்ல.. சவுண்டைக் குறை.."

கௌதமி.. வாயை இறுக மூடிக் கொண்டாள்.. ரஞ்சனா பால்கனித் தரையில் ரம்யாவின் அருகில் அமர்ந்து.. மெதுவான குரலில்.

"ரம்யா.. ரம்யா.." என்று அழைத்தபடி.. அவளது தோளைத் தொட்டு அசைத்தாள்..

விழுக்கென்று தூக்கிப் போட்டவளாக.. ரம்யா தன்னுணர்வும் மீண்ட விதத்தில் ரஞ்சனாவுக்கு உடல் தூக்கிப் போட்டது..

"பார்த்து ரஞ்சனா.. அப்புறம் உனக்கு மந்திரிக்க தர்ஹாவுக்கு போக வேண்டியதா ஆகிப் போகிடப் போகுது.."

நேரம் காலம் தெரியாமல் கௌதமி சொல்லி வைக்க.. ரஞ்சனா கோபத்துடன் ரம்யாவை ஒரு போடு போட்டாள்..

அடித்த அடியின் வலியில்.. ரம்யா தோளைப் பிடித்துக் கொண்டு..

"எதுக்கு அண்ணி அடிக்கிறீங்க..?" என்று ரஞ்சனாவை முறைத்தாள்..

"ஏண்டி பிசாசே.. எதுக்குடி இப்படி பித்துப் பிடிச்சதைப் போல உட்கார்ந்துகிட்டு இருக்க..?"

"நானொன்னும் பித்துப் பிடிச்சுப் போய் உட்காரல.. சும்மாக் காற்றாட உட்கார்ந்திருந்தேன்.."

"கேட்டியாக்கா.."

"கேட்டுக்கிட்டுத்தானே இருக்கேன்.."

"இவ காற்றாடினாளாம்.."

"காற்றோடு இவ ஆடினாளா.. இல்லை.. இவகூட காற்று ஆடுச்சான்னு ஆராய்ச்சி பண்ணிக்கிட்டு இருந்தா விடிஞ்சுரும்.. பொண்ணு பார்க்க வந்த மாப்பிள்ளை சம்மதம் சொல்லிட்டுப் போயிட்டாரு.. நம்ம வீட்டாளுக.. பஞ்சாங்கத்தைப் புரட்டி.. நாள் பார்க்க ஆரம்பிச்சுட்டாங்க.. இனி இவ.. இப்படித்தான் இருப்பா.."

"அண்ணி.."

"சொல்லும்மா.."

"நீங்க கேலி பண்றீங்க.."

"இல்லைன்னு பொய் சொல்லச் சொல்றியா.? ஆமாம்.. நாங்க கேலிதான் பண்றோம்.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?"

"அடடா.. ஒரே நாளில்.. அண்ணியா இருந்தவங்க.. அக்காவா.. மாறிப் போயிட்டாங்களே.."

"அக்காவா..?"

"ஆமாம்.. சொர்ணாக்கா.."

சொல்லிவிட்டு ரம்யா ஓட.. கௌதமி கையை ஓங்கிக் கொண்டு.. துரத்துவதைப் போலப் பாவனை செய்தாள்..

சிரிப்போடு.. படியிறங்கி வந்த மகளை வாஞ்சையுடன் பார்த்த பொன்னம்பலம்..

"உடம்புக்கு என்னம்மா..?" என்றார்..

"ஒண்ணுமில்லைப்பா.. சும்மா ஏதோ.. யோசனையா இருந்தேன்.."

"சுஜி காய்ச்சல்ன்னு சொல்லி பயம் காட்டிட்டா.."

"இல்லைப்பா.."

"சாப்பிடு.."

ரம்யா சாப்பிட ஆரம்பிக்க.. சாப்பாடுத் தட்டில் அவன் தெரிந்தான்..

'இனி.. நீ எனக்குத்தான் சொந்தம்..' என்று கண் சிமிட்டினான்..

ரம்யாவுக்கு புரையேறி விட்டது.. அவள் அவசரமாக தண்ணீரைக் குடித்தாள்..

## அத்தியாயம்- 18

விடிவிளக்கின் மெல்லிய ஒளியில் கண்மூடி தூங்க முயன்று தோற்றுக் கொண்டிருந்தாள் ரம்யா..

'இந்த ஒரு மாதத்துக்குள்ள எவ்வளவு மாற்றம்..' புரண்டு படுத்தாள்..

தினமும் போன் பண்ணுகிறானே.. எவ்வளவு தைரியம்.. கன்னம் சிவந்தாள்..

இதை பெரியப்பா கண்டும் கானாமல் போகிறதுதான் உலக அதிசயம்.. ஜன்னல் வழி தெரிந்த வானத்தைப் பார்த்தாள்.. நிலவு தெரிந்தது..

"வெந்நிலா நேரத்திலே..

வேணுகானம்..

மேல்மாடி முற்றத்திலே..

நீயும்.. நானும்.."

மனதில் பாடல் ஒலித்தது.. பெண் பார்த்து விட்டுப் போனவன்.. அடுத்த இரு வாரங்களில்.. நிச்சயத்தார்த்த மோதிரத்திற்கு அளவெடுக்க என்று வந்து நின்றபோது.. மொட்டை மாடியில் அவனைத் தனிமையில் சந்தித்த அந்த தருணம் நினைவுக்கு வந்தது..

அன்றும்.. அவன் கிளம்பும் நேரம் பார்த்து.. ஒளிந்திருந்து அவனைப் பார்க்கத்தான் மொட்டை மாடிக்கு வந்தாள் ரம்யா..

அதுவரை கண்ணியவானாக புண்ணிய கோடியிடமும்.. பொன்னம்பலத்திடமும் பேசிக் கொண்டிருந்தவன்.. அவள் மாடிக்குச் செல்வதை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தான்..

'ம்ம்.. பெண் பார்க்க வந்தப்போதான்.. தனியாய் பேசணும்ன்னு கேட்க முடியும்.. இப்ப என்ன

பண்ணுவானாம்..?'

திருட்டுத்தனமாக அவளைப் பார்க்கக் கூட முடியாமல் அவன் தவித்த தவிப்பைக் கண்டு.. அவள் முகத்தில் இளநகை அரும்பியது..

மாடி பால்கனியில்.. புண்ணியகோடியின் அம்மா.. காலை நீட்டி அமர்ந்து.. வெற்றிலை பாக்கை போட்டுக் கொண்டிருக்க.. வேறு வழி தெரியாமல் மொட்டை மாடிக்குச் சென்றாள்..

கைப்பிடிச் சுவரில் சாய்ந்து கீழே பார்த்துக் கொண்டிருந்தவளின் காதோரமாக..

"என்னைத்தானே தேடறே.." என்ற குரல் கேட்டது..

அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.. திரும்பிய வேகத்தில் அவன்மீது மோதி நின்றாள்..

புருவங்களை உயர்த்தி கண் சிமிட்டினான் அவன்..

"என்ன..?"

"நீங்க.. எப்படி இங்கே.." அவள் பேச முடியால் தடுமாறினாள்..

அவனை அவள் எதிர்பார்க்கவில்லை என்பதை அவளது விழிகள் கூற அவன் நிதானமாக அவளை நெருங்கி நின்றான்..

இது என்ன.. இவன் இப்படி கிட்டத்தில் வந்து நின்று தொலைக்கிறான்.. யாராவது வந்து விட்டால் என்ன செய்வது..?

இத்தனை வருடமாக கட்டிக் காத்து வந்த 'அடக்கமான பெண்..' என்ற பட்டம்.. பறந்து விடுமோ.. என்ற பயத்துடன் அவள் திரும்பிப் பார்த்தாள்..

"யாரும் வரமாட்டாங்க.."

அவளது பார்வையை உணர்ந்தவனாக அவன் சொன்னான்..

"அது எப்படி.. அவ்வளவு நிச்சயமாகச் சொல்கிறீங்க.."

"நிச்சயம்தான்.."

"உங்களுக்கு எங்க வீட்டு ஆளுகளைப் பற்றித் தெரியாது.."

"எனக்குத் தெரிவது இருக்கட்டும்.. உனக்குத் தெரியுமா..?"

"என் வீட்டு ஆளுகளைப் பற்றி.. எனக்குத் தெரியாதா..?"

"அப்படியா..? நல்லாத் தெரியுமா..?"

"தெரியும்.."

"அவங்க சொன்ன வார்த்தை மாற மாட்டாங்கன்னு எல்லோரும் பேசிக்கிறாங்களே.. அதைப் பற்றித் தெரியுமா..?"

"தெரியும் சார்.."

"சார்..?"

அவன் விழிகள் மின்ன.. புருவங்களை உயர்த்தினான்.

"ஆமாம்.. நீங்க சொல்லுங்க.."

"உங்க வீட்டுப் பெண் ரம்யாவுக்கு நிச்சயதார்த்த மோதிரம் போடணும்.. அளவு எடுக்கணும்ன்னு சொன்னேன்.. நீங்களே போய் அளவெடுத்துக்கங்கன்னு சொல்லி அவங்கதான் அனுப்பி வைத்தாங்க.. அனுப்பி வைத்துவிட்டு.. பின்னாலேயே வருவாங்களா..?"

"பொய்.."

"மெய்.."

"அப்படி மோதிர அளவு வேணும்ன்னா... என் மோதிரத்தைத்தான் பெரியப்பா கொடுக்கச் சொல்லியிருப்பார்.. உங்களையொன்னும் அளவெடுக்க அனுப்பியிருக்க மாட்டார்.."

"அப்படிங்கறே..?"

அவன் இரண்டெட்டு முன்னால் வைத்தான்..

"அப்படித்தான்.."

அவள்.. இரண்டெட்டு பின்னால் வைத்தாள்..

"எப்படி.. அவ்வளவு உறுதியாய் சொல்கிற..?" அவன் மேலும் முன்னேறினான்..

"என் பெரியப்பாவைப் பற்றி எனக்குத் தெரியும்.. அந்த உறுதியில் தான் சொல்கிறேன்.." அவள் மேலும் பின்னுக்கு நகர்ந்தாள்..

"அப்ப.. அவருக்கு நான் மொட்டைமாடிக்கு வந்தது தெரியாதுன்னு சொல்கிற..?" பேசியபடி அவன் நகர..

"ஆமாம்.." என்றபடி.. பின்னால் நகர்ந்தவள்.. கைபிடி சுவர் மோத நின்றாள்..

"இனி நகர இடமில்லை.." அவன் கண்களில் வெற்றிக்குறி மின்னியது..

"வேண்டாம்.."

"எது வேண்டாம்..?"

"கிட்டே வராதீங்க.."

"வந்தால்..?"

"கீழே குதித்து விடுவேன்.."

அவள் தன்னையறியாமல் சொல்லிவிட.. அவன் முகம் மாறினான்..

"ஏன் ரம்யா..? நானென்ன வில்லனா..?" என்று கேட்டுவிட்டு திரும்பி நடந்தான்..

"இல்லையில்லை.." அவள் சட்டென்று அவன் கையைப் பிடித்து நிறுத்திவிட்டாள்..

அவன் முகத்தில் இருந்த கடினம்.. நொடிப்பொழுதில் காணாமல் போய்விட்டது.. பழைய இலகுத்தன்மையுடன் அவன் குழைந்து சிரிக்க.. அவள் முகம் சிவந்து விட்டாள்..

அவள் கையை எடுத்துக் கொள்ள முயன்றபோது.. அவனது கை அவள் கையின் மீது படிந்து இறுகியது..

"நீ சொன்னது உண்மைதான்.. உன்னிடம் மோதிரத்தை வாங்கி.. அளவு பார்த்துக் கொள்ளச் சொல்லித்தான் உன் பெரியப்பா அனுப்பினார்.."

"விடுங்க.. மோதிரம்.. கீழே.. என் ரூமில் இருக்கு.."

"தேவையில்லை.."

"ஏன்..?"

"எனக்கு உன் விரலின் அளவு தெரிந்து விட்டது.."

அவனது விரல்கள் அவளது மோதிரவிரலைச் சுற்றி.. வளையம் போட.. ரம்யா.. நடுக்கமாக உணர்ந்தாள்.. கையை உறுவிக் கொள்ள முயன்றாள்.. அவன் கைப்பிடியோ இறுக்கமாக இருந்தது..

அவனது கைக்குள் இருந்த அவளது தளிர்விரல்களை அவன் அழுத்திப் பிடிக்க.. அவள் கண்மூடிக் கிறங்கினாள்..

இதுபோன்ற நிகழ்வுகளைப் பற்றி அவள் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை.. நேரடியாக அந்த அனுபவத்தை உணர்ந்தவளின் விரல்கள் தந்தியடிக்க ஆரம்பித்தன.. அவளது விரல்களின் நடுக்கத்தை உணர்ந்தவனாக. அவனது விரல்கள்.. அவளது விரல்களைப் பற்றி லேசாக.. நீவி விட ஆரம்பித்தன.. அவளது இருதயம் வேகமாக அடித்துக் கொள்ள.. அவள் கண்மூடி நின்று விட்டாள்..

## அத்தியாயம்- 19

உணர்வுகளின் வேகத்தில் அடித்துச் செல்லப்பட்ட ரம்யா.. தாங்க முடியாமல் அழுதுவிட்டாள்..

அவளது கண்ணீர் வழிந்து.. கன்னத்தில் இறங்கவும்.. விவேக் பதறிவிட்டான்..

"ரம்யா.."

"ம்ம்.."

"எதுக்கும்மா அழுகறே..?"

அவன் பதட்டத்துடன் கேட்க.. அவள் அந்த நிலைமையிலும்.. கண்ணீர் முகத்துடன் அவனை முறைத்தாள்..

"நானென்ன.. உங்களுக்கு அம்மாவா..?"

அவன் முகத்தில் பதட்டம் விலகி சிரிப்பு படர்ந்தது..

அவளது அழுகைக்கான காரணம் வேறு என்பதைப் புரிந்து கொண்டவன்..

"தப்புத்தான் தாயி.." என்று கன்னத்தில் போட்டுக் கொண்டான்..

"தாயா..?" அவள் அதிகமாக முறைத்தாள்..

"தப்புத்தாண்டி.." அவன் கண்களில் சிரிப்பும்.. குறும்பும் சேர்ந்து கூத்தாடியது..

"என்னது..? 'டீ'.. 'யா..'?" அவள் அதிர்ந்தாள்..

"இங்கே பாரு ரம்யா.. அம்மான்னாலும் அலறுகிற.. தாயின்னாலும் முறைக்கிற.. அப்புறம்.. வேற எப்படிக் கூப்பிடறது..?"

"அதுக்காக 'டீ' போட்டுக் கூப்பிடுவீங்களா..?"

"கூப்பிட்டால்தான் என்ன..?"

"என்னை யாரும் அப்படிக் கூப்பிட்டது இல்லை.."

"மத்தவங்களும்.. நானும் ஒண்ணா..?"

அவனது விரல்கள் இன்னும் அதிகமாக அவளது விரல்களைப் பிடித்தன.. அவளது கண்ணீர் அதிகமாகியது..

"ஏன் ரம்யா..?"

"தெரியலை.."

"என்ன தெரியலை.."

"என்னன்னு தெரியலை.. எனக்கு ஏனோ.. அழுகை.. அழுகையா வருது.. அது எதுக்குன்னு சொல்லத் தெரியலை.."

அவன் மார்பில் சாய்ந்து கொண்டவளின் கூந்தலை வருடினான்.. அவளது அந்தக் குழந்தைத்தன்மை அவனை வெகுவாக வசீகரித்தது..

ஒரு வழியாக விசும்பல் ஓய்ந்து விலகி நின்றவளை காதலுடன் பார்த்தான் விவேக்..

'இவள்தான் எத்தனை மென்மையானவள்..' அவன் மனம் வியந்தது..

அவன் உணர்த்திய அந்த அனுபவத்தின் புதுமையை நினைத்த போது.. அவளது மனம் பரவசப்பட்டுப் போனது..

"அனுபவம் புதுமை..

அவனிடம் கண்டேன்..

அந்நாளில் இல்லாத

பொன்னான எண்ணங்களே..

ஆஹா.. பொல்லாத கைபட்டு..

புண்ணான கன்னங்களே..

லாலாலா.. லாலாலா.. லலல..."

மெல்லிய குரலில் பாடியவள்.. சட்டென்று பாட்டை நிறுத்திவிட்டு.. அருகில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த கோசலையை உற்றுப் பார்த்தாள்..

'பாட்டி மட்டும் விழித்துட்டா.. போயே.. போச்சு..'

ஆனால் கோசலை விழிக்கவில்லை.. கும்பகர்ணனுக்கு போட்டியாக.. கும்பகர்ணி போல அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள்..

காதருகில் அணுகுண்டே வெடித்தாலும் கோசலை தூக்கத்தை கலைக்க மாட்டாள் என்பது நிச்சயமாகி விட.. ரம்யா.. கவலையின்றி.. சின்னக்குரலில் பாடலைத் தொடர்ந்தாள்..

"அன்பே.. என் அன்பே..

உன்விழிப் பார்க்க..

இத்தனை நாளாய்

தவித்தேன்..

கனவே.. கனவே..

கண்ணுறங்காமல்..

உலகம் முழுதாய்

அலைந்தேன்.."

தலையணையில் முகம் புதைத்தவளுக்கு.. விழிகளுக்குள் அவன் முகம் தெரிந்தது.. ஒவ்வொரு நொடியும்.. ஒவ்வொரு உணர்வைக் காட்டிய அவன் முகம் நெஞ்சில் நிறைய.. அவள்.. அவன் மீதான காதலை உணர்ந்தாள்..

"உன்னை நினைக்கவே..

நொடிகள் போதுமே..

உன்னை மறக்கவே..

யுகங்கள் ஆகுமே..

நீ கேட்கையில்...

காதலே.. இல்லையே..

நான் நினைக்கையில்

ஓரமாய் ஒலிக்குதே..

என் வாழ்வில் காதல் வந்து

மையம் கொண்டதே.."

கண்களை மூடிப் பாடியவள்.. பாட்டை நிறுத்திவிட்டு அவன் மீதான.. நினைவினில் மூழ்க.. அவள் காதோரம் கோசலையின் குரல் கேட்டது..

"என்ன கண்ணு.. பாட்டுக் கச்சேரியை முடிச்சிட்டாயா..?"

ரம்யா உடல் தூக்கிப் போட.. கண்களை விழித்தாள்..

"நீ தூங்கலையா பாட்டி..?"

"எங்கே தூங்கறது..? அந்தப் பிள்ளையாண்டன் வந்து உன்னைப் பொண்ணுப் பார்த்துட்டு போனாலும் போனான்.. நீ ராத்தூக்கத்தை மறந்து.. ஓட்டைப் பானையில.. நண்டை விட்டதைப் போல.. காதோரமா.. நொய்.. நொய்ன்னு.. சத்தம் போட்டுக்கிட்டு இருக்கிறயே.."

"என் பாட்டைக் கேட்டா.. உனக்கு நண்டு குடையறதைப் போல இருக்கா..? இரு.. விடிஞ்சதும் உன்னைப் பத்தி தாத்தாகிட்ட போட்டுக் கொடுக்கிறேன்.."

"அந்த போட்டுக் கொடுக்கிற எட்டப்பி வேலையெல்லாம் உனக்கெதுக்கு..? பேசாம தூங்கு.."

"எட்டப்பியா..?"

"ஆமாம்.. ஆம்பளைய எட்டப்பண்ணு சொன்னா.. பொம்பளைய வேற எப்படிச் சொல்றது..?"

"ஏன்..? கோசலைன்னு சொல்ல வேண்டியதுதானே.."

"என்னைப் பார்த்தா போட்டுக் கொடுக்கிறவளப் போல இருக்கா..?"

"பின்னே.. இல்லையா..?"

"இதை.. உங்கம்மாகிட்டயும்.. பெரியம்மாகிட்டயும் போய் கேளு.."

"அங்கே கேட்டுத்தான் உன் வளமையைத் தெரிஞ்சுக்கணுமா..?"

"மாமியாரைப் பத்தி.. மருமகதானே சொல்லுவா..?"

"ஏன்..? பண்ணையாரம்மாவைப் பத்தி.. களையெடுக்கிறவங்க.. சொல்ல மாட்டாங்களா..?"

கோசலையின் கெடுபிடித்தனத்தால்.. விவசாய வேலைக்கு வரும் பெண்கள்.. அவள்மீது கடுப்பாகி இருப்பது ரம்யாவுக்கு தெரியும்.. அதனால்.. அவள் வேண்டுமென்றே பாட்டியை வம்புக்கு இழுத்தாள்..

"அவளுக அத்தனை பேரும் நாடகசாலைக.. ஆடாம வேலையைப் பாருங்கடின்னு சொன்னது ஒரு குத்தமாம்.."

"ஓஹோ.."

"உடனே.. உன் பெரியப்பன் கிட்ட போட்டுக் கொடுத்திட்டா.."

"அப்ப.. அவங்ககிட்டத்தான் உன்னைப் பத்திக் கட்டாயமாய் கேட்கணும்.."

"எதுக்குடியாத்தா.. உன் வம்புக்கே நான் வரலை.. நீ விடிய விடிய பாடிக்கிட்டு இரு.. நான் இழுத்துப் போர்த்திக்கிட்டு தூக்கம் போடறேன்.."

கோசலை கண்களை மூடிக் கொள்ள.. ரம்யாவும் தூங்க முயன்றாள்..

## அத்தியாயம்- 20

திருமண அழைப்பிதழ்கள் அச்சிடப்பட்டு வந்து விட்டன..

"எங்கே.. பார்க்கலாம்.."

ஆவலோடு அழைப்பிதழ்கள் கட்டப்பட்டிருந்த கட்டிலிருந்து ஒன்றை உருவப் போனாள் கௌதமி..

"குலதெய்வம் கோவிலில் பத்திரிக்கை வைக்கணுமம்மா.. அதுக்கு பின்னாலதான்.. மத்தவங்க பார்க்கணும்.." புண்ணியகோடி கண்டிப்பான குரலில் சொல்லிவிட்டார்..

வீட்டில் மருமகள்களை ஆட்சி செய்ய சொல்லி விட்டு.. பெரியவர்கள் தம்பதி சமேதராக கோவிலுக்கு போய் விட்டார்கள்..

"என்ன டிசைனா இருக்கும் அண்ணி.."

ரம்யாவின் குரலில்.. அவள் தேர்ந்தெடுத்த அழைப்பிதழ் அச்சிடப்பட்டிருக்க வேண்டுமே.. என்ற பரிதவிப்பு தெரிந்தது..

"எங்க அப்பாம்மா பெயரை.. தாய்மாமன்கள் லிஸ்டில் போட்டிருக்கணுமே.. எப்படிப் போட்டிருக் காங்களோ.."

குக்கரை அடுப்பில் ஏற்றி வைத்துக் கொண்டிருந்த கௌதமிக்கு.. அவளது பிறந்த வீட்டை ஒழுங்காக கௌரவித்திருக்க வேண்டுமே.. என்ற கவலை..

"இந்தத் தடவையாவது.. குலதெய்வத்துக்கு மட்டும் பத்திரிக்கையை வைத்து விட்டு இவங்க ஒழுங்காக வீடு வந்து சேர வேண்டும்.."

ரஞ்சனாவுக்கு அவள் அம்மாவின் கோபத்தைப் பற்றிய கவலை..

இவை எதுவும் இல்லாதவளாக.. சுஜிதா ரம்யாவின் கழுத்தைக் கட்டி முத்தம் கொடுத்தாள்..

"அத்தை.. உனக்கு கல்யாணமா..?"

"அப்படித்தான் சொல்லிக்கிறாங்க.."

"உனக்கு ஏதும் தெரியாதா..?"

"தெரியாதுடா செல்லம்.."

"அப்புறம் எதுக்கு.. அந்த மாமாகூட தினமும் செல்போனில் கொஞ்சிக் கொஞ்சிப் பேசற..?"

ரம்யா சட்டென்று அண்ணன் மகளை இழுத்து மடியில் போட்டு.. அவள் வாயைப் பொத்தினாள்..

"நீ ரொம்பவும் லேட் ரம்யா.. நாங்க சுஜி சொன்னதைக் கேட்டுட்டோம்.." கௌதமி.. குக்கரை இறக்கியபடி

சொன்னாள்..

"சுஜி சொல்லாட்டியும்.. எங்களுக்குத் தெரியாமலா போயிரும்...?" காய்களை வாணலியில் போட்டு வதக்கியபடி ரஞ்சனா கேட்டாள்..

"தினமும் பாட்டுக் கச்சேரி தூள் பரக்குதாமே..?" கௌதமி விசாரித்தாள்..

"யார் சொன்னது அண்ணி..?"

"வேற யாரு சொல்லுவா..? எல்லாம்.. நம்ம வயல் வரப்பில பட்டப் பகலில்.. உச்சி மதியத்தில.. படுத்துத் தூங்கின பாட்டி சொன்னதுதான்.."

"உச்சி வெயிலில் படுத்துச்சா..?"

"ஆமாம்.."

"வயல் வரப்பிலயா..?"

"ஆமாம்மா.. ஆமாம்.."

"அடக்கடவுளே.."

"கடவுளை எதுக்கு கூப்பிடறே.. நீதான் விடிய.. விடிய.. பாட்டியைத் தூங்க விடாம.. பாட்டுப் பாடிக்கிட்டு இருந்தயாமே.."

"அது கதை விடுது அண்ணி.."

"பாட்டியா கதை விடுது..? நீதான் கதைவிடறே.. நேத்து ராத்திரி.. உன் ரூமு பக்கம்.. நானும் ரஞ்சனாவும் வந்தோம்.."

"எதுக்கு வந்தீங்க..?"

"வேற எதுக்கு..? எல்லாம்.. உன் இசையென்னும் இன்ப வெள்ளத்தில் மூழ்கி நீச்சலடிக்கத்தான்.."

கௌதமி கண்சிமிட்டிச் சிரிக்க.. ரஞ்சனாவும் கூட்டுச் சேர்ந்து கொண்டாள்.. ரம்யாவுக்கு வெட்கம் வந்துவிட்டது..

"போங்கண்ணி.."

"எங்கே போகச் சொல்கிற..? என் பிறந்த வீட்டுக்கா..?"

"அடடா.. நான் அப்படிச் சொல்வேனா..?"

"நீ சொன்னாலும் சொல்லுவ.. நேத்து ராத்திரி என்ன பாட்டுப் பாடின.. உனக்கு நினைவிருக்கா ரஞ்சனா..?"

"ஏன் நினைவில்லாம.. அது என்ன பாட்டு ரம்யா..?"

"எனக்குத் தெரியாது.."

"எனக்குத் தெரியுமே.."

"அண்ணி வேண்டாம்.."

"பூ முடிப்பதும்..

பொட்டு வைப்பதும்..

யாருக்காக..?"

ரஞ்சனா பாடிக்காட்ட.. கௌதமி பொங்கிச் சிரித்தாள்.. "இதைப் பாருடா..? இவ இத்தனை நாள் இதப் பத்தி சொல்லவே இல்லையே.. இப்பச் சொல்லு ரம்யா.. இதெல்லாம் யாருக்காக..?"

"சும்மாயிருங்க அண்ணி.."

"என்ன நீ.. என் அண்ணன்கிட்ட சொல்ல வேண்டியதையெல்லாம் என்கிட்டச் சொல்ற.."

இப்போது.. ரம்யாவின் முகம்.. குங்குமமாகவே மாறிவிட்டது.. அதைக் கண்டு.. அவளுடைய அண்ணிமார்கள் கேலியை அதிகப்படுத்தினர்..

"இதுமட்டுமா அக்கா.. இன்னொரு பாட்டையும் பாடினாளே.. ஆஹா.. ஆஹா.. எனக்கு இந்த ஐடியாவெல்லாம் தோணாமல் போச்சே.."

"தோணியிருந்தா என்ன செய்திருப்ப..?"

"அந்தப் பாட்டை பாடியே.. உன் கொழுந்தனைக் கவிழ்த்திருக்க மாட்டேனா..?"

"அப்படி என்ன பாட்டு அது ரஞ்சனா..?"

"ஒரு நாள்..

உன்னோடு.. ஒருநாள்..

உறவினில் ஆட..

புதுமைகள் பாட..

காண்போமே..

எந்நாளும்.. திருநாள்.."

"எப்படி ரஞ்சனா.. இப்படியொரு இசைஞானியா இவ ஆனா..?"

"ம்ம்.. இத்தனை நாளா இவகூட சேர்ந்திருக்கோம்.. இவளோட இசை ஞானத்தைக் காட்ட எங்கேயிருந்தோ பாரெஸ்ட் ஆபிசர்.. வந்து சேர வேண்டியிருக்கு.. பார்த்தியா.."

அதுவரை வெட்கத்துடன் தலை குனிந்து கட்டை விரலால் தரையில் கோலம் போட்டுக் கொண்டிருந்த ரம்யா.. தன் செவியில் விழுந்த செய்தியைக் கேட்டுத் திகைத்து நிமிர்ந்தாள்..

"என்ன சொன்னீங்கண்ணி..?"

"ம்ம்.. பாரெஸ்ட் ஆபிசர் வந்து உன் இசை ஞானத்தை வெளியே கொண்டு வந்தார்ன்னு சொன்னேன்.."

"பாரெஸ்ட் ஆபிசரா..?"

"ஆமாம்.."

"யாரைச் சொல்றீங்க.."

இப்படிக் கேட்டவளை கௌதமியும் ரஞ்சனாவும் விசித்திரமாகப் பார்த்தனர்..

"என்ன ரஞ்சனி.. இவ இப்படிப் பேசுறா..?"

"அதானே.. உன்னைக் கட்டிக்கப் போகிறவர் என்ன வேலை பார்க்கிறாருன்னு கூட உனக்குத் தெரியாதா..?"

"அவர் ஐ எப் எஸ் படிச்சவர் ரம்யா.."

"பாரெஸ்ட் ஆபிசரா வேலை பார்க்கிறார்.."

ரம்யாவின் கண்முன்னால்.. உலகம் இருட்டியது.. என்றோ ஒரு நாள்.. அவள் கானகத்தில் தொலைந்து நின்றது நினைவுக்கு வந்து பயமுறுத்தியது..

## அத்தியாயம்- 21

'அருள் ஜோதியே.. வழிகாட்டிடு..

என்ன.. அழைத்துமே..

ஐயா.. சென்றிடு..

இருள் சூழுதே..

அப்பா.. எங்கு நான் செல்வேன்..?

இல்லம்.. தூரத்தில் ஆச்சுதே..'

பள்ளிப்பருவத்தில் இந்தப் பாடலைப் பிரார்த்தனை வகுப்பில் பாடச் சொல்வார்கள்.. அப்போதெல்லாம் அதைப்பாடும் ரம்யாவின் மனதில்.. அவள் கானகத்தில் தொலைந்து நின்ற அந்தக் கொடிய நாள் தான் நினைவுக்கு வரும்..

இருள்.. எங்கும் இருள்.. பாதைகளின்றி புதர்கள் அடர்ந்த காடு.. ஓங்கி உயர்ந்த மரங்களின் கிளைகள்.. பேய்களின் கைகளாக விரிந்து நின்று பயமுறுத்திய கோலம்..

ரம்யாவின் கண்களில் கண்ணீர் வழியும்.. அந்தப் பாடலைப் பாடும் போதெல்லாம் அவள் கேவி அழுதிருக்கிறாள்..

அப்படி ஒரு காட்டில் வேலை செய்பவனா அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறான்..?

"இதை ஏன் என்கிட்ட யாருமே சொல்லலை..?"

ரம்யாவின் கேள்வியில் இருந்த கோபத்தின் கனலை உணர்ந்த கௌதமியும்.. ரஞ்சனாவும்.. திகைத்துப் போனார்கள்..

அவர்களுக்கு.. ரம்யாவின் காடுபற்றிய பயத்தைப் பற்றி எதுவும் தெரியாது..

"என்ன ரம்யா.. இப்படி கேட்கிற..? மாப்பிள்ளை என்ன வேலை பார்க்கிறாருன்னு கூடவா உனக்குத் தெரியாது.." கௌதமி ஆச்சரியத்துடன் வினவினாள்..

"நிஜமாகவே எனக்குத் தெரியாது அண்ணி.. பீ ஈ முடித்துவிட்டு சர்வீஸ் கமிஷன் பரிட்சை எழுதி பாஸ் பண்ணியிருக்கிறார்.. பெரிய வேலையில் இருக்கிறார்ன்னு மட்டும் தெரியும்.."

"சரிதானே.. சர்வீஸ் கமிஷனில் பரீட்சை எழுதியதில் ஐ.எப்.எஸ் கிடைச்சிருக்கு.. டிரெயினிங்ஸ் முடித்து விட்டு.. பாரெஸ்ட் ஆபிசரா இருக்கிறார்.. இது பெரிய வேலைதானே.."

கௌதமி புரியாதவளாக வினவினாள்.. ரம்யாவின் காடு பற்றிய பயத்தை அறியாதவள் அவள்..

"உங்களுக்குச் சொன்னால் புரியாது அண்ணி.."

"உனக்குத்தான் புரியலை.. பெரிய கவர்மென்ட் ஆபிசர்.. அழகான காடு.. பங்களாவைப் போல குவார்ட்டர்ஸ்.. ஆரம்பத்திலேயே தனிக்குடித்தனம்.. நீ கொடுத்து வைத்தவள் ரம்யா.."

வீட்டில் பெரியர்கள் இல்லாத தைரியத்தில்.. தன்மனதில் இருந்த ஆதங்கத்தைச் சொல்லி விட்ட கௌதமி.. நாத்தனார் தன் பேச்சைக் கவனித்து விட்டாளோ என்ற பயத்தில் நாக்கைக் கடித்துக் கொண்டாள்..

ஆனால்.. ரம்யா அவளது பேச்சைக் கவனிக்கும் நிலையில் இல்லை.. அவள் திகிலடைந்து போயிருந்தாள்.

காட்டுக்குள் போய் அவள் குடித்தனம் செய்ய வேண்டுமா..? கடவுளே இது எப்படி அவளால் முடியும்..?

வாசலில் கார்சத்தம் கேட்டதும்.. கௌதமி வாயை மூடிக்கொண்டு.. சமையல் வேலையில் கவனமானாள்..

"என்ன மாமா.. வேற யாருக்கும் பத்திரிக்கை வைத்தீங்களா..?"

தாய்மாமன் என்ற உரிமையில்.. ரஞ்சனா புண்ணிய கோடியைப் பார்த்துக் கேட்டாள்..

மாமனார்களின் முன்னால் வாயைத் திறந்து சகஜமாக பேச முடியாத கௌதமி.. எப்போதும் அவள்மனதில் எழும் பொறாமை உணர்வைப் போல.. இப்போதும் எழ.. ரஞ்சனாவை முறைத்துப் பார்த்தபடி மனதிற்குள் பொறுமிக் கொண்டாள்..

'மகராசி.. என்னமாய் செல்லம் கொஞ்சுறா.. மருமக இப்படி இருக்கணும்.. அப்படி இருக்கனுமுன்னு டியூசன் எடுக்கிற இந்த வீட்டு ஆளுக.. இவ கொஞ்சுற.. கொஞ்சலைக் கொஞ்சமாவது கண்டுக்கிறாங்களா..?'

ம்ஹூம்..

"கவலையே படாதே.. உன் அம்மாவுக்கு பத்திரிக்கை வைக்காம.. வேற யாருக்கும் பத்திரிக்கை வைக்க மாட்டேன் போதுமா..?" புண்ணிய கோடி சிரித்தார்..

'எப்படி வைப்பீங்க.. அங்க உங்க பொண்ணு வாழப் போயிருக்காளே..' கௌதமி நினைத்துக் கொண்டாள்..

"இந்தத் தடவை பத்திரிக்கை வைக்கப் போகும் போது உன் அம்மா 'வா'ன்னு கூப்பிட்டுத்தான் ஆகனும்.." பொன்னம்பலம் திருமண அழைப்பிதழ்களின் கட்டை.. மேஜைமேல் வைத்தார்..

'அதையே.. எத்தனை தரம்தான் சொல்லிக் காண்பிப்பீங்க..' ரஞ்சனா மனதிற்குள் எரிச்சல் பட்டாள்..

"என்னம்மா சமைச்சிருக்க..?" மரகதம் கௌதமியிடம் வினவியபடி.. சமையலறைக்குள் சென்றாள்..

"நீயேண்டி இப்படி உட்கார்ந்திருக்கிற..?" ராஜம் கவலையுடன் மகளின் நெற்றியில் வைத்துப் பார்த்தாள்..

"அதெல்லாம் உன் மகளுக்கு ஒரு நோயும் வராது.. நீ போயி சமையல் கட்டுல.. என்ன ஆக்கி வச்சிருக்குன்னு கவனி.." கோசலை.. மருமகளை அதட்டினாள்..

"சொன்னபடி செஞ்சிருக்கியா..?" ராஜம்.. தன் மருமகளை அதட்டினாள்..

அதட்டுவதற்கு மருமகள் இல்லாத ரஞ்சனா.. தான் சமைத்து வைத்திருப்பதைச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"ஏன் பொன்னு..?"

"என்னங்கண்ணே.."

"பொண்ணழைக்க கார் வரும்.. நம்ம சொந்த பந்தம் ஏறிப்போக.. ஐஞ்சாறு காருக்கு சொல்லி வைக்கலாமா..?"

"பத்துமாண்ணே.."

"பத்தாதுதான்.. பஸ்சைப் பேசிரு.."

"சரிங்கண்ணே.."

"ரவியும்.. யுகேயும்.. நம்ம சுத்துப்பட்டி ஊருக்கு பத்திரிக்கை வைக்க ஆரம்பிக்கட்டும்.."

"ஆகட்டும்ண்ணே.."

"நாம சாப்பிட்டுட்டு.. காரை எடுத்துட்டு.. அம்பாசமுத்திரம் போயி.. அக்காவுக்கு பத்திரிக்கை வச்சுட்டு வந்திரலாம்."

"அதுக்கென்னண்னே.. அப்படியே செய்துட்டாப் போச்சு.." அவர்கள் பேசியபடியே உள்ளே சென்றுவிட.. கோசலை பேத்தியை ஒருமார்க்கமாக பார்த்தாள்..

"ஏங்கண்ணு இப்படி யோசனையாய் உட்கார்ந்திருக்கிற.. இன்னைக்கு ராத்திரிக்கு என்ன பாட்டைப்பாடி.. இந்தக்

கிழவியோட ராத்தூக்கத்துக்கு வேட்டு வைக்கலாமுன்னு யோசிக்கிறயா.."

"பேசாம போயிரு பாட்டி.. நானே நொந்து போய் கிடக்கிறேன்.. நீ வேற வெறுப்பேத்தாதே.."

"நொந்துபோய் கிடக்கிறயா.. எதுக்கு..?"

"உங்களையெல்லாம் யாரு எனக்குக் கல்யாணம் பண்ணி வைக்க.. இந்த மாப்பிள்ளையைப் பார்க்கச் சொன்னது..?"

போன் மணியடித்ததால்.. அங்கே வந்த புண்ணியகோடியின் காதில் இந்தக் கேள்வி விழுந்து வைக்க அவர் நெற்றிக் கண்ணைத்திறந்து தம்பி மகளைப் பார்த்தார்..

## அத்தியாயம்- 22

"என்ன பேச்சு இது ரம்யா..?"

எப்போதுமே தம்பி மகளிடம் கனிவுடன் பேசும் புண்ணியகோடியின் குரலில் அன்று காரம் ஒலித்தது..

"வாயை வச்சுக்கிட்டு சும்மா இருக்கியா..? இப்பப் பாரு.. நீ விவரம் கெட்டத்தனமா உளறியது உன் பெரியப்பன் காதில்விழுந்து வச்சிருச்சு.." கோசலை பேத்தியை கடிந்து கொண்டாள்..

"நானொன்னும்.. விவரம் கெட்டத்தனமா உளறல.. இவர் காட்டுக்குள்ள வேலை பார்க்கிறார்ன்னு ஏன் என்கிட்டச் சொல்லலை..?" ரம்யாவின் விழிகளில் நீர் கோர்த்திருந்தது..

"உன்கிட்ட எல்லாத்தையும் சொல்லி அனுமதி வாங்கிட்டுத்தான் நாங்க உனக்கு கல்யாணம் பேசியிருக்கணுமா..? உன் அண்ணன்களுக்கே நான் அவனுகளை கேட்டுக் கல்யாணம் பேசலை.. உனக்கு நான் கேட்டிருக்கணுமா..?"

புண்ணியகோடி போட்ட சத்தத்தில் அப்போதுதான் மதிய உணவுக்காக வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்த ரவிந்திரனும்.. யுகேந்திரனும் கலவரமடைந்து ஒருவர் முகத்தை.. ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்..

பூஜையறையில் அழைப்பிதழ்களை வைத்து எடுத்த பொன்னம்பலம் பதறிப்போய் ஹாலுக்கு வந்தார்..

சமையலறையில் மதிய உணவை பாத்திரங்களில் நிரப்பி டைனிங் ஹாலில் வைக்கும் பணியிலிருந்த பெண்கள் நால்வரும் கைவேலையை அப்படியே நிறுத்திவிட்டு அவசரமாக ஹாலுக்கு வந்தார்கள்..

"இந்த தோட்டக்காரப்பயலை ரெண்டில் ஒன்னு பார்க்கனும்.. ஆனா இந்த பெரியவன் அதுக்கு விட்டாத்தானே.." புலம்பியபடி படியேறி வந்த வெள்ளைச்சாமி.. பெரிய மகனின் அதட்டல் சத்தத்தைக் கேட்டுத் திரும்பவும் வயலுக்கே ஓடிவிடலாமா என்று யோசித்தார்..

ஆனால்.. பேத்தியின் வாழ்க்கைப் பிரச்சனை என்பதால் தன் பிரச்சனையை ஒதுக்கித் தள்ளிவிட்டு.. தைரியத்தை வரவழைத்துக் கொண்டவராய் வீட்டுக்குள் சென்றார்..

"அப்பா சாக்லெட்.." என்றபடி வந்த சுஜிதா கூட.. நிலவரத்தை உணர்ந்தவளாய்.. கலவரத்துடன் வாயில் கட்டைவிரலை வைத்து சுவைத்தபடி ஓரம் கட்டினாள்..

வீடே.. ஹாலில் வந்து நிற்க.. அவர்களுக்கு மத்தியில்.. குற்றவாளியாய் கையைப்பிசைந்து கொண்டு நின்றாள் ரம்யா..

"இது என்ன புதுப்பழக்கம்ன்னு கேட்கிறேன்.. உனக்கு முன்னால்.. இந்த வீட்டில் மூணு கல்யாணம் நடந்திருக்கு.. யாரும் இப்படியொரு கேள்வியை என்னைப் பார்த்து கேட்டதில்லை.. பொட்டப்புள்ள நீ என்னைப் பார்த்து.. இந்த கேள்விய கேட்கிற.."

அதுவரை.. பொறுமையாக பெரியப்பாவிடம் விளக்கம் சொல்லி நியாயம் கேட்கத் தயாராக இருந்த ரம்யாவின்

தன்மானம் சிலிர்த்து எழுந்தது..

'பொட்டப்புள்ளயா..? பெரியப்பா எப்படி.. இப்படியொரு வார்த்தயக் கேட்கலாம்.. ஆம்பளைப் பசங்களுக்குத்தான் கல்யாண விசயத்தில் அபிப்ராயம் சொல்ல உரிமையிருக்கா.. பொம்பளப் புள்ளைகளுக்கு அது இல்லையா..?'

"எல்லாருக்கும் ரெண்டு கை.. ரெண்டு காலுன்னு இருக்கு பெரியப்பா.. அதென்ன அண்ணன்கள் மட்டும் உங்களுக்கு உயர்த்தி..? நான் எதனால் தாழ்ந்து போனேன்..?" என்று கேட்டு விட்டாள்..

அவ்வளவுதான்.. "அண்ணனையா எதிர்த்துப் பேசுற..?" என்றபடி பொன்னம்பலம் கையை ஓங்கிக் கொண்டு பாய்ந்துவிட்டார்..

"ஆத்தி.. என் பேத்திய இவனுக அடிச்சுக் கொல்லப் பார்க்கிறானுகளே.." என்றபடி கோசலை பேத்தியை மறைத்துநின்று கொண்டாள்..

"விலகும்மா.. நீ விலகுன்னு சொல்கிறேனில்ல.." ருத்ர அவதாரத்துடன் பொன்னம்பலம் வழக்கடித்துக் கொண்டிருக்க..

"பொண்ணு.. நீ கொஞ்சம் பேசாம இருக்கியா.." என்று தம்பியை அடக்கினார் புண்ணியகோடி..

"அதில்லண்ணே.. இவளுக்கு எம்புட்டுத் தைரியம் இருந்தா இந்தப் பேச்சு பேசுவா.." பொன்னம்பலம் பொறுமினார்..

"என்னன்னுதான் கேட்போமே.. நேத்து வரைக்கும் நம்ம முன்னால வாயைத்திறந்து பேசாத புள்ள.. இன்னைக்கு இம்புட்டுப் பேச்சுப் பேசுதுன்னா.. அது மனசுக்குள்ள இவ்வளவு எண்ணம் புதைஞ்சு கிடக்குதுன்னு அர்த்தம்டா தம்பி.."

"அண்ணா.."

"சின்னப்புள்ள சின்னப்புள்ளன்னு நினைச்சோம்.. அது பெரிய.. பெரிய பேச்சாப்பேசுது.. பேசட்டும்விடு.. அது

மனசிலயும் என்ன இருக்குதுன்னு தெரிஞ்சுக்கலாமே.."

"இனிமே தெரிஞ்சு என்ன செய்யமுடியும் அண்ணா..? குலதெய்வம் கோவிலில.. பத்திரிக்கை வைச்சாச்சு.."

புண்ணியகோடி தம்பியை அடக்கிக் கொண்டிருந்த அந்த வேளையில் ரம்யா வாயை வைத்துக்கொண்டு சும்மா இருந்திருக்கலாம்.. அதைவிட்டு விட்டு..

"இன்னும் ஆளுகளுக்கு பத்திரிக்கை வைக்கலையே.." என்று சொல்லிவிட்டாள்..

அடுத்தநொடியில் பொன்னம்பலத்தின் கை.. வேகமாக அவளது கன்னத்தில் பதிய.. அவள் சுருண்டு விழுந்தாள்..

பெரிய மகன் தடுத்துக் கொண்டிருக்கும் போது.. சின்ன மகன் எதுவும் செய்துவிடமாட்டான்.. என்ற தைரியத்துடன் விலகிநின்ற கோசலை..

"அடப்பாவி மக்கா.. என் பேத்தியை மாட்டை அடிக்கிறதைப்போல அடிக்கிறேங்களேடா.." என்று கூப்பாடு போட ஆரம்பித்து விட்டாள்..

"வாயை மூடும்மா.. அப்புறம்.. அம்மான்னு கூடப் பார்க்கமாட்டேன்.."

"பெத்த மகளையே.. மகள்ன்னு பார்க்கதாவன்.. அம்மான்னு எப்படிப்பார்ப்ப..? அடப்போடா.."

கோசலை ரம்யாவின் அருகே போய் பேத்தியைத் தூக்கி அமர்த்த கௌதமியும்.. ரஞ்சனாவும்.. அருகில் ஓடிவந்தார்கள்..

"சித்தப்பா என்னதான் இருந்தாலும் நீங்க இப்படி அடித்திருக்கக் கூடாது.. அவ பாவம்.. குழந்தை.." ரவிந்திரனுக்கு மனம் தாங்கவில்லை..

"என்னடா பேசற..? மனுசருக்கு பத்திரிக்கை வைச்சாக்கூட மாத்திரலாம்.. ஆனா.. குலதெய்வத்திற்க்கு பத்திரிக்கை வைச்சுட்டு மாத்த முடியுமா..? அது மாறாத ஒன்னுடா.."

"சரிப்பா.. அதை எடுத்துச் சொன்னா.. கேட்டுக்கப் போறா அதுக்காக கை நீட்டனுமா..?"

"நாளைக்கே நம்ம வீட்டைவிட்டு.. இன்னொரு வீட்டுக்குப்போய் வாழப்போகிற பொண்ணு.. இத்தனை நாள் பொத்திப் பொத்தி வளர்த்துட்டு.. இப்பப்போய் கை நீட்டினா.. அவ மனசில இதுதானே நிலைச்சு நிற்கும்..?" யுகேந்திரன் கேட்டான்..

"அவ மனசில எது நிலைச்சு நின்னா எனக்கென்னடா. இத்தனை நாளாகக் கட்டிக் காத்து வந்த கட்டுப்பாட்டை ஒரு நொடிக்குள்ள உடைச்சுப் போட்டுட்டா.. குலதெய்வம் கோவிலில பத்திரிக்கை வச்ச பின்னாலும் எதுத்துக் கேள்வி கேட்கிறா.. இவளை சும்மா விடச் சொல்றியா.."

"இப்போதைக்கு எதுவும் பேச வேணாம்.. சாயங்காலமாய் அவளை கேட்கலாம்.. இப்பப விசயத்தை விடுங்க.."

அதுவரை.. மூத்த அண்ணன் தம்பிகளின் முடிவுக்கு கட்டுப்பட்ட அவர்களின் பிள்ளைகள்.. தங்கையென்று வந்தபோது.. ஒரு முடிவுக்கு வந்து பேசிவிட்டார்கள்..

இளையவர்களின் பேச்சுக்கு கட்டுப்பட்டு மூத்தவர்கள் மௌனமாகி விட்டார்கள்..

அன்றைய மதிய உணவை யாருமே சரியாகச் சாப்பிடவில்லை.. சுஜி கூட சாக்லெட்டை மறந்து விட்டாள்..

## அத்தியாயம்- 23

ரம்யா மதிய உணவை மறுத்து விட்டாள்.. அழுது அழுது கண்கள் வீங்கியிருக்க.. மாடியறையில் முடங்கி விட்டாள்..

அன்று மாலையே வீடு திரும்பி விட்ட ரவிந்திரன்..

"ரம்யா எங்கேடி..?" என்று கௌதமியிடம் விசாரித்தான்..

"மாடியில்.." அவள் ஒற்றை வரியில் பதிலளித்தாள்..

"சாப்பிட்டாளா..?"

"இல்லை.. அழுது.. அழுது முகம் வீங்கினதுதான் மிச்சம்.."

"எதுக்கு இப்படிப் பண்றா..?"

"எனக்கும் அதுதான் புரிய மாட்டேங்குது.. மாப்பிள்ளையை இவளுக்குப் பிடிச்சுப் போச்சுன்னுதானே நினைச்சுக்கிட்டிருந்தேன்.."

ரவிந்திரன் மாடிப்படியேறினான்.. ரம்யாவின் அறைக் கதவைத் திறந்தான்.. கட்டிலில் அமராமல்.. தரையில் குத்துக்காலிட்டு அமர்ந்திருந்த ரம்யாவைப் பார்த்தான்..

"ஆசையிருக்காம் தாசில் பண்ண.. ஆனால்.. அதிர்ஷ்டம் இருக்காம் கழுதை மேய்க்க.."

ரம்யாவின் அருகில் அமர்ந்திருந்த கோசலை பேரனைக் கண்டதும்.. நீட்டி முழக்கினாள்..

"சும்மாயிரு பாட்டி.. நேரங்கெட்ட நேரத்திலே உன் பழமொழியை அவிழ்த்து விடாதே.." கண்டித்தான் ரவிந்திரன்..

"வேற என்னத்தடா செய்யச் சொல்ற..? ஆனானப்பட்ட ஆபிசர் மாப்பிள்ளை வந்து சம்பந்தம் பேசியிருக்கான்.. இவ என்னடான்னா.. காட்டுக்குள்ள சிங்கம் புலியிருக்கும்.. இந்த மாப்பிள்ளை எனக்கு வேண்டாம்கிறா.. இதை வேற எப்படிச் சொல்லச் சொல்ற.."

"நீ கொஞ்சம் கீழேபோ.."

"ஏன் உன்தங்கச்சிகிட்ட நீ பேசறப்போ.. நான்கூட இருந்தா உனக்கு பேச்சு வராதா..?"

"இருக்கிற பிடுங்கல் பத்தாதுன்னு நீயும் சேர்ந்து பிடுங்காதே பாட்டி.. கீழ போயி கௌதமி காபி போட்டுட்டாளான்னு பாரு.."

"ம்ஹும்.. இந்த வீடு.. ஏழுரான் நாட்டாண்மை பண்ற வீடாய் போயிருச்சு.. உங்கப்பனும்.. சித்தப்பனும் என்னை விரடுகிற விரட்டல் பத்தாதுன்னு நீயும் கூட்டுச்சேர்ந்துட்ட

போல.. இன்னும் உன் தம்பிகாரன் வந்து என்ன ஆடப்போறானோ தெரியல.."

"உனக்கு உன்பிரச்சனை.."

"ஏன்.. உன் தங்கச்சி பிரச்சனை மட்டும்தான் உனக்குப் பெரிசாப்போச்சா..? என் பிரச்சனையைக் கேட்டாக் குறைஞ்சு போயிருவியா..?"

"இதைத்தான் கிடக்கிறதை விட்டுட்டு கிழவியைத் தூக்கி மனையில் வைய்யின்னு சொன்னாங்க போல.."

"டேய்.. டேய்.. எங்கிட்டயே பழமொழியை சொல்றியா..?"

"பின்னே என்ன பாட்டி.. மனையில உட்கார வேண்டியவ கல்யாணமே வேணாம்ன்னு அழுதுக்கிட்டு உட்கார்ந்துக்கிட்டு இருக்கா.. நீ உன் பகுமானத்தை பேசிக்கிட்டு வர்ற.. இதை என்னன்னு சொல்லச்சொல்ற..?"

கோசலை வாய்க்குள் முணுமுணுத்தப்படி அறையை விட்டு வெளியேறினாள்.. ரவிந்திரன் தங்கையின் அருகே அமர்ந்தான்..

"சொல்லும்மா.. எதுக்கு இப்படியெல்லாம் பேசற..? நீ இப்படியெல்லாம் பேசமாட்டியே.."

"எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம்ண்ணா.."

"இதை அவங்க வீட்டில இருந்து பொண்ணு பார்க்க வந்தப்பவே சொல்லியிருக்கலாமே.. இத்தனைக்கும்.. எங்க மூணு பேருக்கும் கிடைக்காத சுதந்திரம் உனக்குக் கிடைச்சிருந்தது.. மாப்பிள்ளை உன்னோடு தனியா பேசினார்.. அப்பவே அவர்கிட்ட உங்களைப் பிடிக்கலைன்னு சொல்ல வேண்டியதுதானே.."

அவனைப் பிடிக்கவில்லையா..? அவள் மனம் அசைந்தது.. விவேக்கின் கம்பீரமான முகம் அவள் கண்களில் வந்தது..

'ஏன்.. என்னைப் பார்த்தாய்..?'

'பிடித்திருந்தது.. பார்த்தேன்..'

அந்தப் பதிலை அவள் வாயிலிருந்து கேட்ட பின்புதானே அவன் அந்தத் திருமணத்திற்கு சம்மதம் சொன்னான்..

அன்று பிடித்திருந்த அந்த முகம் இன்று பிடிக்காமல் போய்விடுமா..?

ரம்யா மௌனம் சாதித்தாள்.. ரவிந்திரனுக்கு அவள் மனம் புரிந்தது.. அவன் இதமாக எடுத்துச் சொன்னான்..

"உனக்கு அவரைப் பிடித்திருக்குன்னு எங்க எல்லோருக்குமே தெரியும் ரம்யா.. அதனாலதானே இந்தக் கல்யாண வேலையில் இறங்கினோம்..?"

"அவரைப் பற்றி எனக்கு அப்பவே தெரியாமல் போச்சேண்ணா..?"

"இப்ப மட்டும் புதிதாய் என்ன தெரிந்துக்கிட்ட..? அவர் என்ன திருடனா..? கொலைகாரனா..? ஃபிராடா..? பாரெஸ்ட் ஆபிசர்..! இது ஒரு குறையா..?"

அவள் என்னவென்று சொல்வாள்..? காட்டைப் பற்றி அவளுக்கு இருக்கும் பயத்தில்.. தன்னையுமறியாமல்..

"பாரெஸ்ட் ஆபிசரைக் கல்யாணம் பண்ணிக்கிறதை விட.. நீங்க சொன்ன அந்த மூன்று கேட்டகிரியில் ஒன்றைத் தாராளமா கல்யாணம் பண்ணிக்கலாம்.." என்று சொல்லிவிட்டாள்..

ரவிந்திரன் அவளையே இமைக்காமல் பார்த்தான்..

"நம்ம வீட்டில் பிறந்துட்டு.. நீ இப்படிப் பேசலாமா ரம்யா..?"

"எனக்கு காடு வேணாம்ண்ணா.."

"ம்ச்சு.. காட்டையா நீ கல்யாணம் பண்ணிக்கப் போற.."

"இவரைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்வது.. காட்டைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்வது போலத்தான்.."

ரவிந்திரன் எவ்வளவோ பேசிப் பார்த்து விட்டான்.. ரம்யா சொன்னதையே சொல்லும் கிளிப்பிள்ளை போல.. பேசியதையே திருப்பித் திருப்பி ஒப்பித்தாள்..

தலையைப் பிடித்துக் கொண்ட ரவிந்திரனால் ஆனது.. கௌதமி கொண்டு வந்த காபியையும்.. டிபனையும் ரம்யாவை சாப்பிட வைத்தது மாட்டும்தான்..

"என்னங்க சொல்றா..?" கௌதமி ஆவலுடன் கேட்டாள்..

"தலையாலே தண்ணியைக் குடிக்க வைக்கிறாடி.." ரவிந்திரன் விண்.. விண்ணென்று வலித்த தலையைப் பிடித்துக் கொண்டான்..

"பேசாம.. அவ போக்கில் விட்டுவிட வேண்டியது தானே.."

கணவனின் தலைவலியைக் கண்டு.. ஆற்ற மாட்டாமல் சொல்லி விட்ட கௌதமி.. நிமிர்ந்து பார்த்த ரவிந்திரனின் பார்வைக் கூர்மையைக் கண்டு வாயடைத்துப் போய் விட்டாள்..

திருமணமான அத்தனை தினங்களில்.. முதல் முறையாக ரவிந்திரனின் விழிகளில் காதல் தெரியாத பார்வையை அவள் கண்டாள்..

"அவ என் தங்கை.. அவ எப்படியோ போகட்டும்ன்னு அவ போக்கில் விட என்னால் முடியாது.."

"அதுக்கில்லைங்க.."

"த்சு.. நீ எதுக்கு சொல்லியிருந்தாலும் இதை முதலில் நினைவில் வை.. இந்த வீட்டில் நான் மூத்த மகன்.. எனக்கு இரண்டு தங்கைகளும்.. ஒரு தம்பியும் இருக்கிறாங்க.. இவங்க மூணு பேருக்கும் ஏதாவது ஒன்னுன்னா.. அது அவங்களை விட பத்து மடங்கு அதிகமா.. என்னைத்தான் பாதிக்கும்.."

கௌதமி வாயை மூடிக்கொண்டாள்.. ரவிந்திரன் மாடிப்படியில் இறங்கிய போது யுகேந்திரன் எதிரே வந்தான்..

"என்னண்ணா சொல்றா..?"

"பிடிவாதமாய் இருக்கிறா.. நீ பேசிப்பாரு.."

யுகேந்திரன் புருவங்கள் முடிச்சிட.. ரம்யாவின் அறைக்குள் சென்றாள்..

"அண்ணன்காரனே அலறியடிச்சுக்கிட்டு ஓடிட்டான்.. தம்பிகாரன் வந்தா மட்டும் கிழித்து கேப்பையை நட்டுவிடுவானாக்கும்.."

மோவாயை இடித்துக் கொண்ட கோசலையை யுகேந்திரன் பார்த்த அனல் பார்வையில் அவள் அலறியடித்துக் கொண்டு ஓடிவிட்டாள்..

## அத்தியாயம்- 24

"ரம்யா.."

"ம்ம்ம்.."

"அண்ணன் உன் நல்லதுக்குத்தான் சொல்வேன்.."

"நீ கெட்டதுக்கு சொல்கிறாய்ன்னு நான் சொன்னேனா..?"

'பாட்டிக்கேத்த பேத்தி..' பல்லைக் கடித்தான் யுகேந்திரன்..

"பகடி பேச இது நேரமில்லை ரம்யா.."

"எனக்கும் அது தெரியும்.."

"ஊருக்கே தெரிய உன்னை நிச்சயம் பண்ணிட்டுப் போயிட்டாங்க.. கல்யாணப் பத்திரிக்கை அடிச்சு வந்தாகி விட்டது.. குலதெய்வம் கோவிலுக்கும் பத்திரிக்கை வைத்தாகி விட்டது.. கல்யாணத்துக்கு இன்னும் பதினைந்து நாள்தான் ஊடே இருக்கு.. இப்பப்போய்.. கல்யாணம் வேணாம்ன்னு சொன்னால் என்ன அர்த்தம் ரம்யா..?"

"எனக்குத் தெரியாதுண்ணா.."

"என்ன தெரியாதுன்னு நான் கேட்கமாட்டேன்.. ஆனானப்பட்ட அண்ணனுக்கே தலைவலியை

வரவைத்துவிட்ட.. உன்னிடம் அந்தக் கேள்வியைக் கேட்டு.. நீயும் கீறல் விழுந்த ரிகார்டைப் போல பதிலை ஒப்பித்து.. நானும் தலையைப் பிடித்துக் கொண்டு வெளியேறனுமா..? அந்தக் கதையே வேணாம்.."

'அதுதானே.. நீ பேசிப் பேசியே எல்லோரையும் மயக்கம் போட வைக்கிற ஆளு.. மத்தவங்க பேசி நீ கேட்பயா..?'

"சின்ன வயசில நாம நிழலைக் கண்டு கூட பயந்திருக்கிறோம்.. அதுக்காக.. நம்ம நிழலை.. நம்மகூட வராதேன்னு நாம சொல்ல முடியுமா..?"

இந்த கேள்விக்கு என்ன பதிலைச் சொல்வது என்று தெரியாமல் திகைத்துப் போய் விட்டாள் ரம்யா..

'எப்படி.. இப்படியெல்லாம் கெட்டிக்காரத்தனமாய் பேசக்கற்றுக்கொண்டான் இவன்..' என்று நினைத்துக் கொண்டாள்..

"இப்பப் புரியுதா ரம்யா..?"

"புரியுதுண்ணா.."

"என்ன புரியுது..?"

"என் பிரண்டு ஒருத்தி உன்மேல் ஆழமான காதலை வைச்சிருக்கிறதாகச் சொன்னா.. ஏண்டி அதை என் அண்ணன் கிட்டச் சொல்லலைன்னு கேட்டேன்.. அவர்கிட்ட என் காதலைச் சொன்னா.. என் காதலே தப்புன்னு பேசி.. என் மனசை மாத்தி அனுப்பி வச்சிருவாரு.. எப்படியும் உன் அண்ணன் எனக்கு கிடைக்கப் போறதில்ல.. என் காதலாவது பிழைத்துக் கிடக்கட்டும்ன்னு பேசாம இருந்திட்டேன்னா.. ஏன் அவ அப்படி அலறினான்னு எனக்கு இப்பப் புரியுது.."

அண்ணனுக்கேற்ற தங்கை என்பதை ரம்யா நிரூபித்தாள்..

"ம்ஹும்.. நீ தேறாத கேஸ் ரம்யா.."

"நீ தேத்த நினைக்க வேண்டாம்.. விட்டுவிடு.."

"எப்படி..? நீ என் தங்கை.."

"அந்தப் பாசம் உன் மனதில் இருந்தால் போய் அப்பாவிடமும் பெரியப்பாவிடமும் சொல்லி.. இந்தக் கல்யாணத்தை நிறுத்து.."

"நானும்.. அண்ணனும் சொன்னதினால்தான்.. உன்தோலை உரிக்காம அப்பா விட்டு வைத்தார்.."

"அது உனக்கு ஒரு குறையாண்ணா..?"

"ரம்யா.."

"போண்ணா.. போய் அவங்ககிட்டச் சொல்லு.. எனக்கு இந்தக் கல்யாணம் வேணாம்ன்னு சொல்லு.."

யுகேந்திரன் உதட்டைக் கடித்துக் கொண்டு தங்கையை யோசனையாகப் பார்த்தான்.. அவனுக்கு அவள் மனம் தெரியும்.. அதனால் நிதானமாக வேறு ஒரு கோணத்தில் விசயத்தை அணுகினான்..

"சரி.. நீ சொன்னதைப் போயிச் செய்கிறேன்.."

"நிஜமாகவா அண்ணா.."

ஆவலுடன் தலை நிமர்ந்த தங்கையைப் பார்த்த படி அடுத்த வெடியை வெடிக்க வைத்தான்..

"ஆனால் பாரு ரம்யா.. உன் கல்யாணம் அதே முகூர்த்தத்தில் நடந்தாகனும் இது குடும்ப கௌரவப் பிரச்சனை.. அதனால் பெரியப்பாவும்.. அப்பாவும் உடனடியா வேற மாப்பிள்ளையைப் பார்த்து.. உனக்கு அதே முகூர்த்தத்தில் தாலிகட்ட வச்சிருவாங்க.."

"என்னது.."

ரம்யா அதிர்ந்து விழிக்க.. அதைக் கவனிக்காதவனைப் போல.. அதற்கடுத்த வெடியைப் பற்றவைத்தான் யுகேந்திரன்..

"நம்மளைப் போலவேதான் அவங்க வீட்டிலயும் நினைப்பாங்க.. உடனடியா விவேக்கிற்கு பொண்ணுப் பார்த்து.. அதே முகூர்த்தத்தில் கல்யாணத்தையும் பண்ணி வச்சுருவாங்க.."

ரம்யாவினால் அதைக் காது கொடுத்து கேட்க முடியவில்லை.. அவளது விவேக்கிற்கு வேறு ஒரு திருமணமா..?

அவளை விட்டு வேறொருபெண்ணை அவன் மணக்க அவனை விட்டு வேறொருவனுக்கு அவள் கழுத்தை நீட்டுவதா..?

"எண்ணண்னா சொல்ற..?"

"இதுதானம்மா நடக்கும்.. கல்யாணம்ன்னா என்ன விளையாட்டுச் சமாச்சாரமா..? இது ஆயிரம் காலத்துப் பயிர்.."

"அண்ணா வேண்டிக் கேட்டுக்கிறேன்.. திரும்பவும் உன் லெக்சரை ஆரம்பிச்சுராதே.."

"எனக்கு மட்டும் உன்கிட்ட லெக்சர் கொடுக்கனும்ன்னு ஆசையா..? வேறு வழியில்லையே ரம்யா.. இன்னாருக்கு இன்னாருன்னு அந்த இறைவன் எழுதி வச்சிருக்கான போல.. அதை மாத்த யாரால் முடியும்..?"

ரவிந்திரன் புத்திசாலி.. யுகேந்திரனோ மகாபுத்திசாலி.. எதைச் சொன்னால்.. எங்கே அடித்தால்.. காரியம் நடக்குமென்ற வித்தை தெரிந்தவன்..

அப்படியில்லாமலா.. கல்லூரியில் அனைத்துப் பெண்களையும் அவனைத்திரும்பிப் பார்க்க வைத்திருப்பான்..?

பற்ற வைத்த வெடி வெடிக்கட்டுமென்று அவன் அறையை விட்டு வெளியேறிவிட்டான்.. தலைவலித் தைலத்தை கையில் வைத்துக் கொண்டிருந்த ரவிந்திரன் அவனைக் கண்டதும்..

"இந்தாடா.." என்று அதை நீட்டினான்..

"கொடு.." என்று வாங்கிய யுகேந்திரன் ரஞ்சனாவிடம் அதைக் கொடுத்தான்..

"போய்.. மாடியிலிருக்கிற ரம்யாகிட்ட கொடு.."

"எப்படிடா..? அவ எனக்கு தலைவலியை வரவச்சவடா.."

"நான் ஊருக்கே தலைவலியை வரவைப்பேன்.. இவள்ளாம் எந்த மூலைக்கு..? நாம தூக்கிவளர்த்த பொண்ணுண்ணே.. நம்மகிட்டயே 'லா' பேசுது.."

"நீ என்ன பண்ணின..?"

"பதிலுக்கு ரெண்டு லா பாயிண்டை அள்ளி விட்டேன்.."

"இதைப்பாருடா.. என்ன சொன்னா..?"

"அந்த மாப்பிள்ளை வேண்டாம்ன்னா சரி.. வேற மாப்பிள்ளை பார்க்கலாம்.. அவங்களும் வேற பொண்ணைப் பார்ப்பாங்க.. குறிச்ச முகூர்த்தத்தில் இரண்டு பேருக்கும் வேற.. வேற ஆளோட கல்யாணம் நடக்கும்.. இது குடும்பத்தின் கௌரவப் பிரச்சனைன்னு சொல்லிட்டு வந்தேன்.."

"அடிரா சக்கை.. இது எனக்குத் தோணாம போச்சே.."

"அவ சொன்னதுக்கு மாட்டேன்னு சொன்னாத்தானே அடம்பிடிப்பா..? சரின்னு சொல்லிட்டு.. வேற வழியை யோசின்னா யோசிப்பாளா..?"

"அதெப்படி.. அவ நம்ம தங்கச்சியாச்சே.."

"ஒன்றை நினைச்சா அதிலேயே நிற்கறவங்க நாம.. அவ மட்டும் விவேக்கை நினைச்சுட்டு வேறொருத்தனைக் கட்டிக்குவாளா..?"

அவர்கள் பேசிக் கொள்வதைக் கேட்டுக் கொண்டிருந்த கௌதமியும்.. ரஞ்சனாவும் பூரித்து விட்டனர்..

## அத்தியாயம்- 25

அன்று இரவு உணவுக்கு தானாகவே வந்து விட்டாள் ரம்யா.. ரவிந்திரனின் விழிகளும் யுகேந்திரனின் விழிகளும் சந்தித்துக் கொண்டன..

"பெரியப்பா.." யுகேந்திரன் ஆரம்பித்தான்..

"சொல்லு.." புண்ணியகோடி அவனைப் பார்த்தார்..

"நம்ம ரம்யா சொல்றதையும் யோசிச்சுப் பார்த்தேன்.."

கடைக்கண்ணால் ரம்யாவின் முகத்தைப் பார்த்தபடி பேசினான் யுகேந்திரன்.. அவள் முகம் வெளிறியது..

"என்னத்தை யோசிச்ச..?" சந்தேகமான குரலில் வினவினார் புண்ணியகோடி..

"அதுவா பெரியப்பா.." என்று மேலும் பேசப் போன யுகேந்திரன் தங்கையின் முகத்தைப் பார்த்ததும் பேச்சை நிறுத்திவிட்டான்..

"என்னடா..?"

"ரம்யா எதையோ சொல்ல நினைக்கிறா போல இருக்கு பெரியப்பா.."

"அவ சொன்னவரைக்கும் போதும்.."

"எதுக்கும் அவபக்கமும் ஏதாவது நியாயம் இருக்கான்னு கேட்டுப் பார்க்கலாமே.."

புண்ணிய கோடி தம்பி மகனை முறைக்க ஆரம்பிக்க.. ரம்யா அவசரமாக வாய் திறந்தாள்..

"நான் தெரியாம பேசிட்டேன் பெரியப்பா.."

வெற்றிக்குறியோடு.. ரவிந்திரனும்.. யுகேந்திரனும் பார்த்துக் கொள்ள.. பெரியவர்களின் முகத்தில் தெளிவு வந்தது..

"என்னம்மா சொல்ற..?"

"எனக்கு காடுன்னா பயம் பெரியப்பா..?"

"அது சின்ன வயசில வந்த தேவையில்லாத பயம் ரம்யா.."

"அதனால.. அவசரப்பட்டுப் பேசிட்டேன் பெரியப்பா.."

"இப்ப பயம் போயிருச்சா..?"

"ம்ம்ம்.."

ரவிந்திரன் யுகேந்திரனைப் பார்த்து கட்டை விரலை உயர்த்த.. அவன் சன்னமாக கண்சிமிட்டினான்..

பொன்னம்பலம் மகளின் கன்னம் தொட்டு கண் கலங்கினார்..

"போடா அவசரக்காரா.. அவசரப்பட்டு கையை நீட்டி விடறது.. அப்புறமாய் பச்சைப் பிள்ளைப் போல அழ வேண்டியது.. உனக்கு இதே பொழப்பாப் போச்சு.." புண்ணிய கோடி தம்பியைக் கடிந்து கொண்டு தன் கண்களைத் துடைத்துக் கொண்டார்..

"சின்னப் பிள்ளண்ணே.. விவரம் கெட்டத்தனமாக பேசிப்புடுச்சு நான் ஒரு கூறு கெட்டவன்.. இதமா எடுத்துச் சொல்லி புரிய வைக்கிறதை விட்டுப்புட்டு கையை நீட்டிட்டேன்.."

பொன்னம்பலம் பேசியதைக் கேட்ட யுகேந்திரன் மெதுவான குரலில் ரவிந்திரனுக்கு மட்டும் கேட்கும்படி முணுமுணுத்தான்..

"நீ பேசி புரிய வைக்கப் பார்த்த கதையைத் தெரியாம அப்பா பேசறாரு.. நல்ல வேளை.. இவரு விவரமாய் பேசி புரிய வைக்கிறேன் பேர்வழின்னு தலைவலியை வாங்கிக்காம தப்பிச்சிட்டாரு.."

"போடா அரட்டை.."

ரவிந்திரனுக்கு சிரிப்பு வந்து விட்டது.. அதை அடக்க முனைந்தவனுக்கு புரையேறி விட்டது..

வீட்டில் கல்யாணக்களை ஆரம்பமாகி விட்டது.. திருமண அழைப்பிதழ்கள் விநியோகம் செய்ய வீட்டிலிருந்தவர்கள் ஜோடி... ஜோடியாக போய் கொண்டிருந்தார்கள்..

கிராமங்களில் பத்திரிக்கை வைக்க கோசலையும் வெள்ளைச்சாமியும் போய் வந்தார்கள்..

உள்ளூரில் பத்திரிக்கை வைக்க பொன்னம்பலமும் ராஜமும் சென்றார்கள்..

முக்கியமான சொந்தங்களுக்கு பத்திரிக்கை வைக்க புண்ணிய கோடியும், மரகதமும் சென்றுவிட திருநெல்வேலிக்கு ரவிந்திரனும் கௌதமியும் சென்று வந்தார்கள்..

நண்பர்களுக்கு பத்திரிக்கை வைக்கும் பொறுப்பை யுகேந்திரன் எடுத்துக் கொள்ள..

"ம்ஹீம்.." என்று நீளமான பெருமூச்சொன்றை விட்டாள் ரஞ்சனா..

"என்னடி.. பெருமூச்செல்லாம் பலமாயிருக்கு.." யுகேந்திரன் சட்டையை மாட்டிக் கொண்டே கேட்டான்.

"இந்த வீட்டிலிருக்கிற கிழடு கட்டைகள் கூட ஜோடியாய் வெளியே போய் வருகிறது.. எனக்குத்தான் அந்தக் கொடுப்பினை இல்லாம போயிருச்சு.."

"புரியலையே.."

"உங்களுக்கா புரியாது..? நீங்க பெரிய கில்லாடியாச்சே.."

"எதைவைச்சு அப்படியொரு முடிவுக்கு வந்த..?"

"உங்க தங்கச்சிக்கு ஒன்னுன்னா.. புத்தி வேலை செய்யும்.. அதுவே நான் சொன்னதை புரிஞ்சுக்கிறதுன்னா மட்டும் புத்தி வேலை செய்யாது.. கெட்டிக்காரரர்தான்.."

"ஊஹீம்..?"

யுகேந்திரன் மனைவியின் பின்னால் வந்து அவள் எதிர்பாராத போது இறுக்கி அணைத்துக் கொண்டான்..

சந்தோச அதிர்ச்சியில் திக்கு முக்காடிப் போனாள் ரஞ்சனா..

"ஏண்டி.. வீட்டில் கல்யாண வயசில் தங்கச்சியை வைத்துக்கிட்டு உன்னைக் கொஞ்சிக் குழாவிக்கிட்டு இருக்க முடியுமா..?"

மனைவியை வாசம் பிடித்துக் கொண்டே அவன் கூற ரஞ்சனா சிணுங்கினாள்..

"ஏன் முடியாதாம்..? உங்க அண்ணனைப் பாருங்க.. சுஜிதா பிறந்து வந்து எவ்வளவு நாளாகுது..? இன்னும் புதுப் பெண்டாட்டியைக் கொஞ்சுகிறதைப் போலத்தான் கொஞ்சிக் கொண்டிருக்கிறார்.."

"அவரைப் போல என்னையும் இருக்கச் சொல்கிறாயா...?"

"ஏன் இருந்தால் என்னவாம்.."

"அடிப்போடி விவரம் கெட்டவளே.. நான் உன் கூட இழைய ஆரம்பிச்சேன்னா நிறுத்தி தொலைக்க மாட்டேன்.. அதுவே அண்ணணா இருந்தா.. எப்படி திரைமறைவில் கொஞ்சுகிறதுன்னு தெரிந்சு வைச்சிருக்கும்.."

"இங்கே தான் மறைவிலேயும் முறைச்சிக்கிட்டு நிற்கிறோமே.."

"அதெல்லாம் நடிப்புடி.. இனிமே பாரேன்.. நீ வேண்டாம்ன்னு ஓடினாலும் உன்னைச் சுற்றிச் சுற்றி வருவேன்.."

"அதையும் பார்க்கலாம்.."

"அதை அப்புறமாய் எதுக்கு பார்க்கிற..?" இப்பவே பார்க்கலாம் கிளம்பு..

"எங்கே.."

"சினிமா தியேட்டருக்குத்தான்.."

"நீங்க பத்திரிக்கை வைக்கக் போகலியா.."

"பத்திரிக்கையும் வைக்கப் போகிறேன்.."

"புரியலை.."

"சினிமா தியேட்டர் ஓனர் என் கூடப் படிச்சவன்.. நம்மளுக்கு நெருங்கிய சொந்தக்காரனுக்கு.. சொந்தக்காரன்.."

"அதனால.."

"அதனால.. அவனுக்கு பத்திரிக்கை வைச்சுட்டு.. அப்படியே நமக்கு இல்லாத அறிவை பார்த்துட்டு வரலாம்."

"திரும்பவும் புரியலைங்க.."

"அதுதாண்டி.. ஏழாம் அறிவு.."

ரஞ்சனா கணவனின் புத்திசாலித்தனத்தில் பூரித்து விட்டாள்.. வெகு நாள்களாக அவள் கண்ட கனவு அன்று நிறேவேறியது.. யுகேந்திரனின் டிவிஎஸ் அப்பாச்சியில் ஏறி.. அவன் பின்னால் அமர்ந்து அவன் தோளைப் பற்றிக் கொண்டபோது.. இந்த உலகமே வண்ணமயமானதாக அவளுக்குத் தோன்றியது..

யாரும் இல்லாத வீட்டில்.. ரம்யா மட்டும் தனித்திருந்த போது விவேக் வந்து நின்றான்..

## அத்தியாயம்- 26

அழைப்பு மணியோசை கேட்டு கதவைத் திறந்த ரம்யா திகைத்து பின் வாங்கினாள்..

"ஹாய்.." என்றபடி சுவாதீனமாக உள்ளே வந்தான் விவேக்..

"வாங்க.." ரம்யா பரபரப்புடன் கையைப் பிசைந்தாள்.

"என்ன.. எங்கப்பாவைச் சொல்லிட்டு நீ நம்பியாரைப் போல கையைப் பிசைகிற..?" அவன் சோபாவில் அமர்ந்து கால்மேல் கால் போட்டுக் கொண்டான்.

"அது.. வந்து.. ஒண்ணுமில்லை.." ரம்யாவின் விழிகள் வாசலை நோக்கிப் பாய்ந்தன..

"வீட்டில் யாருமில்லையா..?"

"இல்லை.. எல்லோருமே பத்திரிக்கை வைக்கப் போயிருக்காங்க.."

"வெரிகுட் அப்போ நீ தனியாக என்னிடம் அகப்பட்டிருக்கிறாய்.. ஆம்.. ஐ.. கரெக்ட்..?"

அவன் எழுந்து அவளருகே வந்தான்.. இதயம் படபடக்க அவள் பின் வாங்கினாள்..

"இது கரெக்டில்லை.."

"எது..?"

"இப்படிக் கிட்டே வருவது.."

"யாரோ ஒரு பெண்ணிடமா கிட்டே போனேன்..? உன்னிடம் தானே கிட்டே வந்தேன்..?"

"நான் மட்டும் பெண்ணில்லையா..?"

"இல்லைன்னு எந்த மடையனாவது சொல்வானா..? நீ அழகான பெண்.. கல்யாணப் பெண்.."

"என் பக்கத்தில் வரலாமா..?"

"உன் பக்கத்தில் தான் வரணும்.."

அவன் ரம்யாவின் கையைப் பிடித்துக் கொண்டான்.. நடுங்கிய அவளது தளிர் விரல்களில் சிறு முத்தத்தைப் பதித்தான்.

அந்தத் தொடுகையைத் தாங்க முடியாமல் அவள் கண்மூடிக் கொண்டாள்..

"தட்டுத் தடுமாறி நெஞ்சம் -கை

தொட்டு விளையாடக் கொஞ்சும்..

சிட்டு மலர்மேனி துள்ளும்.."

ஹாலில் இருந்த டிவியில் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது.. ரம்யாவின் நெஞ்சமும் அந்தப் பாடல் வரிகளைப் போல தட்டுத் தடுமாறிக் கொண்டிருந்தது..

ஆளில்லாத தனிமை அவர்களைச் சூழ்ந்திருந்தது.. இன்னும் ஏழே தினங்களில் மனைவியாகப் போகிறவள் என்ற உரிமையுணர்வு அவனுள் எழுந்தது.. அவனது

விரல்கள் முன்னேறி.. அவள் தோள் தொட்டு வளைத்து அருகில் இழுத்தது.. அவள் பூமாலையாக அவனது நெஞ்சினில் சாய்ந்தாள்..

"நெஞ்சத்திலே.. நீ நேற்று வந்தாய்..

நேற்று முதல்..

ஓர் நினைவு தந்தாய்..

நினைவு தராமல் நீயிருந்தால்..

கனவுலகில்..

நான்.. வாழ்ந்திருப்பேன்.."

ரம்யா விழி மூடி அவன் நெஞ்சில் முகம் புதைக்க.. பாடல் ஒலித்துக் கொண்டே இருந்தது..

அவன் கரம்.. அவள் தோள் மீது பரவி.. இறங்கி.. முதுகில் படர்ந்து அவளை அவனுடன் இறுக்கிக் கொள்ள.. அவள் கிறங்கி மயங்கிப் போனாள்..

"மாலையில் சந்தித்தேன்..

மையலில் சிந்தித்தேன்..

மங்கை நான் கன்னித்தேன்..

காதலன் தீண்டும் போது..

கைகளை மன்னித்தேன்.."

பாடலின் வரிகள் அவள் மனதைப் போல ஒலிக்க.. அவனது முகம்.. அவளது முகம் தேடிக் குனிந்தது.. அவளது இதழ் மீது இதழ் பதித்தான் விவேக்..

கொட்டும் அருவியில் மூழ்கியதைப் போல் மூச்சுத் திணறிப் போனாள் ரம்யா..

அவனைத்தான் அவள் வேண்டாமென்று சொன்னாள் என்ற விவரம் அவளுக்கு மறந்து விட்டிருந்தது..

ஆண்டாண்டு காலமாய் அவனது இந்த அண்மைக்காக காத்திருந்ததைப் போல்.. அவள் மனம் அமைதி கொண்டது..

"ரம்யா.."

"ம்ம்ம்.."

"என்னைப் பாரேன்.."

"மாட்டேன்.."

"ஏன்..?"

"தெரியலை.."

"என்னைப் பிடிக்கலையா..?"

அவள் நிமிர்ந்து அவனை முறைக்க.. அவன் சரஸமாக நகைத்தான்..

"பார்க்க வச்சிட்டேனில்ல..?"

அவன் சோபாவில் அமர்ந்து அவளை இழுத்துக் கொள்ள அவன் மடியில் விழுந்து.. விலகி அமர்ந்தாள் அவள்..

"ஏன்..?"

"யாராவது வந்திடுவாங்க.."

"வந்தால் என்ன..?"

"என்ன.. இப்படிக் கேட்கறீங்க..?"

"நான் உனக்கு தாலிகட்டப் போகிறவன்.."

"தாலியைக் கட்டின பின்னாலும்.. மத்தவங்க முன்னாலே தள்ளித்தான் நிற்கனும்.."

"இது என்ன கதையாய் இருக்கே.."

"இது கதையில்லை.. எங்க குடும்ப வழக்கம்.."

"என்ன வழக்கமோ.. போ.."

ரம்யா தள்ளி அமர்ந்து கொள்ள.. விவேக் அதற்கு மேல் அவளை வற்புறுத்தவில்லை..

"உனக்கு என்ன கலர் பிடிக்கும்..?"

"ஏன் கேட்கறீங்க..? முகூர்த்த சேலையெல்லாம் எடுத்தாச்சு.."

"இது வேற.. நான் உனக்காக எடுக்கப் போகும் பெர்சனல் சேலை.." அவன் கண்சிமிட்டினான்.

அர்த்தம் புரியாமல் அவள் விழிக்க.. அவள் பக்கமாக சரிந்து அவளது காதோரமாக ரகசியம் சொன்னான்..

"ச்சீய்.." அவள் கன்னம் சிவந்தாள்.

"இதுக்கே ச்சீயா.." அவன் கண்சிமிட்டினான்..

அப்போதுதான் மெதுவாக ரம்யா.. அவனது வேலையைப் பற்றிக் கேட்க ஆரம்பித்தாள்.

"நீங்க பாரெஸ்ட் ஆபிசரா..?"

"ஆமாம்.. உனக்குத் தெரியாதா..?"

"நீங்க சொல்லவே இல்லையே.."

"ஈஸிட்..?"

அவன் அதற்கு மேல் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.. ரம்யா விடவில்லை..

"அந்தக் காட்டுக்குள்ளத்தான் இருப்பீங்களா..?"

"காட்டுக்குள்ளன்னா.. மரத்தில் தொத்திக்கிட்டு இருக்கமாட்டேன்.. அழகான.. பெரிய காட்டுபங்களாவை குவார்ட்டர்ஸ்ன்னு சொல்லிக் கொடுத்திருங்காங்க.. இட்ஸ்.. வெரி நைஸ்.. நீ வந்து பாரேன் உனக்கு ரொம்ப பிடிக்கும்.."

காட்டுக்குள் ஒரு வீடு.. அந்த வீட்டுக்குள் அவள்.. நினைக்கும் போதே.. ரம்யாவின் நெஞ்சம் நடுங்கியது.. காடு என்ற பெயரைக் கேட்டாலே அவள் மயக்கம் போட்டு

விடுவாள்.. இந்த லட்சணத்தில்.. காட்டு பங்களாவில் அவள் குடியிருப்பதா..?

## அத்தியாயம்- 27

ரம்யாவிற்கு விவேக்கை பிடித்திருந்தது.. அவன் இல்லாத வாழ்க்கையை அவள் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை.. ஆனால் அவனுடன் காட்டுக்குள் வாழப்போகும் வாழ்க்கையை நினைத்துத்தான் அவள் பயந்தாள்..

"காடுன்னா எப்படியிருக்கும்..?"

"காடுன்னா காட்டைப் போல இருக்கும்.."

அவன் வரிசைப் பற்கள் தெரிய சிரித்தான்.. என்றும் அவளை மயக்கி ஈர்க்கும் அந்தச் சிரிப்பு அன்று அவளை இழுக்கவில்லை..

"அந்தக் காட்டுக்கு பெயரிருக்கா..?"

"பின்னே இருக்காதா..?"

"என்ன பெயர்..?"

"நெல்லைக்கோட்டா தெப்பங்காடு.."

"அப்படியொரு இடமா..?"

"நீ கேள்விப்பட்டதே இல்லையா..?"

"ஊஹூம்.."

"முதுமலைக்காடு பற்றித் தெரியுமா..?"

"தெரியாது.."

"மக்கு அது விலங்குகளின் சரணாலயம்.."

விவேக் இயல்பாக கூற.. ரம்யாவின் கண்களில் பயம் வந்தது..

"விலங்குகளா..? அப்படீன்னா..?"

"சிங்கம்.. புலி.. கரடி.. எக்ஸெக்ட்ராதான்.."

என்னவோ.. வீட்டில் வளர்க்கும் செல்லப் பிராணிகளைப் பற்றிக் கூறுவதைப் போல.. அவன் கூற அவள் நடுங்கிப் போனாள்..

"அதுக்கும்.. நீங்க வேலை பார்க்கும் காட்டுக்கும் எவ்வளவு தூரம் இருக்கும்.."

"இரண்டும் பக்கம்.. பக்கம் தான்.. ஏன்.. ஒரே காடுன்னு கூடச் சொல்லலாம்.."

'ஏன் தான் இவனைச் சந்தித்து தொலைத்தோமோ..' என்று மனதிற்குள் புலம்பினாள் ரம்யா..

சற்று முன்.. அவன் கைகளில் அவள் பாகாய் குழைந்தது அவளுக்கு மறந்து விட்டிருந்தது..

இருந்திருந்து.. ஒரு காட்டிலாகா அதிகாரி தான் காடு என்றாலே பயப்படுகிறவளுக்கு கணவனாக வந்து தொலைக்க வேண்டுமா என்று இருந்தது அவளுக்கு..

அவளது மனப் போராட்டத்தை அறியாதவனாக.. அவன் உற்சாகமாக பேசிக் கொண்டிருந்தான்..

"நான் வேலை பார்க்கும் காடு.. நீலகிரியில் இருக்கு.."

"ஓஹோ.."

"அங்கேயிருந்து ஊட்டி ரொம்ப பக்கம்.."

"அப்படியா.."

"கோத்தகிரி.. குன்னூர்.. எல்லாம் எஸ்டேட்டிற்கு பேமஸ் தெரியுமா..?"

"தெரியாது.."

அவள் பட்டுக் கத்தறித்ததைப் போலப் பதில் சொல்வது அவனது கவனத்திற்கு படவில்லை.. தன் போக்கில் அவன் பேசிக் கொண்டிருக்க வெறுமையாக அவள் ஒற்றைச் சொல்லில் பதிலளித்துக் கொண்டிருந்த போது வாசலில் கார் சத்தம் கேட்டது..

புண்ணிய கோடியும்.. மரகதமும் உள்ளே வந்தனர்..

"அடடே.. எங்க வீட்டு மாப்பிள்ளை வந்திருக்காரு.. வாங்க மாப்பிள்ளை.." புண்ணிய கோடி வரவேற்றார்..

"வணக்கம் மாமா.." விவேக் எழுந்து நின்று கைகூப்பினான்..

'மரியாதை தெரிஞ்ச மாப்பிள்ளை..' புண்ணிய கோடியின் மனம் நிறந்து விட்டது..

"மாப்பிள்ளைக்கு சாப்பிட என்ன கொடுத்தேம்மா.." மரகதம் கேட்க.. ரம்யா திருதிருவென விழித்தாள்..

"ஒன்றுமே கொடுக்கவில்லையா..? நல்ல பொண்ணுதான் போ.." அவசரமாக உள்ளே விரைந்தாள் மரகதம்..

அவசரமாக அவள் பலகாரத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்தபோது பொன்னம்பலமும் ராஜமும் திரும்பி விட்டார்கள்..

வாசலிலேயே விவேக்கின் காரை அடையாளம் கண்டு கொண்ட பொன்னம்பலம் பதட்டத்துடன் வந்தார்..

"மாப்பிள்ளை வந்து ரொம்ப நேரமாச்சா.."

"அதெல்லாமில்லை.. இப்பத்தான் வந்தேன்.."

ராஜம் மருமகனை வரவேற்று விட்டு அடுக்களைக்குள் விரைந்து மரகதத்துடன் இணைந்து கொள்ளும் போது ரவிந்திரனும் கௌதமியும் வந்து விட்டார்கள்..

"ஹை மாமா.." சுஜிதா விவேக்கிடம் தாவியது..

விவேக் தயாராக வைத்திருந்த சாக்லெட்டை அவளிடம் நீட்ட.. குழந்தை குதூகலமாகி விட்டது..

கௌதமியும் சமையலறையில் சங்கமித்துக் கொண்டாள்..

சினிமா தியேட்டர் ஓனருக்கு பத்திரிக்கை வைக்கும் சாக்கில் சினிமாவையும் பார்த்து விட்டுத் திரும்பி வந்த யுகேந்திரன்..

"என்னடி ரம்யாவின் வுட்பி வண்டிபோல இருக்கே.." என்றான்..

"அவருடையது போல இல்லை.. அவருடையது தான்.."

"அப்ப.. அவர் வந்திருக்கிறாரா..?"

"பின்னே கார் தானாகவா ஓடி வந்து நிற்கும்..?"

யுகேந்திரன் மனைவியை தலை முதல் கால் வரை பார்வையிட்டான்.. அவள் புருவம் உயர்த்தி விழிகளால் வினவ..

"உனக்கு கொழுப்புடி.." என்றான்..

"அதுக்கென்ன இப்ப..?" என்றபடி அவள் உள்ளே சென்றாள்..

"வாங்க.. வாங்க.." என்ற யுகேந்திரன் ரவிந்திரனின் அருகே நின்று கொள்ள ரஞ்சனாவோ பெண்களின் முகாமில் தானும் ஒரு அங்கமாகிக் கலக்க.. சமையலறைக்குள் நுழைந்து விட்டாள்..

நெய் மணக்க கேசரியும் முந்திரி பக்கோடாவும் பரிமாறப் பட்டன.. விவேக் ரசித்துச் சாப்பிட்டான்.. சூடான பில்டர் காபி வர அதன் நறுமணத்தை நுகர்ந்த படி காபியை உறிஞ்சிக் கொண்டிருந்தவனிடம்..

"நாங்க இல்லாத நேரம் பார்த்து வந்திட்டிங்க.. போரடிச்சிருக்கும்.." என்று கொக்கி போட்டான் யுகேந்திரன்..

"அதெல்லாம் ஒன்னுமில்ல.. நான் வேலை பார்க்கும் காட்டைப் பற்றி ரம்யாவிடம் விளக்கமா சொல்லிக்கிட்டு இருந்தேன்.." என்றான் விவேக்..

ரவிந்திரனுக்கும், யுகேந்திரனுக்கும் "திக்" கென்று ஆகிவிட்டது..

'காட்டைப் பற்றிப் பேச இவனுக்கு வேறு நேரமே கிடைக்கவில்லையா..' என்று மனதிற்குள் எரிச்சல் பட்டான் யுகேந்திரன்..

"அதையெல்லாம் வாயால் சொல்லித் தெரிய வைக்க முடியுமா மாப்பிள்ளை.." என்று யுகேந்திரன் வினவ..

"நிஜம் தான் நான் போட்டோக்களைக் கொண்டு வந்திருக்கனும்.." என்று குண்டைத் தூக்கிப் போட்டான் விவேக்..

"ம்ஹீம்.. இவர் கல்யாணத்திற்கு எதிரி இவரேதான்.." ரவிந்திரனின் காதருகே முணுமுணுத்தான் யுகேந்திரன்..

ரம்யாவின் வெளுத்த முகம், அவள் திருமணத்தைப் பற்றிய தனது முடிவை மறு பரிசீலனை செய்யப் போவதை உணர்த்த ரவிந்திரன் கவலைக்கு ஆளானான்..

## அத்தியாயம்- 28

அவர்களே படாத பாடுபட்டு ரம்யாவின் கலைந்த மனத்தை ஒன்று படுத்தி திருமண பந்தத்தில் நிற்க வைத்திருக்கிறார்கள்.. அதைப் புரிந்து கொள்ளாமல் விவேக் காட்டின் பெருமைகளைப் பற்றி அள்ளி விட்டுக் கொண்டிருந்தான்..

"எனக்குச் சின்ன வயதிலிருந்தே காடுன்னா அவ்வளவு பிரியங்க.."

இதைக் கேட்ட ரம்யாவின் முகம் அஷ்ட கோணலாவதை ஓரக் கண்ணால் பார்த்தபடி..

"அப்படிங்களா..?" என்று தலையை ஆட்டினான் யுகேந்திரன்..

"ஆயிரம் தான் சொல்லுங்க.. இயற்கை காற்று.. இயற்றை அழகு.. இயற்கை நீர்ன்னு.. அதன் சுகமே தனியாய் இருக்கும்.."

"இருக்கும்.. இருக்கும்.."

ரம்யாவின் மனம் ஒருநிலையில் இருந்து தொலைக்குமா என்ற கவலையுடன் தலையை இன்னும் கொஞ்சம் அதிகமாக ஆட்டி வைத்தான் யுகேந்திரன்..

"ஓங்கிய பெருங்காடுன்னு ஒரு பாட்டைக் கேட்டிருக்கீங்களா..?" விவேக் உற்சாகமாக வினவி வைத்தான்..

ரம்யாவின் மனக் கண்ணில் ஓங்கிய அந்தப் பெருங்காடு தெரிந்தது.. வெளிச்சம் நுழைய முடியாத இருள் போர்வை போர்த்திய பெருங்காடு..

அந்தக் காட்டுக்குள் கேட்ட விலங்குகளின் சத்தம் புதருக்குள் தெரிந்த அசைவுகள் ஏனென்று கேட்க ஆளில்லாத தனிமை..

அவளுக்கு கண்ணைக் கட்டிக் கொண்டு வந்தது..

"அந்தப் பாட்டைப் போல என்னுடைய காடும் ஓங்கிய பெருங்காடுதான்.." பெருமையாக சொன்னான் விவேக்..

"ஊஹீம்.. இவர் கொள்ளிக்கட்டையால் தலையை சொறிவதை நிப்பாட்ட மாட்டாரு போல.. ஏதாவது செய் அண்ணே.." ரவிந்திரனின் தயவை நாடினான் யுகேந்திரன்..

"ஏன் மாப்பிள்ளை காட்டுக்குள்ளே இருக்கிறது தான் உங்க சொந்த வீடா..?"

ரம்யாவைப் பார்த்தபடி கேட்டான் ரவிந்திரன்..

"இல்லையே.. அது கவர்ன்மெண்ட் குவார்ட்டர்ஸ்.. சென்னையில் தான் எங்க வீடு இருக்கு தஞ்சாவூர் பக்கத்திலே பூர்வீக கிராமம்.. அங்கே வீடு வயல் தோட்டமெல்லாம் இருக்கு.."

தங்கையிடம் 'கேட்டுக் கொண்டாயா..?' என்று விழிகளால் வினவினான் ரவிந்திரன்..

"உங்க அக்காவை பெங்களூரில் கொடுத்திருக்கீங்க.. அவங்களோட பூர்வீகம் எது..?"

புத்திசாலியான புண்ணிகோடி மைந்தன் போட்டுக் கொடுத்த பாதையில் வெற்றிகரமாக அடுத்த அடியை எடுத்து வைக்க பேச்சு திசை மாறி காடு, காடு சார்ந்த பிரதேசம் என்பதை விட்டுவிட்டு மனிதர்கள் வாழும் நகரங்களின் பக்கம் திரும்ப ரம்யா முகம் தெளிந்தாள்..

ஒரு வழியாய் விவேக் விடைபெற்றுக் கொண்டு கிளம்பிச் சென்ற பின்.. "ஊர்ப்.." என்று கன்னங்களை குவித்து தலையை ஆட்டி ஆசுவாசப் பெருமூச்சு விட்டான் யுகேந்திரன்..

அன்று இரவு தூங்கிக் கொண்டிருந்த ரம்யாவிற்கு கனவு வந்தது.. கனவில் ஓங்கிய பெருங்காடு வந்தது.. விலங்குகளும் சேர்ந்து வந்தன..

திக்கற்று.. திசை தெரியாத காட்டில் அவள் விழிகளை விரித்து சுற்று முற்றும் பார்த்து பயந்தாள்.. காப்பாற்ற யாரும் இல்லையா என்று கதறினாள்.. அலறினாள்..

அவள் முகத்தில் சில்லென்ற குளிர் தண்ணீர் மழையாய் பெய்து மயக்கம் நீக்கியது.. யாரோ உதவிக்கரம் நீட்ட பயத்துடன் அதை இறுகப் பற்றிக் கொண்டு..

"தாத்தா.. அப்பா.. அண்ணா.. பாட்டி.. அம்மா.. அண்ணி.." என்று அரற்றினாள்..

"நாங்கதாண்டா செல்லம், பயப்படாதே.." என்று குரல்கள் சேர்ந்து ஒலிக்க கண்திறந்தாள்..

அவளைச் சுற்றி கவலை முகங்கள் தெரிந்தன.. குடும்பமே அவளைச் சுற்றி குழுமியிருக்க அவசரமாக எழுந்து அமர்ந்தாள்..

"என்னடாம்மா.." மரகதத்தின் கண்கள் கலங்கின..

"பெரியம்மா.. பெரியம்மா.." ரம்யா நடுங்கினாள்..

"காடு பெரியம்மா.. சிங்கம் புலி பெரியம்மா.. பயமாயிருக்கு பெரியம்மா.. என் கூடவே எல்லோரும் இருங்களேன்.."

அன்று இரவு முழுவதும் அவள் தூங்காமல் அலற குடும்பம் மொத்தமும் விழித்திருந்து அவளைக் காவல் காத்தது..

மறுநாள் காலையில் அவள் உடல் அனலாக கொதிக்க ஆரம்பிக்க முதல் முறையாக புண்ணிய கோடியின் முகத்தில் வாட்டம் வந்தது..

"என்ன பெரியப்பா..?"

"தப்பு பண்ணிட்டோமா யுகே.. குழந்தை இந்த பாடுபாடுகிறாளே.."

தன் குடும்பம் வேறு.. தம்பியின் குடும்பம் வேறு.. என்று எண்ணிப் பார்க்காதவர்.. தன் பிள்ளைகளையும்.. தம்பி பிள்ளைகளையும் ஒன்று போல நினைக்கிறவர்.. தன்னைப் போலவே நினைக்க தன் மகனுக்கும் கற்றுக் கொடுத்தவர்.. அந்தக் குடும்பத்தின் ஆணிவேரைப் போன்றவர்.. மனம் கலங்கி நின்றார்..

அந்தப் பெரிய மனிதனின் மனத்தவிப்பை சட்டென்று இனம் கண்டு கொண்டான் யுகேந்திரன்..

"ஒரு தப்புமில்லை பெரியப்பா.."

"இவ இப்பவே இப்படிப் பயப்படுகிறாளேடா.."

"போகப் போக எல்லாம் சரியாகி விடும்.."

"எப்படிடா..?"

"கல்யாணமாகி வேறு ஒரு வீட்டிற்குப் போகும் பெண்களுக்கு ஆயிரம் கவலைகள் இருக்கும்.. அர்த்தமில்லாத பயங்கள் இருக்கும்.."

"இந்தக் கவலையும்... பயமும் ஆயிரத்தில் ஒன்றில்லையேடா.."

"இதை ஆயிரத்து ஒன்றாக எடுத்துக்கங்க பெரியப்பா.."

ஒரு வழியாக பெரிய தகப்பனின் மனக் கலக்கத்தை போக்கியவன்.. தனிமையில் தலையைப் பிடித்தான்..

"என்னத்தான்..?" என்று ரஞ்சனா வினவினாள்..

"ரம்யாவை நினைச்சா பயமாயிருக்குடி.." என்று கவலைப்பட்டான்.

"இதுக்குப் போயி யாராவது பயப்படுவாங்களா..? கல்யாணமாகி போகிற பெண்களுக்கு ஆயிரம் கவலைகள் இருக்கும்... இது அதில ஒன்னு.. பேசாம போயி வேலையைப் பார்ப்பீங்களா..?"

ரஞ்சனா இதைச் சொன்னவுடன் யுகேந்திரன் தலையிலிருந்து கையை எடுத்து விட்டான்.. மனைவியை ஒரு மார்க்கமாக பார்த்து..

"ம்ஹீம்.. நான் சொன்னது.. எனக்கே திரும்புதா..?" என்றான்..

ரஞ்சனா புரியாமல் விழித்தபடி போய் விட்டாள்.. எழுந்து ரம்யாவைப் பார்த்து விட்டு ரவிந்திரனைத் தேடிச் சென்றான்..

அங்கே அவனும் தலையில் கைவைத்திருக்க.. கௌதமியும் இதே வசனத்தை சொல்லிக் கொண்டிருந்தாள்..

"தாங்கலைடா சாமி.." யுகேந்திரன் உட்கார்ந்து விட..

"என்னடா தம்பி..?" என்றான் அண்ணன்..

யுகேந்திரன் புண்ணியகோடிக்கு அவன் சொல்லிய ஆறுதல் வார்த்தைகள் எப்படி எல்லோரின் வாயிலிருந்தும் புறப்படுகிறது என்று ஆச்சரியப்பட..

"அத்தை வருத்தமா இருந்தாங்க.. மாமா இதைச் சொல்லி ஆறுதல் சொன்னார்.." என்று மர்மத்தை உடைத்தாள் கௌதமி..

காற்று வாக்கில் வார்த்தைகள் ஊர் பூராவும் உலா வரும் போது வீடு பூராவும் வலம் வராதா என்று நினைத்துக் கொண்டான் யுகேந்திரன்..

## அத்தியாயம்- 29

திருமண மண்டபம் பரபரப்பாக இருந்தது.. உறவினர்கள் ஒன்று கூடும் இடமாதலால் அவர்கள் ஒருவருக்கொருவர் நலம் விசாரித்து குடும்பச் செய்திகளை பகிர்ந்து கொண்டிருந்தனர்..

"வாங்க அத்தை.."

"என்ன ராஜம் எப்படியிருக்க..?"

"உங்க ஆசிர்வாதத்தால் ஒருகுறையும் இல்லாம இருக்கேன்.."

"உனக்கென்னடிம்மா.. வீட்டு ஆம்பளைக ஓடி ஓடி சம்பாதிக்கிறாங்க.. இதோ கடைக்குட்டியையும் நல்ல இடத்தில் கட்டிக் கொடுக்கப் போகிற.. அப்புறம் குறைவு எங்கேயிருந்து வரும்..?"

அந்த அத்தையின் வார்த்தைகளின் ராஜம் குறைவில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறாளே.. என்ற பெரும் மனக்குறை தெரிந்தது..

'உனக்கு இது ஒரு குறையா..'

மனத்திற்குள் பொறுமியபடி சிரித்த முகம் மாறாமல் அடுத்த விருந்தினரை வரவேற்றாள் ராஜம்..

"வாங்க சித்தப்பா.. வாங்க சித்தி.."

"என்ன ராஜம்... பிடிச்சாலும் பிடிச்ச... புளியங்கொம்பாய் பிடிச்சுட்ட போல இருக்கே மாப்பிள்ளை பெரிய இடமாமே.."

"உங்க மருமகனும் பெரிய இடம் தான் சித்தப்பா.."

"இருந்தாலும் பாரெஸ்ட் ஆபிசர் மாப்பிள்ளை கிடைச்சிருக்காரே சென்னையில் இரண்டு வீடாம்.. கிராமத்தில் நிலம் நீச்சுன்னு இருக்கப்பட்டவங்களாம்.."

அந்த சித்தப்பாவின் வார்த்தைகளில் அப்பட்டமான பொறாமை தொனித்தது.. ராஜம் பல்லைக் கடித்தாள்..

'உனக்கெதுக்கு இவ்வளவு பொறாமை..?'

ஏறக்குறைய வந்திருந்தவர்கள் எல்லோரும் வாழ்த்துவதற்கு பதிலாக இதே வார்த்தைகளை மாற்றி மாற்றிச் சொல்ல, எரிச்சலுடன் நடமாடிக் கொண்டிருந்தாள் ராஜம்..

"ஏம்மா முகத்தை இப்படி வச்சுக்கிட்டு இருக்கே..?" கோசலை விசாரிக்கவும் மனதிலிருந்ததை கொட்டி விட்டாள்..

"அடி அசடே.. இப்படி மத்தவங்க பொறாமைப் படற மாதிரி வாழ கொடுத்து வச்சிருக்கனும்.. உனக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான்.. நம்ம ரம்யாக்குட்டிக்கு அமையப் போகிற வாழ்க்கையைப் பார்த்து ஊரே கண் போடுது.. பிள்ளைக்கு திருக்ஷ்டி சுத்திப் போடற வழியைப் பார்ப்பியா.. அதை விட்டு விட்டு இதுக்குப் போயி முகத்தை தூக்கி வச்சுக்கிட்டு இருக்கியே.."

கோசலையின் வார்த்தைகளில் ராஜத்தின் முகமலர்ச்சி மீண்டது.. அவள் திருமண வேலைகளில் சுறுசுறுப்பாக தன்னை பிணைத்துக் கொண்டாள்..

விவேக் தாலியைக் கட்டும்போது ரம்யாவின் மனதில் ஓர் அதிர்வு தோன்றி மறைந்தது..

திரும்ப முடியாத ஓர்வழிப் பாதையில் தான் பிரவேசித்து விட்டதை உணர்ந்தாள் அவள்.. மாலையில் திருமண வரவேற்பின் போது அவன் கம்பீரமாக அவளருகில் நின்றிருந்தது கூட அவள் மனதில் பதியவில்லை..

"மாலை சூடும் மணநாள் - இளம்

மங்கையின் வாழ்வில் திருநாள்

சுகம் மேவிடும் காதலின் எல்லை

வேறொரு திருநாள் இனியில்லை.."

மெல்லிசைக் கச்சேரியில் பழைய காலத்துப் பாடலைப் பாட ஆரம்பித்தார்கள்.. கௌதமியும், ரஞ்சனாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்..

"இது யாரோட வேலை..?"

"எல்லாம் நம்ம வீட்டு பாட்டியோட வேலை தானக்கா.."

"அங்கே பாரு முன் வரிசையில் உட்கார்ந்துக்கிட்டு நேயர் விருப்பத்தை சொல்லிக்கிட்டு இருக்கு.."

கோசலை கண்மூடி ரசித்து அந்தக் காலத்திற்குப் போக..

"பாட்டுன்னா.. இது பாட்டு.." என்று மீசையைத் தடவிக் கொண்டார் வெள்ளைச்சாமி..

"மத்ததெல்லாம் என்னவாம்..?" ரவிந்திரன் கேட்டான்..

"எல்லாம் ஒரே வேட்டுத்தாண்டா.. சத்தம் காதைப் பிளக்குது.." பாடல் மெல்லிசையாய் அங்கிருந்தவர்களை தாலாட்டிக் கொண்டிருந்தது..

"காதல் கார்த்திகைத் திருநாள் - மனம்

கலந்தோர் மார்கழித் திருநாள்

சேர்வது பங்குனித் திருநாள் - நாம்

சிரிக்கும் நாளே திருநாள்.."

புண்ணியகோடி மரகத்தைப் பார்த்தார்.. அவர்களின் மனம் அவர்களது கல்யாண நாளை நினைத்துக் கொண்டது..

"மங்கலக் குங்குமம் போதும் - சிறு

மலரும் மணமும் போதும்

பொங்கிடும் புன்னகை போதும் - மனம்

புதுமணத் திருநாள் காணும்.."

பொன்னம்பலம் ஏதோ வேலையிருப்பதைப் போன்ற பாவனையுடன் ராஜத்தின் அருகே வந்தார்..

"பாட்டு நல்லாயிருக்கில்ல..?"

"ம்ம் உங்க அம்மாவோட விருப்பமாம்.."

"ஏன்.. உனக்கு விருப்பமில்லையா..?"

"எதுமேல.."

"என்மேலதான்.."

"போதுமே.. இது நம்ம பெண்ணோட கல்யாண நாள்.."

"அதுக்காக நம்ம கல்யாண நாளை நினைச்சுக்க வேணாம்ன்னு ஏதும் சட்டமிருக்கா..?"

மலரும் நினைவுகளின் மணத்தை நுகர்ந்தவர்களுக்குத் தெரியும் அந்த நினைவுகளின் இனிமை..

என்றும் இனியவை.. பசுமையான ராகம்.. நினைத்தாலே இனிக்கும்.. நினைவில் நிற்பவை.. காலத்தால் அழியாதவை.. காவியப் பாடல்கள் இவையெல்லாமே நிலாக்கால நினைவுகள்..

பல அடைமொழிகளால் அழைக்கப்படும் பழைய காலத் திரைப்படப் பாடல்கள் காலம் கடந்தும் இன்னும் அதே புதுப் பொலிவோடு நிலைத்து நிற்பதற்கான காரணம் என்ன..?

அதன் இசையா..? பாடலின் உட்பொருளா..?

எதுதான் இது என்று அருதியிட்டு சொல்ல முடியாத அபூர்வப் பாடல்கள் அவை.. அவை உணர்வு பூர்வமாக உள்ளத்தில் புகக் கூடியவை..

எப்படி தமிழன் பெருமையும்.. தமிழனின் பெருமையும்.. காலம் கடந்தும் நிலைத்து நிற்கிறதோ.. அப்படி தமிழ் பாடல்களின் பெருமையும் நிலைத்து நிற்கும்..

அழிக்க முடியாதது தமிழ்..! அழிய முடியாதது தமிழ்..! வெல்ல முடியாதது தமிழ்..! அந்த அமிழ்தினும் இனிய தமிழ்மொழியில் மெல்லிசையாய் ஒலிக்கும் அந்தக் காலத்துப் பாடல்களைப் பற்றி எவ்வளவு சொன்னாலும் தீராது..

அன்று ஒலித்த பாடலும் அந்த வகையைச் சேர்ந்தது தான்.. அதன் மெல்லிசைக்கு என்ன சக்தி இருந்ததோ ரம்யாவின் சோர்ந்த மனம் கூட சிலிர்த்துக் கொண்டது..

"ரம்யா.."

"ம்ம்ம்.."

"நீ எவ்வளவு அழகு தெரியுமா..?"

ஆசையுடன் அவளை அன்றைய இரவில் விவேக் அணுகிய போது ரம்யா காட்டை மறந்து விட்டாள்.. அவனது தொடுகையில் குழைந்து மயங்கி விட்டாள்.. அவனுடன் கலந்து விட்டாள்..

"என்னை முதன் முதலில் பார்த்த போது என்ன நினைத்தாய்..?"

அவள் 'களுக்'கென்று சிரித்தாள்.. அவன் புருவங்களை உயர்த்தினான்..

"இது பாட்டு.."

"ஈஸிட் எனக்குத் தெரியாதே.."

"அப்படியே பாட்டைச் சொல்றீங்க உங்களுக்கு இந்தப் பாட்டைத் தெரியாதா..?"

"நிஜமாகவே தெரியாது பாடிக்காட்டேன்.." அவளது முகம் மறைத்த முடியை விலக்கி அவன் கேட்டபோது அவளுக்கு மறுக்கத் தோன்றவில்லை..

## அத்தியாயம்- 30

"என்னை முதன் முதலாக

பார்த்த போது

என்ன நினைத்தாய்..?"

ரம்யா விவேக்கிடமிருந்து விலகி குப்புறப்படுத்து இரண்டு கைகளையும் ஊன்றி, அதில் முகத்தை வைத்துக் கொண்டு இரு புருவங்களையும் உயர்த்தி பாடலில் வினவினாள்..

அவளது அந்தத் தோற்றத்தில் வசீகரிக்கப்பட்டான் விவேக்.. அவளது கண்களின் அழகும், கன்னங்களின் செருமையும் அவனை வா.. வா.. என்று அழைத்தன..

"என்ன நினைத்தேன்..?" அவன் யோசித்தான்..

"என்னடா இந்தப் பெண்ணின் கண்ணில் பல்ப் எரியுதே நம்மளை பிடிச்சிருக்சோன்னு நினைத்தேன்.." என்றவன்..

"நீ என்னடி நினைத்தாய்..?" என்று வினவினான்..

"நான்.."

"உன்னை நினைத்தேன்.."

அவள் பதிலுக்கு பாடியபடி புரண்டு அவனருகில் வந்து மார்பில் முகம் வைத்து அவன் முகம் பார்த்து பாடலின் அடுத்த வரிகளைப் பாடினாள்..

"என் கைகள் உன்மேல்

பட்டபோது

என்ன உணர்ந்தாய்..?"

விவேக் அவள் பாடலில் கிளர்ந்து விட்டான்.. அவளது தோள் தடவி இறுக்கிக் கொண்டான்..

"என்னென்னவோ உணர்ந்தேன்.. அதைச் சொல்லவா..?" என்று கேட்டான்..

அவள் வெட்கத்துடன் அவன் தோளில் கிள்ள..

"ஸ் ஆ.." என்று பொய்யாகச் சொன்னவன் பதிலுக்கு அவளது கன்னங்களைக் கிள்ளினான்..

"நான் நினைச்சது இருக்கட்டும்.. நீ என்னடி நினைச்ச..?"

"நான்..

என்னை மறந்தேன்..

நான்

என்னை மறந்தேன்.."

அவள் விழி மூடி அவன் மேல் படர்ந்து கொள்ள அந்த நொடியின் அனுபவத்தில் கிறங்கிப் போய் அவனும் கண்மூடினான்..

"நிஜமாகவே இது சினிமாப் பாட்டா..?"

"ம்ம்ம்.."

"வெரி நைஸ்.. இதையெல்லாம் தேடிப்பிடிச்சுக் கேட்பியா..?"

"தேடியெல்லாம் பிடிக்க வேண்டியதில்லை.. எங்க வீட்டில் ஒரு லொள்ளுப் பாட்டி ஒன்னு இருக்கில்ல..?"

"ஏய்ப் பாட்டிக்குப் போய் பட்டப் பெயர் வைக்கலாமா..?"

"இந்தப் பாட்டிக்கு வைக்கலாம்.. அதுக்கு பொழுது விடிஞ்சு பொழுது போகிற வரைக்கும் பழைய பாட்டைக் கேட்கிறது தான் வேலை.."

"ரசிக்கிறது ஒரு தப்பாடி..?"

"இதுக்கு மட்டும்தான் ரசனை இருக்கனுமா..? வேலை செய்கிற வேலையாட்களுக்கு இருக்கக் கூடாதா..?"

"அப்படின்னு யாரு சொன்ன..?"

"வேற யாரு சொல்லுவா.. எல்லாம் எங்க லொள்ளுப்பாட்டிதான் சொல்லும்.. இது காலையில் வயலுக்குப் போகிறப்போ கையோட எப்எம் ரேடியோவைக் கொண்டு போயிரும்.."

"இன்ட்ரெஸ்டிங்.."

"வயற்காட்டு வரப்பில் வாகாய் உட்கார்ந்து குடையை பிடிச்சுக்கும்.."

"இதைப் பாருடா அப்புறம்.."

"இது மட்டும் வெயில் படாம காலை ஆட்டி ஆட்டி பாட்டைக் கேட்கும்.. வேலை செய்கிற பொண்ணுகள்ல யாராவது வாயைத் திறந்து பாட்டோடு சேர்ந்து ரசிச்சுப் பாடிட்டா அவங்களை உண்டு இல்லைன்னு ஆக்கிடும்.."

"ஏன்..?"

"ஏன்னா வேலை செய்கிறப்போ பாட்டைக் கேட்டா வேலை நடக்காதாம்.. அவங்க பாட்டைக் கேட்டுக்கிட்டு வேலையை

ஒழுங்கா செய்கிறதில்லையாம்.."

"அப்படி நினைச்சா இவங்க எப்.எம்மை எடுத்துக் கிட்டுப் போகாம இருக்கலாமே.. இவங்க பாட்டைப் போட்டா அவங்க காதில விழத் தானே செய்யும்..?"

"இதுக்குத்தான் அதை ளொள்ளுப்பாட்டின்னு சொல்கிறது.."

"ஆனாலும் உனக்கு ரொம்ப வாய்டி.."

அவன் செல்லமாக அவள் தலையில் குட்டிவிட்டு அணைத்துக் கொண்டான்..

"ஆமாம்.. என் அப்பாவுக்கு ஏதோ பட்டப்பெயர் சொன்னயே.. அது என்ன..? மறந்தே போச்சு.. சொல்லு.."

"த்சு.. அதெல்லாமில்லை.."

"என்கிட்டேவா நீ அன்றைக்கு சொன்ன.."

"சொல்லலை.."

"சொன்னேடி.."

"எனக்கு நினைவில்லை.."

"எனக்கு நினைவிருக்கு.."

"என்னத்தை நினைவிருக்கு..? மாமனாருக்குப் போய் யாராவது பட்டப் பெயர் வைப்பாங்களா..?"

"நீ வைப்பேடி.. பாட்டிக்கே பட்டப்பெயர் வைக்கிறவ.. மாமனாருக்கு பட்டப் பெயர் வைக்க மாட்டயா..?"

"போங்க பேசாம.."

"எங்க போகச் சொல்ற..? பாதி ராத்திரியில ரூமைவிட்டு வெளியே போனா வெளியில் இருக்கிறவங்க என்ன நினைப்பாங்க..?"

"உங்களை வெளியில் போகச் சொன்னேனா..?"

"நீ தானேடி இப்பச் சொன்ன..?"

"சும்மா நீதானே அந்தக் குயில்ன்னு ராகம் பாடாம தூங்குகிற வழியைப் பாருங்க.."

"எங்கேடி தூங்கறது..?"

"கட்டிலில் தான்.."

"ம்ஹீம்.. நீ என் அப்பாவுக்கு ஏதோ ஒரு பெயரைச் சொன்ன அது என்னன்னு தெரியாம தூங்க முடியுமா..?"

அவன் முடியை பிய்த்துக் கொள்வதைப் போல பாவனை செய்ய அவளுக்கு அவனைப் பார்க்க பாவமாக இருந்தது..

"அது வந்து.."

"ம்ம்.. சொல்லு.."

"மாமாகிட்ட சொல்ல மாட்டிங்களே.."

"ஊஹீம்.."

அவன் பெரிய சத்திய சந்தனைப் போல முகத்தை வைத்துக் கொண்டு தலையை ஆட்டினான்..

ஆனால் விடிந்தவுடன் அவள் குளித்து விட்டு இறங்கி வந்த போது ஹாலில் அமர்ந்து காபி அருந்திக் கொண்டிருந்த கோபாலன் அவளைக் கண்டதும் அகலமாக புன்னகைத்தார்..

"என்னம்மா என்னைப் பார்த்தால் நரசிம்மராவில் பாதி நம்பியாரின் பாதின்னு இருக்கா..?"

'இவன் எப்போது இதை தன் தகப்பனாரிடம் சொன்னான்..?' இரவு முழுவதும் அவனுடன் இருந்த காதல் கணவனை நினைத்து அவள் திகைத்து நின்றாள்..

மாமனாரிடம் பதில் சொல்ல முடியாமல் அசட்டுப் புன்முறுவல் ஒன்றைச் சிந்திவிட்டு அவள் அவசரமாக சமையலறைக்குப் போனபோது காயத்ரி புன்னகையுடன் அவளை எதிர் கொண்டாள்..

"காபி குடிம்மா.. விவேக் எழுந்துட்டானா..?"

"இன்னும் இல்லை அத்தை.."

"அதெப்படிம்மா அவ்வளவு கரெக்டா பெயர் வைச்சே.."

"என்ன பெயர் வைச்சேன் யாருக்கு வைச்சேன்.."

"உன் மாமாவுக்குத்தான் அது எப்படி..? அவர் நரசிம்மராவா..?" அவள் குழுங்கிச் சிரிக்க கூடச் சேர்ந்து சிரிக்க முடியாமல் ரம்யா சங்கடப்பட்டாள்..

"இந்தாம்மா விவேக்குக்கு காபி கொண்டு போ.."

ரம்யா காபிக் கோப்பையை எடுத்துக் கொண்டு கிளம்பிய போது எதிரே வந்த விசாகா..

"குட்மார்னிங் ரம்யா.." என்றாள்..

"குட்மார்னிங் அண்ணி.."

"எப்படி எப்படி..? என் அப்பா கையைப் பிசைகிறது.. நம்பியார் கையைப் பிசைகிறதைப் போல இருக்கா ஹா.. ஹா.."

விசாகா சிரிக்க ஆரம்பிக்க ரம்யா அவசரமாக அந்த இடத்தை விட்டு நழுவினாள்..

மாடியறைக்குள் நுழைந்து கண்மூடித் தூங்கிக் கொண்டிருந்த கணவனின் முகத்தை யோசனையுடன் பார்த்தாள்..

இப்படித் தூங்குகிறவன் எப்ப எல்லோரிடமும் இதைச் சொல்லியிருக்க முடியும்..?

அவள் பார்த்துக் கொண்டிருந்த போதே அவன் கண்விழித்து அவளைப் பார்த்துச் சிரித்தான்..

"குட்மார்னிங்.."

அவள் பதிலுக்கு குட்மார்னிங் சொல்லாமல் கையிலிருந்த காபிக் கோப்பையை அவனிடம் நீட்டினாள்..

"என்ன.. என் மகாராணி என் கூடப் பேசமாட்டாளா..?"

"ஏன் எதையாவது பேசினா அதை ஊர் முழுக்க தம்பட்டம் அடிச்சு வைக்கலாமுன்னு திட்டமா..?"

அவள் பிணங்கிக் கொள்ள அவன் வாய்விட்டு கடகடவென்று சிரித்தான்..

## அத்தியாயம்- 31

அவளின் குழந்தைத் தனமான கோபம் அவனை ஈர்த்தது.. அவனுடன் 'டூ' விட்ட குழந்தை போல.. அவள் முகம் திருப்பிக் கொண்டு நகர முற்பட்ட போது.. அவன் இழுத்து அவளை அணைத்துக் கொண்டான்..

"இதெல்லாம் ஜோக்குடி.."

"எது ஜோக்..? ஹஸ்பெண்ட் அன்ட் வொய்புக்குள்ள நடக்கிற பெர்சனல் பேச்சை வீடு பூராவும் தண்டோரா போடறதுதான் ஜோக்கா..?"

"ச்சீ.. என்ன பேசற நீ..? நான் மத்ததையா வெளியில் சொன்னேன்..? இது நிஜமாகவே ஜோக்தாண்டி.."

"உங்க அப்பாவின் முகத்தில் எப்படி விழிப்பேன்..?"

"ஏன் விழிக்க முடியாத அளவுக்கு அவர் முகம் சிங்கம்.. புலி.. கரடி போலவா இருக்கு..? ஹா.. ஹா.."

அவன் சிங்கம்.. புலி.. கரடியை தேவையில்லாமல் பேச்சில் இழுக்கு.. அவள் முகம் மாறிவிலகினாள்.. அவன் முகம் மாறி அவளை இழுத்துப் பிடித்து நிறுத்தினான்..

"ரம்யா.." அவன் குரலில் அதட்டல் இருந்தது..

"எனக்கு இது பிடிக்கலை.."

"எனக்கும்தான் உன் கோபம் பிடிக்கலை.. நல்லா யோசிச்சுப் பாரு.. நான் உன் பாட்டியைப் பத்தி என் வீட்டில்

சொன்னேனா..? இத்தனைக்கும் அவங்களைப் பத்தித்தான் நாம் அதிகம் பேசினோம்.."

நிஜம்தானே என்ற உணர்வில் அவன் முகம் பார்த்தாள் ரம்யா..

"என் வீட்டைப் பற்றி உனக்கு இன்னும் சரியாத் தெரியலை.."

"எங்கே..? முதல் நாளே இப்படி விடிஞ்சிருக்கே..?"

இப்போது அவன் முகம் இறுகி கடினமானது.. விழிகளில் கோபம் வந்திருந்தது..

"நீ பேசறது சரியில்லைடி.."

"அதை நீங்க சொல்றீங்களா..?"

"சின்ன விசயத்துக்கு தேவையில்லாம அலட்டிக்கிற.."

"எது சின்ன விசயம்..? இது சின்ன விசயம்ன்னா.. இதுக்கும் பெரிய விசயம் எப்படியிருக்கும்..? அதை நான் தாங்குவேனா..?"

"எங்க குடும்பம் சோசியல் டைப்புடி.."

"எங்க குடும்பம் அப்படியில்லைன்னு சொல்லிக் காட்டறீங்களா..?"

"ஸ்டாப் திஸ் நான்ஸென்ஸ் ரம்யா.. நான் உன் குடும்பத்தைப் பற்றி.. ஒருவார்த்தை கூடப் பேசலை.."

"உங்க குடும்பம் மட்டும் உயர்த்திங்கிற மாதிரி பேசினீங்களே.. அதுக்கு அர்த்தம் என்ன..?"

அவன் தீர்க்கமாக அவளைப் பார்த்தான்.. அவன் பார்வையை அவள் தவிர்த்து வேறுதிக்கில் பார்த்தாள்.. அவள் முகம் சுளித்திருந்தது..

"எனக்குத்தான் நான் பேசியதுக்கு அர்த்தம் தெரியலை.. அதைத் தெரிந்தவள் நீதானே..? நீயே சொல்லேன்.."

"உங்க குடும்பத்தை விட.. எங்க குடும்பம் கம்மிங்கிற அர்த்தம் தான் வேறென்ன..?"

அவள் முகம் சிவந்திருக்க.. அவன் அவளருகில் வந்தான்.. அவள் முகம் திருப்பிக் கொண்டாள்.. அவள் முகத்தை முரட்டுத்தனமாக பற்றி தன்பக்கம் திருப்பினான் அவன்..

அவனது அந்தச் செய்கையில் அவளது மேனி நடுங்கிவிட்டது.. அதை உணர்ந்தும்.. உணராதவனாக அவன் கண்டிப்புடன் பேசினான்..

"உங்க குடும்பம்.. எங்க குடும்பன்னு என்ன பேச்சு இது..? என் குடும்பம் உன் குடும்பமில்லையா..?"

"நீங்க மட்டும் அப்படி நினைச்சீங்களா..?"

"நான் உன் வீட்டை குறையாய் பேசவில்லை.."

"இப்ப என் வீடுன்னு சொன்னீங்க பாருங்க.. இது குறைவில்லையா..? நான் மட்டும் உங்க வீட்டை என் வீடாய் நினைக்கனும் நீங்க என் வீட்டை என் வீடாய் நினைப்பீங்க.. எந்த ஊர் நியாயம் இது..?"

"நம்ம ஊரு நியாயம் இதுதாண்டி.. பெண் தான் ஒரு வீட்டில் வாழப் போகிறாள்.. ஆண் யார் வீட்டுக்கும் வாழப் போகலை.."

"அதுதான் ஏன்..?"

"என்னையேண்டி கேட்கிற..? போய் உன் அம்மாவையும் பெரியம்மாவையும் கேள்.."

"என்ன கேட்க.."

"எதுக்காக உங்க வீட்டை விட்டு என் அப்பா பெரியப்பாவின் வீட்டுக்கு வாழ வந்தீங்கன்னு கேளு.. உன் அண்ணிகளிடம் போய்.. ஏன் உங்க பிறந்த வீட்டை விட்டுவிட்டு என் அண்ணன்களுடன் வாழ வந்தீங்கன்னு கேளு.. கீழே உன் நாத்தனாரும் என் அக்காவுமான விசாகா இருக்கிறாளே.. அவளிடம் போய்.. எதுக்காக இந்த வீட்டை விட்டு பெங்களூருக்கு போய் உங்க புருசனுடன் வாழ்கிறீங்கன்னு

கேளு.. அதை விட்டு விட்டு என்கிட்ட கேட்காதே.. கேள்வி கேட்கிறாளாம் கேள்வி.. ஏண்டி நீ சண்டைக்குன்னு அலைகிறாயா..?"

"வேண்டாம்.. எதுவும் பேசாதீங்க.."

"ஓகே.. பேசலை.."

அவன் சட்டென்று அறையை விட்டு வெளியே போய் விட்டான்.. ரம்யா தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டாள்.. சற்று நேரம் கழித்து அவள் அறையை விட்டு வெளியே வந்து படிகளில் இறங்க ஆரம்பித்த போது.. அவன் எதிரே வந்தான் அவள் முகம் பார்க்காமல் உள்ளே சென்று விட்டான்..

மறுவீட்டு விருந்துக்கு அவர்களை அழைத்துச் செல்வதற்காக கூட இருந்த ரவிந்திரனும்.. கௌதமியும்.. எப்போது கிளம்புவது என்று.. கோபாலனிடம் கேட்டுக் கொண்டிருந்தார்கள்..

"விவேக் வரட்டும்.." என்று அவர் சொல்லிக் கொண்டிருந்த போது.. அவன் வந்துவிட்டான்..

"என்னப்பா..?" எதிரே அமர்ந்தான் விவேக்..

"மறுவீட்டு விருந்துக்கு நீயும்.. மருமகளும் கிளம்பனும்ப்பா.."

"சாப்பிட்டதும் கிளம்பி விடுகிறோம்.." என்றான் அவன்..

ரம்யாவிடம் காயத்ரி தன் வியப்பைத் தெரிவித்தாள்.. அவளுக்கு ரம்யாவின் பிறந்த வீட்டின் கூட்டுக் குடும்பத்தின் கட்டு கோப்பு ஆச்சரியத்தைத் தந்தது..

"அது எப்படி ரம்யா.. உன்னை மறு வீட்டு விருந்துக்கு கூப்பிட்டுக் கொண்டு போக யுகேந்திரனும் ரஞ்சனாவும் இருக்காமல்.. ரவிந்திரனும்.. கௌதமியும் இருக்காங்க.."

"இவர் எங்க மூத்த அண்ணன்.."

"ஆனா.. உன் பெரியப்பா மகனில்லையா..? யுகேந்திரன் தானே உனக்கு கூடப் பிறந்த அண்ணன்.."

ரம்யா மாமியாரை கேட்கத் கூடாத கேள்வியைக் கேட்டுவிட்டதைப் போல விசித்திரமாகப் பார்த்தாள்..

'என்னடா.. மருமகள் இப்படிப் பார்த்து வைக்கிறாளே..' என்று காயத்ரி யோசிக்க ஆரம்பித்த போது ரம்யாவே அவளது பார்வைக்கான அர்த்தத்தைச் சொன்னாள்..

"எங்க வீட்டில் எங்க பெரியப்பா பிள்ளைகள் வேறு.. நாங்க வேறுன்னு இல்லை அத்தை.. எல்லோரும் ஒன்றுதான்.. நாங்க நாலு பேர்.. மூத்த அண்ணன் ரவிந்திரன் அடுத்த அண்ணன் யுகேந்திரன்.. எனக்கு அக்கா ராதிகா.. நான் கடைக்குட்டி இப்படித்தான் நினைத்து எங்களுக்குப் பழக்கம்.. வேறாக நினைத்ததில்லை.."

மகனுக்கு வரப்போகும் மருமகள் ஒற்றுமையாய் குடித்தனம் பண்ணுவாளோ என்ற கவலையிலிருந்த காயத்திரிக்கு அவளது பதிலைக் கேட்டு நிம்மதி பெருக்கெடுத்தது.. இப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்தவளா குடும்பத்தை உடைக்க நினைப்பாள்..?

## அத்தியாயம்- 32

'அடி ராக்காயி.. மூக்காயி..'

என்று பாடி அழைக்காத குறையாக புண்ணிய கோடியின் வயலில் வேலை செய்த பெண்கள் ஒருவருக்கொருவர்.. ரம்யா.. புதுக்கணவனுடன் மறு வீட்டிற்கு வரப்போகும் செய்தியை பரப்பிக் கொள்ள.. ரம்யாவும் விவேக்கும் வந்த கார்.. புண்ணிகோடியின் வீட்டுக் காம்பவுண்டிற்குள் நுழைந்தபோது.. கடுகு விழக்கூட இடமில்லாமல் அங்கே கூட்டம் குழுமியிருந்தது..

"ஆன்னு வாயைப் பிளந்துக்கிட்டு வேடிக்கை பார்க்காம ஆரத்தி எடுக்கற வேலையைப் பாருங்கடி.." கோசலை அதட்டினாள்..

"இவங்கதானே உன் ளொள்ளு பாட்டி..?"

ஆர்வத்துடன் கேட்டு விட்ட விவேக்.. ரம்யாவின் முறைப்பைக் கண்டதும் வாய் மூடிக்கொண்டான்..

காலையிலிருந்தே அவன் அவளுடன் பேசுவதை தவிர்த்து வந்தான்.. புண்ணியகோடியின் வீட்டுக்குடும்பச் சூழல் அவனுக்கு எப்போதுமே பிடித்தமான ஒன்று..

இப்போது கல்யாண வீட்டின் கலகலப்பும் சேர்ந்து கொள்ள அவனுக்குள் உற்சாகம் குமிழிட்டது... அந்த உற்சாகத்தில் ரம்யாவிடம் கொண்டிருந்த மனத்தாங்கலையும் மறந்து பேசிவிட்டான்.. ஆனால் அவள்.. அவனது பாராமுகத்தை மறக்கத் தயாராக

இல்லை..

"இவருதான் மாப்பிள்ளையா..?"

என்னவோ.. தமிழகத்தின் மிகப் பெரிய வி.ஐ.பி யைப் பார்க்க கூட்டம் அலை மோதுவதைப் போல.. எல்லாம் தள்ளுமுள்ளு பண்ணி விவேக்கை எட்டிப்பார்க்க.. அவனுக்கு அதைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது..

'ஏன் இப்படிப் பார்க்கிறாங்க..?'

நினைத்ததை கேட்கலாமென்று மனைவியைப் பார்த்தான்.. அவளோ.. 'யார்.. நீ..' என்ற ரீதியில் பார்த்து வைத்தாள்.. அதனால் வேறு வழியின்றி கோசலையிடமே கேட்டு வைத்தான்..

"எல்லாம் காணாததை கண்டு விட்டா அப்படித்தான் மாப்பிள்ளை.." என்றாள் அவள்..

இது என்ன வகையான பதில் என்று அவனுக்கு பிடிபடவில்லை.. எதைக் காணவில்லை..? எதைக் கண்டுவிட்டார்கள்..?

கேள்விக்கணைகள் நெஞ்சில் எழும்ப.. அதையும் கேட்டு வைத்தான்..

"உங்களைத்தான் மாப்பிள்ளை.." என்றாள் கோசலை..

"என்னையா..?"

"ஆமாம்.. வெள்ளையும்.. சொள்ளையுமா.. யாராவது இந்த ஊருக்குள்ள வந்தாலே.. விடிய.. விடிய.. இதுக கூட்டம் கூடி வேடிக்கை பார்க்கும்க.. இதில.. மம்முதரசா மாதிரி ஒரு மாப்பிள்ளையை பார்த்துட்டா.. எட்டி நின்னாவது பார்க்க.. கூட்டம் வந்து குமியாதா..?"

"ஹ.."

ரம்யாவின் பக்கமாக சரிந்து பெருமையாக முணுமுணுத்தான் விவேக்..

"எதுக்கு இந்த ஹ..?" அவள் பொறுமையிழந்தவளாக தன் மௌன விரதத்தை கலைத்தாள்..

"நான் மன்மத ராஜாவாம்..?" அவன் கண் சிமிட்டினான்..

காபிக் கொட்டை நிறத்தில் முழுக்கை கார்கோ சட்டையணிந்து.. அடர்த்தியான நிறத்தில் ஜீன்ஸ் அணிந்திருந்தவனின் முடி அலைபாய.. அவனைப் பார்க்கையில் அவளுக்கு மன்மத ராஜாவைப் பார்ப்பதைப் போலவே இருந்தது..

நினைத்ததை வெளியில் சொல்லாமல்.. கண்களில் கிண்டலைக் காட்டினாள்..

'சும்மாவே சிலுப்பிக்குவான்.. இதை வாய்விட்டுச் சொன்னால் அவ்வளவுதான்.. ஒரே அலம்பல் பண்ணிருவான்..'

"ம்ஹீம்.. ளொள்ளுப்பாட்டிக்கு காது தான் டமாரம்ன்னா.. கண்ணிலயும் கோளாறா..? விளங்கினாப் புலதான்.." என்று நொடித்தாள் ரம்யா..

"ளொள்ளுப் பாட்டியா..? இவங்க சூப்பர் பாட்டிடி.."

"இருக்கும்.. இருக்கும்.. உங்களைப் போயி மன்மத ராஜான்னு சொல்லிருச்சில்ல.. அப்ப.. இதை சூப்பர் பாட்டின்னுதான் சொல்வீங்க.."

"எனக்கு இந்தப் பாட்டியை ரொம்ப பிடிச்சிருக்கு.. ஐ லைக் ஹெர் ஸோமச்.. யு நோ.."

"பார்த்து.. அதுக்கு கல்யாணமாகி.. பேரன்.. பேத்தியெல்லாம் வந்து.. கொள்ளுப் பேத்தியையும் பார்த்துருச்சு.."

"ஏண்டி.. உனக்கு நல்ல நினைப்பே வராதா..?"

"உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு முந்தி வந்த நினைவு.. இப்போதுதான் எல்லாம் மறந்திருச்சு.."

விவேக் முகம் மாறினான்.. அவளை முறைத்தான்..

"என்னடி.. பேச்சே.. ஒருதினுசாய் இருக்கு.. பாஞ்சாலங்குறிச்சி முயலின் வாடை அடிச்சிருச்சா..?"

அவன் ரம்யாவிடம் கேட்டுக் கொண்டிருக்கையில்..

"ஆமாம் மாப்பிள்ளை.. வாடைதான் அடிக்குது.." என்றாள் கோசலை..

"இல்லை பாட்டி.. இது வேற.."

"எல்லாம் எனக்கும் தெரியும் மாப்பிள்ளை.. மார்கழி பிறந்திருச்சு.. அப்புறம் வாடைக்காத்து அடிக்காதா..? ஏய்ய்.. மருமகப் பொண்ணுகளா.. சீக்கிரமாய் ஆரத்தியை எடுங்கடி.. நம்ம மாப்பிள்ளை எம்புட்டு நேரம்தான் ஊதக்காத்திலேயே நிப்பாரு..?"

"ஊதைக்காத்தா..?"

திரும்பவும் ரம்யாவையைத்தான் விவேக் பார்க்க வேண்டி வந்தது.. அவளுக்கு சிரிப்பு வந்து விட்டது.. அதைக் காட்டிக் கொள்ளாமல் இறுக்கமான முகத்துடன்..

"ஊதைக் காத்துன்னா.. குளிர் காத்துன்னு அர்த்தம்.." என்று சொன்னாள்..

"ஏன் மாப்பிள்ளை.. காட்டிலேயே இருக்கிறவருக்கு ஊதக் காத்துன்னா என்னன்னு தெரியாதா..?"

கோசலை கேட்ட கேள்வியில் ரம்யாவின் முகம் இருண்டுவிட்டது..

## அத்தியாயம்- 33

கௌதமியும்.. ரஞ்சனாவும்.. ஆரத்தி எடுத்து அவர்களை வீட்டுக்குள் அழைத்துச் சென்றார்கள்..

"அதான் பாத்து முடிச்சாச்சில்ல.. இனியாவது போயி.. அவங்கவங்க வீட்டில சோறு ஆக்குற வேலையைப் பாருங்கடி.. இருட்டிப் போச்சு.."

கோசலை போட்ட சத்தத்தில் வேலை செய்யும் பெண்களின் கூட்டம் கசமுசவென்று தங்களுக்குள் பேசியபடி கலைய.. அவள் வீட்டுக்குள் சென்றாள்..

ஹாலின் நடுநாயகமாக போடப் பட்டிருந்த சோபாவில் விவேக்கும்.. ரம்யாவும் அமர்ந்திருக்க.. அவர்களைச் சுற்றி.. உள்ளூரில் இருக்கும் உறவினர்களின் கூட்டம் குழுமியிரந்தது..

வேலையாள்களை மிரட்டலாம்.. உறவினர்களை கோசலையால் என்ன செய்ய முடியும்..?

"தஞ்சாவூருக்கு பக்கத்திலதான் எங்க சின்னம்மாவோட பேத்தியைக் கொடுத்திருக்கு.. பஞ்சவர்ணக்கிளின்னு பேரு.." என்று ஒரு உறவினர் பேச்சை ஆரம்பிக்க..

"அப்படிங்களா.." என்று மரியாதைக்காக கேட்டு வைத்தான் விவேக்..

"உங்களுக்கு அது என்னவாகனும்னு சொல்லுறேன்.." என்று அவர் தொடர விவேக் கோசலையைப் பார்த்தான்..

'யாமிருக்க பயமேன்..' என்று விழிகளால் அடைக்கலம் கொடுத்த முதியவள்..

"ஏன் ரங்கசாமி.. உன் வீட்டு பஞ்சவர்ணக் கிளி.. எனக்கே என்னவாகனும்ன்னு தெரியாது.. இதில.. எங்க வீட்டு

மாப்பிள்ளகிட்ட முறையைச் சொல்லி விளக்கக் கிளம்பிட்டாயே.." என்று கேட்டு வைத்தாள்..

"ஆத்தாளுக்கு எப்பயுமே குசும்புதான்.."

அவர் சிரிக்க மாட்டாமல் சிரித்து விட்டு இடத்தைக் காலி செய்தார்..

"பொண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் பாலையும் பழத்தையும் கொடுங்க.."

இன்னெரு உறவுக்காரப் பெண்மணி தன் இருப்பை வெளிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு.. திடீர் தலைவராக பதவியேற்றாள்..

ஒரு உறையில் ஒரு கத்திதான் இருக்க முடியும்.. கோசலை இருக்குமிடத்தில் இன்னொரு தலைவர் உருவாவதா..?

அவள் பல்லைக் கடித்துக் கொண்டு அந்த உறவுக்கார பெண்ணை பகையுணர்வுடன் பார்த்தாள்..

"ஏம்மா.. அஞ்சலை.. எங்க வீட்டுப் பொண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் பால் பழத்தை கொடுக்கிறது இருக்கட்டும்.. உன் வீட்டில கைக்குழந்தைக்கு பாலைக் காய்ச்சி கொடுத்துட்டியா..?"

"அதில்ல.. அப்பத்தா..." அந்தப் பெண் இழுக்க..

"ஏன் சொல்றேன்னா.. வாசல்ல ரொம்ப நேரமா உன் புள்ள அழுதுகிட்டு இருக்கு.. அழுகிற புள்ளைக்கு காக்கா குருவியை வேடிக்கை காட்டிக்கிட்டு இருக்கான் உன் புருசன்.. பசியில அழுகிற பச்சைப்புள்ள.. குருவியைப் பாத்து அழுகையை நிறுத்திருமா..?" என்று நிதானமாக வினவினாள் கோசலை.

"நம்ம ரம்யாவும்.. மாப்பிள்ளையும் வந்திருக்காங்கன்னு வந்தேன் அப்பத்தா.."

"அதான்.. வந்த.. பாத்த.. இனி உன் வீட்டைப் பார்க்க போக வேணாமா..? இவங்களுக்கு பாலையும், பழத்தையும் கொடுக்க வீடு நிறைய ஆளிருக்கு.. உன் பிள்ளையைப்

பாக்கத்தான் ஆளில்ல.. அதனால காலாகாலத்தில வீட்டைப் பாத்து போயி சேரு ஆத்தா.."

அதற்கு பின்னாலும்.. அங்கே நிற்க.. அந்தப் பெண்ணுக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது..?

அவள் விரைந்து இடத்தை காலி செய்தவுடன் அடுத்து யாரைப் போட்டுத் தாக்கலாம் என்ற யோசனையுடன் சுற்றிலும் பார்த்தாள் கோசலை..

அங்கிருந்த அத்தனை உறவினர்களுக்கும் உடனடியாக அவர்களுக்கு என்று காத்துக் கொண்டிருந்த அவசர வேலைகள் நினைவுக்கு வந்துவிட்டன..

"அப்ப அத்தாச்சி நானும் போயிட்டு வரவா..?"

"அதுக்குள்ள என்ன அவசரம்..?"

"அடுப்பில் சோத்தை வச்சிட்டு வந்திருக்கிறேன்.."

"மரகதம்.. நானும் நடையைக் காட்டறேன்.."

"இருந்து சாப்பிட்டுட்டு போகலாமே.."

"மாட்டுக்கு தண்ணியக் காட்டனும்.. அதை மறந்து இங்கே உட்கார்ந்திட்டா.. என் பொண்டாட்டி எனக்குத் தண்ணியக் காட்டிருவா.."

"போயிட்டு வாரேன் ராஜக்கா.."

"இப்பத்தானே வந்தே.. அதுக்குள்ள கிளம்பனுமா.."

"என்னக்கா செய்யறது.. அம்மியில் துவையலை அரைக்க ஆரம்பிச்சவ.. காரு சத்தத்தைக் கேட்டதும் ஓடி வந்திட்டேன்.. போயி மிச்சத்தை அசைச்சு எடுக்கனும்.."

ஐந்தே நிமிடத்தில் அந்த வீட்டில் குழுமியிருந்த உறவினர் கூட்டம் பறந்து விட வீட்டு மனிதர்கள் மட்டுமே இருந்தனர்..

"இப்ப... என் பேத்திக்கும்.. மாப்பிள்ளைக்கும் பாலையும்.. பழத்தையும் கொடுங்கடி.."

கோசலை 'யாருகிட்ட..' என்ற முறைப்புடன் சென்று கொண்டிருந்த கூட்டத்தைப் பார்த்தபடி பேரன்களின் மனைவிகளிடம் சொல்ல.. விவேக்கிற்கு அந்த ஜொள்ளுப் பாட்டியை மிகவும் பிடித்து விட்டது..

அவன் தோழமையுடன் அவளைப் பார்த்து சிநேகிதமாக சிரித்து வைத்தான்..

## அத்தியாயம்- 34

விசாலமான அறையில் காற்று தவழ்ந்து வந்து கொண்டிருந்தது.. அறை முழுவதும் மார்கழி மாதத்தின் குளிர்காற்று பரவியிருக்க.. அறைக்குள் வந்த விவேக்.. ரம்யாவை பின்னாலிருந்து அணைத்தான்..

"விடுங்க என்னை.." அவள் திமிறினாள்..

"விடமுடியாது.."

"இப்ப விடப் போறிங்களா இல்லையா..?"

"ஏண்டி.. விடறதுக்கா உன்னைக் கல்யாணம் பண்ணியிருக்கேன்.."

"ஒன்னும் வேண்டாம்.."

"எனக்கு வேணுமே.."

அவன் தாகத்துடன் அவளது கன்னத்தில் இதழ்களைப் பதிக்க ரம்யா தொய்ந்து அவன் கைக்குள் அடங்கினாள்..

"என் கூடப் பேசாதீங்க.."

அவள் குரல் பலவீனமாக ஒலித்தது.. அதை உணர்ந்தவன் வாய் விட்டு நகைத்தான்..

"ஏன் பேசக்கூடாது..? உன் கூடப் பேசாமல் வேற யாருகூட நான் பேச..?"

அவனது கைகள் அவளது தோள்களை இறுக்கி.. படர்ந்து பரவ.. அவள் பேச்சிழந்தாள்..

"பேசுடி.." அவளது காதோரம் அவன் முணுமுணுத்தான்.. அவள் கோபமாக பேச வேண்டுமென்று நினைத்தாள்..

அவனோடு சண்டையிழுக்க வேண்டும்.. விலகிப் படுக்க வேண்டும்..

ஊஹீம்.. எதுவும் அவளால் முடியவில்லை..

மாறாக அவன் கையில் பாகாய் குழைந்து.. கண்மூடி அவனுடன் ஒன்றினாள்..

"இந்த மாடி ரூமுக்கு ஏஸியே வேணாம்டி.. உன் சூப்பர் பாட்டி சொன்ன ஊதக்காத்து.. ரூம் பூராவும் நிறைஞ்சு.. உடம்பை என்னவோ பண்ணுது.. இந்த லட்சணத்தில் இவளோட நான் பேசக்கூடாதாம்.. நல்ல கதையாய் இருக்கே.."

அவன் அவளோடு கட்டிலில் சரிந்தான்.. அவள் பேச்சின்றி.. அவன் கைகளுக்குள் அடங்கினாள்.. காற்றினில் மிதப்பதைப் போன்றதொரு கிளர்ச்சி அவளை ஆக்கிரமித்துக் கொள்ள.. கண்மூடி அந்தப் புதிய உலகத்திற்குள் நுழைய ஆரம்பித்தாள்..

காலையில் கண் விழித்தபோது.. அவனது கை அவளைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டிருந்தது..

தூங்கும் போதும்.. கைவளைவில் அவளை சிறைபிடித்திருந்த அவனின் முரட்டுத்தனத்தை எண்ணி, அவள் முகம் சிவந்தாள்..

தூங்கிக் கொண்டிருந்தவனின் முகம் பார்த்தாள்.. அடர்த்தியான முடி பரவி.. நெற்றியில் படிந்திருக்க.. அவனது முடிகோதி.. நெற்றியில் சிறு முத்தமிட்டாள்..

"கோபம் போயிருச்சா..?"

அவன் கண் திறக்காமலே அவளைக் கேட்டான்.. அவள் சட்டென்று விலக முற்பட.. கண்திறந்து அவளை இன்னும் இறுக்கிக் கொண்டான்..

"எங்கேடி போற..?"

"இதென்ன கேள்வி.. விடிஞ்சுருச்சு.."

"அடேங்கப்பா.. பெரிய கண்டுபிடிப்புத்தான்.. அதான் ஜன்னல் வழியா வெளிச்சம் தெரியுதே.."

"நான் குளிக்கனும்.."

"வா.. குளிக்கலாம்.."

"ஹைய்யோ.. இதுவேறயா..? நான் மாட்டேன்.."

அவள் அதிர்ந்து போய் அவன் கைகளிலிருந்து விடுபட்டு ஓடிவிட அவன் பலமாக அதை ரசித்துச் சிரித்தான்..

"காப்பி.."

குளித்து முடித்து.. ஈரக்கூந்தலை விரிய விட்டிருந்தாள்.. சென்னை நாகரீகத்தின் சுவடு படியாத தோற்றம்.. வெட்டி விடப்படாமல்.. நீண்டு வளர்ந்து முழங்கால்களைத் தொட்டுக் கொண்டிருந்த கூந்தல்.. இயற்கையாய் வளைந்த புருவங்கள்.. இயல்பாக அடர்ந்திருந்த இமைகள்.. லேசாக மையிடப்பட்டிருந்த அகன்ற பெரிய கண்கள்.. ஒற்றையாய் சிறு தங்கப் பொட்டாய் ஒரு பக்கம் மின்னிய.. மூக்குத்தியைக் கொண்டிருந்த அளவான.. அழகான நாசி.. குவிந்த இதழ்கள்.. வரிசைப் பற்கள்.. குழந்தைத்தனம் மாறாத இளமையானமுகம்..

பார்க்கப் பார்க்க.. விவேக்கிற்கு தெவிட்டவில்லை..

காப்பியை பிடிக்காமல்.. அதை நீட்டிக் கொண்டிருந்த வளைக் கரத்தைப் பிடித்தான்.. அவள் தடுமாறினாள்..

"ப்ளீஸ்.. காபி சிந்திடும்.. வாங்கிக்கங்களேன்.."

அவளது கெஞ்சுதலான தொனியில் சிரித்துக் கொண்டே அவளது வளைக் கரத்தை விடாமல் பிடித்தபடி.. இன்னொரு கையால் காப்பியை வாங்கி.. அருகில் வைத்தான்..

"விடுங்க.."

"விட்டால்தான் உன்னைப் பிடிக்க முடியலையே.."

அவன் இயல்பாகக்கூற.. அவள் முகம் மாறியது.. கண்கள் லேசாகக் கலங்க.. அதை மறைப்பதற்காக.. அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்..

அவன் கிறங்கிப் போனான்.. அவள் முகம் நிமிர்த்தி பார்க்க முயன்றவன்.. அது இயலாமல் போனதால் அவளது ஈரக் கூந்தலில் முகம் புதைத்து வாசம் பிடித்தான்..

"அசத்தறடி.." கிறக்கத்துடன் முணுமுணுத்தான்..

"உன்னைப் பார்த்தால் எப்படியிருக்கு தெரியுமா..? என் காட்டிலே பூத்திருக்கிற.. பூவைப் போல.. இயற்கையழகாய் இருக்கிறடி.."

அவன் காட்டைப் பற்றிச் சொல்லவும்.. ரம்யாவின் உடல் தூக்கிப் போட்டது.. அதை உணராமல் அவளது காதினில் இதழ்களால் வருடியபடி அவன் சீண்டிக் கொண்டிருந்தான்..

## அத்தியாயம்- 35

"அந்தாத் தெரியுது.. பாத்தீங்களா மாப்பிள்ளை..

கோசலை கையைக் காட்ட.. விவேக் அந்தத் திசையில் பார்க்காமல்.. ரம்யாவைப் பார்த்துக் கொண்டிருந்தான்..

புதுப் பெண்ணுக்கே உரிய வெட்கம் முகத்தில் சூழ்ந்திருக்க கழுத்தில் மின்னிய மஞ்சள் கயிறுடன் அவள் அபார அழகாக இருந்தாள்..

"அதெல்லாமே நம்ம வயல்தான்.."

அவன் வயலை விட்டு பெண்டாட்டியை பார்வையிட்டுக் கொண்டிருப்பதை அறியாதவளாக கோசலை பெருமையுடன் சொல்லிக் கொண்டிருந்தாள்..

"இந்தாத் தெரியுதே.. இந்த தென்னந்தோப்பு.. இதை புண்ணிய கோடிக்கு கல்யாணமான ஆறாம் மாசம் வாங்கினோம்.."

அவனோ.. அவன் கல்யாணம் பண்ணிக் கொண்டவளின் அழகை விழிகளால் மொய்த்துக் கொண்டிருந்தான்..

ஏதோ சிந்தனையுடன் இலக்கில்லாமல் பார்த்துக் கொண்டிருந்த ரம்யா.. யதேச்சையாக கணவனின் முகம் பார்த்து விட்டு மும் சிவந்தாள்..

"அப்படிப் பார்க்காதீங்க.."

"ஏன்.. என் பொண்டாட்டி.. நான் பார்க்கிறேன்.."

"ஸ்ஸீ.. பாட்டி இருக்கு.."

"இருந்தால் என்ன..? நானென்ன... ஊரான் பெண்டாட்டியையா உற்று உற்றுப் பார்க்கிறேன்..? என் பொண்டாட்டியைப் பார்க்கிறேன்.."

வாய்க்கு வாய்.. 'என் பெண்டாட்டி..' என் பெண்டாட்டி என்று அவன் சொல்ல.. அவள் கிளர்ச்சியுற்றாள்..

அவள் மனதில் ஓடிய எண்ணங்களைப் படித்தவனைப் போல அவன் அவளருகில் உராய்ந்து நடந்தான்..

களையெடுக்கும் பெண்கள் புதிதாக திருமணமான அந்த இளஞ்ஜோடிகளை கடைக்கண்ணால் பார்த்து தங்களுக்குள் கிசுகிசுத்து 'குபீர்' சிரிப்பலைகளை அங்கே பரப்பிவிட ரம்யா வெட்கப்பட்டாள்..

"தள்ளி நடங்க.."

"ஏன்..?"

"எல்லோரும் பார்க்கிறாங்க.."

"பார்த்தால் என்ன..?"

அவளது விரல்களோடு அவன் விரல் பிணைத்துக் கொள்ள.. ரம்யா தன் விரல்களை லஜ்ஜையுடன் உருவிக் கொள்ள முயன்றாள்..

"அந்த மாந்தோப்பை.. பொன்னம்பலத்தோட கல்யாணத்தப்போ வாங்கினோம் மாப்பிள்ளை.."

பேசியபடி பேத்தியையும்.. விவேக்கையும் திரும்பிப் பார்த்த கோசலை.. என்னவோ.. விவேக் ரம்யாவை கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்துக் கொண்டிருந்ததைப் போல நாணிக்கோணி முகம் திருப்பிக் கொண்டாள்..

அவளது செய்கையை வியப்புடன் பார்த்த விவேக்..

"எதுக்கு இப்படி பிஹேவ் பண்றாங்க.." என்று வியப்புடன் கேட்டான்..

"எல்லாம் உங்களால் தான்.." ரம்யாவை வெட்கம் பிடுங்கித் தின்றது..

"ஏன் நான் என்ன செய்தேன்..?"

"சும்மா.. ஏன் ஏன்னு ஏலம் போடாம என் கையை விட்டுட்டு தள்ளி நடங்க.."

"இதென்னடி வம்பாப் போச்சு.. எங்க சென்னையில் வந்து மெரினா பீச்சில் உட்கார்ந்து பாரு.. முத்தம் கொடுத்து.. மடியிலேயே படுத்துக்குவாங்க.."

"அத்தனை பேருக்கு நடுவிலா.. ச்சீய்.."

"பெங்களூரில் அதைவிட கட்டிப் பிடிச்சுக்கிட்டு தான் ரோட்டிலேயே நடப்பாங்க.." "நீங்க ரொம்பத்தான் கண்டீங்க.."

"என் அக்காவை மேரேஜ்பண்ணிக் கொடுத்த ஊருடி.."

வண்டியை இழுத்துக் கொண்டு சாலையில் ஓடும் குதிரை கண்களை துணி கொண்டு மறைத்துக் கொள்வதைப் போல தன் கையால் கண்களின் இருபக்கமும் மறைத்துக் கொண்டு வரப்பில் அவர்களுக்கு முன்னால் நடந்த கோசலை..

"எந்த ஊரைச் சொல்றீங்க மாப்பிள்ளை.." என்று கேட்டாள்..

"எங்க அக்காவோட ஊரு பாட்டி.."

"அதைப் போயி.. வேற மாதிரிச் சொல்றீங்களே.. வாக்கப்பட்ட ஊருன்னு சொல்ல வேண்டியதுதானே.."

கோசலை எளிதாகச் சொல்ல..

"வாக்கப்பட்ட ஊரா..?" என்று விழித்தான் விவேக்..

"என்னடி இது..?"

"அப்படின்னா மேரேஜ்பண்ணிக்கிட்டுப் போன ஊருன்னு அர்த்தம்.."

"அதைப் போயி இவங்க வேற மாதிரிச் சொல்றாங்களே.."

"ஊம்.. உங்களை பாட்டி சொல்லட்டும்.. பாட்டியை நீங்க சொல்லுங்க.. இதில.. யாரு.. எந்த மாதிரிச் சொல்றாங்கண்ணு ரெண்டு பக்கமும் விளக்கம் சொல்லிக்கிட்டு நான் வரேன்.."

"கோவிச்சுக்காதேடி.. கோபத்திலேயும் நீ அழகா இருக்கே.."

"கொஞ்சறதுக்கு நல்ல இடத்தைப் பார்த்தீங்க.. போங்க.."

விவேக் அவர்கள் நின்று கொண்டிருந்த இடத்தைச் சுற்றிப் பார்த்தான்..

பச்சை பசேலென்ற வயல் வெளியும் சுழித்தோடிய வாய்க்கால் நீரும் வயலுக்குள் கால் பதித்து நின்ற கொக்குகளும், நாரைகளும் அவன் மனதிற்குள் உல்லாசத்தை விதைத்தன..

"இதைவிட நல்ல இடம் கூட இருக்குமா.. என்ன..?"

அவன் ரசித்துச் சொல்ல.. ரம்யா தலையில் அடித்துக் கொண்டாள்..

"ஹைய்யோ.. உங்ககிட்ட வந்து இதைச் சொன்னேன் பாருங்க.. என் புத்தியைச் சொல்லனும்.."

அவர்கள் பேசிக் கொள்வதைக் கவனிக்காமல் இருக்கும் பிரயத்தனத்தில் கோசலை வரப்பிலிருந்து விழுந்து வைத்தாள்..

## அத்தியாயம்- 36

விவேக்.. ரம்யாவின் கைவிரல்களை பிணைத்துக் கொண்டதோடு நிறுத்தாமல் அவளது தோளைச் சுற்றி கையைப் போட்டு வைத்தான்..

கோசலை.. இன்னும் மறைவாக.. கைகளை குவித்துக் கொண்டு நடக்க.. ஏற்கனவே கண்பார்வையில் குறைபாடுள்ள அவள்.. வரப்பில் தடுக்கி விழுந்துவிட்டாள்..

"ஐயையோ.. பாட்டி.."

ரம்யா.. விவேக்கிடமிருந்து விடுபட்டு.. கோசலையின் அருகே ஓடிச் சென்று பார்த்தாள்..

வயல் வரப்பில் 'பப்பரப்பா..' என்று விழுந்து கிடந்தவளைப் பார்த்ததும்.. களையெடுத்துக் கொண்டிருந்த பெண்களுக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை..

ஆனாலும் வாய்க்குள் சிரிப்பை புதைத்துக் கொண்டு கோசலையின் பக்கத்தில் ஓடி வந்தார்கள்..

"ஏன் பெரியம்மா.. நீங்க ஒழுங்கா நடந்தாலே.. விழுகாம வீடு போயிச் சேருகிறது அதிசயம்.. இதில கையை வைச்சு இருக்கிற சொச்ச கண்ணையும் மறைச்சிக்கிட்டு நடந்தா.. எப்படி விழுகாம வீடு போயி சேருவீங்களாம்..?"

கேட்ட பெண்ணுக்கு.. கோசலை விழுந்து விட்டதில் மகா சந்தோசம் என்பதை அவளது முகமே காட்டிக் கொடுக்க.. அந்த நிலையிலும் கேள்வி கேட்டவளை முறைத்துப் பார்த்தாள் கோசலை..

"இப்படி எகத்தாளமாய் பேசனும்னு எத்தனை நாளாய் காத்துக்கிடந்தடி ஆத்தா.."

"ஐயோ.. பெரியம்மா.. உங்களப் போயி நானு அப்படி நினைப்பேனா..? நீங்க யாரு..?"

"பிடாரிங்கிறயா..?"

உண்மையில் அந்தப் பெண் கோசலையை அப்படித்தான் மனதில் விளித்துக் கொண்டிருந்தாள்..

ஆனால் அதை மறைத்து அதிர்ந்து போனவளைப் போல.. கைகளை விரித்தாள்..

"நீங்க.. படியளக்கிற தெய்வம் பெரியம்மா.."

அவளது பேச்சில் துளிக்கூட உண்மையில்லை என்பதைப் போன்ற நம்பாத பார்வை பார்த்தாள் கோசலை..

"நீ..? என்னை..? அப்படி நினைக்கிற..?"

"ஆமாம்.. பெரியம்மா.."

"இதை நான் நம்பனுமாக்கும்.."

அலட்சியத்துடன் அவளைப் பார்த்தபடி.. கைத்தாங்கலாக மற்றவர்கள் எழுப்பி விடவும் எழுந்து நின்றாள் கோசலை..

எழுந்து கொள்ளும்வரை மற்றவர்களின் கைகளை பிடித்துக் கொண்டவள்.. எழுந்து கால்களை ஊன்றி நிமிர்ந்து நின்ற பின்னால்.. எல்லோரையும் முறைத்துப் பார்த்தாள்..

"வேலையை நிப்பாட்ட.. எதுடா சாக்குன்னு அலைவிங்களா..? போங்கடி.. போய் வேலையைப் பாருங்க.. இங்கே என்ன நாடகமா ஆடுது..?"

கால்களை உதறியபடி அவள் அதட்ட..

"இல்ல.. நீதான் ஆடறே.." என்று ஒரு பெண் வாய்க்குள் முணுமுணுத்தாள்..

அதைக் காதில் வாங்கிய மற்ற பெண்கள் சிரித்து விட.. கோசலை நெற்றிக் கண்ணைத் திறந்தாள்..

"நான் விழுந்து காலை உடைச்சுக்கிட்டதில் உங்க அத்தனை பேருக்கும் சிரிப்பாணி பொத்துக்கிட்டு வருதாக்கும்.."

"கால்தான் உடையலயே அத்தை.."

ஒரு பெண் கவலையுடன் கூறவும்.. கோசலையின் கோபம் அதிகமானது..

"அதில.. உனக்கு அத்தனை குறையாடி செங்கமலம்..?"

அந்த செங்கமலமாகப் பட்டவள்.. இந்தக் கிழவி எப்படித்தான் மனதில் நினைப்பதை படித்து வைக்கிறாளோ என்று அலுப்புடன் நினைத்துக் கொண்டாள்..

'இந்த நினைப்பையும்.. இந்தக் கிழவி கண்டு பிடிச்சு தொலைக்கப் போகுது..'

அவள் நினைத்து முடிப்பதற்குள்..

"என்னடி.. நாம மனசில நினைக்கிறதை இந்தம்மா எப்படிக் கண்டுபிடிக்கிறாங்கன்னு நினைக்கிறயா..?" என்று கோசலை கெத்தாக வினவினாள்..

செங்கமலம் திருதிருவென்று விழிக்க ஆரம்பிக்க.. "என்னடி.. ஆடுதிருடின கள்ளியைப் போல முழிச்சு வைக்கிற.." என்று அதற்கும் ஒரு அதட்டலைப் போட்டு செங்கமலத்தை வேலை செய்வதற்கு தானாக ஓடிப் போக வைத்தாள் கோசலை..

அவளுக்குத் தெரியும்.. நிச்சயம் அந்த செங்கமலம் மனதிற்குள் 'இந்தம்மா..' என்றோ.. 'வாங்க..' 'போங்க..' என்றோ விளித்திருக்க மாட்டாள் என்பது..

'இந்தக் கிழவி எப்படிக் கண்டு பிடிச்சுச்சு..' என்று தான் நினைத்திருப்பாள் என்பதை கோசலை நன்று அறிவாள்..

ஆனாலும் பேச்சுக்கூட அந்த அறிதலை வெளிப்படுத்தாமல் தன்னை உயர்வாகப் பேசிக் கொண்ட வித்தை கோசலைக்கு மட்டும்தான் கைவரும்..

"உன் பாட்டியை சூப்பர் பாட்டின்னு நினைச்சேன்.. அவங்க என்னடான்னா.. வரப்பில் நடக்கத் தெரியாம விழுந்து வைக்கிறாங்க.."

இப்படிச் சொன்ன விவேக்கை முறைப்பாகப் பார்க்க முயன்று தோற்றாள் ரம்யா..

"அது விழுந்ததைக் கிண்டல் பண்றீங்களா.."

"அதில்லை ரம்யா.. நானோ சென்னையில் பிறந்து வளர்ந்தவன்.. தஞ்சாவூருக்கு வருசத்துக்கு ஒருதரம் போனாலும் வயல் வரப்புப் பக்கம் போனதில்லை.. எல்லாமே குத்தகைத்தான்.. நானே வரப்பில் ஒழுங்காக நடக்கிறேன்.. உன் பாட்டி கால் தடுக்கி விழுந்தா.. இதை என்னன்னு சொல்றது.."

விவேக் விடாமல் வாதிட்டான்..

## அத்தியாயம்- 37

ரம்யா கோசலையின் காதுகளுக்கு கேட்டுவிடாமல் தாழ்ந்த குரலில் விவேக்கிடம் எரிந்து விழுந்தாள்..

"பேசாதீங்க.. எல்லாம் உங்களாலேதான்.."

"என்னாலயா..?"

விவேக் அயர்ந்து விட்டான்.. அவன் பாட்டுக்கு 'தேமே..' என்று புது மனைவியுடன் உராய்ந்து கொண்டிருக்கையில் அவன் என்னவோ கோசலையைப் பிடித்து வயல் வரப்பில் தள்ளி விட்டதைப் போல ரம்யா பேசுகிறாளே என்று இருந்தது அவனுக்கு..

"ஏண்டி.. நானா உன் பாட்டியைப் பிடித்து தள்ளி விட்டேன்..?"

"அதை வேற புதுசாய் செய்யனுமா..? நான் தான் படித்துப் படித்துச் சொன்னேனே கேட்டிங்களா..?"

இவள் எதைப் படித்தாள்.. எதைச் சொன்னாள் என்று விளங்காமல் விழித்த விவேக் அதை அவளிடமே கேட்டான்..

"தள்ளி வாங்க.. தள்ளி வாங்கன்னு சொன்னேனே இல்லியா..?"

"சொன்ன.. இப்ப.. அதுக்கென்ன..?"

"அதுக்கு.. என்னவா..? ஏன் பேசமாட்டிங்க ஒரு பெரிய மனுசி கூட வருகிற நினைப்பில்லாம கிட்ட வர்றதும்.. கையைப் பிடித்து விரலில் சுழுக்கெடுத்து விடறதும் தோளில் கை போடறதுமா இருந்தா.. ஏன் இப்படி நடக்காது..?"

"ஏண்டி.. புதுப் பெண்டாட்டியை பக்கத்தில வைச்சுக்கிட்டு எந்த மடையனாவது தள்ளி நடப்பானா..? இல்லை அவளைத் தொடாம விரதமிருப்பானா..? அது ஒரு குற்றமாடி..?"

"குத்தம்தான்.. நீங்க பண்ணின அட்டகாசத்தை பார்க்க முடியாம பாட்டி கண்ணை மறைச்சுக்கிட்டு நடந்துச்சு.. கால்

தடுக்கி வரப்பில் விழுந்துடுச்சு.. இத்தனை வேலையையும் நீங்க பண்ணிட்டு.. என் பாட்டியை வேற கேலி பண்றீங்களா..?"

அவர்கள் வழக்கடித்துக் கொண்டதைப் பார்த்த கோசலை..

"அடடா.. என்னா இது ரெண்டு பேரும் நேத்து இந்நேரம் கல்யாணத்தை பண்ணிப் புட்டு இன்னைக்கு இந்நேரம் அடிச்சுக்கிட்டு நிற்கறீங்க.." என்று பஞ்சாயத்திற்கு வந்தாள்..

"பாரு பாட்டி.. இவரால் தான் எல்லாமும்.."

"நீங்களே சொல்லுங்க பாட்டி.. இந்த சிச்சுவேசன் அப்படியே என் காட்டை நினைவு படுத்துது.. இந்த மாதிரியான ரொமாண்டிக் சிச்சுவேசனில் எப்படி தள்ளி நடக்கிறதாம்.."

விளையாட்டாய் கோசலையிடம் நியாயம் கேட்டுக் கொண்டிருந்த ரம்யா முகம் மாறிப் போனாள்..

'காடு..! அதை இவன் மறக்கவே மாட்டான்..?'

விவேக்கின் காடு பற்றிய ஆர்வம் ரம்யாவின் மனதிற்குள் கசப்பை உண்டு பண்ண கோசலையின் மனதில் உற்சாகத்தை உண்டு பண்ணியது..

"ஏன் மாப்பிள்ளை.. உங்க காடும் இப்படிப் பச்சைப் பசேல்ன்னுதான் இருக்குமா..?"

"ஆமாம் பாட்டி சில்லுன்னு.. மரமும்.. செடியும் கொடியுமா இருக்கும்.."

"இதைக் கேட்டியாடி ரம்யா.."

"கேட்டுக்கிட்டுத்தான் இருக்கேன்.."

"இவ ஏன் மாப்பிள்ளை இப்படி அலுத்துக்கிறா..?"

"என்னைக் கேட்டால் எனக்கென்ன தெரியும் பாட்டி.. நானே உங்ககிட்ட இவளைப் பத்தி கம்ப்ளெயிண்ட் பண்ணலாமா என்று இருந்தேன்.."

"இவள விடுங்க மாப்பிள்ளை.. இவளுக்கு என்ன தெரியும்..? பச்சை மண்ணு.. என்கிட்ட உங்க காட்டைப் பத்திச் சொல்லுங்க.. நான் கேக்கிறேன்.."

விவேக்.. அடுத்த ஆறு நிமிடத்திற்கு காட்டை பற்றி.. வர்ணித்துத் தள்ள.. ஒரு கட்டத்தில் தாள முடியாதவளாக ரம்யா காதைப் பொத்திக் கொண்டு கத்தினாள்..

"இப்ப நீங்க ரெண்டு பேரும் இந்தப் பேச்சை நிறுத்தப் போறீங்களா..? இல்லையா..?"

சட்டென்று அந்த இடத்தில் மௌனம் நிலவியது விவேக் புருவங்களை சுளித்தான்..

"வாட்ஸ் த ராங் வித் யு ரம்யா.."

"நத்திங்.."

"ஐ காண்ட் பிலிங் இட்.."

"ஐ டோன்ட் கேர்.."

விவேக்கின் முகத்திலிருந் மென்மை மாறி.. கடுமை பரவியதை கோசலை கவலையுடன் பார்த்தாள்..

"இல்லை பாட்டி.. என் பேச்சைப் பற்றி இவளுக்கு கவலையில்லையா.. இல்லை என்னைப் பற்றியே கவலையில்லையா.. எனக்கு இதைப்பத்தி இங்கேயே இப்பவே.. தெளிவாகத் தெரிஞ்சாகனும்.."

கோசலை கைகளைப் பிசைந்தபடி பேத்தியைப் பார்க்க.. அவளும் அதே கடினமான குரலில் கோசலையிடம் கூறினாள்..

"எனக்கும் இரண்டில் ஒன்று தெளிவாகத் தெரியனும் பாட்டி.."

"எதைப் பத்திக் கேட்கிறா பாட்டி..?"

"இவருக்கு நான் முக்கியமா..? இல்லை இவரோட காடுதான் முக்கியமா..?"

விவேக்கின் முகத்தில் அப்பட்டமான திகைப்பு தெரிந்தது..

'இவ எதுக்கு.. இப்ப இப்படியொரு கேள்வியைக் கேட்கிறா..?'

"சொல்லுங்க.. இரண்டில் ஒன்னுதான் உங்களுக்கு கிடைக்கும்.. அது நானா இல்லை உங்க காடா.. நீங்களே தீர்மானிச்சுக்கங்க.."

## அத்தியாயம்- 38

இது என்ன மாதிரியான கேள்வியென்று விவேக்கால் அனுமானிக்க முடியவில்லை..

இதுவரை பெண்டாட்டியாக வருபவள்..

'ஒன்று நான் வேண்டுமா.. இல்லை.. உங்களைப் பெத்தவங்க வேண்டுமா.. என்றோ.. உங்களுக்கு நான் முக்கியமா.. இல்லை.. உங்க கூடப் பிறந்தவங்கதான் முக்கியமா..' என்றோ தான் கேட்பார்கள் என்று அவன் கேள்விப் பட்டிருக்கிறான்..

இப்படி நான் வேண்டுமா.. இல்லை உன் காடு வேண்டுமா என்ற கேள்வியை இப்போதுதான் அவன் கேட்கிறான்..

நம்ப முடியாத அதிசயத்துடன் மனைவியைப் பார்த்தவன்..

"ஏண்டி.. காட்டை ஏண்டி தேவையில்லாம வம்புக்கு இழுக்கிற..? அது உன்னை என்ன பண்ணுச்சு.." என்று கேட்டு வைத்தான்..

'காடு.. என்ன.. பண்ணியதா..?'

விழி விரியக் கணவரைப் பார்த்தாள் ரம்யா..

அது என்ன பண்ணியது என்ற நினைவில் அவளது உடல் நடுங்கியது..

இருண்ட அடர்ந்த அதன் தோற்றம் அவளது நினைவுக்கு வந்து பயமுறுத்தியது..

சொல்ல நினைத்தாள்.. சொல்ல முடியவில்லை..

தன் பயத்தை வெளிப்படுத்த வார்த்தைகளை அவள் தேடிக் கொண்டிருந்த போது.. கோசலை குறுக்கிட்டாள்..

"விடுங்க மாப்பிள்ளை.. இவ விளையாட்டா.. வம்பு பண்றா.. உச்சிவெயில் வந்துருச்சு பாருங்க.. வயலைச் சுத்திப் பார்க்கனுமுன்னு பொழுது சாய வந்திருக்கனும்..

அத விட்டுட்டு சூரியன் புறப்படறப்போ நாமளும் புறப்பட்டுட்டோம்.. அவசரத்தில் ரெண்டு இட்லியை பிட்டு வாயில போட்டது.. பத்து இட்டிலியைத் தின்ன எனக்கே அது செரிமானம் ஆயிருச்சு.. பசி வயிற்றைக் கிள்ளுது.. இவ பசி தாங்குவாளா.. அந்த வேகத்தில் உங்ககிட்ட எதையோ நினைச்சு எதையோ பேசித் தொலைச்சுட்டா.. வாங்க நாம வீட்டுக்குப் போயி வயித்தில் எதையாவது போடலாம்.. பசி அடங்கினாத்தான் இவளும் அடங்குவா.."

கோசலையின் பேச்சில் விவேக் சமாதானம் அடைந்தானா.. இல்லையா என்று அவனது முகக்குறிப்பிலிருந்து அனுமானிக்க முடியவில்லை..

"ஓகே.. லீவ் இட்.." அவன் தோளைக் குலுக்கினான்.

"அவருதான் லீவு சொல்லிட்டாருல்ல.. இன்னும் என்ன வாய்க்கா தண்ணியை வெறிச்சுப் பாத்துக்கிட்டு நின்னுக்கிட்டு இருக்கிற..? வா.. வீட்டுக்குப் போகலாம்.."

கோசலை பேத்தியை அதட்டினாள்.. அவர்கள் வீடு திரும்பும் போது.. ரம்யா பேசவே இல்லை..

கோசலைதான் வாய் ஓயாமல் சளசளவென்று பேசிக் கொண்டே வந்தாள்.. ஒரு கட்டத்தில் அவளது பேச்சோடு இணைந்து கொண்டான் விவேக்..

"ஏன் மாப்பிள்ளை.. கோழியடிச்சு வறுவல் பண்ணியிருக்கோம்.. மட்டனை வாங்கி பிரியாணி போட்டிருக்கோம்.. மீனைப் பிடிச்சு.. பொறிச்சு வச்சிருக்கோம்.. முட்டையை வேக வச்சிருக்கோம்.. இத்தனையையும் காலா காலத்தில் ஒரு வெட்டு வெட்டாம..

காட்டையும்.. கழனியையும் பார்வையிட கிளம்பிப் போயிட்டிங்கன்னா எப்படி மாப்பிள்ளை..?"

வீட்டில் சமைக்கப் பட்டிருந்த பதார்த்தங்களின் வாசனை இழுக்க.. வீட்டுக்கு வந்திருக்கும் புது மாப்பிள்ளை சாப்பிடாமல் வீட்டு மனிதர்கள் சாப்பிடக் கூடாது என்ற நியதி தடுக்க.. உமிழ்நீரை விழுங்கிக் கொண்டு வாசலில் நடை பழகிக் கொண்டிருந்த வெள்ளைச்சாமி.. தன் ஆற்றாமையை வெளியிட்டார்.. அவர் 'காடு' என்று சொன்னதும் ரம்யாவின் உடல் விறைத்துக் கொண்டதை கோசலை கவலையுடன் பார்த்தாள்.. விவேக் அதைக் கவனித்து விட்டானா என்று ஜாடையாய் அவன் முகம் பார்த்தாள்..

அவன் கவனித்த மாதிரித் தெரியவில்லை.. மாறாக..

"ஹ.. இத்தனை அயிட்டமும் எனக்காக வெயிட் பண்ணுதுன்னு தெரிஞ்சிருந்தா.. அப்போதே நான் ஓடோடி வந்திருப்பேனே தாத்தா.." என்று வரிசைப் பற்கள் தெரிய சிரித்து வைத்தான்..

கோசலை நிம்மதியுடன் அவர்களை சாப்பிட அழைத்துச் சென்றாள்..

விவேக் கலகலப்பாய் ரவிந்திரனிடமும் யுகேந்திரனிடமும் சிரித்தும் பேசியபடி சாப்பிட்டான்..

சாப்பிட்டு முடித்தவுடன் அவன் மாடியறைக்கு சென்று விட ரம்யா.. வீட்டின் முன்பக்கம் சென்று.. அகலமான வழுவப்பான தரையும் பெரிய தூண்களையும் கொண்ட திண்ணையில் சோர்வாக அமர்ந்தாள்..

மாலைப் பலகாரத்தைப் பற்றிய யோசனையில் பெண்கள் ஆழ்ந்துவிட ஆண்கள் அவர்களது வேலைகளைத் தொடர கிளம்பிப் போய்விட.. கோசலை வாசலுக்கு வந்தாள்.. சுற்று முற்றும் பார்த்துவிட்டு பேத்தியின் அருகே அமர்ந்தாள்..

"இன்னுமா அந்த கிறுக்குப் பிடிச்ச பயம் உன்னைப் பிடிச்சுக்கிட்டு ஆட்டுது..?" என்று கடுமையாக கேட்டாள்.

"பாட்டி.."

"பேசாதே.. யானைதான் தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக்குமாம்.. நீயும் அதப்போல ஆயிட்டயா..?"

"பாட்டி.. நீ புரியாம இந்த பஞ்சாயத்துக்கு வராதே.."

"கூறு கெட்டவளே.. நீ இன்னைக்கு மாப்பிள்ளைகிட்ட இப்படி பேசினன்னு உன் பெரியப்பனுக்கும்.. அப்பனுக்கும் தெரிஞ்சா என்ன ஆகும்ன்னு தெரியுமா..?"

"அதுக்காக.. எனக்குப் பிடிக்காத.. நான் பயப்படுகிற காட்டில் போயி என்னால வாழ்க்கை நடத்த முடியுமா..?"

"அப்புறம் எதுக்குடி கல்யாணத்தை பண்ணிக்கிட்ட..?"

கோசலை எரிச்சலுடன் கேட்ட அந்தக் கேள்வியை.. அன்று இரவில் விவேக் அவளிடம் கேட்டான்..

## அத்தியாயம்- 39

"சொல்லு ரம்யா.. நான் பாரெஸ்ட் ஆபிசர்ன்னு உனக்கு நல்லாவே தெரியும்.. அதைத் தெரிஞ்சிருந்தும்.. காட்டைப் பிடிக்காத நீ.. ஏன் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட..?"

இரவின் தனிமையில்.. பூட்டிய அறைக்குள் புருவங்கள் முடிச்சிட.. இறுக்கமான முகத்துடன்.. கடினமான குரலில் அவன் கேட்டபோது.. அவளுக்கு பேச இயலவில்லை..

கண்கலங்க.. முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

அவன் அருகில் வந்து அவள் முகத்தை முரட்டுத்தனமாக பற்றி அவன் பக்கம் திருப்பினான்..

முதலிரவில் அவன் பிடித்த அதே முரட்டுத் தனமான பிடி..

ஆனால் அன்று அவன் காட்டிய முரட்டுத்தனத்தில் தாபம் இருந்தது.. இன்றோ.. மிதமிஞ்சிய கோபம் தான் தெரிந்தது..

"சொல்லுடி.."

"எதைச் சொல்ல..?"

"ஏன்.. என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட..?"

"ஏன்னா.. ஏன்னா.."

அவள் சொல்ல முடியாமல் தடுமாற.. அவன் அதட்டினான்..

"சொல்லுடி.. ஏன் மென்னு முழுங்கற..? உன் பாட்டி தான் சூப்பர் பாட்டி.. நீ காட்டைப் பத்தி வாயை விட்டதும் உடனே பேச்சை மாத்தி அதை அமுக்கிட்டாங்க.. ஆனா உன் தாத்தா அப்படியில்ல.. அவருக்கு பெயருக்கு ஏத்தமாதிரி வெள்ளை மனசு.. தனியாய் கூப்பிட்டுக்கிட்டுப் போய் வாயைக் கிளறினேன்.. மனுசன் எல்லாத்தையும் கொட்டிட்டார்.."

ரம்யா அவனைப் பார்க்க முடியாமல் தன் விரல் நகங்களை ஆராய்ச்சியாய் பார்த்துக் கொண்டிருந்தாள்..

"நீ சின்ன வயசில் ஸ்கூல் பிக்னிக் போயிருக்க.. அப்ப காட்டில் வழிதவறிப் போய் மாட்டிக்கிட்ட.. கொஞ்ச நேரத்தில் உன்னை உன் ஸ்கூலைச் சேர்ந்தவங்க கண்டு பிடிச்சுக் கூப்பிட்டுக்கிட்டு வந்திட்டாங்க.. ஆனா.. அப்போதிருந்து உனக்கு காடுன்னா பயம்.. அப்படித்தான.."

அவள் மௌனம் சாதித்தாள்..

"காட்டைப் பற்றிப் பேசினாக் கூட நீ பயப்படுவ.. அப்படியிருக்கிறப்போ.. ஏன் என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்ச..?"

"எனக்குத் தெரியாது.." ரம்யா சொல்லி விட்டாள்..

"வாட்..?" அவன் புருவங்களை உயர்த்தினான்..

"நீங்க பாரெஸ்ட் ஆபிசர்ன்னு எனக்குத் தெரியாது.. எங்க வீட்டிலேயும்.. யாரும்.. என்கிட்ட இதைப் பத்திச் சொல்லலை.."

"ரம்யா.." அவன் அதிர்ச்சியுடன அவளைப் பார்த்தான்.. அவளின் இந்தப் பதில் அவனை ஏதோ ஒருவகையில் தாக்கியது..

அவளைப் பெண் பார்த்த தினத்திலிருந்து.. காதலிக்க ஆரம்பித்தவன் அவன்..

அவளது ஒவ்வொரு அசைவிலும் கவிதையைக் கண்டவன்..

எப்போது திருமண நாள் வரும் என்று எதிர் பார்த்திருந்து அவளைக் கைபிடித்தவன்..

அவளைப் பெண்டாட்டியாக்கிக் கொண்டபின் இந்த மூன்று நாள்களிலும் ஆயுள் முழுவதற்குமான வாழ்க்கையை அவளோடு வாழ்ந்து விட்டவன்..

அவளை முழுவதுமாக அறிந்து கொண்டபின் இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்கும்போது அவனுக்கு அவனது காதலின் அடிப்படையே தகர்வதைப் போல இருந்தது..

"என்ன..? நான் பாரெஸ்ட் ஆபிசர்ன்னு உனக்குத் தெரியாதா..? தெரிஞ்சிருந்தா என்னைக் கல்யாணம்

பண்ணிக்கிட்டிருக்க மாட்டாயா..?"

"ஆமாம்.. நீங்க பெண் பார்க்க வருகிற விவரமே எனக்குத் தெரியாது.. நீங்க தனியாப் பேசனும்னு சொல்லி.. எங்கிட்ட வந்து பேசினாப்போதான் எனக்கே அது தெரியும்.." அவளது வார்த்தைகளில் இருந்த உண்மையைத் தான் அவன் அறிவானே..

"ம்ம்.. அப்புறம்..?"

அவன் அவளைப் பேசத் தூண்டினான்..

பேசட்டும்.. பேசிப்பேசி.. அவள் மனதிலிருக்கும் எண்ணங்களை வெளியில் கொட்டட்டும்.. அதற்குப் பின்னால் இந்தப் பிரச்சனையை எப்படிக் கையாள்வது என்ற முடிவிற்கு வரலாம் என்று அவன் நினைத்தான்..

அவளும் அப்படித்தான் பேச ஆரம்பித்திருந்தாள்.. தனக்குள்ளே இருந்து கொன்று தின்று கொண்டிருந்த காட்டைப் பற்றிய பயத்துடன் போராடிக் கொண்டிருந்தவள்.. கொட்டும் நீர்வீழ்ச்சியாக அவள் மனதிலிருப்பதை கொட்ட ஆரம்பித்தாள்..

"நீங்க பெண் பார்த்துட்டு சம்மதம்னு சொல்லிட்டுப் போயிட்டிங்க.. எங்க வீட்டில் கல்யாண வேலைகளை ஆரம்பிச்சுட்டாங்க.."

"உன்கிட்ட சம்மதம் கேட்கலையா..?"

"என்கிட்டன்னு இல்லை.. எனக்கு முதலில் பிறந்த என் அண்ணன்களிடமும்.. அக்காவிடமும்.. இந்தக் கேள்வியை எங்க வீட்டில் கேட்டதே இல்லை.."

அவனுக்குத்தான் அது தெரியுமே.. பெண் பார்த்த அன்றே ரம்யா அதைப் பற்றி கோடிட்டுக் காட்டியிருந்தாளே..

"நல்ல குடும்பம்.. பல்கலைக்கழகம்.." என்றான் கிண்டலான குரலில்..

இதுவே வேறொரு சமயமாக இருந்தால்.. ரம்யா எப்படி என் குடும்பத்தைப் பற்றி.. நீங்க கிண்டலடிக்கப் போயிற்று

என்று வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்கு கிளம்பியிருப்பாள்..

ஆனால்.. அப்போது இருந்த மனநிலையில் அவள் அதைப் பொருட்படுத்தவே இல்லை..

சொல்ல வேண்டியதைச் சொல்ல வேண்டிய அவசியத்தில் இருந்ததால் மேற்கொண்டு சொல்ல ஆரம்பித்தாள்..

## அத்தியாயம்- 40

"கல்யாணப் பத்திரிக்கை அச்சிட்டு வந்த பின்னாலதான் எனக்கே உங்க வேலையைப் பத்தி தெரியும்.. பத்திரிக்கையில நீங்க ஐ.எப்.எஸ். படிச்சிருக்கிங்கன்னு போட்டிருந்தது.. நீங்க பாரெஸ்ட் ஆபிசரா வேலை பார்க்கறீங்கன்னும் போட்டிருந்தது.."

"ம்ம்ம்.."

"அதைப் பார்த்ததும் ஷாக்காயிட்டேன்.. அப்பத்தான் எங்க குடும்பத்தில் யாரும் சொல்லாத வார்த்தய நான் சொன்னேன்.."

"என்ன சொன்ன..?"

"எனக்கு இந்தக் கல்யாணத்தில விருப்பமில்லன்னு சொன்னேன்.. கல்யாணத்தை நிறுத்திருங்கன்னு சொன்னேன்.."

இதைக் கேட்டதும் விவேக்கின் கண்கள் கோபத்தில் நெருப்புக் துண்டுகளாக ஜொலித்தன..

அவனைப் பார்க்க நினைத்து ரம்யா மாடிப் பால்கனியில் எட்டிப் பார்த்த அந்த நாள் அவனுக்கு நினைவிற்கு வந்தது..

அவனைப் பார்த்தே மயக்கியவள்.. அவனுடனான திருமணத்தில் விருப்பமில்லையென்று சொல்லியிருக்-

கிறாள்.. அந்தத் திருமணத்தை நிறுத்தி விடவும் துணிந்திருக்கிறாள்..

இதைக் கேட்க நேர்ந்து விட்ட கொடுமையில் அவன் பல்லைக் கடித்தான்..

"இவ்வளவு நடந்திருக்கு.. இதை உன் வீட்டில் மறைத்து உன்னை.. என் தலையில் கட்டி வச்சிருக்காங்க.. அவங்களை என்ன செய்தால் தேவலாம்..?"

அவள் பதில் சொல்லவில்லை..

இப்படிப் பட்ட கேள்வியை எதிர் நோக்க வேண்டி வரும் என்பதை அவள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை..

அவள் குடும்பத்தை எந்த வகையில் தண்டிப்பது என்று அவளிடமே ஆலோசனை கேட்டால்.. அவள் தான் என்ன பதிலைச் சொல்லுவாள்..?

"ஏண்டி பேசாமல் நிக்கிற..? பேசு.. நீ இப்படியெல்லாம் பேச.. நான் அதைக் காது கொடுத்து கேட்கனும்கிறது என்னோட விதி.. நீ நடத்து.. ஏன் நிறுத்திட்ட..?"

"பெரியப்பா சத்தம் போட்டார்.. குடும்பத்திலேயே இல்லாம இது என்ன புதுப்பழக்கம்ன்னு கேட்டார்... பத்திரிக்கை அடிச்சு.. குலதெய்வம் கோவில்லயும் வைச்சாச்சு.. இந்தச் சமயத்தில் இப்படிப் பேச உனக்கு எப்படித் துணிச்சல் வந்ததுன்னு கோவிச்சுக்கிட்டார்.."

"ம்ம்ம்.."

"அப்பா அடிச்சுட்டார்.."

இதைக் கேட்ட விவேக்கிற்கு மனம் வலித்தது..

அவனுக்காக.. அவனைத் திருமணம் செய்து கொள்வதற்காக போராடி.. அவள் அடிவாங்கியிருந்தால்.. அது அவனுக்குப் பெருமையாக இருந்திருக்கும்..

அப்படியில்லாமல் அவனுடனான திருமணத்தை நிறுத்தப்போராடி.. அவள் அடிவாங்கியிருக்கிறாள் என்ற செய்தி அவனுக்கு பெருமையளிப்பதாக இல்லையே..

அவன் அவளையே இமைக்காமல் பார்க்க.. அவள் அவனது பார்வையைத் தவிர்த்தாள்..

"வீட்டில் யாரும் என்கிட்டப் பேசலை.. பெரியண்ணன் முதலில் என்னைச் சமாதானப்படுத்த வந்தார்.. நான் பிடிவாதமாக இருந்தேன்.. என்கிட்டப் பேச முடியாம போயிட்டார்.."

"ஓஹோ.."

"அப்புறமாய் சின்ன அண்ணன் வந்துச்சு.. அது வந்து ஒன்னைச் சொன்னது.. நான் கதிகலங்கிப் போயிட்டேன்.. என்னால் அதைக் கேட்டபின்னால கல்யாணத்தை நிறுத்தச் சொல்லி பிடிவாதம் பிடிக்க முடியலை.."

"என்ன சொன்னார்..?"

"அது.. அது வந்து.."

"அதுதான் இவ்வளவு தூரத்துக்கு கொண்டு வந்திட்டயே.. அப்புறமும் எதுக்கு மென்னு முழுங்கற..? சொல்லித் தொலை.."

"சின்ன அண்ணன் என்ன சொல்லிச்சுன்னா.. இந்தக் கல்யாணத்தை நிறுத்திட்டா.. அதே முகூர்த்தத்தில் எனக்கு வேற மாப்பிள்ளையோட கல்யாணத்தை பண்ணி வச்சிருவாங்கன்னு சொல்லுச்சு.."

"என்னது..?"

விவேக் ஆச்சரியத்தோடு ரம்யாவை உற்றுப்பார்த்தான்.. அவளோ.. அவனுடைய பார்வையை உணராதவளாக.. யுகேந்திரன் பேசிய அந்த நாளின் நினைவுகளில் இருந்தாள்..

"என்னால அதை நினைச்சுக் கூடப் பார்க்க முடியல.. அண்ணன் போன பின்னால யோசிச்சுப் பார்த்தேன்.. அது தான் நடக்குமுன்னு எனக்கு நிச்சயமாத் தெரிஞ்சு போச்சு.. என்னைக்கிருந்தாலும்.. என்னை யாராவது ஒருத்தருக்கு கல்யாணம் பண்ணி வைக்காம என் வீட்டில் விடமாட்டாங்க.. நான் கல்யாணமே பண்ணிக்காம இருக்கனும்னு

நினைக்கிறது சாத்தியப்படாத விசயம்ன்னு எனக்குப் புரிந்து போச்சு.."

அவளது பேச்சு உணர்த்திய செய்தியை அவள் புரிந்து கொள்ளவில்லை.. அதை புரிந்து கொண்டவனோ.. அவனது மனதில் ஏற்பட்டிருந்த எரிச்சல் மறைந்தோட.. அவளையே ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்..

"என்னால எப்படி இன்னொருத்தனுக்கு பெண்டாட்டியாக முடியும்..?"

அதுவரை அவள் மீதும்.. அவளது காட்டைப் பற்றிய பயத்தை மறைத்து திருமணம் செய்து வைத்த அவளது குடும்பத்தின் மீதும்.. எல்லையற்ற கோபத்துடன் இருந்த விவேக்.. அதையெல்லாம் மறந்தே போய் விட்டான்..

அவளால் அவனை விட்டு இன்னொருவனை மனதாலும் நினைக்க முடியாதாமே..

## அத்தியாயம்- 41

"நான் ஒரு முடிவுக்கு வந்தேன்.."

ரம்யாவின் குரலில் தீர்மானம் தெரிந்தது.. விவேக் அவள் முகத்தையே பார்த்த வண்ணம் குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டிருந்தான்..

"வீட்டுக்கு வந்திருக்கிற புது விருந்தாளி யாருன்னு பார்க்கத்தான் நான் மாடி பால்கனியிலிருந்து எட்டிப் பார்த்தேன்.. நீங்க புதுசாய் காரில இருந்து இறங்கினீங்க.. என்னைப் புதுசாய் பார்த்தீங்க.. கடைசில பாத்தா நீங்க.. என்னைப் பொண்ணு பார்க்க வந்திருந்தீங்க.."

அந்த நாளின் நினைவில் விவேக்கின் கண்களில் மின்னல் வந்திருந்தது..

"எனக்கு உங்களைப் பிடிச்சுப் போயிருச்சு... நீங்க பெரியப்பாவும்... அப்பாவும் தேர்ந்தெடுத்த

மாப்பிள்ளைங்கிறதால இன்னும் கொஞ்சம் அதிகமாகவே பிடிச்சுப் போயிடுச்சு.."

விவேக் கைகளை முன்னால் மடித்துக் கட்டிக் கொண்டு.. அவளையே கூர்மையாக பார்த்துக் கொண்டிருந்தான்..

"நீங்க.. நான் ஆசைப்பட்ட மாப்பிள்ளை.. அதே சமயம் என் வீட்டில் எனக்காக பார்த்து வைச்ச மாப்பிள்ளையும் நீங்க தான் சந்தோசப்பட்டேன்.. ரொம்பவும் சந்தோசப்பட்டேன்.. யாருக்கு அமையும் இதைப் போல வாழ்க்கைன்னு மகிழ்ந்து போயிட்டேன்.. நினைச்ச வாழ்க்கை அமைகிறது வரம்.. அதுவும்.. பெண்ணாய பிறந்த ஜீவன்களுக்கு.. அது பெரிய வரம்.. அந்த வரம் எனக்குக் கிடைச்சிருக்குன்னு கர்வப்பட்டு விட்டேன்.."

விவேக்கின் கண்களில் சிறிய சலனம் வந்து போனது.

"நான் பூமியில் நடக்கலை.. வானத்தில் மிதந்தேன்.. காற்றில் பறந்தேன்.. உங்ககூட வாழப் போகிற வாழ்க்கையைப் பத்தி ஆயிரம் கனவு கண்டேன் ராத்திரியில் இந்த வீடே உறங்கும்.. நான் உறங்குவதில்லை.. ராத்திரி நேரத்து ரகசியக் கனாக்களைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்..?"

அவளது ராத்திரி நேரத்து ரகசியக் கனவுகளின் கதாநாயகனைப் பார்த்து அவள் அந்தக் கேள்வியைக் கேட்டாள்..

அவன் பதில் சொல்லவில்லை.. அவனது பார்வையின் கூர்மையும் குறையவில்லை..

"என் உயிரில் கலந்த உங்களுக்கு.. என் ரத்தத்தில் ஊறியிருக்கும் காட்டைப் பற்றிய பயத்தைப் பற்றி எதுவும் தெரியாது.." அவள் குமுறினாள்..

"நீ சொல்லலை..?" அவன் மௌனத்தை கலைத்தான்..

"என் கிட்டயும் நீங்க உங்க வேலையைப் பத்திச் சொல்லலை.."

"இது கூடத் தெரியாம ஒருத்தி எனக்கு கழுத்தை நீட்டத் தயாராவான்னு எனக்குத் தெரியாதுடி.."

"எனக்கு உங்களைத்தான் தெரியும்.. உங்களைப் பத்தி மத்த எதையும் தெரிஞ்சுக்க நான் விரும்பலை.."

இது மிகப்பெரிய கொடுப்பினை.. அவனது படிப்பைப் பற்றி.. வேலையைப் பற்றி.. சொத்து சுகத்தைப் பற்றி.. பின்புலத்தைப் பற்றி.. அறியாமல்.. அறிய விரும்பாமல்.. அவனை.. அவனுக்காகவே விரும்பி.. ஒரு பெண் தன் வாழ்க்கையை அவனுடன் பிணைத்துக் கொள்ள முன் வருவது..

அப்படியொரு கொடுப்பினை அமையப் பெற்றதில் விவேக்கின் ஆண்மை கர்வம் கொண்டது..

"இதில் நான் குற்றவாளியாடி..? பெரிய படிப்பு படிச்சு.. பெரிய வேலையில் இருப்பது குற்றமா..? உன் காட்டைப் பற்றிய அபத்தமான பயத்தைப் பற்றி நான் யோசிச்சுக் கூட பார்த்ததில்லை.. இப்படியும் ஒரு பயம் இருக்குமுன்னு எனக்கு எப்படி டீ தெரியும்..?"

"இது உங்களுக்கு அபத்தமா இருக்கலாம்.. எனக்கு உங்களைப் போல.. யோசிக்கவும்.. பேசவும்.. தெரியாது.. எனக்கு காடுன்னா பயம்.. காட்டில் வேலை பார்க்கிற ஆபிசரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு.. காட்டிலேயே குடியிருக்கிற வாழ்க்கை.. எனக்கு அமையும்ன்னு நான் கனவிலும் எதிர்பார்க்கலை.. இது தான் விதி.."

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதை விதி செய்த சதின்னு சொல்றியா..?"

"உங்களைப் போல ஒரு பேச்சில் ஓராயிரம் அர்த்தம் கண்டுபிடிக்க என்னால் முடியாது.. உங்களைக் கல்யாணம் பண்ணிக்க முடியாதுன்னு மறுத்தா.. வேற மாப்பிள்ளைக்கு கட்டி வச்சிருவோம்ன்னு என் அண்ணன் சொன்னான்.. உங்களைத் தவிர வேற ஒருத்தனை எனக்கு புருசனா.. நினைச்சுக்கூட பார்க்க என்னால் முடியலை..

அதனாலதான் நான் இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிச்சேன்.."

"சம்மதிச்சு கல்யாணம் பண்ணிக்கிட்டவ.. ஏண்டி.. முதல் ராத்திரியில இருந்தே என்கூட சண்டையிழுக்க அலைகிற..?"

"ஆமாம்.. நான் சண்டைக்குத்தான் அலைகிறேன்.."

ரம்யா நிதானமாக.. ஆனால்.. அழுத்தமான குரலில் விவேக்கை நேருக்கு நேராகப் பார்த்துச் சொல்ல.. அதை எதிர்பார்த்தவனைப் போல.. அதே அழுத்தத்துடன் அவள் பார்வையை எதிர்கொண்டான் விவேக்..

"நினைச்சேண்டி.."

"உங்க நினைப்பு சரிதான்.. நான் உங்களிடம் சண்டையிலுக்கனும்னுதான் முதல் நாளில் இருந்து முயற்சி செய்கிறேன்.."

"இது எதுக்கு..?"

"அப்பத்தானே.. நான் உங்ககிட்ட கோவித்துக்கிட்டு என் அப்பாவீட்டிலேயே இருக்க முடியும்..?"

விவேக்கின கண்களில் மீண்டும் மின்னல் வந்தது.. அவன்கூட இதை யூகிக்கவில்லை.. ரம்யாவின் திட்டத்தைக் கேட்டவனுக்கு அதை நம்பக்கூட முடியவில்லை..

## அத்தியாயம்- 42

கடைசியில் பூனைக்குட்டி வெளியில் வந்து விட்டது.. விவேக் வாயைத் திறந்து எதைச் சொன்னாலும்.. அதில் குற்றம் கண்டு பிடித்து அவனது புதுமனைவி அவனுடன் மல்லுக்கு நின்றது ஏன் என்று அவனுக்குத் தெரிந்து விட்டது..

'இப்படியும் ஒரு பெண் இருப்பாளா..?'

அவன் நம்ப முடியாத பார்வையொன்றை அவள் மேல் வீசினான்..

அவளுக்கு அவன் வேண்டும்.. ஆனால் அவன் வேலை பார்க்கும் காடு வேண்டாம்..

அந்தக் காட்டிற்கு அவனோடு குடித்தனம் பண்ணப் போயாக வேண்டிய கட்டாயத்தை தவிர்க்க.. அவள்.. அவனோடு சண்டைக்கு நின்றிருக்கிறாள்..

எதற்காக..?

அவனுடன் கோவித்துக் கொண்டு.. பிறந்த வீட்டிலேயே தங்கிவிட வேண்டும் என்பதற்காக..

அவனைத் தவிர வேறு யாரையும் மணக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டு விடாமலிருக்க.. அவனையே திருமணமும் பண்ணிக்கொண்டு.. அவனோடு காட்டுக்குள் செல்லும் நிர்பந்தம் ஏற்பட்டு விடாமலிருக்க.. அவனுடன் சண்டைகளை உருவாக்கியிருக்கிறாள்..

ரம்யா பிறந்து.. வளர்ந்ததெல்லாம் கிராமத்தில்.. அங்கே.. வீட்டுக்கு வீடு.. திருமணமாகி புகுந்தவீட்டிற்குப் போகும் பெண்கள்.. கணவனுடன் கோவித்துக் கொண்டு பிறந்த வீட்டிற்கு வரும் கதைகள் உண்டு..

கணவனுடன் வாழாமல் பிறந்த வீட்டில் இருக்க நேர்ந்தாலும்.. அவனின் பிரிவைத் தாங்கிக் கொண்டு.. வாழும் கொடுமை நேர்ந்தாலும் அதைக் கூடத் தாங்கிக் கொள்வேன்.. ஆனால் அவன் வேலை பார்க்கும் காட்டிற்கு மட்டும் போகமாட்டேன் என்ற அவளது பிடிவாதத்தை எண்ணிய அவனது உதடுகள் ஓர்விதமாக மடிந்து மடங்கின.

"ஸோ.. நீ என்னுடன் நான் வேலைபார்க்கும் இடத்திற்கு வரமாட்டாய்..?"

"வரமாட்டேன்.."

"அதற்காக என்கூட சண்டை போட்டுக்கிட்டு உன் அப்பா வீட்டிலேயே இருக்க முடிவு செய்து விட்டாய்.."

"ஆமாம்.."

"உன்னைப் புத்திசாலின்னு நினைச்சேன்... கடைசியில் நீ இவ்வளவுதானா ரம்யா..?"

அவள் புரியாமல் விழித்தாள்..

"உன் பெரியப்பாவோ கண்டிப்புக்காரர்.. உன் அப்பாவும் அவருடைய அண்ணனின் வழியில்தான்.."

"அதுதான் ஊருக்கே தெரியுமே.."

"உனக்குத் தெரிய மாட்டேன்கிறதே.."

"வம்புக்கு வருகிறீங்களா.."

"ஏண்டி.. நீயே வம்புக்கு அலைகிறவன்னு உன் வாயாலே ஒப்புக்கிட்ட.. அதுக்கு பின்னாலயும் உன்கூட வம்பு வளர்க்க எனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு..?"

'அதுதானே..'

"நீ என்கூட கோவித்துக்கிட்டு உன் அப்பா வீட்டிலேயே இருந்துவிட்டால்.. உன் பெரியப்பாவும்.. அப்பாவும்.. சும்மா விட்டு வைப்பாங்களா..? என் கூட சமாதானம் பேச வரமாட்டாங்களா..?"

'அட.. ஆமாம்.. இதை எப்படி மறந்து போனேன்..'

ரம்யா திருதிருவென விழித்தாள்..

புண்ணியகோடி அப்படிச் செய்கிறவர்தான்.. மகளைத் திருமணம் செய்து கொடுத்த போது அவர் ராதிகாவிற்கு கூறிய முதல் அறிவுரையே.. அவள் தனியாக பிறந்த வீட்டிற்கு வரக்கூடாது என்பதுதான்..

"இதோ பார் ராதிகா.. நம்ம அத்தையின் வீடுதானேன்னு அதிகமா நீ சலுகை எடுத்துக்கக் கூடாது.. எப்ப நீ அப்பா வீட்டுக்கு வந்தாலும் உன் புருசனோடதான் வரனும்.. தனியா வந்தா என் வீட்டுக் கதவு உனக்காக திறக்காது.."

பெற்ற மகளையே அத்தனை கண்டிப்புடன் பேசியவர்.. தம்பியின் மகளிடமும் அதே கண்டிப்பை நிச்சயமாகக்

காட்டுவார்..

கூடப் பிறந்த அக்காவிடமே.. மகளுக்காக பேச முனையாதவர் விவேக்கை பெற்றவர்களிடம் நிச்சயம் பேசமாட்டார்..

"அதுக்காக உங்க கூட காட்டுக்குள் வருவேன்னு மட்டும் கனாக் காணவேண்டாம்.. அது நிச்சயம் நடக்காது."

"சரி.. கனாக் காணலை.. நீயே கனாக் காணு.. எனக்கென்ன போச்சு.. நீ என்கூட தாராளமா சண்டையை இழு.. கோவிச்சுக்கிட்டு உன் பிறந்த வீட்டிலேயே இரு.. ஆனா.. உன் வாழ்க்கையைக் காப்பாத்துன்னு உன் அப்பாவும் பெரியப்பாவும் என் காலில் விழுந்தால் என்னைக் குற்றம் சொல்லாதேம்மா.. இதுக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை.. சொல்லிட்டேன்.."

"என்னது.. என் அப்பாவும்.. பெரியப்பாவும் உங்க காலில் ஏன் விழுகனும்..?"

"எனக்கு மட்டும்.. என் மாமனாரையும்.. பெரிய மாமனாரையும் என் காலில் விழ வைக்கனும்ன்னு ஆசையா..? நீ பிறந்த வீட்டிலேயே 'வாழாவெட்டியாய்..' உட்கார்ந்திருந்தா அப்படித்தானேடி செய்வாங்க.."

"என்னது வாழா வெட்டியா..?"

"அப்புறம்.. வாழும் வெட்டியா..? திட்டம் போட்டு என்னைக் கல்யாணம் பண்ணிட்டு.. என்கூட வாழ வராமல் உன் அப்பா வீட்டிலேயே டேரா போடுவ.. உன்னை எல்லோரும் என்கூட வாழ்கிறேன்னா சொல்வாங்க..? வாழாவெட்டின்னுதான் சொல்வாங்க.."

ரம்யாவின் முகத்தில் திகைப்பு தெரிந்தது..

## அத்தியாயம்- 43

"உன் வீட்டிலே இருக்கிறவங்க முகத்திலே தெரிகிற சந்தோசத்தை பார்த்தியா..? ம்ம்.. உன்னைப் போல ஒருத்தியை மகளாப் பெத்தவங்களுக்கு அந்த சந்தோசம் எப்படி நிலைக்கும்..?"

ரம்யா கலவரமடைந்தாள்..

"இந்த ஊருக்குள்ள உன் கல்யாணத்தைப் பத்தி உன் வீட்டாளுக பெருமையா பேசியிருப்பாங்க.. நீ புருஷன் வீட்டுக்கு வாழப் போகாமல் உன் வீட்டிலேயே இருக்கிறதைப் பத்தித் தெரிஞ்சா இந்த ஊராளுக.. உன் வீட்டைப் பத்தி எப்படிப் பேசுவாங்களோ.. ம்ம்.. உன்னைப் போல பெண்ணைப் பெத்தா.. அப்படிப் பேச்சையெல்லாம் அவங்க கேட்க வேண்டியதுதான்.."

ரம்யாவிற்கு திகில் பிடித்துக் கொண்டது..

"ஊரு வீட்டுக்கெல்லாம் உன் பெரியப்பா பஞ்சாயத்து பண்ணுவாராமே.. உன் கதையைப் பத்தி தெரிஞ்ச பின்னால.. யாரு அவரை பஞ்சாயத்துக்கு கூப்பிடுவாங்க..?"

ம்ஹூம்.. உன்னை வளர்த்த கொடுமைக்கு அவர் மரியாதைதான் பாதிக்கப் படனுமா..?

ரம்யாவின் கண்கள் அச்சத்தில் விரிந்தன..

"பிள்ளைகளை வளர்த்தா.. புண்ணிய கோடியும்.. பொன்னம்பலமும் வளர்க்கிறதைப் போல வளர்க்கனும்ன்னு ஊரில் பெருமையாய் பேசிக்குவாங்களாமே.. அப்படியா..? ம்ஹூம்.. இனிமேல் உங்க வீட்டில பிள்ளை வளர்த்ததைப் போல வளர்த்துடக் கூடாதுன்னுதான் பேசிக்குவாங்க.."

ரம்யா உதட்டைக் கடித்தாள்..

"எனக்கொன்னுமில்லைம்மா.. இதுக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமுமில்லைன்னு நான் சொல்லிட்டேன்.."

விவேக் கட்டிலில் படுத்துக்கொள்ள.. ரம்யா ஜன்னலில் சாய்ந்து வானத்தை வெறித்துக் கொண்டிருந்தாள்..

நிழலோவியம் போல அசையாமல் நின்று கொண்டிருந்தவளின் உருவம் வரிவடிவம் போலத் தெரிய.. விவேக் எழுந்துகொண்டான்..

அழுத்தமான காலடிகளுடன் அவளை அணுகினான்.

"ரம்யா.."

அவன் கைகள் அவளை வளைத்து தன் பக்கமாக திருப்பின.. அந்த இருளிலும்.. அவளது விழி நீரின் பளபளப்பை அவன் கண்டான்..

"முட்டாள்.. அழுகிறாயா..?"

அவள் தாள முடியாமல் விசும்பினாள்.. அவன் அவளை மார்பில் சாய்த்துக் கொண்டு முதுகில் தட்டிக் கொடுத்தான்..

"இதெல்லாம் நடக்கும்ன்னுதான் சொன்னேன்.. இதையெல்லாம் நடக்க விட்டிருவேன்னு நான் சொன்னேனா..?"

"உங்ககூட காட்டுக்கு வரமாட்டேன்.."

"சரி.. காட்டுக்கு வரவேண்டாம்.."

"அப்புறம் எப்படி நீங்க சொன்னதெல்லாம் நடக்காமல் போகும்..?"

"நீ இங்கே இருந்தால்தானே.. இதெல்லாம் நடக்கும்..?"

"நான் தான் உங்க கூட காட்டுக்கு வரமாட்டேனே.."

"ஆனா.. என் வீட்டுக்கு வரலாமே.."

ரம்யாவிற்கு எதுவோ.. புரிவதைப் போல இருந்தது.. அவள் கணவனின் முகத்தை குழப்பத்துடன் பார்த்தாள்..

அவன் பிரியத்துடன் அவளது கண்ணீரைத் துடைத்து விட்டான்..

"மக்கு.. இப்படி வா.."

அவளை கைபிடித்து கட்டிலுக்கு அழைத்து வந்து பக்கத்தில் அமர்ந்து கொண்டான்.. அவளது விரல்களை வருடியவாறு

பேச ஆரம்பித்தான்..

"காட்டிலே இருக்கிறது கவர்ன்மென்ட் குவார்ட்டர்ஸ்.. சென்னையில இருக்கிறது தான் என் சொந்தவீடு.. நீ வாழ வேண்டிய புகுந்த வீடு.."

"அப்படின்னா..?"

"நீ அம்மா, அப்பாவோட சென்னையில இரு.."

"அப்ப நீங்க..?"

"டிரான்ஸ்பருக்கு டிரை பன்றேன்.. அது கிடைக்கிறவரைக்கும் பத்து நாளைக்கு ஒருதரம் உன்னை வந்து பார்த்துட்டுப் போறேன்.."

"நிஜமாத்தான் சொல்கிறீங்களா..?"

"ம்ஹும்.. பொய்யாய் சொல்கிறேன்.."

அவன் விளையாட்டாய் அவள் தலையில் குட்டினான்.

ரம்யாவின் மனதில் எழுந்த நிம்மதியுணர்வு அளவிட முடியாததாக இருந்தது.. அவள் முன்னால் பூதாகரமாய் எழுந்து நின்று பயமுறுத்திய பிரச்சனைகள் பனிபோல மறைந்து விட்டதில் அவள் மனம் லேசாகி விட.. அவன் மேல் சரிந்தாள்..

"உன் வீட்டில் இதைப்பற்றி பேச வேணாம் ரம்யா.."

"ஏன்..?"

"அவங்ககிட்ட நம்ம பிரச்சனையை கொண்டு போகனும்கிற அவசியமென்ன இருக்கு..? இது நம்ம பிரச்சனை.. நாமளே பார்த்துக்கலாம்.. ஊடே உன் வீட்டாளுகளோ.. என் வீட்டாளுகளோ வரவேண்டாம்.."

"சரி.."

"அம்மா.. அப்பாவிடமும் இதைப் பத்தி உடனே சொல்ல மாட்டேன்.. அம்மாவுக்கு நான் தனியா.. சரியான சாப்பாடில்லாம கஷ்டப்படுறேன்னு வருத்தம்.. அதனால.. உன்னை விட்டு விட்டுப் போகிறதை ஆட்சேபிப்பாங்க.."

ரம்யா குற்ற உணர்வுடன் அவனைப் பார்த்தாள்..

"அதனால.. நான் கிளம்புகிறப்போ.. உன்னை சென்னையிலேயே விட்டுப் போகிறதைப் பத்திப் பேசறேன்.. இப்ப வேணாம்.. சரியா.."

"சரி.."

அதற்குமேல் அவன் பேசாமல்.. அவளை அருகில் இழுத்துக் கொண்டான்..

இரண்டு நாள்களாக அவளாக வலியப் போட்டுக் கொண்டிருந்த பொய் முகமூடி கழன்று விழுந்து விட்டதால்.. ரம்யாவின் உணர்வுகள்.. கனன்று எழுந்தன..

அவள் பொங்கி வரும் நதியைப் போல.. அவனுடன் கலந்துவிடத் துடித்து.. தழுவிக் கொண்டாள்..

எந்த வித மனத் தடைகளும் இல்லாமல்.. ரம்யா அவனுடன் ஒன்றிப் போனாள்.. அந்த இரவு மட்டுமல்ல.. அடுத்தடுத்த இரவுகளிலும் அவனது அனுசரனை தொடர்ந்தது..

ஒருவார காலம் ஓடிவிட்டது.. மறுவீட்டு விருந்து முடிந்தது.. அவர்கள் சென்னைக்கு திரும்ப வேண்டிய நாளும் வந்துவிட்டது..

## அத்தியாயம்- 44

வீட்டில் ரம்யாவின் திருமணத்திற்கு முதல்நாள் நிலவிய பரபரப்பு நிலவியது.. வீடே கல்யாணக் கோலம் பூண்டிருந்தது.. நெங்கிய உறவினர், வீட்டுப் பெண்கள்.. புண்ணியகோடியின் வீட்டுச் சமையலறையில் குழுமியிருந்தார்கள்.. எல்லோரும்.. சேலையின் முந்தானையையும்.. கொசுவத்தையும் இழுத்துச் செருகிக் கொண்டு ஆளுக்கொரு வேலையில் இயல்பாக ஈடுபட்டிருந்தார்கள்..

சமையலறையிலிருந்து நெய்வாசனையுடன் கூடிய விதவிதமான பலகாரங்களின் வாசனைகள் காற்றில் மிதந்து வர.. விவேக் ஆச்சரியத்துடன் அந்த வாசனையை நுகர்ந்தான்..

"என்னடி ரம்யா.. வீடு பூராவும் ஆளா நிறைஞ்சிருக்கு.. ஆளுக்கொரு பலகாரத்தை செய்துகிட்டு இருக்காங்க.. உன் பெரியப்பா.. மரக்கடையோடு ஸ்வீட் ஸ்டால் ஒன்றையும் திறக்கலாம்கிற ஐடியாவோட இருக்கிறாரா..?"

கேள்வி கேட்டவனை ரம்யா முறைத்தாள்.. அவன் சிரித்தான்..

"ஏன் பேச மாட்டீங்க..? இத்தனை பலகாரமும் உங்க வீட்டுக்காகத் தானே ரெடியாகுது..?"

"எங்க வீட்டுக்கா..? எங்க வீட்டிலிருக்கிறவங்க இந்த பலகாரத்தையெல்லாம் ஒரு வருசத்துக்கு வைத்துச் சாப்பிடலாம் போல இருக்கே.. நெய்யில் செய்தது.. கெடாதில்ல..?"

"உங்க புத்தியிருக்கே.. சரியான சாப்பாட்டுராமன்.."

"அடேங்கப்பா.. உன் பெரியப்பாவும்.. அப்பாவும்.. அண்ணன்களும் சாப்பிடவே மாட்டாங்க.. மூக்கில் வைத்து வாசம் பிடிச்சுட்டு.. அப்படியே எழுந்துக்குவாங்க.. போடி.. அவங்க சாப்பாட்டை வெட்டுகிற வெட்டைத்தான் தினமும் பார்க்கிறேனே.."

"எங்க வீட்டை ஒன்னும் குறை சொல்ல வேணாம்.."

"இது குறையில்லடி ரம்யா.. உண்மை.."

"இவரு பெரிய உண்மை விளம்பி.."

"பின்னே.. இல்லையா..? நான் யாரு..?"

விவேக் காலரைத் தூக்கி விட்டுக் கொள்ள.. ரம்யா காதலுடன் அவனைப் பார்த்தாள்.. அவனது சட்டையின் காலர் பகுதியைக் கொத்தாகப் பிடித்துத் தன் பக்கமாக இழுத்தான்..

"என் புருசன்.." என்று கிறக்கத்துடன் சொன்னாள்..

விவேக் அயர்ந்துவிட்டான்.. ரம்யா காட்டிய அந்த அதீத நெருக்கத்திற்கு தன்னை விருப்பத்துடன் ஆட்படுத்திக் கொண்டான்.. விழி மூடி அவனது தோளைக் கைகளால் வளைத்து.. அவன் முகத்தை தன்னை நோக்கி இழுத்துக் கொண்டிருந்த ரம்யாவின் முகத்தில் அவளது கிறக்கம் தெளிவாகத் தெரிந்தது..

விடியலின் அருகிலே இருந்த அந்த மார்கழி மாதத்தின் குளிர்காலப் பொழுதில் அவள் காட்டிய அந்த நெருக்கமும்.. இணக்கமும் விவேக்கை எங்கேயோ அழைத்துச் சென்றன..

அவளது உடலில் பொங்கிய உணர்வலைகள்.. அவனது உடலிலும் பரவிப் படர்ந்தன.. அவன் வேட்க¡யுடன் அவளை இழுத்தான்..

அணை உடைந்த வெள்ளமாக அவளை ஆக்கிரமித்தான் விவேக்..

சூரிய வெளிச்சத்தின் கதிர்கள் அறைக்குள் பரவி.. அவன் முகத்தைத் தொட்டு எழுப்பிய போது.. அணிச்சையாக அவனது கரங்கள் பக்கத்தில் தேடின..

படுக்கை காலியாக இருக்க கண்விழித்து எழுந்து அமர்ந்தான்..

அதிகாலையின் நினைவில்.. அவனது உடல் சூடேறியது.. காபியின் மனம் அறைக்குள் கமழ ஆரம்பிக்கத் திரும்பிப் பார்த்தான்..

காபியுடன் அறைக்குள் வந்தவள்.. குளித்து முடித்து.. புதுமலராக நின்றிருந்தாள்.

"ஏய்ய்.. வாடி.."

அவள் நீட்டிய காபியை புறக்கணித்து அவளுக்காக கை நீட்டினான் விவேக்..

"ஊஹும்.." அவள் இடைவெளிவிட்டுத் தள்ளி நின்றாள்..

"ரம்யா.. ஐ நீட் யு.."

"ம்த்சு.. சீக்கிரமாய் குளித்து ரெடியாகுங்க.."

"குளிக்கலாம்.. குளிக்கலாம்.. கிட்டே வா.."

"முடியாதே.. நான் உடனே கீழே போகனுமே.."

"ரம்யா.."

அவன் குரலில் தெரிந்த தாகம் அவளைத் தொட்டு இழுக்க.. அவள் இயலாமையுடன் அவனைப் பார்த்தாள்..

"கீழே எல்லோரும் கிளம்பிட்டாங்க.. உங்களுக்காக காத்துக்கிட்டு இருக்காங்க.."

"எதுக்கு..?"

"நாம இன்னும் கொஞ்ச நேரத்தில் சென்னைக்கு கிளம்பனும்.. பலகாரக் கூடை.. சீரெல்லாம்.. லாரியில் ஏத்திட்டாங்க.. மறந்துருச்சா..?"

அவனுக்கு மறந்துதான் விட்டது.. அன்று மாலைக்குள் அவர்கள் சென்னைக்கு திரும்பிவிட வேண்டும்.. முதல் நாள் இரவுதான் அதைப்பற்றி.. கோபாலனிடமும்.. காயத்ரியிடமும் பேசியிருந்தான்..

"எல்லாம் உன்னால்தான்.." அவன் காபியை உறிஞ்சியபடி அவளை ஒரு மார்க்கமாகப் பார்த்தான்..

"நான் என்ன பண்ணினேனாம்..?" அவன் பார்வையில் முகம் சிவந்தவள் கேட்டாள்..

"தெரியாதா..?"

"தெரியாது.."

"நான் சொல்லவா..?"

"ரம்யா.."

"ம்ம்ம்.."

"ஐ.. லவ் யு.."

காதலுடன் சொன்னவனை... நேருக்கு நேராகப் பார்த்த ரம்யாவின் விழிகளில் அதே காதல் தெரிந்தது..

"ஐ லவ் யுடு.."

குளிப்பதற்காக சோப்.. டவலுடன் அவன் குளியலறைக்குள் புகுந்து கொள்ள.. அவர்களுடைய பொருள்களை பெட்டிகளில் அடுக்கிக் கொண்டிருந்த ரம்யாவின் மனம் காதலினால் கனத்தது..

'இவனைப் பிரிந்து.. சென்னையில் எப்படி இருப்பேன்..?'

## அத்தியாயம்- 45

"வாங்க.. வாங்க.."

கார்களும்.. லாரிகளும்.. வீட்டிற்கு முன்னால் தெருவில் வரிசையாக நிற்பதை பெருமையுடன் பார்த்தபடி அனைவரையும் வரவேற்றாள் காயத்ரி..

புண்ணிய கோடியின் குடும்ப அங்கத்தினர்கள் அனைவருமே ரம்யாவின் புகுந்த வீட்டை பார்க்கும் ஆவலில் கிளம்பி விட்டார்கள்.. இருக்கும் ஒரு கார் போதாதென்று இரண்டு வாடகைக் கார்களையும் வரவழைத்திருந்தார் புண்ணியகோடி..

"என்னடி ரம்யா இது.. உங்க வயலில் இருக்கிற கொக்கு.. நாரைகளைத் தவிர.. மத்தவங்க எல்லோரும் நம்மகூட வருகிறதைப் போல இருக்கே.."

கேள்வி கேட்ட கணவனை முறைத்தாள் ரம்யா..

"உங்களுக்கு அதில என்ன வருத்தம்..?"

"இல்லடி.. நம்ம காரில உங்க அப்பா, அம்மாவும் தொத்திகிட்டா என்ன செய்கிறதுன்னு யோசிக்கிறேண்டி.."

"இதில யோசிக்க என்ன இருக்கு..?"

"நிறைய இருக்கு.."

"அதில ஒன்னை அள்ளி விடுங்களேன்.."

"உதாரணமா என் கார் அடிக்கடி மக்கர் பண்ணி ரோட்டில் நின்னுவிடும்.."

அவனது பார்வை அவளையே ஊடுருவ.. ரம்யா கிளர்ச்சியுற்றாள்.. அந்தப் பார்வை உணர்த்திய செய்தியை இப்போதைய ரம்யாவினால் புரிந்து கொள்ள முடிந்தது..

"நின்னா.. நிற்கட்டுமே.. அவங்க உங்களை

என்ன பண்ணப்போறாங்க..? தேமேன்னு காருக்குள் உட்கார்ந்திருக்கப் போகிறாங்க..?"

அறியாதவளைப் போல அவள் சொன்னாலும்.. அவளது கண்களில் தெரிந்த விசமம் அவளைக் காட்டிக் கொடுத்தது..

"அதுதானே விசயம்.."

"என்ன விசயம்..?"

"தேமேன்னு அவங்க உட்கார்ந்திருப்பாங்க.. என்னால உட்கார்ந்திருக்க முடியாதே.."

அவன் அவளை நெருங்கி தன் கைவளைவிற்குள் அவளைக் கொண்டுவர.. அவளுக்குள் அவன் மீது எல்லையற்ற காதல் பொங்கியது.. அவளை இறுக்கி அவன் வாசம் பிடித்த போது விலகிக் கொள்ளாமல் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்..

விவேக்கின் கணிப்பின்படி.. அவனது காரில் யாரும் ஏறிக்கொள்ளவில்லை.. அவனுக்கும்.. ரம்யாவுக்கும் தனிமையைக் கொடுத்து மற்ற கார்களில் அவர்கள் நிரம்பிக் கொண்டார்கள்..

"எங்க காரில் யாராவது வரலாமே.." மரியாதையின் பொருட்டு விவேக் சொன்னான்..

"எங்களுக்கு அது வசதிப் படாது மாப்பிள்ளை.. நாங்க பேசிக்கிட்டே வருவோம்.. உங்க கூட என்னத்தைப் பேசறது..?"

கோசலை தன் இங்கிதத்தை வெளிப்படுத்த.. ரம்யா புறங்கையால் விவேக்கை இடித்தாள்..

"சும்மா சொல்லக் கூடாதுடி ரம்யா.. உன் பாட்டி நிஜமாவே சூப்பர் பாட்டிதான்.." விவேக் சிலாகித்துக் கொண்டான்..

வழியில் மரத்தடியைக் கண்டபோதெல்லாம் விவேக்கின் கார் நிழலுக்காக ஓரம் கட்டியது..

"பெரியப்பாவும், அப்பாவும் என்ன நினைச்சுக்குவாங்க..?"

ரம்யா சிணுங்கினாள்..

"அவங்க நினைக்கிறதுக்கு என்ன இருக்கு..? நான்தான் முன் ஜாக்கிரதையா.. நம்ம காரை அணிவகுப்பிற்கு பின்னாலேதானே ஓட்டிக்கிட்டு வர்றேன்.."

விவேக் சிரித்தான்.. அவனது கைகள் எல்லைமீறி அவள்மீது படர்ந்து பரவின.. ரம்யா அவன்காட்டிய வேகத்தில் தன்னை மறந்து மூழ்கினாள்.. மூச்சுத் திணறினாள்..

"ஹப்பா.. இப்படி ஆட்டம் போட்டா.. கட்டுபடியாகாது.." ரம்யா போலியாக அலுத்துக் கொண்டாள்..

"இதிலெல்லாம் அளவுகோடே கிடையாதுடி.. எதுவுமே கட்டுப்படாமல் கரையுடைக்கிறது தான்.." அவன் மூச்சுக் காற்றின் வெப்பம் அவளது கன்னத்தைச் சுட்டது..

சென்னையில் பிறந்த விட்டினர் மகிழ்வுடன் சீர் வரிசைகளை இறக்கி வைப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த ரம்யாவின் மனம் நெகிழ்ந்தது..

சீர் செய்வதில் இத்தனை சந்தோசமா..?

வீட்டை நிறைத்த சீர் வகைகளைக் கண்ட காயத்ரியின் மனம் குளிர்ந்தது..

'பரவாயில்லை.. நிறைவா சீர் செய்திருக்காங்க..'

## அத்தியாயம்- 46

அலைகள் கொஞ்சிய அக்ஷ்டலட்சுமி கோவில்.. ஒவ்வொரு சன்னதியாக வேண்டி.. அக்ஷ்டலட்சுமிகளின் அருளைப் பெற்றுக் கொண்ட பின்னர் விவேக்கும் ரம்யாவும் கடலோரமாக அமர்ந்தனர்..

"இன்னும் இரண்டு நாளில் நான் கிளம்பனும்.."

விவேக்கின் தோளில் தலைசாய்ந்து அமர்ந்திருந்த ரம்யாவின் உடல் தூக்கிப் போட்டது.. இனிய கனவு கலைந்த உணர்வுடன் அவள் கணவனைப் பார்த்தாள்..

"அதுக்குள்ள போகனுமா..?"

"ஆமாம் ரம்யா.."

"இன்னும் கொஞ்சநாள் என்னோட இருங்களேன்.."

"முடியாதே.. லீவு முடிஞ்சுருச்சும்மா.."

"நான் என்ன உங்க அம்மாவா.."

"ஓ.கே.. லீவு முடிஞ்சுருச்சுடி.. போதுமா..?"

ரம்யாவிற்கு அது போதவில்லை.. அவள் கணவனின் அருகில் நெருக்கமாக அமர்ந்து கொண்டாள்.. அந்த நெருக்கத்தை அன்று முழுவதும் காண்பித்தாள்..

"விடேண்டி.."

இரவில் தன்னுடன் அவனை இறுக்கிக் கொண்டவளிடமிருந்து விலக முயற்சித்தான் விவேக்..

அவள் விடவில்லை.. விட்டால் அவன் பறந்து விடுவானோ என்ற பயத்துடன் அவனை இறுக்கி அணைத்துக் கொண்டாள்.

அன்று இரவு கனவு வந்தது.. கனவில் அவள் மலையுச்சியில் நிற்கிறாள்.. தொலைவில் விவேக்

நிற்கிறான்.. அவனை நோக்கி அவள் ஓட முனையும் போது பனிமூட்டம் அவனைச் சூழ்ந்து மறைத்துக் கொள்கிறது..

"என்னங்க.."

ரம்யா அலறி எழுந்தாள்.. அருகில் படுத்திருந்த விவேக் பதறி எழுந்தான்.. விளக்கைப் போட்டான்..

உடல் நடுங்க அமர்ந்திருந்த ரம்யாவைப் பார்த்ததும் புருவம் உயர்த்தினான்..

"என்ன ரம்யா..? என்னடி..?"

அவள் பதில் பேசாமல் அவனை இறுக்க கட்டிக் கொண்டாள்.. அவளது உடலின் நடுக்கத்தை அவனால் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிந்தது..

"எனக்கு பயமாயிருக்கு.."

"ச்சீ.. அசடு.. நான் உன் பக்கத்திலிருக்கும் போது உனக்கு என்ன பயம்..?"

அவளைச் சமாதானப்படுத்த அவன் முயல.. அவளோ அவனுடன் ஒன்றிக் கொண்டாள்..

"நீங்கதான் என்னை விட்டுட்டு ஊருக்குப் போயிடுவீங்களே.."

சட்டென்று அவளை இனம்கண்டு கொண்டான் விவேக்.. அவனை விட மறுத்து மடியிலேயே அவள் தூங்கிவிட.. அவள் முகத்தையே பார்த்தபடி வெகுநேரம் தூங்காமல் அமர்ந்திருந்தான் விவேக்..

அவள் முகத்தில் தெரிந்த மென்மை கலந்த குழந்தைத்தனம்.. அவன் மனதைத் தொட்டது.. அவன் முகத்தில் சிந்தனை படர்ந்தது..

அதிகாலையில் எழுந்துவிட்ட விவேக்.. தூக்கத்திலும் அவனை இறுக்கிக் கொண்டு படுத்திருந்தவளின் மலர்கரத்தை தள்ளி வைத்து விட்டு எழுந்தான்.. அவளது நெற்றியில் சின்னதாக முத்தத்தை பதித்துவிட்டு அறையை விட்டு வெளியேறினான்..

காபி கலந்து கொண்டிருந்த காயத்ரி மகனைக் கண்டதும் ஆச்சரியப்பட்டாள்..

"என்னடா.. நீ வந்திருக்க..?"

"ஏன்.. நான் வரக்கூடாதா..?"

"ரம்யா எங்கே..?"

"அவ வந்தால் தான் காபி தருவீங்களா..?"

"போடா மடையா.. எங்கே அவளைக் காணோம்ன்னு ஒரு பேச்சுக்குக் கூட கேட்கக் கூடாதா..?"

"அவ தூங்கறா.. எழுந்திருக்கிறதுக்குள்ள உங்ககிட்டயும்.. அப்பாகிட்டயும் முக்கியமான விசயத்தை நான் பேசணும்.."

"என்னடா..?"

மகனின் முகத்திலிருந்த தீவிரத்தைக் கவலையுடன் பார்த்த காயத்ரி வினவினாள்.. அவன் ஆழ்ந்த குரலில் பேசப்பேச.. அவள் முகம் மாறியது..

"என்ன விவேக்.. என்னென்னவோ சொல்கிற..? இதையெல்லாம் ஏன் எங்ககிட்ட முன்னாடியே நீ சொல்லலை..?"

"எனக்கே கல்யாணமாகி இரண்டு நாள் கழித்துத்தான் தெரியும்மா.."

காயத்ரி கவலை தோய்ந்த முகத்துடன் கணவரைத் தேடிச் சென்றாள்..

ரம்யா.. மாடியிலிருந்து அவசரமாக இறங்கி வந்தபோது.. கோபாலன் விவேக்குடன் தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருந்தார்.. அவளைக் கண்டதும் பேச்சை நிறுத்தி விட்டு லேசாக சிரித்தார்..

அந்தச் சிரிப்பில் இனம் காண முடியாத எதுவோ ஒன்று ரம்யாவின் அறிவிற்கு புலப்பட்டது.. இருந்தாலும் அதை மறைத்துக் கொண்டு பதிலுக்கு மரியாதையான ஒரு சிரிப்பை உதிர்த்துவிட்டு நகர்ந்தாள்..

## அத்தியாயம்- 47

மாலை நேரக் காற்று ஜன்னல் வழியாக உடலை வருட.. ரம்யா குளிர் கொண்டவளாக சேலை முந்தானையை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்..

"ஹப்பா.. என்ன குளிர்..?" அவள் சிலிர்த்துக் கொண்டாள்..

காரை ஓட்டிக் கொண்டிருந்த விவேக் அவளைத் திரும்பிப் பார்த்துச் சிரித்தான்..

"மார்கழி மாதமில்லையா.. அப்படித்தான் இருக்கும்.."

"திடீர்ன்னு நீங்க ஹனிமூனுக்கு கிளம்புன்னீங்களா.. திக்கு முக்காடிப் போயிட்டேன்.."

"ஏன்..?"

"ஆக்சுவலா.. நாளைக்குக் காலையில் நீங்க கிளம்பிப் போயிருவீங்கன்னுதான் நினைச்சுக்கிட்டு இருந்தேன்.."

விவேக் அவளைத் திரும்பிப் பார்த்தான்.. அவன் பார்வையில் இருந்த ஏதோ ஒன்று அவள் கவனத்தில் பட்டது..

'மாமாவும்.. காலையில் இதைப் போலத்தானே சிரிச்சு வைச்சார்..?'

"என்னங்க..?"

அவள் புரியாதவளாக அவனிடமே வினவினாள்.. அதற்குள் அவன் முகம் சகஜ நிலைக்கு திரும்பி விட்டிருந்தது..

"எப்படி உன்னை விட்டுட்டு போகிறது..? ராத்திரி பூராவும் நீ தூங்கலையே ரம்யா.."

அவன் கனிவாகக் கூற.. ரம்யாவின் முகம் வெட்கத்தில் சிவந்தது..

"அது.. சும்மா.. கனவு.."

"கனவுகூட ஏன் வந்தது..?"

"அதுக்காகத்தான் இந்த ஹனிமூன் டிரிப்பா..?"

"ம்ம்ம்.. லீவை எக்ஸ்டென் பண்ணிட்டேன்.. இனிமேல் உன்கூடத்தான் இருக்கப் போறேன்.."

"எத்தனை நாள்தான் நீங்க இப்படி லீவுலேயே இருக்க முடியுமாம்..?"

"ஏன் அப்படிச் சொல்கிற..?"

"என்னைக்காவது ஒருநாள் லீவு முடிஞ்சு வேலைக்குப் போய்த்தானே ஆகனும்..?"

"அதை.. அன்னைக்குப் பார்த்துக்கலாம்.."

"இப்ப எங்கே போகிறோம்..?"

அவள் இருள் கவியத் தொடங்கியதைப் பார்த்துக் கொண்டேகேட்டாள்..

"ஹனிமூனுக்கு.." அவன் மையலுடன் சிரித்தான்..

"அதுதான் எங்கே..?" அவள் செல்லமாக சிணுங்கினாள்..

"அது.. அங்கேதான்.." அவன் கொஞ்சலாகக் கூறினான்..

"சொல்லாட்டிப் போங்க.."

அவள் தற்போது அவன் அருகிலிருக்கும் நிம்மதியுடன் கண்மூடி அவன் தோளில் சாய்ந்தாள்..

எதிர்பாராமல் நிகழ்ந்திருக்கும் இந்த இனிய திருப்பத்தில் அவள் மனம் அமைதியடைந்திருந்தது..

"நாம ஹனிமூனுக்குப் போகிறோம் ரம்யா.."

அன்று காலையில் அவன் திடுதிப்பென்று அறிவித்தபோது.. அவளால் நம்பவே முடியவில்லை..

"நீங்க நாளைக்கு ஊருக்கு கிளம்பனுமே.."

"இன்னைக்கு சாயங்காலமே ஹனிமூனுக்கு கிளம்பறோமே.."

"ஊருக்கு..?"

"போகலை.."

அவளுக்காக.. அவளுடைய நிம்மதிக்காக.. அவளது உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவன் தனது பயணத்தை தற்காலிகமாக தள்ளிப் போட்டதில் ரம்யா நெகிழ்ந்து விட்டாள்..

அவளுடைய பெட்டிகளையெல்லாம் விவேக் காரில் தூக்கி வைத்தபோது..

"எதுக்குங்க..?" என்று கேட்டாள்..

"ஒரு மாசம் லீவு போட்டிருக்கேன்.. உன் கூட நிறைய நாள் ஸ்பெண்ட் பண்ணனும்னு பிளான்.." என்றான் விவேக்

ரம்யா மறுத்துப் பேசவில்லை.. அவர்கள் கிளம்புகின்ற நேரம் வந்தபோது.. காயத்ரி அவளை அணைத்துக் கொண்டாள்..

"இன்னும் நீ குழந்தையில்லை ரம்யா.."

எதற்காக காயத்ரி இந்த வார்த்தைகளைச் சொல்கிறாள் என்று ரம்யாவிற்கு புரியவில்லை.. இருந்தாலும் தலையை ஆட்டிவைத்தாள்..

"சரிங்க அத்தை.."

"விவேக்கை உன்னை நம்பித்தான் அனுப்புகிறேன்.. அவன் இனிமே உன் பொறுப்பு.. எது நடந்தாலும்.. அவனை முறைச்சுக்காம.. அனுசரனையாய் நடந்துக்க.."

இந்த வார்த்தைகளைத்தான்.. ரம்யாவின் வீட்டில் அவளைப் பெற்றவங்களும்.. கூடப்பிறந்தவங்களும்.. விவேக்கைப் பார்த்துச் சொன்னார்கள்..

அதே வார்த்தைகள் தன்னை நோக்கித் திரும்புவதைக் கண்ட ரம்யாவிற்கு தலையும் புரியவில்லை.. வாலும் புரியவில்லை..

"ஆகட்டும் அத்தை.." என்று மட்டும் சொல்லிவிட்டு விடைபெற்றுக் கொண்டு கணவனின் அருகில் காரில் ஏறி அமர்ந்தாள்..

அன்றைய இரவு உணவை வழியில் ஏதோ ஒரு ஊரில் ஹோட்டலில் முடித்துக் கொண்டார்கள்.. மெல்ல விழி சொக்க.. கணவனின் தோள் மீது சாய்ந்து தூங்கிப் போனாள் ரம்யா.. அவள் விழித்துப் பார்த்தபோது.. அவளுக்கு காயத்ரியின் வார்த்தைகளுக்கான அர்த்தம் புரிந்தது..

## அத்தியாயம்- 48

கன்னத்தில் விவேக்கின் கைவிரல்களில் ஸ்பரிசம் பட அந்த ஸ்பரிசத்தில் உடல் சூடேறினவளாக கண் விழித்தாள் ரம்யா..

கண் விழித்துப் பார்த்தவளின் முன்னால் காடு தெரிந்தது.. அடர்ந்த காடு.. ஆனால் இருள் சூழ்ந்து நிற்காமல்.. பசுமையாக.. காலை நேரத்தின் பறவைகளின் இனிமையான குரலொலியுடன்.. அழகாக இருந்தது..

ரம்யாவின் விழிகளில் தொற்றிக் கொண்டிருந்த கொஞ்ச நஞ்ச தூக்கமும் பறந்தோட.. தூக்கக் கலக்கம் முற்றிலும் அகன்றவளாக அவள் இமைகளைக் கொட்டி.. அதிர்ச்சியுடன்.. எதிரே தெரிந்த காட்டைப் பார்த்தாள்.. பின் கணவனைப் பார்த்தாள்..

அவள் விழிகளில் தெரிந்த அப்பட்டமான அதிர்ச்சியையும்.. திகைப்பையும்.. கண்டும்.. காணாதவனைப் போல சாதாரணமான குரலில் விவேக் பேசினான்..

"இறங்கு ரம்யா.. இன்னும் தூக்கம் போகலையா..? நம்ம வீட்டுக்கு வந்திட்டோம்.. வா.. வீட்டுக்குள் போய் தூங்கிக்கலாம்.."

'நம் வீடா..?'

கண்ணுக்கு முன்னால்.. அந்தக் காட்டுக்குள் தெரிந்த அழகான.. பங்களாவைப் போன்ற அமைப்புடன் கூடிய அந்த வீட்டைப் பார்த்தாள் ரம்யா..

அடுத்தடுத்து.. சிறிய இடைவெளியில் அதைப் போல அளவில் பெரியதாக இல்லாமல்.. அளவில் சிறியதாக சில வீடுகள் இருந்தன.. அவற்றில் ஆள்களின் நடமாட்டமும் இருந்தது..

"நாம எங்கே வந்திருக்கிறோம்..?"

காரை விட்டு இறங்கிய ரம்யாவின் குரலில் உக்ஷ்ணம் தெரிந்தது.. அதற்குள்.. இரண்டு மூன்று ஆள்கள் வேகமாக காருக்கு அருகில் ஓடி வரவும் அவள் பேச்சை நிறுத்திக் கொண்டாள்..

"வணக்கம் சார்.. பிரயாணம் சௌகரியமாக இருந்துச்சுங்களா..? வணக்கம் மேடம்.."

முகம் நிறைய சிரிப்புடன் வினவியவனிடம் பதிலுக்கு சிரித்தபடி பெட்டிகளை எடுத்து அவனிடம் கொடுத்தான் விவேக்..

"நீ எப்படி இருக்க ராமு..?"

"அதுதான் பார்க்கறீங்கள்ல..? உங்களைப் பார்க்காம ஒரு சுற்று இளைச்சுப் போயிருக்கேன்.."

"நானென்ன உனக்கு பெண்டாட்டியா...? உன் பெண்டாட்டியைப் பார்க்கலைன்னாத்தான் நீ இளைக்கனும்.. என்ன சோமு.. நான் சொல்றது சரிதானே.."

"சரிதானுங்க ஐயா.." என்ற அந்த சோமுவின் முகத்தில் ராமுவைப் போன்ற சிரிப்பில்லை..

ஆனால் அளவுக்கு அதிகமான மரியாதை இருந்தது.

"நீங்க இன்னைக்கு வர்றதா நேத்து தகவல் சொன்னீங்களா..? உடனே வீட்டைச் சுத்தம் பண்ணி ரெடியா வச்சிருக்கேன்.."

"வெரிகுட் ராமு.. இரண்டு மாதமா லீவில் போயிட்டேனா.. வீடு தூசியும் ஒட்டடையுமா இருந்திருக்கும்.."

"இலையையும்.. தழையையும் விட்டுட்டிங்களே.. இந்தக் காட்டுக்குள்ள அதுக்குத்தான் பஞ்சமில்ல.."

ராமு வெள்ளையாகச் சிரித்தபடி ரம்யாவைப் பார்க்க அவளது உடல் நடுங்கியது..

'காடு..'

எந்தக் காட்டைப் பற்றிய பயம் ரம்யாவை இரவும் பகலுமாக துரத்தியதோ.. அந்தக் காட்டிற்குள் அவள் நின்று கொண்டிருந்தாள்..

எந்தக் காட்டைப் பற்றி நினைக்கக் கூட அவள் அஞ்சினாளோ.. அந்தக் காட்டிற்குள்ளேயே அவளது கணவனுடன் வாழ்க்கை நடத்த வேண்டிய கட்டாயத்தில் அவள் மாட்டியிருந்தாள்..

எந்தக் காட்டுப் பக்கம் போவதைத் தவிர்த்து வீட்டுக்குள்ளேயே ரம்யா பதுங்கிக் கொண்டிருந்தாளோ.. அந்தக் காட்டிற்குள் அவளுக்கே தெரியாமல் அழைத்து வரப்பட்டிருந்தாள்..

அக்கம் பக்கம் குடியிருந்த அனைவரும் விவேக்குடன் வேலை செய்து கொண்டிருந்தவர்களின் குடும்பங்கள் என்பதால் அவர்கள் எல்லோரும் வந்து விட்டார்கள்..

"சேர்ந்து நில்லுங்க.." ஒரு பெண் ஆரத்தி எடுத்தாள்..

"வலது காலை எடுத்து வைத்து உள்ளே வாம்மா.."

இன்னொரு பெண் அழைத்தாள்..

கடைசியில் விவேக் வேலைபார்த்த காட்டிற்குள் சென்று விட்ட ரம்யா.. கவர்ன்மென்ட் அவனுக்காக கொடுத்த வீட்டிற்குள் காலடி வைத்து விட்டாள்..

வந்திருந்த பெண்கள் இயல்பாக சமையலறைக்குச் சென்று பாலைக் காய்ச்சி.. அவர்களுக்கு காபி போட்டுக் கொடுத்தார்கள்..

"என்னங்க.. உங்க ஆபிசர் அழகான பெண்டாட்டியை கல்யாணம் பண்ணிக்கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்கார்.."

"ம்ஹும்.. அவரு புத்திசாலிடி.. கல்யாணி.. என்னைப் போல வீட்டில் பார்த்தா சரின்னு தலையாட்டி வைக்கல.."

"உங்களை..! இருங்க.. வீட்டுக்கு வாங்க பேசிக்கிறேன்.."

"ஏங்க.. உங்க ஆபிசர் சம்சாரம் வாயைத்திறந்து பேசாதுங்களா..? வந்ததில் இருந்து பார்க்குறேன்.. அம்மணி.. வாயைத் திறப்பேனான்னு அடம் பிடிக்குதுங்களே.."

"அது ஒண்ணுமில்லடி சுந்தரி.. எங்கே வாயைத் திறந்தா உன் கொங்குத் தமிழுக்கு இணையா பேச முடியாதேன்னு பயப்படறாங்க.. வேற ஒண்ணுமில்ல.. நீ இப்போதைக்கு அவர்களை விட்டுடு.. பின்னால பார்த்துக்கலாம்.. உன் கொங்குத் தமிழுக்கு பயந்து அவங்களால எங்கே ஓடிற முடியும்..? சுத்திச் சுத்தி.. இந்தக் காட்டுக்குள்ள தான் வந்தாகணும்..?"

"வீட்டுக்கு வாங்கத்தான்.. அங்க இருக்கு.. உங்களுக்கு.."

"காபியை குடிக்கச் சொல்லுங்க ஆபிசர் சார்.. நான் போட்ட காபியை குடிக்க உங்க வொய்ப் இத்தனை பயம் பயப்படுகிறாங்க.."

"அதானே.. உன் கை வண்ணத்தைப் பத்தி நான் வெளியே மூச்சுக் கூட விட்டதில்லையே நளினி.. அப்புறம் எப்படி இவங்க காபியைக் குடிக்க.. இந்த பயம் பயப்படுகிறாங்க.."

"அடேங்கப்பா.. என் கைவண்ணமில்லாமத்தான்.. என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டப்போ.. ஒட்டடைக் குச்சியைப் போல இருந்தவரு இப்போ.. பயில்வானைப் போல ஆகியிருக்கீங்களாக்கும்.. வீட்டுக்கு வாங்க.. இதைப் பத்திப் பேசி.. ஒரு முடிவெடுக்கலாம்.."

பெண்கள் அனைவரும் சமையலறைக்குள் முறைப்பாக போய்விட ஆண்கள் அனைவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்..

"என்னடா சமுத்திரம் இப்படி ஆகிப்போச்சு.."

"அதானே.. உன் பெண்டாட்டியும்.. என் பெண்டாட்டியும் நம்மள வீட்டுக்கு வரச் சொல்லி எச்சரிக்கை பண்ணியிருக்கிறாங்களே.."

"என்னை விட்டுட்டீங்களேப்பா.. என் பெண்டாட்டி மட்டும் வீட்டுக்குப் போனா.. கொஞ்சவா போறா..?"

அதைக் கேட்டுக் கொண்டிருந்த விவேக் வாய்விட்டுச் சிரித்தான்..

"இவ்வளவு பயமிருக்கிறவங்க அடக்கி வாசிச்சிருக்கனும்.. அதை விட்டுட்டு நான் கூட இருக்கிற தைரியத்துல வாயை விட்டிருக்கக் கூடாது.."

"என்னவோ.. எங்க ஆபிசர் எங்களைக் காப்பாத்திற மாட்டாரான்னு ஒரு பேராசையில பேசிட்டோம் சார்.."

"அப்ப அனுபவிங்க.."

அவர்கள் பேசிக் கொண்டிருந்ததைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் தன் போக்கில் ஜன்னலுக்கு அந்தப் பக்கமாய் தெரிந்த காட்டைப் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் ரம்யா..

"என்னங்க உங்களைத்தானே.."

"நான் வாயைத் திறக்கவே இல்லையே கல்யாணி.."

"உளறினது போதும்.. அதை நிறுத்திட்டு.. உங்க ஆபிசருக்கு காலை டிபன் நம்ம வீட்டிலிருந்து வந்துரும்ன்னு சொல்லிருங்க.."

"ஆமாம் சார்.. கல்யாணி அருமையா டிபன் பண்ணுவா.. இன்னைக்கு காலைல எங்க வீட்டு டிபனைத்தான் நீங்க சாப்பிடனும்.."

மனைவியின் முகத்தைப் பார்த்தபடியே கூறிய சமுத்திரத்தை கல்யாணி கனிவுடன் பார்த்தபடி வெளியேற..

'அப்பாடி.. இனி.. நிம்மதியா வீட்டுக்குப் போகலாம்..' என்று பயம் தெளிந்தான் சமுத்திரம்..

"என்னங்கோ.."

"சொல்லு சுந்திரி.."

"உங்க ஆபிசருக்கும் அம்மணிக்கும்.. மதியச் சாப்பாடு நம்ம வீட்டுல தானுங்கோ.. டாண்ணு ஒரு மணிக்கெல்லாம் சாப்பாடு வந்துருமுன்னு சொல்லிப் போடுங்கோ.."

"சொல்லாமல் விடுவேனா..? ஆபிசர் சார்.. எங்க சுந்தரி சமைச்சா.. எட்டூருக்கு மணக்கும்.. கொங்கு தமிழில் மட்டுமில்லாம கொங்கு நாட்டு சமையலிலும் என் பெண்டாட்டி எக்ஸ்பர்ட் சார்.."

இப்படிச் சொன்ன ரகுபதியை காதலுடன் பார்த்த சுந்தரி.. "வீட்டுக்கு வாங்கோத்தான்.." என்று சொல்லி விட்டுப் போக.. பயம் விலகியவனாக.. அவளை அவசரமாக பின் தொடர்ந்தான் ரகுபதி..

"நைட் டின்னர் நம்ம வீட்டில இருந்துதான் வரும்ன்னு சார்கிட்ட சொல்லிருங்க.."

"அதானே.. நளினி போடுகிற காபி முன்னே பின்னே இருந்தாலும்.. சமையலில் அவளை அடிச்சுக்க ஆள்கிடையாது ஆபிசர் சார்.. நைட் டிபன் எங்க வீட்டில்தான்.."

இப்படிச் சொன்ன சுந்தரமும்.. மனைவியின் கருணைக்கு ஆளாகித் தப்பித்தான்..

## அத்தியாயம்- 49

எல்லோரும் சென்ற பின்னால் தனித்து விடப்பட்ட விவேக் எழுந்து ரம்யாவை நெருங்கினான்.. அவன் அருகில் வரும் உணர்வே இல்லாமல் அவள் கலவரத்துடன் வெளியே தெரிந்த மரங்களின் மேல் பார்வையைப் பதித்திருந்தாள்..

மெதுவாக அவள் தோள் தொட்டான் விவேக்.. உடல் தூக்கிப் போட விதிர்த்து திரும்பிப் பார்த்த ரம்யா அவன் கைகளைத் தட்டிவிட்டு விலகி நின்றாள்.. அவள் விழிகளில் எல்லையற்ற வெறுப்பு தெரிந்தது..

"என்னைத் தொடாதீங்க.." அவள் சீறினாள்..

அவளது கோபத்தை எதிர்பார்த்தவன் போல அவன் நிதானமாக விலகி நின்றான்.. அவனது அந்த நிதானம் அவளது கோபத்தை அதிகப்படுத்தியது..

"கடைசியில் நினைத்ததை செய்துட்டிங்கல்ல.."

"இதையே நானும் சொல்லலாமில்ல..?"

"நீங்க.. என்னைக் குற்றம் சொல்வீங்களா..?"

"ஆமாம்.."

"என்னைக் குற்றம் சொல்ல என்ன இருக்கு..?"

"என்ன இல்லை..?" உனக்கு காட்டைப் பத்தி இவ்வளவு பயமிருந்தும் ஏன் காட்டில் வேலை பார்க்கிறவனை கல்யாணம் பண்ணிக்கிட்ட..?

"எனக்குத்தான் உங்க வேலையைப் பத்தி எதுவும் தெரியாதே.."

"தெரிஞ்ச பின்னால கல்யாணத்தை நிறுத்த வேண்டியதுதானே..?"

"அப்படி நிறுத்தினாத்தான் வேற ஒருத்தனுக்கு கழுத்தை நீட்ட வேண்டிவரும்ன்னு என் சின்ன அண்ணன் பயமுறுத்திருச்சே.."

அதைக் கேட்டவனின் மனம் மிருதுவானது.. அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் கடினமான முகத்துடன் அவளை கடிந்து கொண்டான் அவன்..

"அது உன் பிரச்னை.. அதைப் பற்றி எனக்கென்ன கவலை..? என்கூட நான் வேலை பார்க்கிற இடத்துக்கு வந்து குடும்பம் நடத்த முடியாதவ ஏன் என்னை ஏமாற்றிக் கல்யாணம் பண்ணிக்கிட்டே..? இதுதான் என் கேள்வி.. இதுக்கு முதலில் பதிலைச் சொல்லு.."

"அது.. அது.."

"ஏய்ய்.. உன் திட்டமெல்லாம் உனக்கு நியாயமாய் இருக்கும்டி.. எனக்கு அதில துளியாவது நியாயம் காட்டினாயா..? இவளுக்கு காட்டைக் கண்டால் பயமாம்.. ஆனா.. காட்டில் வேலை பார்க்கிற பாரெஸ்ட் ஆபிசர் மேல இக்ஷ்டமாம்.. அதனால அப்படியொரு பயமிருக்கிறதை மறைச்சு கல்யாணம் பண்ணிக்குவாளாம்.. அப்புறமாய் அவன்கூட வேணுமின்னே சண்டை வளர்த்து.. பிறந்த வீட்டிலேயே இருந்துக்குவாளாம்.. தாலி கட்டியவன் கேணயனைப் போல தனியா காட்டில குடித்தனம் பண்ணுவானாம்.. பயங்கரமான கெட்டிக்காரிடி நீ.. ஆனா நீயொன்னைத் தெரிஞ்சுக்கலை.. நான் கேணயனில்ல.. உனக்கு தாலியக் கட்டிட்டு.. உன் அப்பன் வீட்டுல விட்டுட்டு.. நான் தனியா இந்தக் குவார்ட்டர்ஸில குடித்தனம் பண்ணினா.. என்கூட வேலை பார்க்கிறவங்க கை கொட்டிச் சிரிப்பாங்கடி.. அதுக்கு நான் ஆளாக மாட்டேன்.. தெரிஞ்சுக்க.."

"அதுக்காக.. ஹனிமூனுக்கு போகிறதா பொய் சொல்லி என்னை இங்கே கூட்டி வந்திருக்கீங்களே.. இது பித்தலாட்டமில்லையா..?"

"இந்தக் கேள்வியைக் கேட்க உனக்கு தகுதி கிடையாது.."

"என்னால் இந்தக் காட்டில் இருக்க முடியாது.."

"முடியலைன்னா போ.."

எங்கே போவது..? எப்படிப் போவது..? தூரத்தில் இருந்து பார்க்கவே பயப்படும் அந்த மரங்களுக்கு இடையில் தனியாக ரம்யா போவாளா..?

"நீங்க என் ஊரில் கொண்டு போய் என்னை விட்டுவிடுங்க.."

"இது தான் உன் ஊர்.. இந்த வீடுதான் உன்வீடு.."

"நான் இங்கே இருக்கமாட்டேன்.."

"இருக்கணும்.. இருந்தாகணும்.."

விவேக் கடுமையான குரலில் பேசிவிட்டு.. பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு.. அந்த வீட்டின் பெரிய படுக்கையறைக்குள் நுழைந்தான்.. அலமாரிகளைத் திறந்து.. துணிகளை எடுத்து அடுக்க ஆரம்பித்தான்..

அவன் குளித்து முடித்து வந்த போதும்.. ரம்யா உட்கார்ந்த இடத்தை விட்டு நகரவில்லை..

விவேக்கின் புருவங்கள் சுளித்தன..

"குளிச்சு.. டிரெஸ் சேன்ஜ் பண்ணு.."

"முடியாது.."

"முடியனும்.. கொஞ்ச நேரத்தில் சமுத்திரமும் அவனுடைய வொய்பும் டிபனோட வந்துவிடுவாங்க.. அவங்க முன்னால் நீ இப்படி உட்கார்ந்திருக்கக் கூடாது.. எழுந்திரு.."

"அது உங்க பிரச்னை.."

விவேக்கின் முகத்தில் கோபம் சூழ்ந்தது.. அவளருகில் வந்து முரட்டுத்தனமாக அவளது முகத்தைப் பிடித்துத் தூக்கி விழிகளுக்குள் பார்த்தான்..

"நான் ரொம்ப பொல்லாதவன் ரம்யா.. என் இன்னொரு முகத்தை காட்ட வைத்து விடாதே.. போ.. போய் குளி.."

அவன் முகத்தைப் பார்க்கவே ரம்யாவுக்கு பயமாக இருந்தது.. அவள் அச்சத்துடன் எழுந்து குளியலறைக்குள் புகுந்தாள்..

'இவன் இவ்வளவு கொடுமைக்காரனா..?'

அவளது விழிகளில் கண்ணீர் நிற்காமல் வழிந்தது.. அதைத் துடைத்துக் கொள்ள அவசியமில்லாமல்.. அவள் நீரினை முகத்தில் ஊற்றினாள்..

சமுத்திரமும்.. கல்யாணியும்.. காலை டிபனோடு வந்தபோது.. ரம்யா குளித்து உடைமாற்றி புதுமலரைப் போல இருந்தாள்..

"உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்..?" விவேக் மரியாதைக்காக கூறி வைத்தான்..

"இதிலென்ன சிரமம்..? ராத்திரி முழுவதும் சரியான தூக்கமில்லாம வந்து சேர்ந்திருப்பீங்க.. இதில உடனே சமைக்கனும்னா.. அது ஆகிற காரியமா..? இல்ல.. ஹோட்டலில் வாங்கிச் சாப்பிடலாமுன்னா.. இந்தக் காட்டில அதுதான் முடிகிற சமாச்சாரமா..?" கல்யாணி இயல்பாகப் பேசியபடி பாத்திரங்களை டைனிங் டேபிளில் வைத்தாள்.

அவர்கள் சென்றவுடன் விவேக் ரம்யாவை சாப்பிட அழைத்தான்.. அவள் நீ கூப்பிட்டால் நான் வரவேண்டுமா.. என்பதுபோல சட்டமாக அவன் குரல் காதில் விழாததைப் போல அமர்ந்திருந்தாள்..

"ரம்யா.."

"....."

"உன்னைத்தாண்டி.."

"......"

"உன்னை.."

அவன் பல்லைக் கடித்தபடி எழுந்தான்.. அவள் மனதில் பயம் சூழ்ந்தது.. இதுவரை காதலில்லாமல் கடுமையாக அவன் பார்த்ததில்லை..

இன்றுதான் அவனது பார்வையும்.. பேச்சும் புதிதாக இருக்கிறதே.. அவளருகில் வந்து.. அவள் கையை இறுக்கிப் பிடித்து எழுப்பினான்..

"சாப்பிடவா.."

"விடுங்க.. கை வலிக்குது.."

அவன் விடவில்லை.. அவளை ஏறக்குறைய.. தரதரவென்று இழுத்துக்கொண்டு போய் டைனிங் டேபிளின் முன்னாள் அமரவைத்தான்..

"சாப்பிடு.." அவள் முன்னால் தட்டை நகர்த்தினான்.

அவனது முறைப்பை தாங்க இயலாதவளாய் அவள் தலைகுனிந்து சாப்பிட ஆரம்பித்தாள்..

ஏதோ ஒருவகையில் அவன் அவளை அடிமைப் படுத்தி விட்டதைப் போன்ற உணர்வு அவளுக்கு எழுந்தது..

"ஏண்டி அழுகறே..?"

"என் தலைவிதி.. நான் அழுகிறேன்.. அழுகக்கூட எனக்கு சுதந்திரம் கிடையாதா..?"

"எது உன் தலைவிதி..? எனக்குப் பெண்டாட்டியாய் ஆனதா..? அதுக்கு நானில்ல அழுகனும்.."

அவனது வார்த்தைகள் கூரிய ஊசி முனைகளாய் அவள் மனதில் சுருக்கென்று தைத்தன..

அவள் இமைக்காமல் அவனையே பார்த்தாள்.. அவன் அவள் பார்வையை தவிர்த்து.. யாருடனோ செல்போனில் பேச ஆரம்பித்தான்..

ரம்யா எழுந்து.. படுக்கையறைக்குள் சென்றாள்.. கட்டிலில் சுருண்டு படுத்தாள்.. கண்களை இறுக மூடிக் கொண்டாள்.. மூடிய கண்களுக்குள் காடு வந்து நின்றது.. பதட்டத்துடன் எழுந்து அமர்ந்து விட்டாள்..

"என்ன..?" அறைக்குள் அப்போதுதான் வந்த விவேக் கேட்டான்..

"ஒன்னுமில்லை.." அவன் முகத்தைப் பார்க்கப் பிடிக்காதவளாய் அவள் மீண்டும் கண்களை மூடிக் கொண்டாள்..

அப்படியே தூங்கி விட்டாள்..

தூங்கிக் கொண்டிருந்தவளின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த விவேக்கின் முகத்தில் பழைய கனிவும்.. காதலும் மீண்டிருந்ததையோ.. அவன்மெல்ல.. அவளருகில் வந்து.. முடிகளை கோதிவிட்டு அகன்றதையோ அவள் உணரவில்லை..

'இருள் சூழுதே - அப்பா..

என்ன நான் செய்வேன்..?

இல்லம் தூரத்தில் ஆச்சுதே..'

அவள் காதில் பாடல் ஒலிக்க.. அவள் உடல் பதறி கண் விழித்தாள்.. அவளைத் தட்டி எழுப்பிக் கொண்டிருந்த விவேக்கின் புருவ மத்தியில் முடிச்சு விழுந்தது..

'ஏன் இப்படி பயப்படறா..?'

"சாப்பிட வா.. ரகுபதியும் அவன் மிஸ்ஸசும் வந்திருக்காங்க.."

"இப்போத்தானே சாப்பிட்டேன்.."

"அது காலையில எட்டு மணிக்கு சாப்பிட்ட டிபன்.. இப்ப மணி என்ன தெரியுமா..? மதியம் ஒரு மணி.."

'இவ்வளவு நேரமா தூங்கிட்டேன்..?'

அவள் உதட்டைக் கடித்தபடி அவனைத் தொடர்ந்தாள்..

இரவுச் சாப்பாடு.. சுந்தரத்தின் மனைவி நளினியின் புண்ணியத்தில் கிடைத்துவிட.. அன்றைய நாள் கழிந்தது என்ற நிம்மதியுடன் விவேக் மனைவியை நெருங்கினான்..

அவளோ.. உடல் தூக்கிப் போட.. விலகிப் படுத்தாள்.. அவன் வற்புறுத்தவில்லை.. தள்ளிப் படுத்துத் தூங்கி விட்டான்..

ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த போது ரம்யா கனவு கண்டு அலறினாள்.. இப்போது அவன் பதறி எழுந்து விளக்கைப் போட்டான்.. விளக்கு எரியவில்லை.. கரண்ட் கட்.. இருட்டில் அவள் நடுங்க.. அவனது கை அவளை இழுத்து அரவணைத்துக் கொண்டது..

## அத்தியாயம்- 50

"பயமாயிருக்கே.."

ரம்யா கிடுகிடுவென்று உடல் நடுங்கினாள்.. ஜன்னல் திரைகளுக்கு அப்பால் கேட்ட புரியாத காட்டின் சப்தங்களும்.. அசைவுகளும்.. அவளை பயமுறுத்தின..

"நானிருக்கேனில்ல.. பயப்படக்கூடாது.."

விவேக் அவளைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டான்.. அந்த அவனது அணைப்பில் காதலும்.. காமமும் இல்லை.. மாறாக.. தன் குஞ்சைப் பாதுகாக்கும் தாய்ப் பறவையின் சிறகாக அவனது கரம் இருந்தது..

அவளது காதோரமாக அவன் பேசிக் கொண்டேயிருக்க.. அவள் மெல்ல தன்னையறியாமல் தூங்கிவிட்டாள்..

விடியலின் வெளிச்சம் அறைக்குள் பரவி.. சூரியக் கதிர்கள் அவளைத் தொட்டு எழுப்பிய போது.. கண்ணைக் கசக்கிக் கொண்டு எழுந்து அமர்ந்தாள்..

"குட் மார்னிங்.."

புன்னகையுடன் அவள் முன்னால் காபிக் கோப்பையை நீட்டினான் விவேக்.. ரம்யா திகைத்துப் போனாள்..

'இவனா.. காபி போட்டான்..?'

"நீங்க ஒன்னும் என்கூட பேச வேணாம்.."

"சரி.. நான் உன்கூடப் பேசலை.. நீ என்கூடப் பேசு.."

அவன் இலகுவாகச் சொல்லியபடி அவள் கையில் காபிக் கோப்பையை திணித்தான்..

அவள் அவனை மேல் பார்வையாய் பார்த்தபடி காபியை உறிஞ்சினாள்.. காபி நன்றாக இருந்தது.. அதை அவளையறியாமல் வாய்விட்டுச் சொல்லி விட்டாள்..

"எக்ஸ்பீரியன்ஸ்.." அவன் கண்சிமிட்டிச் சிரித்தான்..

"தனிக்கட்டை.. காடு.. காபித்தண்ணிக்கும்.. சாப்பாட்டுக்கும் என்ன செய்வது..? ஒருநாள்.. இரண்டு நாள்.. ஓசிச் சாப்பாடு கிடைக்கும்.. எல்லா நாட்களிலும் அது கிடைச்சிடுமா..? அதனால் சமைக்கப் பழகிட்டேன்.."

அவன் சமையலறைக்குள் புகுந்து விட்டான்.. சற்று நேரத்தில் வெங்காயம் வதங்கும் வாசனை வரவும்.. அவளுக்கு என்னவோ போல ஆகிவிட்டது.. அவளும் சமையலறைக்குள் புகுந்து விட்டாள்..

"விலகுங்க.."

"எதுக்கு.."

"நான் சமைக்கிறேன்.."

கலைந்த முடிக்கற்றையை ஒதுக்கிவிட்டபடி அவள் சமையல் வேலையில் ஆழ்ந்து விட.. அதை கவனிக்காதவனைப் போல கவனித்த விவேக்கின் முகத்தில் வெற்றி புன்னகை மலர்ந்தது..

அவன் குளித்து.. உடைமாற்றிக் கொண்டு வந்த போது.. டைனிங் டேபிளில் காலைப் பலகாரம் தயாராக இருந்தது..

"நீயும் குளிச்சுட்டு வா.. சேர்ந்து சாப்பிடலாம்.."

அவள் வழக்கடிக்காமல்.. குளித்து.. உடைமாற்றி வந்தாள்..

"மளிகை ஜாமான் வாங்கனுமுன்னா என்ன செய்கிறது..?"

"என்கிட்ட என்ன வேணும்னு சொல்லு.. நான் ஆபிஸ் போய்விட்டு வருகிறப்போ வாங்கி வருகிறேன்.."

"நீங்க ஆபீஸ் போய்டுவீங்களா..?"

அவள் கண்களில் மீண்டும் பயம் எட்டிப் பார்த்தது.. அந்த நேரம் பார்த்து..

"ஐயா.." என்று அழைத்தபடி அந்தப் பெண் உள்ளே வந்தாள்..

"வா.. கண்ணம்மா.." விவேக் எழுந்து கை கழுவிக் கொண்டான்..

மனைவியைப் பார்த்தான்..

"ரம்யா.. இது கண்ணம்மா.. நம்ம வீட்டு வேலைக்கு வந்திருக்குது.. நான் ஆபீஸ் போய் வருகிற வரைக்கும்

உன்கூட துணையாவும் இருக்கும்.."

ரம்யாவின் கண்களில் நன்றி வந்திருந்தது..

"தேங்க்ஸ்.." படுக்கையறையின் தனிமையில் கணவனிடம் சொன்னாள்..

"போடி.." அவன் அவள் கன்னத்தில் முத்தமிட்டான்..

"ஸ்ஸ்.. கண்ணம்மா.. பார்த்துவிடப் போறா.."

"அந்தப் பொண்ணுதான் பாத்திரம் கழுவிக்கிட்டு இருக்குதில்ல.. நீ இப்ப கிட்ட வா.."

"த்சு.. காலையில் ரொமான்ஸா.."

"இரண்டு நாளாய் நீதான் பட்டினி போட்டுட்டயே.."

"நீங்கதான் ஏமாற்றுக்காரராச்சே.."

"உன்னை ஏமாற்றிட்டு விட்டுவிட்டா ஓடிட்டேன்..? உன்னை என்கூட வலுக்கட்டாயமா கொண்டு வந்திருக்கேண்டி..

அவன் சொன்னதில் பின்னாலிருந்த உண்மை ரம்யாவிற்கு புரிந்தது.. அவள் காதலுடன் அவன் கழுத்தில் கைகளை மாலையாகப் போட்டு.. அவன் முகத்தோடு முகம் வைத்து தேய்த்தாள்..

"ஐ லவ் யு.."

"ஏய்.." அவன் கிறங்கி விட்டான்..

"ஐ லவ் யு ஸோ மச் ரம்யா.. நீ இதைப் புரிஞ்சுக்கணும்.."

"புரியுது ஆனா.."

"என்னடி..?"

"இந்தக் காட்டை நினைச்சாத்தான் பயமாயிருக்கே.."

அவள் குழந்தையாய் கூற.. அவன் அவளை அணைத்துக் கொண்டான்..

"நானிருக்கேண்டி.. பயப்படக்கூடாது.." அவள் காதோடு கூறினான்..

"ரம்யா.."

"ம்ம்.."

"வா.. வாக்கிங் போயிட்டு வரலாம்.."

"இந்தக் காட்டுக்குள்ள வாக்கிங் போறதா..? அதுவும் நானா..? ஐயோ.. நான் மாட்டேன்.."

"நானிருக்கேன்னு சொன்னேனா இல்லையா..? பயப்படாம வா.."

விவேக் வற்புத்தி அவளைக் கூப்பிட்டுக் கொண்டு போனான்..

காட்டுப் பாதை வளைந்து.. வளைந்து செல்ல.. பயத்துடன் விவேக்கை ஒட்டிக் கொண்டு வந்த ரம்யா.. மெல்ல.. பயம் குறைந்தவளாக வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்..

அவளுக்கு பறவைகளையும்.. பூக்களையும்.. காட்டாற்றையும் காட்டி விளக்கம் சொல்லியபடி வந்த விவேக்.. அவள் கண்களில் மிரட்சி தென்படுகிற போதெல்லாம்.. அதைக் கவனிக்காதவனைப் போல காட்டிக் கொண்டு.. அவள் தோள் மேல் கைகளை படற விட்டு.. அவள் காதருகே குனிந்து.. ரகசியமாக அவர்களுக்கான பிரத்யேக வார்த்தைகளைப் பற்றிப் பேசினான்..

அவள் முகம் சிவந்து.. அவன் மார்பில் கை வைத்துக் குத்தி..

"ச்சீய்.." என்று சிணுங்கினாள்..

அவள் முகத்தில் பயம் விலகி.. வெட்கமும்.. உல்லாசமும் சூழ்வதை கவனித்தபடி விவேக் வாய்விட்டு பலமாக சிரித்தான்..

"இப்படியா சிரிப்பீங்க..? உங்க சிரிப்பு சத்தத்தில் பறவைகளெல்லாம் அலறியடிச்சுக்கிட்டு பறக்குது பாருங்க.."

அவள் வேடிக்கையாகச் சொல்லி சிரித்தாள்.. திடீரென்று விவேக்கின் நடை நின்றது.. ரம்யா அவன் முகத்தை

புரியாமல் பார்த்தாள்..

"அங்கே பார் ரம்யா.."

ரம்யா பார்த்தாள்.. அழகான நீர்வீழ்ச்சி தெரிந்தது..

மலைப் பாறையின் மீதிருந்து.. வெள்ளிப் பனிமலையாய் கொட்டிக் கொண்டிருந்த நீர் வீழ்ச்சியை ரம்யா பிரமிப்புடன் பார்த்தாள்..

"ஹையோ.. எவ்ளோ அழகாயிருக்கு.."

இரு கன்னங்களிலும்.. இரு உள்ளங்கைகளை வைத்து அவள் விழி விரிய அதிசயித்தாள்..

அவளை அருவிக்கரையின் அருகே அழைத்துச் சென்று காட்டினான் விவேக்.. அங்கேயிருந்த பாறையில் அமர்ந்தவன்.. அவளை இழுத்து மடியில் போட்டு.. கைகளால் சிறைபடுத்தினான்..

அவர்கள் வெகுநேரம் அங்கேயிருந்தார்கள்.. கிளம்பும்போது அந்த அருவிக்கரை ரம்யாவுக்கு மிகவும் பிடித்தமானதாக ஆகிப்போயிருந்தது..

மறுநாள் காட்டாற்றின் கரையிலேயே இருவரும் நடந்தார்கள்.. ஆற்றங்கரையின் அழகையும்.. சூழலையும்.. தனது நெருக்கத்திற்குள் அவளை வைத்தபடியே ரசிப்பதற்கு கற்றுக் கொடுத்தான் விவேக்..

காட்டாற்றையும்.. அதன் கரையையும் நேசிக்க ஆரம்பித்தாள் ரம்யா.. அதன் கரையோரப் பூக்களின் நறுமணம் அவளை இழுத்தது..

இன்னொரு நாள் அருகேயிருந்த பூக்கள் அடர்ந்த பகுதிக்குள் போனார்கள்.. அது அனைத்தையும் விட பிரியமான பகுதியாக ரம்யாவுக்கு மாறிவிட்டது..

அந்த மாத இறுதியில் அருகிலிருந்த கோத்தகிரி மலைக்கு அவளை அழைத்துச் சென்று மலைவாழ் மக்களை அறிமுகப் படுத்தினான் விவேக்..

"இவங்களுக்கு வெளியுலகம் தெரியாது ரம்யா.. நீ காட்டைப் பார்த்து பயந்தா.. இவங்க.. நாட்டைப் பார்த்து பயப்படறாங்க.."

"நாம என்ன செய்யறோமாம்..?"

"அதைத் தானே இந்தக் காடும் உன்னைப் பார்த்துக் கேட்கும்..?"

அவள் பதில் சொல்லவில்லை.. முகத்தில் சிந்தனை படிய.. அந்த மலைவாழ் மக்களுடன் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கிளம்பினாள்.

அவள் முன் தெரிந்த காட்டின் பல அங்கங்களும் அவளுக்கு புதிதாய் இருந்தன.. பிரமிப்பை ஊட்டின.. காடு என்பது இவ்வளவு பரந்தும்.. விரிந்தும்.. அழகாகவும் இருக்கக் கூடும் என்பதை அங்குதான் கண்டாள்.. விவேக் அதை அவளுக்கு காண்பித்து உணர்த்தினான்..

இரண்டாம் மாதத்தின் முடிவில் ஒருநாள் அவன் வர நேரமாகி விட்டது.. கண்ணம்மாவும் போய்விட்டாள்.. ரம்யா பயத்துடன் விவேக்கிற்காக காத்திருந்தாள்..

"ரம்யா.." காலிங்பெல் ஒலித்தது.. அவன் குரலில் சோர்வு அவளை அச்சுறுத்த.. அவசரமாகக் கதவைத் திறந்தாள்..

அவன் நெற்றியில் கட்டுடன் நின்றிருந்தான்.. கட்டையும் மீறி ரத்தக் கசிவு தெரிய.. அவள் அலறினாள்..

"என்னங்க.. என்ன ஆச்சு..? ஏன் இந்த ரத்தம்..?"

"டிரைவர் வர நேரமாகிருச்சு ரம்யா.. அவன் வர லேட்டானதினால நானே ஜீப்பை ஓட்டிக்கிட்டு வந்தேன்.. நேரமாகிருச்சா.. நீ தனியாய் இருப்பேங்கிற பதட்டத்தில சீக்கிரமாய் வீட்டுக்கு வரனும்னு வேகத்தைக் கூட்டிட்டேன்.."

"ஏங்க.. அப்படி செய்தீங்க..? மெதுவாய் வரக்கூடாதா..?"

"நீ காடுன்னாலே பயப்படுகிறவ.. இருட்டினப்புறம் கண்ணம்மாவும் இல்லாம எப்படி டீ தனியா இருப்பே..?"

"அதுக்காக இப்படியா..?"

அவன் சோர்வுடன் கட்டிலில் சரிந்து கொள்ள அருகில் சென்று அவன் முகத்தைத் திருப்பிப் பார்த்தவளுக்கு கண்ணீர் பெருக்கெடுத்தது..

அவனது நெற்றிக்காயத்திலிருந்த ரத்தம் கட்டுக்குள் அடங்காமல் வழிய ஆரம்பித்திருந்தது.. ரம்யா பதறினாள்.

"எதிரே ஒரு லாரி வந்தது ரம்யா.. ஜீப்பை ஒடித்து திருப்பினேனா.. ஒரு மரத்தில் ஜீப் மோதிருச்சு.."

"எவ்வளவு ஈஸியா சொல்கிறீங்க..? ஒன்று கிடக்க ஒன்று ஆகியிருந்தா.. என் கதி என்னவாகியிருக்கும்..?"

"நீ பாவம் ரம்யா.. உன்னைக் காட்டுக்குள் கூப்பிட்டுக் கொண்டு வந்து கஷ்டப்படுத்திட்டேனில்ல..?"

"அப்படி யார் சொன்னது..? நீங்க இல்லாம சென்னையில் என்னால இருக்க முடியுமா..?"

"அது தெரிஞ்சதானலதான் இந்த முடிவுக்கு வந்தேன் ரம்யா.. உனக்கு காட்டைப் பற்றியிருந்த பயத்தை விட.. என் மீதான காதல் அதிகமாக இருந்தது.. என் வேலையைப் பற்றித் தெரிஞ்ச பின்னாலும் வாழா வெட்டியாய் இருந்தாலும் பரவாயில்லை.. என் கையில் தாலியை வாங்கிக்கணும்னு தான் நீ நினைச்சே.. அதுவே உன் மனச எனக்கு காட்டிக் கொடுத்துடுச்சு.. நான் உன்னை விட்டுட்டு ஊருக்கு கிளம்பப் போகிறேன்னு தெரிஞ்ச பின்னால நீ தூங்கவேயில்ல.. தூக்கத்தில அலறி எழுந்திருச்சே.. அப்பத்தான் நான் உன்னை என்னோடு காட்டுக்கு கூப்பிட்டுக்கிட்டு வந்திடனும்னு முடிவு பண்ணினேன்.."

ரம்யாவின் விழிகள் விரிந்தன.. அவளை.. அவன் நன்கு புரிந்து வைத்திருக்கிறான்.. அதனால்தான் அவளுடைய விருப்பத்திற்கு விரோதமாக காட்டிற்குள் அழைத்து வந்திருக்கிறான்..

"அத்தான்.." அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது.. அவன் வேதனையுடன் முகம் சுளித்து.. அரற்றினான்.. அவனது அந்த நிலைமையைக் கண்டு அவளுக்குள் துக்கம் ஊற்றெடுத்தது..

அவன் சிந்தும் இந்த ரத்தம்.. அவளுக்காக.. அவன் தாங்கிக் கொண்டிருக்கும் இந்த வலியும்.. வேதனையும்.. அவளுக்காக..

அவளின் பொருட்டு.. அவள் தனியாக காட்டிற்குள் இருக்கும் வீட்டிலிருக்கப் பயப்படுவாள் என்பதற்காக.. அவன் வேகமாக விரைந்து வந்திருக்கிறான்.. அந்த வேகம் தந்த பரிசுதான் இந்த காயம்..

"டாக்டர்கிட்டே போனீங்களா..?"

"இல்லை.. ஜீப்பில் இருந்த பர்ஸ்ட்-எய்ட் பாக்ஸில் பிளாஸ்திரி இருந்தது.. நானே கட்டுப் போட்டுக்கிட்டேன்.."

"ஏங்க.. இப்படிச் செஞ்சீங்க.. உடனே டாக்டர்கிட்டே போகிறதுக்கு என்ன..? இவ்வளவு பெரிய வேலையில இருக்கீங்க.. இதைக்கூட நான் சொல்லித்தான் செய்யனுமா..? உங்களுக்கா தெரியாதா..?"

"எனக்குத் தெரிந்தது.. நினைவிலிருந்தது.. எல்லாமே ஒன்னே ஒன்னுதாண்டி.. அது நீ தனியா காட்டுக்குள்ள இருக்கிற வீட்டுக்குள்ள பயந்துகிட்டு இருக்கிறாய்ங்கிறது மட்டும்தான்.."

ரம்யா அதிர்ந்து போனாள்..

அவளது காட்டின் மீதான பயம் அவளை எந்த இடத்தில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது..?

அவளுடைய காதல் கணவன் கொட்டுகிற ரத்தத்தை நிறுத்த டாக்டரை தேடிப் போகாமல்.. அவளுடைய பயத்தை நிறுத்த.. அவளைத் தேடிவந்திருக்கிறான்.. இதை என்னவென்று சொல்வது..?

ரம்யா கண்ணீரைத் துடைத்துக்கொண்டு.. திடத்துடன் எழுந்தாள்.. பீரோவைத் திறந்து துண்டை எடுத்து வந்து அவன் தலையில் இறுக்கிக் கட்டினாள்.. கண்மூடிப் படுத்திருந்தவனுக்கு போர்த்தி விட்டு அறைக் கதவைத் திறந்து வெளியில் வந்து சப்தம் எழுப்பாமல் சாத்தினாள்.. வாசல் கதவைத் திறந்து வெளியில் பார்த்தாள்..

இருண்டு.. அமர்ந்திருந்த மரங்களின் கிளைகள் வேகமாக அடித்த காற்றில் பேயாட்டம் ஆடின.. புரியாத விலங்குகளின் சப்தங்கள் குலை நடுங்கச் செய்தன..

அவள் பயப்படவில்லை.. வாசல் கதவை மூடிவிட்டு.. இறங்கி காட்டுப் பாதையில் வேகமாக நடந்தாள்..

பக்கத்து குவார்ட்டர்ஸ்களின் ஜன்னல்களில் வெளிச்சக் கீற்றுத் தெரிந்தது.. அதிகம் பேசிப் பழகியிராதவர்களிடம் உதவி கேட்க யோசனையாக இருந்தது.. அதே சமயம் தன்னைப் பிடித்து ஆட்டிய இந்த காட்டைப் பற்றிய பயம்தானே.. தன் கணவனுக்கு இந்த ஆபத்தை விளைவித்திருக்கிறது என்ற மனக்குமுறலும் அவளுக்குள் எழுந்தது..

ரம்யா சற்றுத் தொலைவில்.. காட்டுக்குள் இருந்த டாக்டரின் வீடு நோக்கி நடக்க ஆரம்பித்து விட்டாள்..

என்றோ ஒருநாளில்.. பட்டப் பகலில் அவளை பயமுறுத்திய காட்டிற்குள்.. இரவில்.. தனியாக.. அச்சமின்றி அவள் நடந்தாள்..

## அத்தியாயம்- 51

"இப்படி அலட்சியமாக இருக்கலாமா விவேக்..?" டாக்டர் கைலாசம் கடிந்து கொண்டார்..

விவேக் சோர்வாக புன்னகைத்தான்.. ரம்யா வென்னீர் பாத்திரத்துடன் அறைக்குள் வந்தாள்.. அவளைத் திரும்பி பார்த்த கைலாசத்தின் விழிகளில் ஆச்சரியம் தெரிந்தது..

"இவங்க இந்த இருட்டிலயும்.. காத்திலயும்.. பயப்படாம தனியா என்னைத்தேடி வந்தாங்க..

வழியில மோசமான மிருகங்ககிட்டேயோ.. இல்லை.. மிருகங்களைவிட படுமோசமான மனுசங்ககிட்டேயோ இவங்க சிக்கியிருந்தா என்ன ஆகிறது..?"

விவேக்கின் பார்வையில் குற்றச்சாட்டு தெரிய..

"ஐ ஆம் ஸாரி.." என்றாள் ரம்யா..

"இவ உங்களைத் தேடி தனியா வந்தது எனக்குத் தெரியாது டாக்டர்.."

"ஐ.. ஸீ.."

கைலாசம் அவனது காயத்தை வெந்நீரில் சுத்தப்படுத்தி கட்டுப் போட்டுவிட்டார்.. வலி தெரியாமலிருக்க இன்ஜெக்சன் போட்டு.. மாத்திரைகளைக் கொடுத்தார்.. கிளம்பும்போது விவேக்கை பார்த்து கண்சிமிட்டினார்..

"ஹஸ்பெண்ட் மேல எவ்வளவு காதலிருந்தா இந்தச் சின்னப் பெண் இருட்டில காட்டுக்குள் தனியா வரத் துணிவாங்க..? இப்படி ஒரு காதலி மனைவியாய் கிடைச்சா.. தாராளமாய் ஜீப்பை மரத்தில் மோதி மண்டையை உடைச்சுக்கலாம்.."

ரம்யா வெட்கத்துடன் சமையலறைக்குள் சென்றுவிட.. கைலாசம் விடைபெற்றுக் கொண்டு சென்று விட்டார்..

சூடான இட்லிகளுடன் அறைக்குள் வந்த மனைவியைப் பார்த்த விவேக்கின் பார்வையில் ஏதோ தெரிந்தது..

"என்னங்க..?" அவனது முடிகோதி.. காயத்தைப் பார்த்து விட்டு.. அவனருகில் ஸ்டூலை இழுத்துப் போட்டு.. சட்னிக் கிண்ணங்களை வைத்தாள் ரம்யா..

"ஏண்டி.. தனியாப் போன..?"

"இட்லி ஆறிரும்.. சூடா இருக்கிறப்பவே சாப்பிட்டுருங்க.."

"பகல்ல இந்தக் காட்டைப் பார்க்கவே பயப்படுவியேடி.. இருட்டில எப்படி டீ.. தனியாப் போன..?"

"சட்னி டேஸ்டாய் இருக்கா..?"

அவன் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் ரம்யா அவனுக்கு இட்லியை ஊட்ட முயல.. அவள் கை பற்றித் தடுத்து.. அவளை இழுத்து அணைத்துக் கொண்டான் விவேக்..

அதற்குமேல் தாங்க முடியாதவளாக ரம்யா உடைந்து அழுதாள்..

"இந்த பாழாப்போன பயத்தினாலதானே.. உங்களுக்கு அடிபட்டுருச்சு..?"

"அதுக்கு..? உனக்கு ஏதாவது ஆகியிருந்தா..?"

"உங்களுக்கு ஏதாவது ஆகியிருந்தா.. என் கதி என்னவாகியிருக்கும்..? அதைவிட.. எனக்கு என்ன நடந்தாலும் மேல்தான்.."

"ரம்யா.."

அவளின் அதீதக் காதலில் கரைந்து போனான் விவேக்.. அவனது காயம் ஆறிவிட்டது.. ஆனால்.. அந்த நாளின் பசுமையான நினைவுகள் அவன் மனதை விட்டு மறையவில்லை..

கண்ணம்மா வெளியூருக்கு குடி பெயர்ந்தாள்.. வேலைக்கு புதிதாய் வந்த பொற்கொடி ஒருமணி நேரத்தில் வேலையை முடித்துவிட்டு ஓடிவிடுவாள்..

"தனியாய் இருக்கியே.." விவேக் கவலைப்பட்டான்..

"இது ஒரு பெரிய விஷயமா..? என்னை நினைச்சுக்கிட்டு பறந்தடிச்சுக்கிட்டு ஓடிவராம.. மெதுவா வாங்க.." ரம்யா அதட்டினாள்..

இவளா.. குழந்தையைப் போல.. காட்டை நினைத்துப் பயந்து கொண்டு கணவனிடமிருந்து விலகியிருக்க துணிந்தவள்..? என்று மனதிற்குள் ஆச்சரியப்பட்டுப் போனான் விவேக்..

"உன்னால என்னை விட்டுட்டு இருக்க முடியாதுன்னு எனக்கு தெரிஞ்சு போச்சு ரம்யா.. அப்புறமாத்தான் அம்மா.. அப்பாவிடம் விஷயத்தைச் சொல்லிட்டு உன்னைக் கடத்திக்கிட்டு வந்தேன்.."

"காட்டில மரங்களை கடத்தினா அதைத் தப்புன்னு சொல்லி இவர் பிடிப்பாராம்.. இவரு மட்டும் மனுக்ஷியைக்

கடத்துவாராம்.. அதைக் கேட்க ஆளில்லையாம்.."

"எப்படி கேட்பாங்க.. அந்த மனுக்ஷி.. எனக்கு மட்டும் சொந்தமான மனுக்ஷியாச்சே.."

"இதைச் சொல்ல இப்படிக் கட்டிக்கனுமா..? தள்ளி நில்லுங்க.."

"அது எதுக்காம்..?"

"மூச்சு முட்டுது.."

"முட்டட்டும்.."

"முரடு.."

அவர்கள் காதலில் மூழ்கி எழுந்தார்கள்.. அந்த வருடத் தலை தீபாவளிக்கு ரம்யாவின் பிறந்த வீட்டிற்குப் போனார்கள்..

"எலே.. காத்தவராயா.. எங்கே பராக்கு பார்த்துக்கிட்டு நிக்கிற.. என் பேத்தியும்.. மாப்பிள்ளையும் வந்திருக்காங்க.. இந்த நேரம் பாத்தா எதுக்காப்புல வண்டியை ஓட்டிக்கிட்டு வருவ..?" வெள்ளைச்சாமி சலம்பல் பண்ணினார்..

"ஏந்தாயி.. செண்பகம்.. உனக்கு கோலப்பொடியை கடனாக் கேட்டு வரதுக்கு வேற நேரங்காலம் கிடைக்கலியா..? என் பேத்தியும்.. மாப்பிள்ளையும் மறுவீட்டு விருந்துக்கு வந்துட்டுப் போனவங்கதான்.. அதுக்கப்புறம் தலை தீபாவளிக்குத்தான் எட்டிப் பார்த்திருக்காங்க.. இந்த நேரம் பாத்தா நீ வந்து சேரனும்..?" அலட்டினாள் கோசலை..

"அப்பா.. அம்மா.." புண்ணியகோடி வழக்கமான கண்டிப்புடன் அதட்ட.. இருவரும் அடங்கிப்

போனார்கள்..

'இதுதான்.. என் பிறந்த வீடு..' ரம்யா வாத்சல்யத்துடன் பெரிய தகப்பனாரைப் பார்த்தாள்..

"வா தாயி.." அவர் பாசத்துடன் முடி கோதினார்..

வீட்டில் உள்ளவர்கள் சூழ்ந்து கொண்டனர்.. விழா நாளின் கலகலப்பு அனைவரையும் தொற்றிக் கொண்டது.. தீபாவளித் திருநாளின் கொண்டாட்டங்கள் முடிந்த மாலைப் பொழுதில்.. குடும்பத்தினர் அனைவரும் ஒன்று கூடி அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்..

அப்போது ரம்யா.. விவேக்கும் அவளும் காட்டுக்குள் எடுத்துக் கொண்ட போட்டாக்களை காட்டினார்கள்..

"யப்பா.. பார்க்கவே பயமா இருக்கு.. இந்தக் காட்டிலையா நீயும்.. உன் புருசனும் குடியிருக்கீங்க..?"

ரஞ்சான விழி விரிக்க.. யுகேந்திரன் அரண்டு போய்.. மனைவியிடம் பேசாமலிருக்கும்படி கண் சமிக்ஞை செய்தான்..

அதைக் ஓரக் கண்ணால் பார்த்த ரம்யா சிரித்துக் கொண்டாள்..

"இது பார்க்க பயமாய் இருக்கும் காடு.. பழகிப் பார்த்தால் நம் பிரண்டாகி விடும் காடு.. எனக்கும் இந்தக் காடு இப்ப பிரண்டாகிருச்சு அண்ணி.."

ரம்யாவின் காட்டைப் பற்றிய பயத்தை அறிந்திருந்த அவள் குடும்பத்தினர் அவள் சொன்னதைக் கேட்டு 'ஆ' வென்று வாய் பிளந்தனர்..

இளவேனிற்காலம் என்பது.. அதிக வெப்பமில்லாமல்.. அதிக குளிரும் இல்லாமல்.. அற்புதமாக இருக்கும் பருவகாலம்..

ரம்யாவின் மனமும் அப்படிப்பட்ட அழகான சீதோஷ்ன நிலையைக் கொண்டதாக மாறிவிட்டிருந்தது..

அப்படி அவளை மாற்றியது விவேக்கின் மேல் அவள் கொண்டிருந்த எல்லையற்ற பிரியம்..

நாமும் பிரியம் வைப்போம்.. நம்மைச் சுற்றியிருக்கும் மனிதரின் மீது.. விலங்குகளின் மீது.. செடி கொடிகளின் மீது.. குடியிருக்கும் வீட்டின் மீது.. அதில் வாங்கிப் போட்டிருக்கும் பொருள்களின் மீது.. வான் மீது.. நதி மீது..

புவி மீது.. மழை மீது.. குளிர்காற்றின் மீது.. ஒளி கொடுக்கும் நெருப்பின் மீது என்று அனைத்திலும்

பிரியம் வைப்போம்.. பிரியமானது நம் வாழ்வின் இளவேனிற்காலம்..! அதை என்றென்றும் நம் வாழ்வில் நிறுத்தி வைப்போம்..

... முற்றும் ...